வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 62 சுடர்: 28 கதிர்: 286 வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 23, ஞாயிறு 08.09.2013




நவியின் கருத்துக்கு அதிருப்தி ஐ.நா.செயலருக்கு அரசு கடிதம் 02

மாபெரும் இறுதியாட்டம் இன்று நீக்கிலஸ், பாடும்மீன் களத்தில் 26

செரீனா – அசரன்கா பலப்பரீட்சை 27

ஐ.நா. முன் மீண்டும் உரிமைக் குரல்கள் 02

# தமிழரைப் பிரித்தாளும் தந்திரத்தில் மஹிந்த அரசு

## யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பியின் ரில்வின் சில்வா சீற்றம்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 8
"தமிழ்த் தேசிய ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்கு முயற்சிக்கிறது மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு. பிரித்தாளும் தந்திரத்தையும் தமிழர்கள் மத்தியில் அது கையாள்கிறது" என்று நேற்று யாழ்ப்பாணத்தில் வைத் துக் கூறினார் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா.

பிரித்தாழும் சூழ்நிலையை அரசு தமிழர்களிடையேதொடர்ந்து வளர்த்து வருகிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

'தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறை' என்ற தலைப்பில் யாழ். பொது நூலகத்தில் ஜே.வி.பி. கூட்டம் ஒன்றை நடத்தியது. அதில் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா கலந்துகொண்டு உரையாற்றினார்.

"இந்த அரசு நாட்டு மக்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை.

போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் வடக்கில் உள்ள மக்கள் இன்றும் கவலையுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்று தனது உரையில் குறிப்பிட்டார் ரில்வின்.



"தென்பகுதி இனவாத நிகழ்வு போன்று வடக்கிலும் தற்போது இனவாதம் தூண்டப்படுகிறது. இது மீண்டும் அழிவுக்கே இட்டுச் செல்லும். முன்னர் ஐரோப்பியர்கள் பிரித்தாளும் கொள்கையைக் கைக்கொண்டிருந்தனர். அதனைச் சுதந்திரத்துக்குப் பின்னர் அரசு பின்பற்றி வருகிறது." என்றார் அவர்.

"வடக்கில் சிவில் நிர்வாகம் இல்லை. சிவில் நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம்" என்றும் அவர் மேலும் கூறினர்.

(கு-4)

## யாழ். ஊடகங்கள் பொறுப்பற்றவை

### பஸில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்.செப்.08
உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளை வெளியிடுவதில் யாழ்ப்பாணத்து ஊடகங்கள் பொறுப்பற்றுச் செயற்படுகின்றன என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசா ரக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இதனைக் கூறினார்.

"ஊடகங்கள் சமூகப் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். ஊடகங்கள் மூலமாகவே செய்திகள் மக்களைச் சென்றடைகின்றன. எனவே அவை உண்மையாக இருக்க வேண்டும். பொய்யான தகவல்கள் மூலம் மக்கள் திசை திருப்பப் பட வாய்ப்பு உள்ளது. எனவே இத் தகைய நிலையை ஊடகங்கள் ஏற்படுத்தக் கூடாது." என்றார் அமைச்சர் பஸில்.

(ஐ-10)

## யாருக்கு வாக்களித்தீர்கள் என்று யாருமே கண்டு பிடிக்க முடியாது

### அரச ஊழியர்கள் அச்சமின்றி வாக்களிக்கலாம்

யாழ்ப்பாணம், செப்.8
வடமாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பில் கலந்துகொள்ளும் அரச ஊழியர்கள் சுதந்திரமாக எந்தக் கட்சிக்கும் வாக்களிக்க முடியும். நீங்கள் யாருக்கு வாக்களிக்கிறீர்கள் என்பதைத் தேர்தல் திணைக்கள அதிகாரிகளால் கூடக் கண்டுபிடிக்க இயலாது என்று கூறியுள்ளார் வடமாகாண உதவித் தேர்தல் ஆணையாளர் அச்சுதன்.

"எந்தவித அச்சமுமின்றித் தபால் மூல வாக்களிப்பில் அரச ஊழியர்கள் அனைவரும் பங்கேற்க முடியும்" என்றும் கூறினார்.

யாருக்கு வாக்களிக்கிறீர்கள் என்பதை எங்களால் கண்டு பிடிக்க முடியும் எனக் கூறி அரச ஊழியர்கள் ஆளும் கட்சியினரால் மிரட்டப்பட்டுள்ளனர் எனக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

25

## பிரபாகரனால் இயலாதது கூட்டமைப்பால் முடியுமா?

### ஜனாதிபதி மஹிந்த சவால்

கொழும்பு, செப்.8
தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் செய்ய முடியாமல் போனதை, இப்போதுள்ள தமிழ்த் தலைவர்களால் செய்து விட முடியாது என்று சவால் விடும் தொனியில் கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

"பிரபாகரன் என்ன செய்ய நினைத்தாரோ அதை நான் ஒரு போதும் செய்ய அனு மதிக்க



25

## கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தில் புலிக்கொள்கைகள்

கொழும்பு.செப். 08
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கைகளை உள்ளடக்கியதாகவேதமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்துள்ளது என்கிறார் அமைச்சர் விமல் வீரவன்ச.

கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை காணி, பொலிஸ், கல்வி சமூக, பொருளாதார அதிகாரங்களைக் கோருகின்றது. அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப்பையும் வலியுறுத்தியுள்ளது. இவை அனைத்தும் பிரபாகரனின் கொள்கை



கள் என்றார் அவர்.

கூட்டமைப்பின் வடமாகாண சபை முதலமைச்சர் வேட்பாளர் பிரபாகரனை மாவீரன் என்று குறிப்பிட்டுள்ளார். கூட்டமைப்பு பிரிவினைவாதத்தை ஆதரிக்கின்றது என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன என்று மேலும் கூறினார் அமைச்சர் வீரவன்ஸ. (கு-5)

## காணாமற் போதல்கள் அரசின் திட்டமிட்ட சதி

### சாடுகிறது மன்னிப்புச் சபை

நியூயோர்க், செப். 8
இலங்கையில் இடம்பெற்ற காணாமற் போதல் சம்பவங்கள், அரசால் தமிழ் இன அழிப்புக்காகத் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட சதி என்று சர்வதேச மன்னிப்புச் சபை சாடியுள்ளது.

காணாமற்போதலுக்கு எதிரான சர்வதேசதினத்தை முன்னிட்டு ஜேர்மனியின் தலைநகர் பேர்னினில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் மன்னிப்புச் சபை இதனைக் கூறியுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஜேர்மன் மக்களவைப் பிரதிநிதிகள், இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரின்போது காணாமற்போனவர்கள் எங்கே? நான்கு வருடங்கள் கடந்தும் காணாமல் போனோரின் நிலை என்ன? என்று கேள்விகளை எழுப்பினர்.

சர்வதேச நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இதன்போது கருத்து வெளியிட்ட சர்வதேச மன்னிப்புச் சபையில் பிரதிநிதியொருவர், இலங்கையில் இடம்பெறும் காணாமல் போதல்கள் தமிழ் இனத்தை அழிப்பதற்காக அரசால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சதி -என்றார்.

(கு-14)

## பிரசாரக் கூட்டத்தில் வடமாகாண ஆளுநர்

### தேர்தல் விதிமீறல் எனக் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், செப். 8
ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்கானப் பிரசாரக் கூட்டங்களில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி பங்கெடுத்து வருகிறார். இது தேர்தல் விதிமுறைகளை மீறும் செயலாக உள்ள போதும் இது குறித்துத் தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

25

## இந்தியா பறித்த காணிகளை திருப்பிக் கொடுக்கிறோம் நாம்

### அமைச்சர் பஸில் யாழ்ப்பாணத்தில் புதுக்கதை

யாழ்ப்பாணம், செப். 8
"தமிழ் மக்களின் ஓர் அங்குலக் காணியைக் கூட நாங்கள் சுவீகரிக்கவில்லை. இந்திய அமைதிப்படை பறித்த காணிகளையே திருப்பிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்" என்று யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுக் கூறினார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

வடமாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் வந்துள்ளார் அமைச்சர் பஸில். அவர் யாழ். கலட்டி இராமநாதன் வீதியில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் உரையாற்றினார்.

"ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள் கேட்டதை நாம் கொடுக்க முடியாது. அது ஒரு போதும் சாத்தியமில்லை. நாம் தமிழ் மக்களின் காணியை அபகரிப்பதாகவும் சுவீகரிப்பதாகவும் கூறுகின்றன. தமிழர்களின் ஓர் அங்குலக் காணியைக் கூட நாங்கள் சுவீகரிக்கவில்லை " என்று தனது உரையில் குறிப்பிட்டார் அமைச்சர்.

"இந்திய அமைதிப்படையினர் இந்த நிலைகொண்டிருந்த காலத்தில் சுவீகரிக்கப்பட்ட காணிகளை நாம்தான் திருப்பிக்கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். பலாலி மற்றும் காங்கேசன்துறை பகுதிகளில் மக்களின் அபிவிருத்திக்காகக் காணிகள் பெறப்பட்டுள்ளன. இதற்குரிய கொடுப்பனவுகள் எம்மால் வழங்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன " என்று மேலும் கூறினார் பஸில்.

(கு-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரம்பியல் சத்திர சிகிச்சைக்கு நிபுணர் இருந்தும் வசதியில்லை

## போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம். செப் .08

யாழ். போதனா வைத்திய சாலையில் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் இருந்தும் பெரிய அளவிலான சத்திரசிகிச்சைகளைச் செய்வதற்கு ஏற்ற உபகரணங்கள் இல்லாதமையால் நோயாளர்களைக் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டியுள்ளதாகப் பணிப்பாளர் தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலைக்குப் பல வருடங்களின் பின்னர் நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணராக சஞ்சீவ தருசிங்க சில வாரங்களின் முன் நியமிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்து போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு நரம்பியல் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியேற்பட்டது. அது சிறிய சத்திரசிகிச்சை என்பதால் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் உள்ள சத்திரசிகிச்சைக் கூடத்தில் வைத்து கடந்த புதன்கிழமை அந்தச் சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

இது குறித்து வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது.

சிறிய அளவிலான நரம்பியல் சத்திர சிகிச்சையையே இங்கு செய்யமுடியும். பெரிய அளவிலான சத்திரசிகிச்சைகளைச் செய்வதற்கு ஏற்ற சத்திர சிகிச்சைக் கட்டில் உட்பட உபகரணங்கள் இங்கு இல்லை அதனால் அத்தகைய நோயாளர்களைக் கொழும்புக்கு அழைத்துச்சென்றே சத்திர சிகிச்சை செய்யவேண்டியுள்ளது.

இது குறித்து சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது . எனினும் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் அளவிலேயே அவற்றைப் பெறமுடியும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது என்றார். (து-4)

# ரயில் ஆசனப் பதிவுக்கு யாழ்.நகரில் கருமபீடம்

## ரயில்வே திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.8

ரயில் பயணிகளின் வசதி கருதி ரயில் ஆசனப் பதிவை மேற்கொள்வதற்கான விசேட கருமபீடம் ஒன்று யாழ். நகரில் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சிக்கான ரயில்சேவை எதிர்வரும் 14 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதன் பின்னர் கிளிநொச்சிக்கும் கொழும்புக்கும் இடையே தினமும் 5 தடவைகள் 'இன்ரர் சிற்றி' ரயில் சேவையை நடத்துவதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயிலில் பயணம் செய்வோரின் வசதி கருதி ஆசனப் பதிவுகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குகளும் செய்யப்படவுள்ளன.

யாழ்.மாவட்டப் பயணிகள் ஆசனப் பதிவை மேற்கொள்வதற்கு வசதியாக யாழ். நகரில் விசேட கருமபீடம் ஒன்றை அமைப்பதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளதாக அதிகாரி ஒருவர் கூறினார்.

ஆசனப் பதிவை மேற்கொள்ளும் பயணிகளை யாழ். நகரில் இருந்து கிளிநொச்சிக்கு பஸ் மூலம் ஏற்றிச் செல்வதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (து-17)

### படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி நேற்றுச் சாவு

கனடாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த குடும்பஸ்தர் வாகனம் மோதி படுகாய மடைந்த நிலையில் யாழ் .போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அவரை பின்னால் சென்ற வாகனம் மோதியதில் நெஞ்சு மற்றும் தலைப் பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டதாக உறவினர்கள் தெரி வித்தனர்.

இந்த விபத்து புத்தூரில் கடந்த வியாழன் இரவு 7மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் கனடாவை வசிப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாயைச் சேர்ந்தவருமான ஆசீர்வாதம் சத்தியபவான் (வயது -44) என்பவரே உயிரிழந்தவராவார். (ஜ-4)

# நவியின் கருத்துக்கு அதிருப்தி ஐ.நா.செயலருக்கு அரசு கடிதம்

## வெளிவிவகார அமைச்சின் மூலம் உத்தியோகபூர்வ நடவடிக்கை

கொழும்பு, செப். 8

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது பயணத்தின் முடிவில் முன்வைத்த கருத்துகளுக்குக் கடும் ஆட்சேபனையை வெளியிட்டு ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு கடிதமொன்றை அனுப்புவதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

அடுத்தவாரமளவில் வெளிவிவகார அமைச்சினூடாக இந்தக் கடிதத்தை அரசு, ஐ.நா. செயலாளருக்கு அனுப்பவுள்ளது என்று தெரியவருகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை இலங்கை அரசு ஏற்கனவே நிராகரித் திருந்தாலும், ஆட்சேபனையை உத்தியோகபூர்வமாக வெளியிடும் முகமாகவே ஐ.நாவுக்கு கடிதம் எழுதப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு அரசு முழு சுதந்திரத்தை வழங்கியிருந்த நிலையில், அவர் தனது அதிகாரத்துக்கு அப்பால் சென்று முன்னெடுத்த நடவடிக்கைகளையும் இலங்கை அரசு பட்டியலிடவுள்ளது என்று அறியமுடிகின்றது.

பயண நிகழ்ச்சி நிரலுக்கு மாறான வகையில் முள்ளிவாய்க்காலில் மர ணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த முற்பட்டமை, திருமலையில் நடத்திய இரகசிய சந்திப்பு ஆகியன உள்ளிட்ட விடயங்கள் பட்டியலில் இடம்பெறலாம் என அரச வட்டாரங்கள் குறிப்பிட்டன.

ஒருவார கால பயணம் மேற்கொண்டு கடந்த 25 ஆம் திகதி இலங்கை வந்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை கடந்த 31 ஆம் திகதி கொழும்பில் செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

"இலங்கை அரசு எதேச் சாதிகார பாதையை நோக்கி பயணிக்கின்றது. மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர். ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப் பட வேண்டும். வடக்கில் சிவில் செயற்பாடுகளில் இராணுவத் தலையீடுகள் ஓங்கியுள்ளன. சாட்சியங்களை பாதுகாப்பு தரப்பு மிரட்டுகின்றது" என பல்வேறு கருத்துகளை இதன்போது அவர் முன்வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து-சி)

### இந்தியக் குழு இலங்கைக்கு

கொழும்பு, செப். 8

இந்தியாவின் உயர்மட்ட இராஜதந் திரக் தூதுக்குழுவொன்று அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கை வரவுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பாரா அல்லது இல்லையா என்ற சர்ச்சை தொடர்ந்தும் நீடிக்கின்றது. இந்நிலையில், டில்லி அரசின் உயர்மட்ட இராஜ தந்திரக்குழுவொன்று அவசரமாக கொழும்பு வரவுள்ளமை முக்கியத்தும் மிக்கதாக கருதப்ப டுகின்றது.

இந்தியக்குழு தனது பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட முக்கியஸ் தர்களுடன் பேச்சு நடத்தவுள்ளது. (கு-சி)

# வாக்காளர் அட்டைகள் 55 வீதம் விநியோகம்

## 13 ஆம் திகதி வரை பணி தொடரும்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்.குடாநாட்டில் இதுவரை 55 வீதமான வாக்காளர் அட்டைகள் உரியவர்களுக்கு விநி யோகிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி தெரி வித்தார்.

யாழ்.தேர்தல் அலுவலகத்தில் இருந்து 4 லட்சத்து 26 ஆயிரத்து 703 வாக்காளர் அட்டைகள் உரியவர்களுக்கு விநியோகிப்பதற்காக யாழ்.பிரதம தபாலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றில் கிட்டத்தட்ட 2 லட்சத்து 35 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் தபால கத்தால் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றார் அந்த அதிகாரி.

55 வீதமான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 13 ஆம் திகதி வரை இந்த வாக்காளர் அட்டை விநியோகம் இடம்பெறும்.

தொடர்ந்து இவற்றை அந்தந்தத் தபாலகங்களில் வைத்து உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார். (து-17)

### கண்டியில் சூடு வேட்பாளரின் ஆதரவாளர் காயம்

கண்டி, பேராதனையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் ஒருவரின் ஆதரவாளர் காயமடைந்துள்ளார்.

பேராதனை, ஏதண்டுவாவ பகுதியில் நேற்று அதிகாலை 3 மணிக்கும் 4 மணிக்கும் இடைப்பட்ட நேரத்திலேயே துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

காயமடைந்தவர் வேட்பாளரின் வீட்டில் இருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் கண்டி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# இலங்கைக்குப் போர்க் கப்பல் வழங்குவதைக் கைவிடுங்கள்

## மத்திய அரசிடம் கருணாநிதி கோரிக்கை

சென்னை, செப். 8

இலங்கைக்குப் போர்க் கப்பல்களை வழங்கும் எண்ணத்தை இந்தியா கைவிட வேண்டும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

2017 ஆம் ஆண்டில் கடல் எல்லையைப் பாதுகாக்க இரண்டு போர்க் கப்பல்களை இந்தியா இலங்கைக்கு வழங்கவுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள செய்தி தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது;

2009 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இலங்கை அரசைக் கண்டித்து நான் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை போர் நிறுத்தப்பட்டுவிட்டதாகக் கூறி இந்திய அரசு எனது உண்ணா விரதத்தை முடித்து வைத் தது.

இந்த நிலையில் இலங்கைக்கு இரண்டு போர்க் கப்பல்களை வழங்குவதற்கு மத்திய அரசு முன்வந்துள்ளமை இலங்கைத் தமிழர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் துரோகமிழைக்கும் செயல். இலங்கைக்கு போர்க் கப்பல்களை வழங்கப்படுவதன் மூலம் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக் கப்படுவார்கள்.

எனவே இந்திய மத்திய அரசு இலங்கைக்கு உதவும் எண்ணத்தைக் கைவிட வேண்டும் என்றார். (து-14)

### கண்ணீருடன் பஸிலை வரவேற்றார் அங்கஜனின் தாய்

யாழ்ப்பாயம்.செப். 08

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகத்துக்கு நேற்றையதினம் வருகை தந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைக் கண்ணீர் மல்கியவாறு கைகூப்பி வரவேற்றார் அங்கஜனின் தாயார்.

யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அலுவலகத்துக்கு நேற்று சனிக்கிழமை மக்கள் சந்திப்புக்காகப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வருகைதந்தார்.

இதன்போதே அங்கஜனின் தாயார் கண்ணீர் மல்கியவாறு அமைச்சரை வரவேற்றார்.

ஆளும்கட்சி வேட்பாளர்களுக்கிடையில் கடந்த மாதம் 27 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் அங்கஜனின் தந்தையாரான இராமநாதன் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து)

### சடலம் மீட்பு

புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து காணாமற்போனதாகக் கூறப்படும் ஆசிரியர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

புதுக்குடியிப்பு இரணைப் பாலையைச் சேர்ந்த இ.திலகேஸ்வரன் (வயது - 51) என்பவரே நேற்றுமுன்தினம் காணாமற்போயிருந்தார். இவர் நேற்று வீட்டுக்கிணற்றிலிருந்து சட லமாக மீட்கப்பட்டார். (து-400)

# முதலமைச்சர் வேட்பாளர் விக்கி வடமாகாணத்தை சேர்ந்தவரா?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் பஸில்



யாழ்ப்பாணம், செப். 8

வடக்கிலுள்ள மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடமாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட வடக்கைச் சேர்ந்த ஒருவரைக் களமிறக்க முடியாமற் போனதற்கான காரணம் என்ன?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நான் கடந்த காலங்களில் பல தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சென்றுள்ளேன். இது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண முதன்மை வேட்பாளராக களமிறங்கியுள்ள சி.வி. விக்னேஸ்வரன் இப்போதுதான் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார். அதுவும் தனக்கு வாக்களிக்கும் படி கோரிக்கை விடுப்பதற்கே இங்கு வந்துள்ளார்.

இதேபோன்று கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குழப்பநிலை காணப்படுகின்றது. அதில் கல்வி, மருத்துவம் தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை. அதே போன்று இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை குறித்தும் பேசப்படவில்லை. இதற்கு காரணம் கூட்டமைப்பினருக்கு கிடைக்கும் இந்திய சலுகைகள் தான். அதனை அனுபவிப்பதற்காகவே அவர்கள் மீனவர் பிரச்சினையில் அமைதி காக்கின்றனர். வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் ஒருவரை வடக்கிலேயே தெரிவு செய்திருக்கலாம் என்பதே எனது கருத்து. இலங்கையில் மாகாண சபை அதிகாரங்கள் வடக்குக்கு இதுவரை பகிரப்படாது இருந்தமைக்கான பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே ஏற்க வேண்டும் - என்றார்.

இந்தப் பிரசாரக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஜ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர்



மாறினால் மாறட்டும்
இல்லையேல் மாற்றுவோம்
தீமைகள் யாவையும்
கூண்டிலே ஏற்றுவோம்

X 5

இம்மானுவல் ஆனல்ட்
[B.A (Phil) Hons, MSS Limra International (USA)
AMTC Limra International (USA)
(இலங்கை தமிழரசுக் கட்சி யாழ். தொகுதி கிளைச்
செயலாளர், முன்னாள் யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவரும்,
விளையாட்டுப் பேரவைத் தலைவரும் அகில இலங்கை சமாதான நீதிவானும்)
www.emmanuvelarnold.blogsport.com
(C/11205)(10.63)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## கொக்குவில் மேற்கில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.8

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வடமாகாணசபைத் தேர்தலுக்கான மாபெரும் பரப்புரைக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கொக்குவில் மேற்கு லோட்டஸ் றோட் பாரதியார் சனசமூகநிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நல்லூர் பிரதேசசபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராசா, முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச் சந்திரன், வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந் திரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் உரை நிகழ்த்துவர். (வ-14)

## சாவகச்சேரிக்கு நாளை வருகிறார் பஸில்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நாளை பி.ப. 3 மணிக்கு சாவகச்சேரிக்கு வருகை தரவுள்ளனர். நுணாவில் மேற்குப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத் திறப்பு விழாவுக்காக வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## அளவெட்டியிலும் இன்று மாலை கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு அளவெட்டி அருணோதயா ஆரம்பப் பாடசாலைக்கு அருகிலுள்ள மைதானத்தில் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இன்றைய பிரசாரக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் முதலமைச்சர் வேட்பாளர் க.வி.விக்னோஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன், க.சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் வேட்பாளர்களும் உரையாற்றவுள்ளனர். (ஒ-5)

## டிராக்டர் சில்லுக்குள் அகப்பட்ட குடும்பஸ்தர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, செப்.8

திடீரென புறப்பட்ட டிராக்டரின் சில்லுக்குள் அகப்பட்டு குடும்பஸ்தர் நசியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று இயக்கச்சியில் இடம்பெற்றது.

வயல் வேலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் திருத்தம் செய்யப்பட்டுவீட்டுக்குக்கொண்டு வரப்பட்ட உழவு இயந்திரத்தை நில்த்தில் நின்றவாறு இயக்கியுள்ளார். அது இயங்கியவுடன் முன்னோக்கிச் சென்றதால் நிலத்தில் வீழ்ந்த அவரின் இடுப்புப் பகுதியை நசித்தது சில்லு. அருகில் நின்றவர்கள் உடனடியாகச் செயற்பட்டதால் இடுப்பில் ஏறாமல் தடுக்கப்பட்டது. சில்லு நசித்ததால் பாதிக்கப்பட்ட நபரை வாகனத்தில் ஏற்றி சாவகச்சேரி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்த்தனர். இயக்கச்சியைச் சேர்ந்த இராசரத்தினம் சிவராசா (வயது -64) என்பவரே இவ்விதம் பாதிக்கப்பட்டவராவார். (வ-9)

## பாடசாலை மாணவருக்கு பற் சிகிச்சை முகாம்

தென்மராட்சி, செப்.8

வரணிப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான நடமாடும் பற் சிகிச்சை சேவைகள் நாளை தொடக்கம் 14 ஆம் திகதி வரை வரணி வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளன.

பொது சுகாதார பரிசோதகர்களால் பாடசாலைகளில் நடத்தப்பட்ட பற் சிகிச்சையின் போது தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் நடமாடும் சேவையில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மாதம் தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்கான நடமாடும் பற்சிகிச்சைச் சேவைகள் நடத்தப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

மாகாணசபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்

“77ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு
தமிழர் எதிர்கொள்ளும்
அதி முக்கிய தேர்தல் இது.
சிரமம் பாராது சென்று
வீட்டுச் சின்னத்திற்கு
வாக்களிப்பது
எம் ஒவ்வொருவரதும் கடமை”



X 15

தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வங்கி நடத்திய வாடிக்கையாளர் கருத்தரங்கு



இலங்கை வங்கியால் வட மாகாணத்தைச் சேர்ந்த சிறிய நடுத்தர தொழில் முயற்சி வாடிக்கையாளர்களுக்கு, "சிறிய நடுத்தர தொழில் முயற்சி முன்னோக்கிய பார்வை" எனும் தொனிப் பொருளில் வாடிக்கையா ளர் கருத்தரங்கு ஒன்று கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் "கிறீன் கிறாஸ்" ஹோட்டலில் நடத்தப்பட்டது. காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை இது இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் வடமாகாணத்தைச் சேர்ந்த இலங்கை வங்கியின் 100 வாடிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

கருத்தரங்கில் சிறிய நடுத்தர தொழில் முயற்சி வாடிக்கையாளர்களுக்கு ஆக்க பூர்வமான சிந்தனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த)

## உலக வர்த்தக மையத்தில் ஹமீடியா



இலங்கையின் ஆடவர் ஆடைகள் உற்பத்தித் துறையில் முன்னணியில் திகழும் ஹமீடியா நிறுவனமானது தனது வர்த்தகக் குறியீடு, உற்பத்திகள் மற்றும் தனது சேவைகளின் சிறப்புத்துவத்தை - கொழும்பு நகரின் கேந்திர முக்கியத்துவமிக்க இடமாக பிரபலமாகியுள்ள பரபரப்பு மிக்க உலக வர்த்தக மையத்திற்குக் (WTC) கொண்டு சென்றுள்ளது.

இப் பிரத்தியேகமான ஹமீடியா ஆடவர் ஆடை காட்சியறையின் திறப்பு விழாவில் இலங்கை கிரிக்கெட் அணித் தலைவரான அஞ்சலோ மெத்தியூஸ் பிரதம அதிதி யாக கலந்து கொண்டு சிறப்பித்தார். அத்துடன் ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட்டும் இந் நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார்.

கொழும்பு உலக வர்த்தக மையக் கட்டிடத் தொகுதியிலுள்ள கிழக்குக் கோபுரத்தின் கீழ்த்தளத்தில் உபாய ரீதியான முறையில் நிறுவப்பட்டுள்ள 4000 சதுரஅடி பரப்பளவு கொண்ட இந்த ஹமீடியா காட்சியறையானது, ஹமீடியா நிறுவனத்திற்கு புகழைத் தேடித் தந்துள்ள பிரத்தியேகமான ஆடவர் ஆடைகளுக்காக முழுமையாக அர்ப்பணிக்கப்பட்டதாக காணப்படும். புதிய வடிவமைப்புக்கள், வர்ணங்கள் மற்றும் துணிகளில் தயாரிக்கப்பட்ட ஹமீடியா நிறுவனத்தின் பெருமைக்குரிய முறைசார் மற்றும் கசுவல் ஆடைகள், நேர்த்தியான (ஸ்மார்ட்) கசுவல் ஆடைகள், விருந்து பசார நிகழ்வு மற்றும் வைபவங்களுக்கு பொருத்தமான ஆடைகள் போன்ற பரந்துபட்ட வகைகளிலான ஆடைத் தெரிவுகளை இக் காட்சியறை தன்னகத்தே கொண்டிருக்கும்.

புளகாங்கிதம் அடைந்தவரான ஹமீடியா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் கூறுகையில், எவ்வித சந்தேகமுமின்றி, தலைநகரிலுள்ள மிகவும் பிரபலமான ஒரு கூட்டாண்மை முகவரியாகத் திகழ்கின்ற உலக வர்த்தக மையத்தில் எமது காட்சியறையின் கதவுகளை திறந்து வைப்பதையிட்டு எனது அணியினரும் தனிப்பட்ட ரீதியில் நானும் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். நிறைவேற்று அதிகாரிகள், முகாமையாளர்கள் போன்ற பல நூற்றுக் கணக்கான கூட்டாண்மை துறைசார் இலங்கையரை கவர்ந்திழுக்கக் கூடிய உபாய ரீதியிலான ஓர் அமைவிடமாக இது காணப்படுகின்றது. உண்மையில் அவ்வாறான நபர்களே எமது அடிப்படை இலக்கு வாடிக்கையாளர்களாகவும் உள்ளனர் என்றார். (ஜ)

### தங்க முலாம் நிதி முனைகள் விநியோகஸ்தராக பான் ஏசியா வங்கி நியமனம்

PAN ASIA BANK
*At Your Service*

அரசாங்கத்தின் தங்க முலாம் (Gilt) நிதி முனைகளின் பிரதம விநியோகத்தராக பான் ஏசியா வங்கி நியமிக்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியை இலங்கை மத்திய வங்கி வழங்கியுள்ளது. இதற்கமைய இம் மாதம் 16ஆம் திகதி முதல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு வங்கிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த)



யூனியன் அஷூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தால் காரைநகர் சிவன் கோவிலடியைச் சேர்ந்த செல்வரத்தினம் மதுரம் குடும்பத்தினருக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. ரூபா இரண்டு லட்சத்து 75ஆயிரம் பெறுமதியான காசோலையை யூனியன் அஷூரன்ஸ் காரைநகர் கிளையில் வைத்து பருத்தித்துறை பிராந்திய முகாமை யாளர் ரி.குபேந்திரன் கையளிக்கிறார். (த-250)

## டாடா பயணிகள் வாகனங்களுக்கு மொபில் எண்ணெய் வகைகள்

மொபில் லூப்ரிகன்ட்ஸ் வகைகளை இலங்கையில் விநியோகிக்கும் மெக்லாரன்ஸ் லூப்ரிகன்ட்ஸ் நிறுவனம், வாகனத் துறையில் மற்றுமொரு மைல்கல்லை எட்டியுள்ளது. இலங்கையில் அனைத்து டாடா ரக பயணிகள் வாகனங்களுக்கும் பரிந்துரைக்கப்படும் லூப்ரிகன்ட் பங்காளராக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. DIMO நிறுவனத்தின் மூலம் இறக்குமதி செய்யப்படும் உலகப்புகழ்பெற்ற வாகனங்களான மேர்சிடீஸ் பென்ஸ், கிரைஸ்லர் மற்றும் ஜீப் போன்றவற்றுக்கு 15 ஆண்டுகளுக்கு மேலாக அதிகளவு பரிந்துரைக்கப்படும் லூப்ரிகன்ட் பங்காளராக மொபில் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த உடன்படிக்கை குறித்து மேர்சிடீஸ் பென்ஸ்-டாடா விற்பனைகளுக்கான தலைமை அதிகாரி ரஜீவ் பண்டிதகே கருத்து தெரிவிக்கையில், உலகின் தலைசிறந்த பொறியியல் நயத்தில் அமைந்த வர்த்தக நாமங் களை பிரதிநிதித்துவப்படுத்துவதில் DIMO பெருமையடைகிறது. இந்த உடன்படிக்கையில் மூலம் டாடா பயணிகள் வாகனங்களின் வினைத்திறன் மற்றும் செயற்பாடுகள் மேலும் உறுதியடையும் என நாம் நம்புகிறோம். உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்ற வர்த்தக நாமமான மொபில் உடன் கைகோர்ப்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம் என்றார்.

மேக்லாரன்ஸ் லூப்ரிகன்ட்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் டிலான் செனவிரட்ன கருத்துத் தெரிவிக்கையில், கடந்த பல ஆண்டுகளாக DIMO நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுவது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்தப் புதிய பங்காண்மையின் மூலம் எமது செயற்பாடுகள் மேலும் வலுவடையும் என்பதுடன், எமது வர்த்தக உறவுகள் மேலும் உறுதியடையும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.



## இலங்கையில் பால் பண்ணையை நிறுவ நெதர்லாந்து நிறுவனம் ஆர்வம்



உயர் தொழில்நுட்பம் வாய்ந்த, செழிப்பான பசுக்களைக் கொண்ட பால் பண்ணை ஒன்றை இலங்கையில் நிறுவுவதற்கு தாம் ஆர்வமாக உள்ளதாக நெதர்லாந்தைச் சேர்ந்த வெலேமா ஹோல்டிங்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

1500 ஹெக்டெயர் பரப்பளவில் பசுமையான நீர் வசதிகளுடன் உகந்த ஒரு பகுதியில் இந்தப் பண்ணையை நிறுவத் தாம் தீர்மானித்துள்ளதாக நிறுவனம் தெரிவித்திருந்தது. இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நெதர்லாந்தின் வர்த்தக தூதுக்குழுவில் ஒரு அங்கமாக இடம்பெற்றிருந்த வெலேமா ஹோல்டிங்ஸ் தமது ஆர்வத்தை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அழுகுக்கலை ஆலோசகர்களுக்கு வெளிநாட்டு புலமைப் பரிசில்

இலங்கையின் முதற்தர மூலிகை உற்பத்தி வர்த்தக நாமமான நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் உற்பத்திகளை தயாரிக்கும் நேச்சர்ஸ் பியூட்டி கிரியேஷன்ஸ் நிறுவனம் வர்த்தக நடவடிக் கைகளுக்கு அப்பால் பல்வேறு சமூக மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைளுக்கு பங்களிப்பு வழங்குகின்றது.

அத்தகைய சமூகத் திட்டத்தின் ஓர் அங்கமாக இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனத்திடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் அழகுக் கலை ஆலோசகர்களின் திறன்களை ஊக்குவிக்கும் நோக்கில் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான புலைமைப் பரிசில்களுக்கு அனுசரணை வழங்க நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனம் முன் வந்துள்ளது.

2013 முதல் 2018 வரையான கால கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வுள்ள இந்த வெளிநாட்டு பயிற்சி புலைமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 56 அழகக்கலை ஆலோ சகர்களுக்கு தாய்லாந்தின் பிரபல உயர் அழுகுக்கலை பயிற்சி பாட சாலையான Chetawan Health School இல் தங்கும் வசதி உட்பட 7 நாள்களுக்கு பயற்சிகளுக் கான முழுமையான அனுசரணையை வழங்க நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனம் முன்வந்துள்ளது. இதன் முதற்கட்டமாக 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கடைசிப் பகுதியில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 10 அழுகுக்கலை ஆலோசகர்களும் ஓர் அதிகாரியும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு செல்லவுள்ளனர்.

இந்த அனுசரணைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்மையில் கொழும்பு நாரஹேன்பிட்டியிலுள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையில் வைத்து கைச் சாத்திடப்பட்டது.

**அழகுக் கலை ஆலோசகர்களின் திறன்களை ஊக்குவிக்கும் நோக்கில் வெளிநாட்டு பயிற்சிகளுக்கான புலைமைப் பரிசில்களுக்கு அனுசரணை வழங்க நேச்சர்ஸ் சீக்ரெட்ஸ் நிறுவனம் முன் வந்துள்ளது.**

இளைஞர் விவகாரம் மற்றும் திறன் கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழஹப்பெருமவின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நேச்சர்ஸ் பியூட்டி கிரியே ஷன்ஸ் நிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான சமந்த குமாரசிங்க, இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைவர் கேணல் தர்ஷன ரத்நாயக்க ஆகியோர் கைச்சாத்திட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால் கிரேரு, இளைஞர் விவகாரம் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.[illegible] உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் தந்த வலிகளில் இருந்து பெண்களை மீட்கவே தேர்தலில் போட்டியிடுகின்றேன்

## கூட்டமைப்பின் முல்லைத்தீவு வேட்பாளர் மேரிகமலா

நேர்காணல்- தட்சா. ஜோ.

வடமாகாண சபைத் தேர்தலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரே ஒரு பெண் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகக் களமிறங்கியுள்ளார் திருமதி மேரிகமலா குண சீலன்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் மேற்படிப்பை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் கற்றுள்ளார். பின்னர் 5 வருடங்கள் கூட்டுறவுத் துறையில் கணக்காளராக கடமையாற்றினார்.

1990 இல் ஆசிரியராக பதவியேற்று முதன் முதலில் விஸ்வமடு மகா வித்தியாலத்தில் ஆசிரியையாக நியமனம் பெற்றார். பின்னர் புதுக் குடியிருப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலைக்கு மாற்றம் பெற்று தற்போது புதுக்குடியிருப்பு மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயத்தில் உப அதிபராக கடமையாற்றி வருகின்றார். இவருடனான சந்திப்பு இங்கு பிரசுரமாகிறது.

*கே. நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிட நீங்கள் தீர்மானித்ததற்கான காரணம் என்ன?*

ப: பெண்களுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். இறுதிப் போரில் பெண்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். கட்டுக் கோப்பாக இருந்த பெண் சமுதாயத்தை போர் சிதைத்துள்ளது. அவர்களது வாழ்வு சீராக்கப்பட வேண்டும். அவர்களுக்கு மறுவாழ்வு பெற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களை வலியிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்பதற்காகவே நான் போட்டியிடுகின்றேன்.

*கே: தேர்தலுக்கான காலம் நெருங்கி வரும் நிலையில் உங்கள் பரப்புரைப் பணி எவ்வாறு நடைபெறுகின்றது?*

ப: முல்லைத்தீவு மாவட்டமெங்கும் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி வருகின்றேன். இந்தப் பணியை நாம் தொடர்ந்து முன்னெடுக்க உள்ளோம். என்னை அறிமுகம் செய்ய வேண்டிய தேவை எனக்கு உண்டு. கிடைத்த வாய்ப்பை நான் சரியாகப் பயன்படுத்தி பரப்புரைப் பணிகளில் ஈடுபட்டு வருகிறேன்.

*கே: வேட்பாளராக களமிறங்கிய உங்களுக்கு வடமாகாண சபை உறுப்பினராக பதவி கிடைத்தால் உங்கள் பணிகள் எவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்?*

ப: நிச்சயமாக பெண்களுக்காக குரல் கொடுப்பேன். இளம் சமுதாயத்தை முன்னேற்றும் வகையில் அவர்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பேன். பெண்கள், மாணவர்களின் ஒளிமயமான வாழ்வுக்கு என்னால் முயன்ற நடவடிக்கைகளை எடுப்பேன். மக்களுக்காக நிச்சயம் குரல் கொடுத்து அவர்களுக்காக சேவை செய்வேன்.

*கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக போட்டியிடும் உங்களுக்கு கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் தேர்வு தொடர்பான அபிப்பிராயம் என்ன?*



ப: சிறந்த தலைமையின் கீழ் வேட்பாளராக களமிறங்கியுள்ளமை மகிழ்ச்சி அளிக்கின்றது. நீதியரசருக்கு நீதி தெரியும். அவருடைய கூட்டங்களில் கலந்துகொண்டு அவருடைய உரைகளைச் செவிமடுத்தாலே அவருடைய புலமை புரியும். அவரை அநேகரும் அறிந்துள்ளனர். சி.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சராகி னால் வளமான எதிர்காலம் வட மாகாணத்துக்கு உண்டு.

*கே: தேர்தல் நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்ள முடிகின்றதா?*

ப: இரண்டு தடவைகள் இராணுவப் புலனாய்வாளர்களால் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டேன். இருப்பினும் நான் வேட்பாளராக களமிறங்கியதற்கான காரணத்தை அவர்களிடம் தெளிவாகக் கூறினேன். அதன் பின்னர் எவ்வாறான எதிர்ப்புக்களும் இதுவரை ஏற்படவில்லை.

*கே: வாக்களிக்கவுள்ள வாக்காளர்களுக்கு வேட்பாளர் என்ற ரீதியில் என்ன கூற விரும்புகின்றீர்கள்?*

ப: வாக்காளர்களுக்கு நான் கூற விரும்புவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்ய உங்கள் வாக்குகளை பயன்படுத்துங்கள். அரச ஆதிக்கம் ஓங்கினால் எமது உரிமைகள் மறுக்கப்படும்.

அதனை விடுத்து கூட்டமைப்பினருக்கு வாக்களித்து உரிமைகளை வென்றெடுங்கள்.

# கூட்டமைப்பின் வெற்றி சர்வதேசத்துக்கு மீண்டும் ஓர் உண்மையைச் சொல்லும்

## கிளிநொச்சியில் சுமந்திரன்



அக்கராயன், செப்.8

வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெறும்போது அது சர்வதேசத்துக்கு ஒரு பலமான செய்தியையும் அரசுக்குப் பெரும் அழுத்தங்களையும் உருவாக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியாகியதும், நாம், பிரிவினையைத் தூண்டி விடுகிறோம், தனிநாடு கோருகிறோம் என்றெல்லாம் செய்திகள் வெளிவந்துள்ளன.

எமது தேர்தல் அறிக்கையில் புதிதாக ஒன்றும் சொல்லிவிடவில்லை. 65 ஆண்டுகளாக தமிழர்கள் சொல்லும் வரலாறுகளைத்தான் நாம் தேர்தல் அறிக்கையில் வெளிப்படுத்தியிருக்கிறோம்.

நாம் ஒரு தனித் தேசிய இனம். இந்த நாட்டிலே தொன்றுதொட்டு வாழ்ந்து வந்திருக்கிறோம். வடக்கு கிழக்கு மாகாணங்களிலே பூர்விகமாக வாழ்ந்து வந்திருக்கிறோம். ஆகையினாலே வடக்கு கிழக்கைத் தாயக பூமியாகக் கருதுகிறோம். இதன் காரணமாக சர்வதேச சமூகத்தின் ஈடுபாட்டுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தேசிய இனமாகிய நாம், எங்களையே ஆளக்கூடிய உரிமையைக் கேட்கிறோம்.

1952ஆம் ஆண்டு திருகோணமலையில் தமிழரசுக் கட்சி எடுத்த தீர்மானத்திலேயே மேற்படி விடயங்கள் அடங்கியிருக்கின்றன. இதுதான் எமது அரசியல் நிலைப்பாடு. இதில் எந்தவிதமான மாற்றமும் இல்லை.

கடந்த 65 ஆண்டுகளில் தமிழர்களின் போராட்ட வடிவங்கள் மாறியுள்ளன. அதுவும் சிங்கள ஆட்சியாளர்களது நடவடிக்கைகள் காரணமாகவே மாற்றியமைக்க வேண்டி ஏற்பட்டது. போருக்குப் பின்னரான எமது போராட்ட வடிவம் ஒரு கத்தியின் விளிம்பில் நடப்பது போன்ற அணுகுமுறையைக் கொண்டதாக உள்ளது. ஏனெனில் தற்போது எமக்கு சர்வதேசத்தினுடைய ஆதரவு இருக்கிறது. வடக்குத் தேர்தலில் மக்கள் இந்த உண்மையை நிரூபித்துக் காட்ட வேண்டும்-என்றார். (ஜ-18)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விரும்புவது அபிவிருத்தியை அல்ல இழந்தவற்றுக்கான நியாயமான தீர்வையே

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் தர்மலிங்கம்

சந்திப்பு - தி.அமுதன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியில் 7 வருடங்களாக அதிபராகப் பணியாற்றியுள்ளார். கல்விச் சேவையையே தனது வாழ்நாளில் முக்கிய சேவையாக முன்னெடுத்துள்ளார். இவர் அதிபராக இருந்த காலப் பகுதியில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவரொருவர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றமை முக்கியமானது.

இதற்கு அப்பால் இவர் சிறந்த விவசாயி. யாழ். மாவட்டத்தில் சிறந்த விவசாயியாகவும் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார். வடமாகாண சபைத் தேர்தலே இவரது முதலாவது அரசியல் பிரவேசம் இது.

இவருடனான நேர்காணல் இங்கே பிரசுரமாகிறது.

*கே: நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் நீங்கள் போட்டியிடுவதற்கு ஏன் தீர்மானித்தீர்கள் ?*

ப: வடமராட்சியிலுள்ள பெரியவர்கள் மற்றும் எங்கள் பிரதேச சபைத் தவிசாளர் வியாகேசு மற்றும் அரசியல் தலைவர்கள் பலரும் என்னைக் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே மாகாண சபைத் தேர்தலில் நான் போட்டியிடுவதற்குச் சம்மதித்தேன். அரசியல் ஆதரவாளனாக இருந்த நான் இப்போதே முதன் முறையாக அரசியல் களத்திற்கு நேரடியாக இறங்கியிருக்கின்றேன்.

*கே: மாகாணசபையில் அதிகாரங்கள் இல்லாத சூழ்நிலையில் எவ்வாறு மக்களுக்கான சேவைகளை முன்னெடுக்கவுள்ளீர்கள் ?*

ப: இந்த மாகாணசபையில் அதிகாரங்கள் இல்லை என்பது ஏற்கனவே எங்களுக்குத் தெரியும். அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரின் கபட நாடகத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் சிக்குப்பட்டார். தமிழர்கள் நாங்கள் மாட்டிக் கொண்டோம். ஆனால் இன்றைய காலச் சூழல் வேறாகவுள்ளது. தமிழினம் ஒற்றுமையாக தங்கள் அதிகாரங்களுக்காகப் போராடுவதை சர்வதேச சமூகம் அவதானித்துக் கொண்டிருக்கின்றது.

அதிகாரங்கள் இல்லை என்றுகூறி விட்டு இருந்துவிட முடியாது. மக்கள் பலம் எமக்கு கிடைக்கும் பட்சத்தில் சர்வ தேச ஆதரவுடன் எங்களுக்கான அதிகாரங்களைப் பெற்று நாங்கள் எங்களை ஆள்வோம். எங்கள் ஆட்சி மக்களுக்கான சிறப்பான சேவையை வழங்குவதொன்றாகவே இருக்கும்.

*கே: தமிழ் மக்கள் உங்களை ஏன் தேர்வு செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கின்றீர்கள் ?*

ப: நான் மிகவும் எளிமையாகவே எனது வேலைகளை முன்னெடுத்திருக்கின்றேன். நான் அரசியல்வாதிகள் போன்று செயற்பட முடியாது. நேருக்கு நேர் எனது கருத்துக்களை வெளிப்படுத்துவேன். இதைச் செய்வேன், அதைச் செய்வேன் என்று சொல்லி ஏமாற்ற மாட்டேன். என்னால் முடியும் என்றால் அதை முடித்து காட்டுவேன். இயலாத ஒன்றைச் சொல்லி ஏமாற்ற மாட்டேன். இந்த விடயத்தை முன்னிறுத்தியே மக்கள் என்னைத் தேர்வு செய்ய வேண்டும் என்று எதிர்பார்கின்றேன்.

*கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிற்கு மக்களின் ஆதரவு எவ்வாறு இருக்கின்றது?*

ப: நான் பலதரப்பட்ட மக்களையும் சந்தித்திருக்கின்றேன். அந்த மக்கள் இந்த அபிவிருத்திக்கான அற்ப சலுகைகளுக்கு விலை போகவில்லை. தங்கள் இழப்புக்களுக்கான நியாயமான தீர்வைத் தேடுகின்றனர். உரிமையை அடைவதையே அவர்கள் விரும்புகின்றனர். அந்த உரிமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பெற்றுக் கொடுக்கும் என்று நம்புகின்றனர். அதனை நாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடப்பாட்டிலும் இருக்கின்றோம்.

*கே: தமிழ் மக்களுடைய தீர்வுக்கான போராட்டத்தை எப்படியாக முன்னெடுக்கப் போகின்றீர்கள் ?*

ப: இன்று எங்களுக்காக குரல் கொடுக்கும் சர்வதேச சமூகமும் சேர்ந்தே எங்களைத் தோற்கடித்தது. அதற்காக நாங்கள் தோற்றுப் போன இனம் அல்ல. எங்களைத் தோற்கடித்த சர்வதேச சமூகம் இன்று எங்களுக்கான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு தயாராக இருக்கின்றது. இந்தச் சந்தர்பத்தைப் பயன்படுத்தி நாங்கள் எங்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

மாகாணசபை என்பது எங்களுக்கு நிரந்தர தீர்வான ஒன்றல்ல. ஆனாலும் அதனை முதல் படியாகக் கொண்டு நாங்கள் எங்கள் இலட்சியத்தை அடைய வேண்டும்.




# வடக்கில் அரச ஆதிக்கம் தொடருமானால் தம்புள்ள நிலைமையே எமக்கும் ஏற்படும்

## கிளிநொச்சியில் யோகேஸ்வரன் எம்.பி. எச்சரிக்கை



அக்கராயன், செப்.8

வடமாகாணசபைத் தேர்தலில் அரசு ஆட்சியமைக்கக் கூடிய சூழல் உருவானால் தம்புள்ளையில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை போன்ற அவலங்கள் பல உருவாகலாம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன். கிளிநொச்சியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களுடைய பிரச்சினைகளை சிங்களத் தலைவர்கள் உணர்ந்திருந்த போதிலும் தீர்வு வழங்க முன்வரவில்லை. இதுவே எமது போராட்டங்கள் உருப்பெறக் காரணம். ஜனாதிபதி ஒற்றுமையைப் பற்றி பேசி வருகின்றபோதிலும் இந்த நாட்டினை பௌத்த நாடு போன்றுதான் ஆட்சி நடத்தி வருகின்றார். 70 விழுக்காடு சிங்களவர்களைக் கொண்ட இந்த நாடு பௌத்த நாடு என்கிறார். 82 விழுக்காடு இந்துக்களைக் கொண்ட இந்தியா கூட தன்னை இந்து நாடு என்று கூற வில்லை. ஆனால் இலங்கையைப் பௌத்தநாடு என்று கூறிக் கொண்டு அட்டூழியங்களைச் செய்கிறார்கள். வடமாகாணசபைத் தேர்தலில் அரசு ஆட்சியமைக்கக் கூடிய சூழல் உருவானால் தம்புள்ளையில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டமை போன்ற அவலங்கள் பல உருவாகலாம். சிங்களக் குடியேற்றங்கள் உருவாகலாம். வடக்கிலும் அரசு புனிதபூமி திட்டங்களைக் கொண்டு வரலாம். இதைத் தடுப்பதற்கு மாகாண ஆட்சி முறைமையையாவது நாம் கைப்பற்றிக் கொள்வதன் மூலம் அரசுக்கு பாடம் புகட்ட முடியும் -என்றார். (ஐ-18)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 08/09/2013

# வடக்குத் தேர்தலை எண்ணி அஞ்சி நடுங்குகிறது அரசு

## கூட்டமைப்பின் வேட்பாளர் சிவயோகன் கருத்து

வடமராட்சி, செப். 8

மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் வழங்கும் ஆதரவின் மூலம் அகிம்சை வழிப் போராட்டம் மீண்டும் வீறு பெற்று எழும் சாத்தியம் உண்டு.

இதன் மூலம் சமஷ்டி அரசமைப்பின் ஊடாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தன்னாட்சி, சுயநிர்ணய உரிமை கொண்ட தமிழ்த் தேசியத்தை- தமிழ் மக்கள் அடைந்து விடுவார்கள் என அரசு அஞ்சுகிறது.

இவ்வாறுதெரிவித்தார்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர் வே.சிவயோகன். துன்னாலையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

அமையவிருக்கும் வடமாகாண அரசினூடாக கல்வித்தகைமைக்கேற்ப வேலை வாய்ப்புக்கள் கிடைக்குமென இளைஞர், யுவதிகள் நம்புகிறார்கள். எமது இளைஞர், யுவதிகள் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவு அளிக்க முன்வந்துள்ளதில் இருந்தே இதனை அறிய முடிகின்றது. இவர்களது ஆதரவினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு முழுமையான வெற்றியைப் பெறும்.

வடக்கில் அரச சார்புக் கொள்கைக் கும்பல்களின் அட்டகாசம் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. துரும்பைக் காட்டி கொள்ளையடிக்கும் அரசு இவர்களை தம்வசப் படுத்தி தானும் கொள்ளையடித்து வருகிறது.

இவ்வாறான கொள்ளை இலாபங்கள் கைநழுவி விடும் என்ற பயப்பீதி காரணமாகவே போர் முடிந்து நான்கு வருடங்களாகியும் வடமாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு விருப்பமின்றி இருந்தது. வடமாகாணத்தில் திட்டமிட்ட

> அரசுக்காக வக்காலத்து வாங்குபவர்களையும் எமது வளங்களைக் கொள்ளையடித்து எமக்கே விற்பவர் களையும் மக்கள் ஓரங் கட்ட வேண்டும்.

சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி, சிங்கள மக்களுக்கு வாக்குரிமை அளிப்பதன் ஊடாக வடக்குமாகாண சபையையும் கைப்பற்றி விடலாம் என அரசு கனவு கண்டது. ஆனால் இந்தியாவும் சர்வதேசமும் கொடுத்த அழுத்தத்தினால் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருக்க அரசால் முடியவில்லை.

அரசு தோல்வியை எதிர்பார்த்திருக்கின்ற போதிலும் குறிப்பிடத்தக்க ஆசனங்களையாவது பெற்றுவிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தமது வேட்பாளர்கள் ஊடாக பொது நிறுவனங்களுக்கு நன்கொடை என்ற பெயரில் நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. தாராளமாக பணத்தை அள்ளி இறைத்து தேர்தல் பரப்புரை செய்யப் படுகிறது. பல வருடங்களாக செப்பனிடப்படாத வீதிகள் தேர்தல் காலத்தில் அவசர அவசரமாக செப்பனிடப்படுகின்றன.

இவை எல்லாம் தேர்தல் கால சலுகைகள் என்பதை மக்கள் உணர்ந்தே செயற்படுகின்றனர்.

அரசுக்காக வக்காலத்து வாங்குபவர்களையும் எமது வளங்களைக் கொள்ளையடித்து எமக்கே விற்பவர்களையும் மக்கள் ஓரங்கட்ட வேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுஆட்சிஅமைக்க வேண்டும்.

அதற்கேற்றவாறு தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைவெற்றிபெறவைக்க வேண்டும் என்றார். (ஐ-8)





ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் தேர்தல் பரப்புரைக் கூட்டமும் நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கலந்து கொண்டு பரப்புரைக் கருத்துக்களை வழங்கினார். அருகில் வேட்பாளர் சதீஸ் குமாரும் உள்ளார். (ஐ-435)












Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்குள் முடங்கிவிடாது வீட்டுக்கு வாக்களியுங்கள்

## சுரேஸ் எம்.பி.கோரிக்கை



தேர்தல்களின் போது வாக்களிப்பதில் எம்மிடையே காணப்படும் அசமந்தப் போக்கு மாறவேண்டும். அனைவரும் வீட்டுக்குள் முடங்கி இருக்காது வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க வேண்டும். வாக்களிப்பது நமது அடிப்படை உரிமை. இதனை நாம் கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

வழக்கம்பரையில் நடைபெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாண சபைக்கு இரண்டு போனஸ் உறுப்பினர்கள் உட்பட 38 பேர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் 16 பேரும், மன்னார், முல்லைத்தீவு ஆகிய இரு மாவட்டங்களிலும் தலா ஐந்து பேரும், வவுனியாவில் ஆறு பேரும், கிளிநொச்சியில் நான்கு பேருமாக 36 பேர் தெரிவு செய்யப்படுவர்.

> தனிப்பட்ட கருத்து முரண்பாடுகள் வேறுபாடுகளை மறந்து அனைவரையும் வாக்களிக்கச் செய்ய வேண்டும்.

யாழ். மாவட்டம் தவிர ஏனைய ஐந்து மாவட்டங்களிலும் பல்லின மக்கள் ஊடுருவி உள்ளனர். அங்கு சில ஆசனங்கள் எதிரணியினரிடம் போகவும் இடமுண்டு.

ஆனால் யாழ். மாவட்டத்தில் 90 வீதத்திற்கும் அதிகமாகத் தமிழ் மக்களே வாழ்கின்றனர். எனவே இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்று வழமைபோல் அசமந்தமாக இருந்துவிடக் கூடாது. 90 வீதமானவர்களும் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும்.

தனிப்பட்ட கருத்து முரண்பாடுகள் வேறுபாடுகளை மறந்து அனைவரையும் வாக்களிக்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கும் அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியும்-என்றார். (ஐ-2)

# அளவெட்டியைச் சேர்ந்தவர் என் தாயார்; அந்த உரிமையில் வாக்கு கேட்கிறேன்

## அங்கு நடந்த கருத்தரங்கில் அங்கஜன்



எனது தாயார் அளவெட்டியைச் சேர்ந்தவர். எங்களது வீடு இங்கே உள்ளது. உங்களிடம் நான் உரிமையோடு உரையாடலாம். நாங்கள் யாழ்ப்பாணத்தில் நிறையவே கட்டியெழுப்ப வேண்டி இருக்கின்றோம். எமது பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிடும் அங்கஜன்.

அளவெட்டி மேற்கு கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில். நேற்றுமுன்தினம் மாலை மக்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது பிரதேச அபிவிருத்தியை கருத்தில் கொண்டு சரியான வேட்பாளர்களை தெரிவு செய்ய வேண்டிய பொறுப்பு உங்கள் எல்லோரிடமும் உள்ளது.

எமது அபிவிருத்தியின் பங்காளர்களாக உங்களையும் என்னோடு இணைத்துக் கொண்டு பயணிக்கவே நான் விரும்புகின்றேன். எனவே எனக்கு ஒத்துழைப்பு தந்து, என்னை அங்கீகரித்து வடமாகாண சபைக்கு என்னை அனுப்பி வைப்பீர்களானால் நிச்சயமாக உங்களோடு இருந்து உங்கள் பிரச்சினைகளை தீர்த்து வைப்பேன். என்னுடைய அரசியல் பாதையானது தனியானது. மற்றவர்கள் பாதைகளைப் பின்பற்றி செல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை-என்றார். (ஐ)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
08/09/2013


# கோலாகல திறப்பு விழா

சாவகச்சேரி நகரில்
காலை 9.00மணிக்கு சுப நேரத்தில் திறப்பு விழா...

Lanka IOC Dealer

சிவா எரிபொருள் நிரப்பு நிலையம்
சிவா சேர்விஸ் ஸ்டேஷன்
சிவா சுப்பர் மார்க்கட்
சிவா ரெஸ்டோரண்ட்

A9 வீதி, நுணாவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்.



மாலை 2.00 மணி முதல்
நிகழ்ச்சிகள் ஆரம்பம்...

பிரபல தென்னிந்திய பாடகர்
"வேணாம் மச்சான் வேணாம்"
"ஆம்பலைக்கும் பொம்பலைக்கும்" புகழ்
வேல்முருகன்
மற்றும் நம் நாட்டு Super Star பாடக, பாடகிகள்
பலர் இணைந்து

பிரபாவின்
ஸ்ருதி
இசைக்குழுவினருடன் வழங்கும்



வேல்முருகன்



இன்னிசை இரவு
09-09-2013 திங்கட்கிழமை
அனைவரும் வருக ...

(31520)



## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியில் Holy Family Convent இற்கு முன்பாக 3 அறைகள் (குளியலறை உட்பட) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:077 555 2142 (31501) (3.5.6)



## IELTS A1 B1 B2 KU Education

- IELTS Coaching Class
- English for IELTS
- KU's i-Spoken
- ESOL Courses

Call: 0777302882
நிலைத்திருக்கும் i-Spoken கல்வித்தரம்.
Authorized IELTS Centre
Visit: http://edu.kugroup.info/ielts

தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்!

K.U Education,No 75,Temple Road,Jaffna. 021 3208...



## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1989 பூரம் பாவம் 18½ கொழும்பில் தனியார் வங்கியில் உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்பு: 011 262 3704
077 484 4696 (31514) (7.6.3)



## வீடு வாடகைக்கு

கே.கே.எஸ் வீதி தாவடிச் சந்தியிலிருந்து 200 யார் தூரத்தில் சுதுமலை வீதி அருகில் சகல வசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 993 5844 (31516) (7.6.3)





## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## தெல்லிப்பழை
## கைலாச வாகன வெள்ளோட்ட விழா

நாளை (09.09.2013) திங்கட்கிழமை
பிற்பகல் 2.00மணி

அம்பாள் அடியார்களே!

துர்க்காதேவியின்திருவருளாலும் அடியார்களின் பேராதரவாலும் அம்பாளுக்கு அழகிய கைலாசவாகனம் உருவாக்கப்பட்டு. ஆவணிச் சதுர்த்தி நன்நாளில் வெள்ளோட்ட விழா நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இந்த விழாச் சிறக்க அடியார்கள் அனைவரும் பங்குபற்றி அம்பாளின் நல்லருள் பெற்று உய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

கைலாச வாகனத்தை உருவாக்கிய சிற்பக்கலைஞர்
சிற்பக் கலாவித்தகர் செ.பாலச்சந்திரன்
(முதல்வர், காளிகா சிற்பாலயம்-புத்தூர்)

### நிகழ்ச்சி நிரல்

தலைவர்: செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர் ஸ்ரீ துகர்க்காதேவி தேவஸ்தானம்)

பி.ப. 1.30 மணி விசேட பூசை பி.ப. 2.00 மணி வெள்ளோட்டம்

ஆசியுரை – சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்
வாழ்த்துரை – க.ஸ்ரீமோகனன் (பிரதேச செயலர்,தெல்லிப்பழை)
சிற்பக்கலைஞர் கௌரவிப்பு
நன்றியுரை

ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானம்-தெல்லிப்பழை. நிர்வாக சபை.

(31509)(5.6.3)



# நீங்கள் அவதானிப்புடன் இருக்கின்றீர்களா?

தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அல்லது எந்தவொரு நபரும்,

- அரசின் வாகனங்கள்
- அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள்
- அரச கட்டடம் மற்றும் அரசின் பணம்
- அரச ஊடகங்களின் ஒளி, ஒலிபரப்பு நேரம்
- அரசின் பணத்தால் வெளியிடப்படும் விளம்பரங்கள்
- அரசின் அச்சு வசதிகள்
- அரச வங்கிகள் வழங்கும் நிவாரணங்கள் - விசேட கடன் மற்றும் வேறு வசதிகள்

போன்ற எந்தவொரு பொதுச் சொத்தினையும், தவறான வகையில் பயன்படுத்துவது தண்டனைக்குரிய குற்றமாகும்

## பொது சொத்துகளை துஷ்பிரயோகம் செய்வதை
# எதிர்ப்போம்

அரச உத்தியோகத்தரான நீங்கள் தேர்தல் மோசடிகளை எதிர்த்ததனால் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருந்தால் அல்லது தேர்தல் மோசடிகளினால் உங்கள் உரிமைகள் மீறப்பட்டிருந்தால் உங்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் சட்ட உதவிகளை வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

நீங்கள் அறிந்தவற்றை உறுதி செய்யக்கூடிய தகவல்களுடன் எமக்கு அறியத்தாருங்கள்

பொது சொத்துக்கள் பாதுகாப்பு வேலைத்திட்டம்
183/5, ஹைலெவல் வீதி, கொழும்பு 06
தொலைபேசி: 0772180334 / 0772950433
மின்னஞ்சல்: help@tisrilanka.org

(C/11798)(10,6,3)

நேர்மையின் புகலிடம்
ஊழலைத் தடுப்பதற்கான சட்ட ஆலோசனை சேவை
0112513313

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விற்பனைக்குண்டு

உலக சுகாதார நிறுவனத்தின் புகைத்தல் எதிர்ப்புக்கான கடந்த ஆண்டுக்குரிய அனைத்துலக விருது, எமது நாட்டின் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைத்துள்ளது. அவரைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றது.

புகைத்தலால் உண்டாகக் கூடிய பாதிப்புக்களை பிரதிபலிக்கக் கூடிய வர்ணப் படங்களை, நாட்டில் விநியோகிக்கப்படும் சிகரெட் பெட்டிகளில் பொறிப்பதற்கு நடவடிக்கை எடுத்தமைக்காக அமைச்சருக்கு அந்த விருது வழங்கப்பட்டது.

சிகரெட் புகைப்பதால் உண்டாகக் கூடிய தொற்றா வியாதிகளான, சுவாசப்பை மற்றும் வாய்ப்புற்றுநோய், மூச்சுத் தொடர்பான வியாதிகள், இருதய வியாதிகள் பீடிக்கும் ஆபத்துக்களை விளக்கும் படங்களை சிகரெட் பெட்டி ஒவ்வொன்றிலும் அதன் எண்பது சதவீத இடப்பரப்பில் பொறிக்க வேண்டும் என்பது புதிய விதி.

இந்தப் புதிய விதியை நடைமுறைப்படுத்தியமைக்காகவே 2012க்கான விருது சுகாதார அமைச்சருக்கு வழங்கப்படுவதாக கடந்த மே மாதம் உலக சுகாதார நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த விருதே ஜனாதிபதியினால் கடந்த செவ்வாய்க் கிழமை கையளிக்கப்பட்டது.

புகைத்தலை விடவும் உடல் நலத்துக்கும் மட்டுமன்றி உள நலத்துக்கும் மிகப் பெரும் பாதிப்பை விளைவிப்பன ஹெரோயின் போன்ற போதைப் பொருள்கள்.

மிகப்பெரிய அளவில்- சுமார் 260 கிலோகிராம் -ஹெரோயின், கொழும்பு உறுகொடவத்தவில் அண்மையில் பிடிபட்டது. இலங்கை மக்களை போதைப்பொருள் பாவனை மேலும் மிகப்பெரிய அளவில் பாதிக்கப் போகிறது என்பதற்கான சிவப்புச் சமிக்ஞை இது எனலாம்.

போதைப்பொருள்களைக் கடத்தும் மத்திய நிலையமாக இலங்கை செயற்படுவதாகப் பொலிஸ் தரப்புக்கள் கூறிவந்தமை மெய்ப்படுகிறது எனவும் கொள்ளலாம்.

இரண்டு மாதங்களுக்கு முன் பாகிஸ்தானிலிருந்து வந்த கொள்கலன் ஒன்றில் 17ஆயிரத்து 500 சிறிய கிறீஸ் டின்களில் ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. சுங்க அதிகாரிகளின் பரிசோதனைகளின்போது கண்டுபிடிக்கப்பட்டது. பாகிஸ்தானியர் ஒருவரும் மூன்று இலங்கையர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கையில் ஒரே வேளையில் இவ்வளவு பெரும் தொகையான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டமை இதுதான் முதல்தடவை. இதன் பெறுமதி ரூ.150 கோடிக்கும் 200 கோடிக்கும் இடைப்பட்டது என்று மதிப்பிடப்படுகிறது.

உலக அபின் உற்பத்தியில் ஆப்கானிஸ்தான் முதலிடம் வகிக்கிறது. அபின் உற்பத்திக்கு பிரதான மூலப்பொருள் ஹெரோயின். உலக போதைப்பொருள் பாவனையில் 90 சதவீதமான போதைப் பொருள்களை ஆப்கானிஸ்தானே வழங்குகிறது. இவற்றுள் 40 சதவீதமானவை பாகிஸ்தான் ஊடாக உலக நாடுகளுக்குச் செல்கின்றன. பாகிஸ்தானில் இருந்து தென்னிந்தியா ஊடாக இலங்கைக்கும் போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றன.

இலங்கையில் போதைப்பொருள் பாவனை வீதம் அதிகரித்து வருவதாக தேசிய போதைப் பொருள் தடுப்புச்சபை எச்சரிக்கிறது. கூடுதலாக இளைஞர்களிடையே இப்பாவனை சடுதியாக அதிகரித்திருப்பதை அது சுட்டிக்காட்டியுள்ளது.

1980க்கு முன் இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகள், இலங்கையிலிருந்து வெளிநாடு சென்று திரும்புவோர் ஆகியோர் மூலமே போதைப்பொருள்கள் இலங்கைக்குள் கடத்தப்பட்டன. 1979க்குப் பின்னராக அறிமுகமான திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, கொழும்பின் நகர வாழ்க்கை வேகமாக மாறியது. அந்த மாற்றத்துடன் அதீத நகரமயமாக்கப்பட்ட சமூக அமைப்பில், போதைப்பொருள் பாவனை பெரிய அளவில் நெருக்கடிகளை உருவாக்கி வருகிறது. ஆரம்பத்தில் கொழும்பு நகரப் பகுதியிலும் கொழும்பை அண்டியுள்ள நகரங்களிலும் இருந்த போதைப்பொருள் பாவனை தற்பொழுது வடக்கே மிகக் குறிப்பாக யாழ்ப்பாணத்தையும் எட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் பாவனை அதிகரித்துள்ளது. முன்னர் கஞ்சா பாவித்தவர்கள் தற்பொழுது ஹெரோயினையே அதீத விருப்பத்துடன் பயன்படுத்துகிறார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹெரோயின் போதைப்பொருளைப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் யாழ். நகரப் பகுதியைச் சேர்ந்த ஆண்கள் பாடசாலை ஒன்றின் மாணவர்கள் நான்குபேர், அண்மையில் கைதாகியமை குறித்து இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது.

அதன் பின்னர், போதைப் பொருள்களின் விநியோகம் ஓரளவு குறைந்துவிட்டது. அவற்றை விற்றவர்களும் தமது தொழிலை முடக்கியும் மூடியும் விட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் முன்னர் எல்லாம், சமூகத்தால் ஒதுக்கி ஓரங்கட்டப்பட்டிருந்த போதைப்பொருள் பாவனை, இங்கு கால்பதிக்கவோ நிலைகொள்ளவோவிடாது தடுப்பதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் என்று மட்டுப்படுத்திக் கொள்ளாமல், பகுத்தறிவு உள்ளோர் அனைவரும், சேர்ந்து உழைக்க வேண்டிய வேளை இது. நகரப் புறங்களில் என்று மட்டுமன்றி கிராமங்களிலும் இது குறித்த விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். அதனைச் சமூகத்தின் கூட்டுப் பொறுப்பாக மதித்துச் செயற்பட முன்வர வேண்டிய வேளை இது.

# கற்றது கைமண் அளவு...


இன்று உலக எழுத்தறிவு தினம்

**இன்றைய கல்விமுறையானது தேர்ச்சிக் கல்விமுறையாகும். தேர்ச்சியென்பது ஒரு பிள்ளை தான் பெற்றுக்கொள்ளுமறிவை ஆற்றலாக மாற்றி தன் வாழ்நாள் முழுவதும் பிரயோகிக்கும் திறனாகும்.**

கவிதாயினி

மனித வாழ்வின் அடிப்படையானது கல்வியறிவின் மீதே உறுதியாகக் கட்டியெழுப்பப்படுகின்றது. நம்மை, நம்மைச் சார்ந்தோரை, நம் சூழலைப் புரிந்து கொள்ளவும், அதற்கேற்ப தீர்மானங்களை மேற்கொள்ளவும், நமக்குப் பொருத்தமான வாழ்வியல் அனுபவங்களை உள்வாங்கிக் கொள்ளவும், வாழ்வைச் செப்பனிடவும் , சிறப்பாக வாழவும் கல்வியறிவு மிக அவசியம்.... கல்விக்கான வழிப்படுத்தலில் மொழி அத்தியாவசியமான ஒன்றாகின்றது . எழுத்து, வாசிப்பு, கிரகித்தல், பேச்சு போன்ற திறன்கள் மொழியால் போதிக்கப்பட்டு வந்தாலும் கூட, இவற்றுக்கெல்லாம் கிரீடம் வைத்ததைப் போன்ற தேர்ச்சி எழுத்தறிவிலேயே அதிகமாகத் தங்கியுள்ளது. ஏனெனில் தான் கேட்ட, வாசித்த, கிரகித்த விடயங்களை உள்வாங்கியதால் பெறப்பட்ட எண்ணங்களை எழுத்து வடிவமாக மாற்றும்போதே, அம் மொழித்திறன் முதன்மையடைகின்றது.

ஜப்பான், அமெரிக்கா போன்ற வளர்முக நாடுகளில் வாழும் மக்களின் எழுத்தறிவு வீதம் அதிகமாக இருப்பதாலேயே, அக்கற்றலறிவின் பயனால் , தமக்கும், நாட்டுக்கும் ஏற்ற பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த அம்மக்களால் முடிகின்றது...

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வரிசையில் இலங்கையின் எழுத்தறிவு வீதம் அதிகளவிலுள்ளது. தெற்காசியாவிலேயே இலங்கையின் எழுத்தறிவே முதல் நிலையிலிருக்கின்றது.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இலவசக்கல்வி இதற்கு ஒரு காரணியாக இருக்கலாம் . 6 வயது தொடக்கம் 14 வரை இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற கட்டாயக் கல்வி மற்றும் அனைவருக்கும் கல்வி எனும் நடைமுறையானது, மக்களின் எழுத்தறிவின் உயர்விற்குக் காரணமாகியுள்ளது. இலங்கை நகரப்புறங்களில் எழுத்தறிவு வீதம் 95 வீதமாகவும், கிராமப் புறங்களில் 93வீதமாகவும் உள்ளது. எனினும் இத்தொகையை விட குறைவான படித்தவர்களே மலையகப் பெருந்தோட்டத்துறைகளில் காணப்படுகின்றனர். மலையக மக்களின் வறுமைப்பட்ட நிலையின் தாக்கமாகக் கூட இது காணப்படலாம். தமது வறுமை காரணமாக , தமது பிள்ளைகளுக்கு முறைப்படியான அடிப்படைக் கல்வியை வழங்காது, சட்டத்துக்கு மறைவாக வீட்டுத் தொழிலாளிகளாக உருவாக்குவதில் இம் மக்களிற் பலர் முனைப்புடன் செயற்படுவதால் மலையக மக்களின் எழுத்தறிவு 76வீதமாகக் காணப்படுகின்றது. இம் மலையக மக்களின் பின்னடைவான நிலையினால் இலங்கையின் எழுத்தறிவு வீதம் ஏறக்குறைய 90.6 வீதமாகக் காணப்படுகின்றது.

கிராமம் என்பது ஒரு நாட்டின் இதயம்.. கிராமத்தின் விழுதுகளில் கல்வியறிவு ஊன்றிப்பற்றிப்பிடிக்கப்படுமானால், மக்களின் வாழ்விலும் அபிவிருத்தி உயர்மட்டத்தில் பேணப்படும்.

எம் மொழியாயினும் இலகுவாக வசனங்களை எழுதவோ, வாசிக்கவோ முடியாத நிலையையே எழுத்தறிவின்மையென ஐ.நா சாசனம் வரையறுக்கின்றது. சிறப்பாகத் தொடர்பாடலைப் பேணும் ஒரு சமுகத்தில் எழுத்தறிவும் சிறப்பாகக் காணப்படுகின்றது.

இன்றைய கல்விமுறையானது தேர்ச்சிக் கல்விமுறையாகும். தேர்ச்சியென்பது ஒரு பிள்ளை தான் பெற்றுக்கொள்ளுமறிவை ஆற்றலாக மாற்றி தன் வாழ்நாள் முழுவதும் பிரயோகிக்கும் திறனாகும். எனவே பாடசாலைகளில் பல்வேறு நுட்ப முறைகளினூடாக போதனையும் வழிகாட்டலும் இடம் பெறுவதால் மாணவர்களிடம் இத்தகைய மொழித்தேர்ச்சி கிடைப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. எனினும் ஆசிரியர் செயற்பாடு மாத்திரமல்ல, பிள்ளையினதும், அவர்கள் வீட்டுச் சூழலினதும் முயற்சியிலும், பயிற்சியிலுமே இவ்வெழுத்தறிவின் உயர்ந்த வெற்றி தங்கியுள்ளது.

இன்றைய நவீனத்துவத்தின் பல சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்கி, அவற்றிலிருந்து சிறப்பான பயன்களைப் பெறவேண்டுமானால், நமக்கு இவையிரண்டும் அடிப்படையாகின்றது.. கணினிப்பயன்பாட்டின் உச்சளவு கூட இக்கல்வியறிவுடன் வரையறைக்கப்பட்டுள்ளது.எழுத்தினைக் கற்றவன் தன்னம்பிக்கையை வளர்க்கின்றான். அந்நம்பிக்கையின் விளைவாக இவ்வுலகின் சவால்களை எதிர்கொள்ளுமாற்றலையும் தனக்குள் திறமையாக வளர்க்கின்றான்.........இன்று பல துறைகளில் நிகழும்ஆராய்ச்சிகளும்,கண்டுபிடிப்புக்களும் மொழி வளர்ச்சியுடன் தொடர்புபட்டுள்ளவை என்பதனால் உலகமயமாதலிலும் இம் மொழி தாக்கம் செலுத்துகின்றது.

தனியாளொருவர் தனது இலக்கை அடைவதற்காக பல்வேறு திறன்களை வளர்க்கவேண்டியவராக இருக்கின்றார். தனது அறிவை அவர் உள்வாங்கி, தன்னுள் ஆழப் பதிப்பதன் மூலம் அதனை ஆற்றலாக மாற்றி. அவ்வாற்றலை தனக்கும் சமுகத்திற்கும் ஏற்றவிதத்தில் பொருத்தமுடையதாக மாற்றும்போதே, அந்நபரை சமூகம் தனது ஆரோக்கிய அங்கத்தவனாக ஏற்றுக்கொள்கின்றது. தனிமனிதனொருவனின் ஆரோக்கியத்தின் அடியொற்றலிலிருந்தே கலை, கலாசார, பண்பாடும் தனது முகத்தைக் காட்டத் தொடங்குகின்றது. எனவே கற்காத ஒருவன் சமூக நிகழ்வுகளி லிருந்து தானாகவே விலகிக்கொள் கின்றான். அல்லது விலக்கப்படுகின் றான். இதுவே இன்றைய யதார்த்த மாகின்றது . இவ்வடிப்படையில் நோக் கும் போது , எழுத்தறிவுப் பிரச்சினை யானது ஒரு சமுகப்பிரச்சினையாகவே நோக்கப்படுகின்றது. நோக்கப்படல் வேண்டும்.

கல்வியை இடைவிட்டவர்கள், கற்றலில் நாட்டமில்லாதோர் போன்ற மக்களே இவ்வாறாக எழுத்தறிவில்லாமல் காணப்படுகின்றனர். இவ்வாறாக உலகில் 776 மில்லியன் வயதுவந்த மக்கள் எழுத்தறிவில்லாமல் இருக்கின்றார்கள். 103 மில்லியன் சிறுவர்களும் தமது கல்வியை பாதியில் நிறுத்தியவர்களாக உள்ளனர். உலகம் ஒருபக்கம் உலகமயமாதலால் நவீனத்துவத்துள் சுருங்கிக் கிடக்க, மறுபுறம் இவ்வாறான பின்னடைவுகளால் மனித அபிவிருத்தியை பாதக வீழ்ச்சியை நோக்கி தள்ளிவிடுகின்றது..

இம் மக்களுக்குரிய பரிகாரக்கல்வியை வழங்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு நாட்டரசுக்கும் உண்டு. இவர்கள் கவனிக்கப்படவேண்டியவர்கள். எனவே இவர்களுக்காக , மேம்படுத்தப்பட்ட முதியோர் கல்வியும், அனைவருக்குமான கல்வியும், பரிகாரக்கல்வியும் வினைத்திறனுடன் முன்னெடுக்கப்படல் வேண்டும். இவ்வாறான முன்னெடுப்புக்கள் ஒவ்வொரு நாட்டு அரசாலும் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதும் நாம் சிந்திக்க வேண்டிய வினாவாகும். இன்றைய போட்டிமிகு உலகில் அரசியல், கலை, சமுக, பொருளாதார எழுச்சிகளுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுக்கும் இவ்வரசுக்கள் இவ்விடயம் தொடர்பாக தமது மானசீகப்பார்வையைச் செலுத்தி, அதற்கான செயற்பாடுகளையும் தொடர்ச்சியாக மேற்கொள்வார்களா என்பதும், அவ்வாறாக வடிவமைக்கப்படும் செயற்றிட்டங்களில் பாமர, படிப்பறிவற்ற இம்மக்கள் ஆர்வம் காட்டுவார்களா என்பதும் சிந்திக்க வேண்டியதொன்று. இப்பின்னடைவால் நாடுகளின் எதிர்காலம் வெட்கப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின் றது.

ஆசியாவில் மிகக்குறைவான படிக்காதோரே உள்ளனர். ஏனெனில் இங்கு கல்வியின் முக்கியத்துவம் பெருமளவு பெற்றோரால் உணரப்பட்டு , பிள்ளைகளுக்கு கல்வி வழங்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் இந்தியாவில் காணப்படும் பல கிராமங்களில் படித்த பெண்கள் தொகை மிகக் குறைவாகவேயுள்ளது. இந்தியாவின் சனத்தொகை அதிகமாக இருப்பதால் அவர்களின் எழுத்தறிவு வீதம் பின்தள்ளப்படக் காரணமாகின்றது.

மனித அபிவிருத்தி உள்ளடக்க அறிக்கையின் பிரகாரம் ஜோர்ஜியா மக்கள் 100 வீதம் எழுத்தறிவைப் பெற்று முதலாமிடத்திலும், இலங்கை 90.8 வீதம் பெற்று 99வது இடத்திலும், இந்தியா 65.2 வீதம் பெற்று 159 வது இடத்திலும் உள்ளன.

இவற்றை நோக்கும்போது மனிதன் பெறும் கல்வியானது, அவனது ஆளுமையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது உறுதியாகின்றது.. ஒருவர் தனது எண்ணங்களைச் சிறப்பாக வெளிப்படுத்தி, தனக்கேயுரிய வாழ்வை வகுத்துக் கொள்ள இன்றியமையாத இவ் எழுத்தறிவினை, கல்லாதோருக்கும் குறிப்பாக வீட்டிலுள்ள முதியோருக்கும் பெற்றுக் கொடுப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகின்றது. ஆசிரியன் மாத்திரமே இப்பணியைச் செய்ய வேண்டுமென்ற மனப்பாங்கை அகற்றி, எழுத்தறிவின்மையைப் போக்கி , பிறர் வாழ்வில் ஒளியேற்றுவது இறைவனுக்கு மிகவும் உவப்பான செயல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 132

# பிறப்பு நிறை குறைந்த குழந்தைக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளும் அதற்கான பராமரிப்பும்

ஒரு குழந்தை 2500 கிராமிலும் குறைவான எடையுடன் பிறக்கும் போது, அக் குழந்தை பிறப்பு நிறை குறைவடைந்த (Low birth weight) குழந்தை என அழைக்கப்படும். அதை ஒரு சிறிய குழந்தை எனவும் கூறலாம்.



பிரதானமாக, உரிய காலத்துக்கு முன் குழந்தை பிறப்பதாலோ அல்லது கர்ப்பத்திலேயே நிறை குறைந்த சிசுவாக வளர்வதாலோ பிறப்பு நிறை குறைந்த குழந்தை பிறக்கலாம். பிறப்பு நிறை குறைந்த குழந்தைக்கு விஷேடமாக மிகவும் நிறை குறைந்த குழந்தைக்கு அநேக பிரச்சினைகள் ஏற்படலாம். அதன் காரணமாக அவர்களை பெரும்பாலும் குழந்தைகள் விஷேட கவனிப்புப் பிரிவில் குறிப்பிட்ட காலத்துக்கு வைத்திருந்து பராமரிக்க நேரிடும். ஒவ்வொரு தாய்மாருக்கும், நிறை குறைந்த குழந்தை பிறக்கச் கூடிய சந்தர்ப்பங்களில் அதற்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளைப் பற்றியும், அதற்கான பராமரிப்புக்கள் பற்றியும் விளங்கப்படுத்த வேண்டும்.

இலங்கையில், சராசரியாக 100 குழந்தைகளில் 11 குழந்தைகள் நிறைகுறைவாகப் பிறக்கிறார்கள். அநேகமான சிசு மரணங்கள் பிறப்பு நிறை குறைந்த குழந்தைகளிலே ஏற்படுகின்றன. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் அதிநவீன சிகிச்சை முறைகளால், 500 கிராமிற்கு மேற்பட்ட குழந்தைகளும் உயிர்பிழைக்கின்றன. எமது நாட்டில் 1000 கிராமிற்கு மேற்பட்ட குழந்தைகளே உயிர் வாழ்வதற்கு பெரும்பாலும் வசதிகள் உண்டு.

இனி பிறப்பு நிறை குறைந்த குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகள் பற்றியும் பார்ப்போம்.

**1. வினைத்திறனுடன் பாலருந்த முடியாமை.**
இதனால் பிள்ளைக்கு தாய்ப்பாலை கிண்ணம் மூலமாகவோ, கரண்டி மூலமோ அல்லது குழாய் மூலமாகவோ பருக்க வேண்டி ஏற்படும். போதியளவு பால் அருந்தாத குழந்தைகளுக்கு குருதியில் சீனிச் சத்து குறைவடைந்து வலிப்பு போன்ற பாதிப்புகளும் ஏற்படலாம். எனவே ஒரு சிறிய குழந்தை தாய்ப்பாலை உறிஞ்சிக் குடிக்கச் சிரமப்படின் உடனடி வைத்திய ஆலோசனை அவசியம்.

**2. உடல் வெப்பநிலையைப் பேண முடியாத நிலை**
விசேடமாக மிகக் குறைந்த பிறப்பு நிறையுடைய (1500 கிராமிலும் குறைவான) குழந்தைகளை, அவர்களின் உடல் வெப்ப நிலையை பேணுவதற்காக, வெப்பம் உள்ள கண்ணாடிப் பெட்டிகளில் சிலகாலம் வைத்திருக்க நேரிடும். மேலும் ஓரளவு நல்ல நிறையுள்ள (1500g-2500g) குழந்தைகளையும் சூழலின் வெப்பநிலை குறைவாயின், தொப்பியுடன் உடல், கால், கைகளை மூடக்கூடியவாறான தடிப்பான உடைகளை அணிவிக்க வேண்டும்.

**3. இலகுவில் கிருமித் தொற்றுக்கு ஆளாகக் கூடிய நிலை.**
சிறிய குழந்தைகளில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாகக் காணப்படும். அதேபோல் சூழலிலிருந்து, விஷேடமாக கை கழுவாமல் பிள்ளையை பல பேர் பல தடவை கையாளும் போது இலகுவில் கிருமித் தொற்று ஏற்படலாம். அதனால் தான், இயன்றவரைக்கும் குழந்தையை தாய்மட்டுமே பராமரிக்க ஆலோசனை வழங்கப்படுகிறது. மேலும், மிகவும் நல்ல முறையில் தூய்மையையும் தனி நபர் சுகாதாரத்தையும் பேண வேண்டும்.

**4. உடல் வளர்ச்சி வீதமும், உடல் நிறை அதிகரிப்பு வீதமும் குறைவாகக் காணப்படல்.**
சாதாரண நிறையுடன் பிறந்த குழந்தையை விட நிறைகுறைந்த குழந்தைக்கு அதன் வளர்ச்சிக்கு அதிகளவு போசணை தேவை. அதனைப் பூர்த்தி செய்யுமளவுக்கு பிள்ளை பாலருந்தாத விடத்து அதன் உடல் நிறை அதிகரிப்பு வீதம் குறைவடையலாம். எனவே தான் நிறைகுறைந்த குழந்தைக்கு மேலதிக உதவிகள் பாலூட்டலுக்குத் தேவை. பிரதானமாக தாய்ப்பாலை எடுத்து கிண்ணம் மூலம் ஊட்டுவதற்கு தாதியர்கள், தாய்க்குப் பயிற்றுவிப்பார்கள். மேலும் உடல்நிறை அதிகரிப்பு வீதத்தை அவதானிப்பதற்காக அடிக்கடி குழந்தைகள் சிகிச்சை நிலையத்துக்கு கொண்டுவரப்பட வேண்டி ஏற்படலாம்.

**5. பிறந்து சில காலங்களின் பின்னர் குருதிச் சோகை**
எலும்புகளின் வளர்ச்சிக் குறைவு போன்றவை ஏற்படவும் வாய்ப்புண்டு. இவற்றைத் தவிர்ப்பதற்காக விற்றமின், இரும்புச்சத்து, கல்சியம், பொசுபரசு அடங்கிய மருந்துகளை நிறைகுறைந்த குழந்தைக்குத் தினமும் வழங்க வேண்டும்.

**6. மூளையிலும், கண்களிலும் பாதிப்புகள் ஏற்படத்தக்க வாய்ப்புக்கள் உண்டு.**
மிகவும் நிறை குறைந்த குழந்தைகளுக்கு அதிதீவிர சிகிச்சை வழங்க வேண்டியிருப்பின், இந்த நிலைமைகள் ஏற்படலாம். அதற்காக, மூளைக்கான ஸ்கானும் (lisscan) கண் வைத்திய சோதனையும் அடிக்கடி மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதுடன், சிகிச்சையும் வழங்க வேண்டி ஏற்படலாம். தகுந்த சிகிச்சை பெறாவிடின் மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளையாகவோ அல்லது கண்பார்வை குறைந்த பிள்ளையாகவோ, நிறை குறைந்த பிள்ளைகள் வளர வேண்டி ஏற்படலாம்.

**7. குழந்தை வளர்ந்து வரும் காலங்களில் சுவாசத் தொகுதி நோய்கள் (சளி, இழுப்பு)** வயிற்றோட்டம் போன்ற நோய்கள் சாதாரண பிறப்பு நிறை உள்ள குழந்தையை விட பிறப்பு நிறை குறைவான குழந்தைகளில் அதிகம் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே தான் முறையான தனிநபர் சுகாதாரத்தையும், தகுந்த போசாக்கையும், உரிய காலத்தில் தடுப்பு மருந்தேற்றலையும் மேற்கொள்ள வேண்டும்.



மேற்கூறியவற்றை விட மேலும் சில பிரச்சினைகள், அதிகமாக ஏற்படக் கூடிய நிலைமைகள் ஒரு பிறப்பு நிறை குறைந்த குழந்தைக்கு இருப்பினும், தகுந்த பராமரிப்பின் மூலமும் சிகிச்சை மூலமும் அவற்றைத் தவிர்த்து கொள்ளலாம். இதனால் தான் பிறந்த குழந்தைகளுக்கான விஷேட பராமரிப்புக்கு அதிக வசதிகள் வைத்தியசாலைகளில் செய்யப்பட வேண்டும் என அனைவராலும் வலியுறுத்தப்படுகின்றது. அதன் மூலம் சிசு மரண வீதத்தையும் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் குறைக்க முடியும்.

**Dr. ந. ஸ்ரீசரவணபவானந்தன்,**
*குழந்தை வைத்திய நிபுணர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

# இதயத் துடிப்பைச் சீராக வைத்திருக்கும் உணவுகள்

நாய்களின் வாழ்நாள் வெறும் 10-12 வருடம் தான் என்பது செய்தி. அது ஏன் தெரியுமா? நாய்களின் இதயத் துடிப்பு மிகவும் வேகமாக இருக்கும். இத்தகைய வேகமான இதயத் துடிப்பு மனிதர்களுக்கு ஏற்பட்டால் அது மிகவும் ஆபத்தானது. அதிலும் எப்போது ஒருவரின் நாடித் துடிப்பு அதிகமாகவோ அல்லது முறையற்றோ இருக்கிறதோ அவருடைய இதயம் ஆரோக்கியமாக இல்லை என்று அர்த்தம். மேலும் இதயத் துடிப்பு அளவுக்கு அதிகமாக இருந் தால் தான் படபடப்பு ஏற்படுகிறது.

பொதுவாக இதயம் ஓர் இயந்திரம் போன்றது. அந்த இயந்திரம் குறிப்பிட்ட அசைவை மேற்கொண்டால் தான், நீண்ட நாள்கள் செயற்படும் அதைவிடுத்து, அது வேகமாக இயங்கினால், அது நாளடைவில் பழுதடைந்து ஒரு பக்கத்தில் தூக்கிப் போட வேண்டிய நிலை தான் ஏற்படும். ஆகவே நாம் எமது இதயத் துடிப்பை சீராக வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அதற்கு சரியான உணவுகளை உட்கொள்ள வேண்டும். அதிலும் இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும் உணவு களை உட்கொள்வதன் மூலம், இதயத்துடிப்பின் அளவை சீராக வைக்கலாம்.

இதயத் துடிப்பு வேகமாவதற்கு மனஅழுத்தமும் ஒரு காரணம். மேலும் உயர் இரத்த அழுத்தம் இருந்தாலும், இதயத் துடிப்பின் அளவு அதிகரிக்கும். எனவே இத்தகைய பிரச்சினையைப் போக்கும் வகையிலும் உணவுகளை தேர்ந்தெடுத்து சாப்பிட வேண்டும். இப்போது இதயத் துடிப்பை சீராக வைத்து, இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவும் உணவுகள் என்னவென்று பார்ப்போம்.





**தயிர்:** தயிருக்கு இதயப் படபடப்பை கட்டுப்படுத்தும் தன்மை உள்ளது. ஏனெனில் தயிரில் நரம்பு செல்களை கட்டுப்பாட்டுடன் செயல்பட வைக்கும், வைட்டமின் பி12 அதிக அளவில் நிறைந்துள்ளது. எனவே தயிரைத் தினமும் சாப்பிட்டு வந்தால், இதயத் துடிப்பை சீராக வைத்திருக்கலாம்.

**வாழைப்பழம்:** வாழைப்பழத்தில் பொட்டாசியம் அதிக அளவில் நிறைந்துள்ளது. பொட்டாசியச் சத்தானது மூளை மற்றும் இதயம் தொடர்பு கொள்ள உதவும் ஒரு முக்கியமான சத்தாகும். எனவே தினமும் ஒரு வாழைப்பழத்தை சாப்பிடுவதன் மூலம், இதயத் துடிப்பின் வேகத்தைக் குறைக்கலாம்.

**பூண்டு :** அனைவருக்குமே பூண்டு சாப்பிட்டால், இதயம் ஆரோக்கியமாக இருக்கும் என்று தெரியும். ஏனெனில் பூண்டுகளில் அல்லிசின் என்னும் இதயத்தை பாதுகாக்கும் மற்றும் கெட்ட கொலஸ்ட்ரோலை கரைக்கும் பொருள் உள்ளது.

**உப்பு :** அதிகமான இதயத் துடிப்பு மட்டும் பிரச்சினையை ஏற்படுத்துவதில்லை. சிலசமயங்களில் மிகவும் குறைவான இதயத் துடிப்பு இருந்தாலும், பிரச்சினையைச் சந்திக்க நேரிடும். எனவே இதயத் துடிப்பு குறைவாக இருப்பவர்கள், உப்புள்ள உணவுகளைச் சாப்பிட்டால், இதயத் துடிப்பை சீராக வைக்கலாம். ஆனால், அதிகமான இதயத் துடிப்பு உள்ளவர்கள், உப்பைச் சேர்க்கவே கூடாது.

**வித்துக்கள்:** இவற்றில் இதயத்திற்கு ஆரோக்கியத்தைத் தரும் மோனோ சாச்சுரேட்டட் கொழுப்புக்கள் நிறைந்துள்ளன. எனவே இதனை பலவீனமான இதயம் உள்ளவர்கள் சாப்பிட்டால், இதயம் வலிமையாவதோடு, இதயத் துடிப்பும் சீராக இருக்கும்.

**மீன்:** மீன்களில் ஒமேகா-3 ஃபேட்டி ஆசிட் அதிகம் நிறைந்துள்ளது. இவை இதயத்திற்கு மிகவும் இன்றியமையாத ஓர் உணவுப் பொருளாகும். எனவே இதனை உட்கொண்டால், இதயத் துடிப்பு முறையாக இயங்கி, இதயம் ஆரோக்கியமாக இருக்கும்

**உலர் திராட்சை:** உலர் திராட்சையிலும் பொட்டாசியம் அதிகம் நிறைந்திருப்பதால், இதனை உட்கொள்வதன் மூலம், வேகமான இதயத் துடிப்பின் அளவானது குறையும்.

**ஓட்ஸ்:** ஓட்ஸை தினமும் சாப்பிட்டு வந்தால், மனிகளில் தங்கியுள்ள கெட்ட கொலஸ்ட்ரோல் நீங்கிவிடும். அதுமட்டுமல்லாமல், இதில் ஒமேகா-3 ஃபேட்டி அசிட் அதிகம் நிறைந்திருப்பதால், இது இதயத்தின் துடிப்பைச் சீராக வைக்கும்.

**புதினா:** புதினா, இதயத்தை ஆரோக்கியமாக வைக்கும் உணவுகளில் முதன்மையானதாக இல்லாவிட்டாலும், மருத்துவக்குணம் அதிகம் கொண்டது. அதிலும் இதனைச் சாப்பிட்டால், இதயத் தசைகள் வலிமையாவதுடன், இதயத்தில் இரத்த ஓட்டத்தின் அளவு அதிகரித்து, இதயமானது ஆரோக்கியமாக இருக்கும்.

**பூசணிக்காய்:** பூசணிக்காயில் மக்னீசியம் என்னும் இதயத் துடிப்பை சீராக வைக்கும் பொருள் அதிகம் நிறைந்துள்ளது. ஆகவே இந்த உணவுப் பொருளை உணவில் அதிகம் சேர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முகநாதன் அருள்நங்கை அவர்களின் அருமை மகன்

# செல்வன் சந்துதனின்

# 4 ஆவது ஆண்டு பிரிவு நாள் நினைவலைகள்

சிரிக்க வைத்த நாள் 07★02★2000

கலங்க வைத்த நாள் 08★09★2009



அன்புச் செல்வமே உன்னைப் பிரிந்து ஆண்டுகள்
நான்கு கண்ணீரில் சென்றதய்யா
ஆண்டுகள் நான்கல்ல நான்கு யுகங்களே சென்றாலும்
உன் பிரிவை தாங்கத்தான் முடியுமோ என் அன்பான ராசாவே !

**அருமை மகனே**

இயற்கையின் நியதிகளை யார்தான் மாற்ற முடியும்
என்று ஆறுதல் கூறினாலும் நீர் இன்றிருந்தால்
உன் அழகான வதனம், கதைபேசும் கண்கள்
எப்படி எப்படி எல்லாம் இருக்குமென்று
ஒப்பிட்டு நோக்குகின்றோம்.
நிஜமாக நீங்கள் எம்முடன் இல்லை.
என்றாலும் எம் மனக்கோயில் தன்னில்
தெய்வமாய் வாழ்கின்றீர்.

**அன்புத் திருவுருவமே சந்து**

நீர் வாழ்ந்த எம் இல்லம் 9ஆண்டுகள் கண்ட இன்பமான
நிலையினை இன்று காணவில்லையெடா
நீ துயிலும் இல்லமது வனப்புடனே விளங்குவதை
அன்றாடம் சென்று நாம் காண்கின்றோம்.
நீ எம்முடன் இல்லையென்றாலும்
நீர் துயிலும் இல்லத்தில் வாழ்கின்றீர்
என்ற நம்பிக்கையில் உன் தந்தையார் அனுதினம் சென்று
உமைக்கண்டு கதைத்து வருகின்றார்.

**பாசத் தனயனே**

நீர் பாசத்திற்கு இலக்கணமாய் எமை பாசவலையில் வீழ்த்திவிட்டு
பரமபாதத்தினை நாடிச் சென்றதேன் என்ற கேள்வி
எந் நாளும் எம் மனதில் எழுகின்றது.
யார் செய்த பாவமோ யார் செய்த வினையோ
உமை எம்மிடமிருந்து பிரித்ததடா. நீர் பிரியவில்லை மகனே
என்றென்றும் நீர் பழகிய எல்லோர் மனதிலும் வாழ்கின்றீர்.
நாம் உமை வந்து சந்திக்கும் நாள் தான் எமக்கு பொன்னான நன்நாள்
மற்ற நாள்கலெல்லாம் கடமைக்காய் நாம் வாழும் கசப்பான நாள்கள்
அழுவதும் அரற்றுவதும் நீர் எமக்கு தந்துவிட்டுப் போன பரிசாக ஏற்று
உம் கடமை செய்வதற்கு உயிர் வாழ்ந்து வருகின்றோம்.

என்றென்றும் உமது நினைவைச் சுமந்து நிற்கும்

**- பெற்றவரும், உற்றவரும்.**

லக்சுமி, சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ். சங்கானை மாவடி இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட கலை விழாவில் சிவபூமி அன்னதான தொண்டர் சபை அன்னதானப் பொறுப்பாளர் ச.ஞானசுந்தரம் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவதையும், சிறார்களின் நடன நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம். (எ-29)



யாழ். பொது நூலகத்துக்கு இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தால் வழங்கப்பட்ட புத்தகங்களை பொது நூலகப் பொறுப்பதிகாரி திருமதி இமெல்டா கருணாகரன் பெற்றுக் கொள்கிறார். (எ)



காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினால் விஷ்ணு ஸ்ரீ சோமஸ்கந்த குருக்களின் 25 ஆவது குருத்துவ சேவையை கௌரவிக்கும் முகமாக ஆலய பெருந்திருவிழாவின் எட்டாம் நாளன்று குருக்களும் பாரியாரும் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படுகின்றனர். (ஒ-250)



யாழ்.மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா. (எ)



யாழ். தேசியக் கல்வியற் கல்லூரியின் 2013 ஆம் ஆண்டுக்கான இல்லமெய் வன்மைப் போட்டியில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். (எ)



யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களால் புனரமைப்புச் செய்யப்பட்ட விடுதிக் கட்டட திறப்பு விழாவில். (எ)



கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவின் போது வள்ளி, தெய்வயானை சமேதராய் ஆறுமுகப் பெருமான் தேரில் வீதி வலம் வரும் அருட் காட்சி. (ஒ-4)





சிக்காக்கோ வாழ் இந்துக் குழந்தைகளின் அன்பளிப்பான உதவிப் பொருள்கள், பரிசுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் முழுங்காவில், முள்ளியவளை, புதுக்குடியிருப்பு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்கள், சிறுவர்களுக்கு ஹவாய் சுவாமிகள் ரிஷி தொண்டுநாத அடிகள் ஊடாக வழங்கப்பட்டன. (ஒ-1)




காரைநகர் வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி வீரமங்கை யோகரத்தினம் ஆகியோர் மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதைக் காணலாம். (ஒ-250)



வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய உற்சவ காலத்தில் "மகாபாரதம்" குறித்த தொடர் இசைப் பேருரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அருகில் வயலின் வித்துவான் பத்மநாதனும், மிருதங்க வித்துவான் ராஜனும். (ஒ)



கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் எழுதிய "குழந்தைகளுக்கான மழலைச் செல்வம்" நூல் வெளியீட்டு நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வரிடமிருந்து யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த க.இரத்தினசபாபதி நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொள்கிறார். (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2013 A/L பரீட்சை முடிந்து விட்டதா?
## A/L மாணவர்களுக்கு ஒரு விசேட வரப்பிரசாதம்

உயர்தரப் பரீட்சையின் பின்னர் உங்கள் ஆங்கில அறிவையும், பேச்சுத்திறனையும் விருத்தி செய்வதற்கான, நவீன முறையில் வடிவமைக்கப்பட்ட ஆங்கில வகுப்புக்களை BBC நடாத்துகின்றது.

சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கு
**Diploma In Spoken English**

ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்கு
**Diploma in English**

அடிப்படை ஆங்கில அறிவிற்கு
**Certificate in English**

வெளிநாடு செல்வதற்கு
**IELTS**

வகுப்புக்கள்: வார இறுதி நாட்கள் [காலை, மாலை], வார நாட்கள் [மாலை]

British BUSINESS COLLEGE
Where Students Come First

**BRITISH BUSINESS COLLEGE**
**Jaffna Metro Campus**
573, Manipay Road, Ottumadam, Jaffna.
[யாழ் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில்]

BRITISH COUNCIL இனால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையம்.

தொடர்புகளுக்கு: 0777 009 653, 0774 682 951, 0776 646 357

## புதிய தவணைக்கான புதிய அனுமதிகள்

**BBC 11 வது வருடத்தில்** ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை

| வயது 2+ முதல் வயது 3+ வரை | வயது 3+ முதல் வயது 4+ வரை | வயது 4+ முதல் வயது 5+ வரை |
|---|---|---|
| Play Group | Montessori | Pre School |

10 வருடங்களில் 7500 ற்கு மேற்பட்ட சிறார்கள் கல்வி பயின்றுள்ளார்கள். 90 % மாணவர்கள் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

கற்பித்தல் முறை:

- ★ சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட Dr. Maria Montessori + Canadian ECE Method
- ★ தமிழ் கட்டாய பாடம்.
- ★ ஆங்கில மொழி மூல கற்பித்தல்
- ★ சிறார்களின் திறமைகளை வெளிக் கொணரும் நிகழ்ச்சிகளில் சகலரும் பங்கு பெறுவார்.
- ★ விளையாட்டுப் போட்டி. English Concert, முத்தமிழ் விழா. சித்திரக்கைவேலைக் கண்காட்சி. Graducation Ceremony.

பாலர் பாடசாலை வளாகங்கள்

தலைமைக் காரியாலயம் → யாழ்ப்பாணம்: 64, கோயில் வீதி, யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | நீர்வேலி |
| மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம் (ஓட்டுமடம் சந்தி அருகாமை) | 1ம் மைல் கல் இராச வீதி |
| கோப்பாய் | சாவகச்சேரி |
| பருத்தித்துறை வீதி கோப்பாய் சந்தி | சாவகச்சேரி Hindu Collgee Primary School அருகாமை |
| மானிப்பாய் 1 | அச்சுவேலி |
| 252, ஆலடிச்சந்தி, யாழ் வீதி | ஆதார வைத்தியசாலை அருகாமை |
| மானிப்பாய் 2 | சங்கானை |
| சங்கரப்பிள்ளை வீதி (மானிப்பாய் இந்துக்கல்லூரி வீதி) | பிரதேச செயலகம் அருகாமை (நிகர வைரவர் கோயிலடி) |
| சுன்னாகம் | வடமராட்சி |
| Dr. சபாரத்தினம் வீதி சுன்னாகம் | பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, கரவெட்டி |

(சி/11684)(3.6)

தொடர்புகளுக்கு: 0777 009 653, 0774 682 951, 0776 646 357

### வெளிக்கள உத்தியோகத்தர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல இலத்திரனியல் நிறுவனத்திற்கு தகுந்த தகைமையுள்ள அனுபவம் உள்ள வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை.

தகைமை
1) 25 வயதிற்கு மேற்பட்டவர்கள்
2) O/L சித்தியடைந்திருத்தல்
3) முன் அனுபவமுள்ளவர்கள்
4) மோட்டார் வண்டி செலுத்தக் கூடியவரும் சொந்தமாக மோட்டார் வண்டி உள்ளவராகவும் இருத்தல்.

தகைமையுடையவர்கள் 12 ஆம் திகதிக்கு முன்னர் softlogic-jaffna@softlogic.lk மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (31624) (7.6.3)
மேலதிக தொடர்புக்கு : 077 739 9929

### நாய் விற்பனைக்கு

15 மாதம் நிறைந்த லயன்செப்பேட் ஆண்/பெண் நாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 553 8492 (39497) (7.6.3)

### காணி விற்பனை

சுன்னாகம் சந்திக்கு வடக்கே கே.கே.எஸ். வீதியில் இருந்து 100m தூரத்தில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 071 480 6309 (39463) (7.6)

## குழாய்க்கிணறு தோண்டுவதற்கான சகல உபகரணங்களும் விற்பனைக்கு உண்டு

1. மினரல் றில்லிங் றிக் (P.R.D.) PRD 450 & PRD 500


PRD 450


PRD 500

2. எயார் கொம்பிரசர்


DENYO 600 CFM


AIRMAN 530 PDSF

3. பிட்ஸ் & ஹமர் (Hammars & Bits)

சகல உபகரணங்களும் நியாயமான விலையில் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**AMERASIAN (PVT) LTD,**
61/09, Dhamampala Mawatha,
Colombo-03.
T.P: 071 870 1040 - Arul
011-2336128 - Jaya
E-mail : arul@amerasiancorb.com
(31429) (7.6)



## இயக்கச்சி முகாவில் பறையோம்பிகுளம் (வில்வகுளம்)
## திருவருள் மிகு ஸ்ரீ ராஜ கணபதி திருக்கோயில்
## புனருத்தாரண பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஸ்டா
## மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா - 09.09.2013

ஸ்துதி

*நிறை மதியை குன்றவைத்தே கர்வம் நீக்கிய*
*மறை நான்கின் முன்னவ பெரும் பிரணவ நாதா*
*பறை யோம்பி யொலி செய்த தடாக முகநோக்கி*
*முறை யாமுகா வில்மேவு ராஜ கணபதி போற்றி*

இன்று (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை **எண்ணெய்க்காப்பு** காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை

நாளை (09.09.2013) திங்கள் விநாயகசதுர்த்தி, சித்திரை நட்சத்திரம் சித்தாமிர்தயோகம் சேர்ந்த காலை 6.11 முதல் 07.12 வரையுள்ள சிம்மலக்ன சுபமுகூர்த்தவேளையில் **மஹா கும்பாபிஷேகம்** நடைபெற்று தொடர்ந்து 25.10.2013 வெள்ளிவரை 48 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும்

*“வேழமுகத்து விநாயகனை தொழ வாழ்வு மிகுந்துவரும்”*

### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசியுரை



ஓம் என்கின்ற பிரணவத்தின் மூலாதார மூர்த்தியாய் எங்கும் வியாபித்திருக்கும் முன்னவ வழிபாட்டுத் தெய்வம் ஸ்ரீ விநாயகப்பெருமான். அருஉருவத் திருமேனி இல்லாமலே தர்ப்பை,பசும்சாணம், மஞ்சள், சந்தனம் போன்ற மங்கலப் பொருள்களில் எல்லாம் ஒரு கூம்பு செய்து விநாயகரை வழிபட்டு விடலாம். அவ்வளவு எளிமையாக திருவருளை வாரி வழங்குபவர் விநாயகப் பெருமான். ஔவைப்பிராட்டி கூறிய விநாயகர் அகவலில் ''தாயாய் எமக்கு தான் எழுந்தருளி மாயப் பிறப்பின் மயக்கம் அறுத்தே'' என்கின்ற வார்த்தை மூலம் லௌகீக சுகங்களை விநாயகர் தாய்மை அன்போடு அகற்றுவார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். இயக்கச்சி முகாவில் பதியே காலநூற்றாண்டு பழமையோடு அமைந்த இந்த ராஜகணபதி திருக்கோயில் இன்று அழகுறு தெய்வத்திருத்தலமாய் காண்போரைத் தம் வசம் கவர்ந்து காட்சிமை தருகின்றது. தனவந்தர்கள் பலர் இருந்தாலும் மனமுவந்து தர்மகாரியம் செய்யும் தாராளகுணம் எல்லோருக்கும் அமையாது. அப்படி அமையும் சிலரில் ஒருவர் ஷண்நவரத்தினம். அவரின் மனம்சோர்வு அடையாத அன்புத் திருப்பணியால் இந்த ஆலயம் இன்று பூரணத்துவம் நிறைந்த ஆலயமாய் மிளிர்கின்றது. ஸ்ரீராஜ கணபதியின் மஹாகும்பாபிஷேக திருவருள் அனைவருக்கும் நிறைவு தருவதாய் அமைய ஆனைமுகன் அடிபணிவோமாக!

பிரதிஸ்டா குரு, செஞ்சொற் கவிதா சிரோமணி, ஜோதிட பூஷணம்,
கலாநிதி சிவசக்தி ஸ்ரீராம் தேவலோகேஸ்வரக்குருக்கள் (துன்னையூர் வல்லிபானந்தம்)

### ஆலய நிர்வாக சபைத் தலைவரின் பிரார்த்தனையுரை



மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் எனும் வாக்கு இன்று புலம் பெயர் நாடுகளில் எல்லாம் நிதர்சனமாகி வருவதற்கு முக்கிய காரணம் எம்முன்னோர்கள் வகுத்த ஆசாரம் நிறைந்த சைவ ஒழுக்கம். அந்த ஒழுக்க நெறியோடு வாழ்ந்த நாம் எங்கு சென்றாலும் அதைப் பின்பற்றி செயற்படுகின்ற நிலை எமக்குள்ளே அமைந்து விடுகின்றது. இந்தக் கட்டுப்பாடும், ஒழுக்கமும் சீராகத் தொடர மூல காரணியாய் அமைவது ஆலயங்கள். எமது பூர்வீக ஆலயங்களைப் புனருத்தாரணம் செய்கின்ற பணியை இறைவன் எமக்குத் தருகின்றான். அதை மனமுவந்து நாம் செய்கின்றோம். வாழ்க்கையை ஒரு வரையறைக்குள் வைத்துச் செயற்பட வேண்டும். தாய் தந்தைக்காக, சகோதரர்களுக்காக, மனைவிக்காக, பிள்ளைகளுக்காக அதன்பின் சமூகத்திற்காக ஏதாவது செய்வதுதான் மனித வாழ்வில் நாம் காணும் பூரணம். ''எனவே அவன் அருளாளே அவன்தாள் வணங்கி'' எனும் வாக்கிற்கு அமைய எம்மை ஸ்ரீ ராஜகணபதி இயக்கி செயற்படுத்துகின்றார். நாம் இயங்குகின்றோம். இன்று குடமுழுக்குக் காணும் இவ்வாலயம். இக்கிராம மக்கள் அனைவருக்கும் பெரும் பொக்கிஷம். அறநெறி வகுப்பு, அன்னதானம், சமயநெறிக் கோட்பாடு இவைகளை நெறிப்படுத்தி ஆலயத்தில் அனைவரும் இறைவன் பிள்ளைகளாய் செயற்பட்டு நிறைவான வாழ்வு காண ராஜ கணபதியைப் பிரார்த்திக்கின்றேன்.

''ஆனைமுகனைப் பணிந்தால் அனைத்து நலனும் நம்மைச்சாரும்''
ஆலய நிர்வாக சபைத் தலைவர் - ஷண் நவரட்ணம்

ஸ்ரீராஜகணபதி ஆலய நிர்வாகசபை (பறையோம்பிகுளம்) முகாவில் இயக்கச்சி.
(31523) (45.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/கப்புது ஏகாம்பர வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்தல் தொடர்பான பொதுக்கூட்டம்

| | |
|---|---|
| இடம்- | யா/ கப்புது ஏகாம்பர வித்தியாலயம் |
| தலைமை- | அதிபர் சி.தர்மரத்தினம் |
| காலம்- | நாளை (09.09.2013) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு |

பழைய மாணவர்கள் அனைவரும் மிகுந்த அக்கறையுடன் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றோம்.

க.பரமேஸ்வரன்
(ஆசிரியர்)
கப்புது ஏகாம்பர வித்தியாலயம்,
கரவெட்டி.
(29514) (3.6.11)

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

முகாமையாளர்- அரச திணைக்களத்தில் இருந்து ஓய்வு பெற்றவர் (ஆண்)
காசாளர்- கணினி அறிவுடைய (பெண்)
மேற்பார்வையாளர்- ஆண் தொடர்பு-077 361 4926 (32502) (4.6.1)

## Mega ஸ்கொலர்ஷிப்

Win 75%
CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

இன்று மெகா புலமைப்பரிசில் பரீட்சை. இதுவரை அனுமதிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்று காலை 9.00 மணிமுதல் CSC - ASIAN பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 021 2225677 | சாவகச்சேரி | 021 2270267 |
| நெல்லியடி | 021 2262399 | கிளிநொச்சி | 021 2283625 |
| வவுனியா | 024 2226050 | பதிவுகள் தற்பொழுது ஆரம்பம் | |

## உயர்தரப் பரீட்சையை முடித்தபின் பரீட்சை முடிவுகளுக்காக காத்திருக்கிறீர்களா???



தொழில் வாய்ப்பு 100% சாத்தியமானது

எம்மிடம் Diploma கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்கள் உள் ஊரிலேயே அதியுயர் சம்பளத்துடன் தொழில் புரிகின்றனர்

City & Guilds

# DIPLOMA IN ENGINEERING

- CIVIL ENGINEERING
- ELECTRICAL ENGINEERING
- QUANTITY SURVEYING
- MECHANICAL ENGINEERING
- MOTOR VEHICLE ENGINEERING
- REFRIGERATION & A/C
- ELECTRONIC ENGINEERING
- AUTOCAD

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற City & Guilds சான்றிதழ்
- அனுபவமும் திறமையும் வாய்ந்த விரிவுரையாளர் குழாம்
- உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதியுயர் சம்பளத்துடன் வேலை வாய்ப்புக்கள்
- City & Guilds பரீட்சைகள் தற்பொழுது யாழ்நகரிலே எமது நிறுவனதின் ஊடாக நடாத்தப்படுகின்றன
- இலகு தவணைக் கட்டண முறைமை
- தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விரிவுரைகள்
- IESL இனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறியியல் கற்கை நெறி

CERTIFICATE - 6 MONTHS - GCE O/L, A/L COMMERCE OR ART
DIPLOMA - 8 MONTHS - GCE A/L MATHS OR SCIENCE
ADVANCED DIPLOMA - 1 YEAR - NCT, NCIT, C&G DIPLOMA OR EQUAL
GRADUATE DIPLOMA - 1 YEAR - NDT, HNDE, NDES, OUSL, HND
POST GRADUATE DIPLOMA - 1 YEAR - ENGINEERING DEGREE OR EQUAL

பதிவுகள் ஆரம்பமாகியுள்ளன
கற்கை நெறி ஆரம்பிக்கும் திகதி: **14-Sep-2013**

மேலதிக விபரங்களைப் பெற உங்கள்
[Name] [Address] [Course]
போன்ற விபரங்களை
0777 762 283 க்கு
SMS செய்யுங்கள்



**Call us for more information!**

HOTLINE 077 1 067394
JAFFNA 021 4 666699

City & Guilds APPROVED CENTRE
SKILLS COLLEGE OF TECHNOLOGY

SKILLS COLLEGE OF TECHNOLOGY
Jaffna Campus
No. 207, Navalar Road, Jaffna
Jaffna@skillsinternational.lk
(சி/11871)
TVEC Reg. No. : P01/0414

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, மறுவன்புலவு, சேது காவலம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கிழக்குத் திசையில் 40 பரப்பு வயல் காணி இப்போது செய்கையில் உள்ளது. விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 502 2651, 071 314 6537

## தேவை

கச்சேரிக்கு அருகில் அமைந்திருக்கும் (சோமசுந்தரம் வீதி) விருந்தினர் விடுதி ஒன்றுக்கு 20 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு: 077 645 0726 (சி/11921) (7.6.3)

## வீடும் காணியும் விற்பனைக்கு

நீர்வேலி, பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை (ஹெலோனை தோட்டம்) எனும் முகவரியில் இல.05, அமைந்துள்ள நிலப்பரப்பு 2½ பும் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடும் நீர்வேலி வாய்க்கால் தரவை பிள்ளையார் கோவில் ஒழுங்கையில் அமைந்துள்ள (கிருவர்பற்றை) நிலப்பரப்பு 2½ தோட்டக் காணியும் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு: 077 661 8790 (31567) (3.11.6)

## பஸ் விற்பனைக்கு உண்டு

N-D-XXXX தொடர் இலக்கமுடைய யாழ்- கொழும்பு வழி அனுமதிப் பத்திரத்துடன் அதி சொகுசு பஸ் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 314 0040

## வாகனங்கள் விற்பனைக்கு

மஹேந்திரா ((Mahindra) வாகனங்கள் விற்பனைக்குண்டு.

| | | |
|---|---|---|
| Maxi Truck | PT-XXXX | 21408km |
| Maxi Truck | PU-XXXX | 14629km |
| Maxi Truck | PU-XXXX | 16055km |
| Maximo | PU-XXXX | 30000km |

விலைபேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: (31564)(11.6.3)
077 262 7581/ 071 494 0021
620, Hospital Road, Jaffna.

## பெண் பணியாளர் தேவை

வயதான பெண்ணைப் பாரமரிப்பதற்கு பெண் வேலையாள் தேவை.
தொ.பே. 077 840 5767, 077 323 8956

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-மானிப்பாய் பிரதான வீதி ஆனைக்கோட்டையில் (கராச்சடி) பழைய பொலிஸ் நிலையம் அருகில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
தொடர்பு: 077 605 4439 (31556)(3.6.11)

## தேவை

யாழ்ப்பாணத்தில் வயோதிப தாயார் ஒருவருக்கு உதவி செய்யும் பொருட்டு சேவை மனப்பான்மையுள்ள இரண்டு பேர் கொண்ட ஒரு சிறிய குடும்பம் தேவை. இதற்குப் பிரதி உபகாரமாக சகல வசதிகளும் கொண்ட ஒரு சிறிய வீடு வாடகை எதுவுமின்றி வசிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். மேலும் விபரங்களுக்கு
தொ.பே. 077 765 6918, 077 218 8840

## தவறிவிட்டது

இணுவில் தெற்கு, இணுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கபிலன் என்பவருடைய தேசிய அ.அட்டை 942062699 V நல்லூர் திருவிழாவுக்குச் சென்று வரும்போது கே.கே.எஸ் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் அண்ணா பாம் இணுவில் என்ற முகவரி யில் ஒப்படைக்கவும். 021 7200 900

## வீடு வாடகைக்குண்டு

பலாலி றோட் கோண்டாவில் டிப்போவுக்கும் உரும்பிராய் பெற்றோல் சந்திக்குமிடையில் இரண்டு வீடுகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 614 6253 (31539) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 658 0677 (31554) (7.6.3)

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல பேக்கரி ஒன்றிற்கு கணக்காளர் மற்றும் விற்பனை உதவியாளர் வேலைக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர். குறிப்பாக பெண்கள் விரும்பத்தக்கது.
தகைமைகள் -
- க.பொ.த உ/த (வர்த்தக கணக்கியல் பாடத்தில் சித்தி பெற்றோர்.
- கணினி அறிவு

தொடர்பு:
077 713 1594, 077 314 7580 (39405) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி கிடைத்த போதிலும் புனரமைக்கப்படாத வீதிகள்

## விசனம் தெரிவிக்கிறார் மாந்தை கிழக்கு உப–தவிசாளர்

முல்லைத்தீவு,செப். 8

பெருந்தொகையான நிதி கிடைத்த போதிலும் மாந்தை கிழக்கிலுள்ள வீதிகளின் புனர மைப்புப் பணிகள் இடம்பெற வில்லையெனத் தெரிவிக்கப் படுகின்றது.

மாந்தை கிழக்குப் பிரதேச சபையால் என்றிப் திட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்ட வீதிகள் புனரமைக்கப்படாமையால் மாந்தை கிழக்கின் போக்கு வரத்துச் சேவை பாதிப்படை வதோடு பொதுமக்களும் பல் வேறு சிரமங்களை எதிர்கொள் வதாக பிரதேசசபையின் உப-தவிசாளரான சி.செந்தூரன் குறிப்பிட்டார். இந்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு அல்லது இந்த நிதியினைக் கொண்டு பிரதேச சபையினால் வீதி களைப் புனரமைப்புச் செய்வதற்கு அனுமதி தருமாறு கோரப்பட்ட போதும் சம்பந்தப்பட்ட தரப்பினர் பாராமுகமாக இருப்பதாகவும் இந்தப்



பிரதேசத்துக்கென ஒதுக்கப் பட்ட நிதியை வேறு பிரதேசாங் களுக்குக் மாற்றிக் கொண்டுள் ளார்களா என்பதை அறிய முடியாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கீழ்வரும் வீதிகளே புனரமைக் கப்படாத நிலையில் இருப்ப தாகவும் அவர் தெரிவித்தார். விக்னேஸ்வரா சனசமூக நிலை யம் தொடக்கம் எஸ்.ஆர். சந்தி வரையான வீதி. பாண்டியன் குளம் சந்தை தொடக்கம் நட் டாங்கண்டல் சந்தி வரையான வீதி. சிவபுரம் கோஸ்வே வீதி. வடகாடு வீதி. சகாய வீதி-அம் பாள்புரம் வீதி. (க)


### கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிலையத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

**சுப்பிரமணியம் சண்முகநாதன்**

இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து வேதனைப்படுகின்றோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பது டன் அவரது பிரிவால் துயருறும்குடும் பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(சி/11937.17.15.14)

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

இயக்குனர், ஆசிரியர்கள், மாணவர்கள்
**நாவலர் கல்வி நிலையம்**

### அக்ஷயா

3மாதகால பயிற்சி நெறி

பயிற்சிக் கட்டணம் ரூ20000/=

பேசியல், மேக்கப், கெயாஸ்ரைல், தலைமுடி அயன்பண்ணுதல், தலைமுடிசுருட்டுதல், கேளிங், சாறி பிளவுஸ் கட்டிங், சாறிவேக்மேற்படி பயிற்சிகள் நடைபெறுகின்றன. ✱ ஒட்டிய கன்னங்களை குண்டு கன்னங்களாக மாற் றும் குளிசை, உடல் எடை கூட்டும் குளிசை ✱ உடல் எடை குறைக்கும் பால்மா, குளிசை, கோப்பி ✱ கருவளையம், நாட்பட்ட பருக்கள், இளநரை, முடி கொட் டுதல் அனைத்துக்குமான குளிசை, தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் ✱ கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, நாட்பட்ட வடுக்கள், பருக்கள், காயங்கள், மஞ்சள், வெள்ளைப் புள்ளிகள் அனைத்தையும் மாற்றும் ஒறியினல் வைத்நிங் கிறீம் விற்பனைக்குண்டு. ✱ மூலிகை வைத்நிங் பேசியல் செய்துகொள்ளலாம். ✱ கேளிங், இயற்கை மூலிகை அடங்கிய பேசியல் மேக்கப் செய்து கொள்ளலாம், முகம் கழுத்தில் உள்ள காய்கள் அகற்றப்படும். ஓடர்கள் ஐசிங்கேக், ஐசிங்க பிளவர் ஓடர்கள், மேக்கப் ஓடர்கள், ரிச்கேக்- 50/- ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவு இல: 16168 T.P- 0772106155

அக்ஷயா- நாவலர் வீதி, பிறவுன்றோட் சந்தி, அருள் கொமினிகேசன் அருகில், யாழ்ப்பாணம்.

### கடைத் தொகுதியுடன் உள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு

சாவகச்சேரி வர்த்தக மையப் பகுதியில் கண்டி வீதியில் புதிய வர்த்தக வங்கிக் கிளைக்கு அருகில் டச்சு வீதி டிறிபேக் கல் லூரிக்கு முன்பாகவும் (நகரசபை கடைத் தொகுதிக்கு முன்பாக) உள்ள மூன்று கடைத் தொகுதியும் மற்றும் மேல் வீட்டுடன் உள் ளடங்கிய இரண்டு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

0771738050 (31614.23.14.16)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பம் வயது 35 வருடம் Doctor (MBBS) சிறந்த நற்குணமுள்ள மணமகனுக்கு தகுந்த பட்டம் பெற்ற Doctor, Engneer, Accou ntant or பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:- 077 0279716

(31609.16.14.17)

### நினைவலைகள்

1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13.03.1937
மறைவு 20.08.2012

சின்னத்தம்பி யோகேஸ்வரி
(பூமணி)

26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12.05.1929
மறைவு 20.10.1987

கந்தர் சின்னத்தம்பி
(சிமோல்)

திதி: திருதியை(08.09.2013)

ஆல மரத்தினைப் போல் ஆற நிழல் தந்து அன்பு காட்டி
அரவணைத்த என் அன்னையும் தந்தையும்
வழிகாட்டி ஆளாக்கிய தெய்வங்கள் அவர்களது
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

163, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (31605) (17.16.14)

குடும்பத்தினர்.

### பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்போது கொழும்பில் வசிக்கும் சிறிய குடும்பமொன் றுக்கு வீட்டு வேலைகள் அனைத்தும் நன்கு தெரிந்த பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 154 7676

(31613) (10,16,14)

### காணி, வீடு, விற்பனைக்கு

கனகரட்னம் றோட், சாத்திரியார் லேன் மாம்பழம் சந்திக்கு அருகில், அரியாலை, இரண்டு பரப்பு காணி, வீடு சுற்றுமதில், கிணறு, சகல வசதியுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 196 5548

(31610) (10,16,14)

### கணினி அறிவுள்ளோர் தேவை

பொருள்களை கணினி மூலம் பதிவேற்றம் செய்வதற்கும் கணினி மூலம் சிட்டை தயாரிப்ப தற்கும் ஆள் தேவை. தகுதிக் கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 075 2430276

(சி/11941) (10,16,14)

### கார் விற்பனைக்கு

TATA INDICO (டிக்கி மொடல்) JJ தொடரிலக்கத்தை யுடையது.

தொடர்புகளுக்கு: 077 678 7905

(சி/11941) (10,16,14)

### நன்றியுடன் வாழ்த்துகின்றோம்



Prof.W.M Abeyratna Bandara



Mr.S.K.Yokanathan



Mr..S.R.SatiyendramPillai



Mr.s. Amirthalingam

தேசிய கல்வி நிறுவனத்தினால் யாழ். கல்வியியற் கல்லூரியில் நடத்தப்படும் முதுகல்விமாணிக் கற்கை நெறியை நிறைவுசெய்து வெளியேறும் இந்த நேரத்தில் இந்தக் கற்கை நெறியை நாம் இங்கு சிறப்புடன் தொடர அயராது உழைத்த இணைப்பாளரான ஓய்வுபெற்ற பீடாதிபதி S.K. யோகநாதன் அவர்களையும் உப பீடாதிபதி திரு.S.R.சத்தி யேந்திரம்பிள்ளை அவர்களையும் தற்போதைய பீடாதிபதி திரு.எஸ். அமிர்தலிங்கம் அவர்களையும்பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களோடு துணை நின்ற விரிவுரையாளர்களுக்கும் எமது பிரததேசத்தில் இந்தக் கற்கைநெறியைத் தொடர்வதற்கு வாய்ப்பைத் தந்த D.G Prof.w.m. Abeyratna Bandara, NIE சமூகத்திற்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். (31613-23-14-16)

முதலாவது அணி
MED மாணவர்கள்
தேசிய கல்வியியல் நிறுவகம்,
யாழ்ப்பாணப் பிராந்தியம்.

### காணி விற்பனைக்கு

கொக்குவில் தபாற்கந்தோர் வீதியில் K.K.S. Road இற்கு அருகில் சற்சதுர ஒரு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 167 1174, 075 243 0276

(31612) (10,16,14)

### SB TRAVELS & TOURS

SPECIAL AIR FARES

| | | | |
|---|---|---|---|
| MADURAI | 14,500/- | LONDON | 96,000/- |
| TRICHI | 15,600/- | MALDIVES | 21,800/- |
| CHENNAI | 13,800/- | MILAN | 85,000/- |
| BOMBAY | 26,500/- | TORONTO | 158,500/- |
| BENGALURU | 17,800/- | NEW YORK | 118,500/- |
| KOCHI | 17,500/- | MELBOURNE | 105,000/- |
| DELHI | 40,300/- | PERTH | 75,800/- |
| MALAYSIA | 30,800/- | CANTON | 65,500/- |
| SINGAPORE | 26,800/- | NARITA | 68,000/- |
| BANGKOK | 29,500/- | AUCKLAND | 124,100/- |
| SYDNEY | 89,500/- | | |

*Condition Apply

VISA MASTER American Express Card Accepted

ONEWAY: SHARJA - 20,800/-, DUBAI -23,800/-, DOHA - 26,500/-

விரும்பும் நாட்டுக்கு விமான டிக்கட் செய்து தரப்படும். டோகா கடார், துபாய்க்கு பியுரோ அரேங்மென்ட் செய்து தரப்படும்.

E-mail: sbtravels99@yahoo.com
Hotline: 077 1083481

No: 132 Sri Kathirasan Street, Colomb13.
Tel: 011 2333322, 2540111, 2334470, 2540280 Fax: 011 2334460

### விற்பனைக்கு

8, 10, 12 அடி வீட்டுத் தூண் அரியும் இரும்பு அச்சு, வேலித்தூண் அரியும் இரும்பு அச்சு, பூக் கல் அரியும் இரும்பு அச்சு, மரம் அரியும் றோதவால் பட்டடை எஞ்சினுடன் விற்பனைக்குண்டு.

(31596) (23-14-16)

தொடர்பு:0777168040

### காணி விற்பனைக்கு

Mannar - Thalaimannar பிரதான வீதியில் 40 Acres உறுதிக் காணி விற்பனைக்குண்டு Thalai Mannar Pierல் இருந்து 4Km தொலைவிலும், பிரதான வீதியை ஒட்டிய நேரடி முகப்பையும் கொண்டது Cadju தென்னை வளர்ப்பு அல்லது வர்த்தக அபிவிருத்திக்கு மிக உகந்தது.

தொடர்பு :
somabamas@gmail.com
Tel : 0112 580 048

### வீடு, காணி விற்பனைக்கு. வாடகைக்கு

கொக்குவில் மேற்குப் பிரதேசத்தில் 3½ பரப் புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. இரண் டாகப் பிரித்தும் கொடுக்கப்படும். கிளி நொச்சிப் பிரதேசத்தில் வீடு வாடகைக் கும் உண்டு.

(31608.14.17.16)

தொடர்பு:- 0777 111716

### கடையும் வீடும் விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மாநகர சபை பிரதேச எல்லைக்குள் (புகையிரத நிலையத்துக்கு அரு கில்) அமைந்துள்ள கடையுடன் கூடிய வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. 39096, 16.14

தொடர்பு:- 071 8454025

### U.S.A,U.K Wedding Service

(அரச பதிவுகளுக்கு உட்பட்டது) VE/ND/33 (பவநேசன்)

#### மணமகன் தேவை

யாழ் இந்து குடும்பம் 1990 அஸ்வினி 2 ஆம் பாதம் 7 இல் செவ், கி.பா 41, நாதியர் அஜீவையாக (அமெரிக்க வைத்தியசாலையில்) U.S.A PR ஒளவு படித்த இலங்கை வைத்தியசாலை/வெளிநாடுகளில் உள்ள டொக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன்) 1992, சுவிஸ்லாந்து PR அஸ்வினி 2 ஆம் பாதம் கி.பா 25, பிரபல தொழிலதிபர்களின் (இலங்கை, இந்தியா, கனேடிய உணவு பொருட்களை ஏற்றுமதி செய்தல்) ஒரேயொரு மகளுக்கு மணமகன் தேவை. U.S.A, UK, சுவிஸ்லாந்து, ஜேர்மன், நோர்வே, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் PR இல்லாதவர்களும் PR உள்ளவர்களும் இலங்கையில் உள்ளவர்களும் தொடர்புகொள்ளவும். மணமகன் இலங்கை வருவதாகவுள்ளார்.

தொடர்பு 0771479416

### மணமகன் தேவை

யாழ் இந்து 1975ஆம் ஆண்டு பிறந்த அழகிய B-Sc பட்டதாரியான, அரச ஆசிரியையாக கொழும்பில் கடமை புரியும் மகளுக்கு படித்த உத்தியோகம் செய்யும் மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க கின்றார்கள். தகுந்த சீதனம் வழங்கப்படும்.

விளம்பர இல: 4470
மே/பா: உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்பபாணம்.

### காணி விற்பனைக்கு

இணுவிலில் 2பரப்புக் காணி விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு:-
0771031835

(C/11940.14.17.16)

### புதிய வீடு விற்பனைக்கு

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட யாழ். இந் துக்கல்லூரிக்கு அன்மையில் 5அறை கள், நீர்த்தாங்கி, சுற்றுமதில் மற்றும் சகல வசதி களும் கொண்ட புதிய வீடு உடன் விற் பனைக்கு.

தொடர்பு:- 077 3078881

### BANK BALANCE

(3 Months valid)
(6 Months valid)
(9 Months valid)

Student Bank loan

Tourist-Visit-Student VISAS

UK- USA- CANADA

AUSTRALIA- EUROPE

City Air Travels

Registered Company

163/7, Galle Road, Wellawatte, Colombo-06.

(opposite HNB Bank)

Hot Line- 0771615010 www.cityairlanka.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் வடுக்களுடன் காட்சி தரும் புதுக்குடியிருப்பு றோ.க.பாடசாலை

## அடிப்படை வசதிகளின்றி அவலம்
## 500 மாணவர்கள், ஆசிரியர் சிரமம்

புதுக்குடியிருப்பு.செப். 8

முல்லைத்தீவு கல்வி வல யத்தைச் சேர்ந்த புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்களுக்கு அடிப்படை வசதிகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை. போரால் சேதமடைந்த கட்ட டத்துக்குள்ளேயே அவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த கால போர் இடர் காரணமாக பலத்த சேதத்துக் குள்ளாகிய நிலையில் தற்போதும் இந்தப் பாடசாலை காட்சியளிக்கின்றது.

மீள்குடியமர்வுக்குப் பின் இறுதியாக ஆரம்பிக் கப்பட்ட இந்தப் பாடசாலையில் ஒரு வருடம் கடந்த நிலையிலும் எத்தகைய புனர மைப்புக் களும் மேற் கொள்ளப்படவில்லை.

சுமார் 500 க்கு மேற்பட்ட மாண வர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலைக்குரிய புதிய கட டடங்கள் எவையும் இது வரை அமைக் கப்படவில்லை. அது மட்டுமல்லாது தண்ணீர் வச திகள் கூடச் செய்து கொடுக்கப் படவில்லை. இதனால் அங்கு கற்றல், கற்பித்தல் செயற்பாட் டில் ஈடுபடும் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

**வடமா காண ஆளுநரால் சுமார் 55 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.**

இது தொடர்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பல தட வைகள் சம்பந்தப்பட்டவர்க ளுக்கு சுட்டிக் காட்டிய போதும் எவ்வித நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லை என பெற்றோரும், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்தப் பாடசாலையில் புதிய கட்டடங்களை அமைப்பதற்கு வடமாகாண ஆளுநரால் சுமார் 55 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப் ட்டு இரண்டு மாதங்களுக்குள் கட்டட வேலைகளை ஆரம்பிக்குமாறும் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

மழை காலம் ஆரம்ப மாகவுள்ள சூழ் நிலையில் இந்தப் பாட சாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் முழுமையாக பாதிக் கப்படக் கூடிய ஏது நிலை காணப்படுவ தாக பெற்றோர் தெரி விக்கின்றனர்.

இது இவ்வாறிருக்க முல் லைத்தீவு வல யக் கல்விப் பணிப் பாளர் இவ்வலயத் துக் குள் சுமார் 927 மில் லியன் ரூபா செலவில் 75 வீதமான பாட சாலைகள் புனரமைக் கப்பட் டிருப்பதாக கூறி யிருந்தார்- என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-410)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பகுதித் தலைவர் திருமதி ஜெயரஞ்சினி தர்மபாலன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **சுப்பிரமணியம் நாகேஸ்வரி**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரி சங்கம், மல்லாகம் மகா வித்தியாலயம்.

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மராணி தில்லைநாதன்

(முன்னாள் எழுதுவினைஞர், மீன்பிடிக் கூட்டுத்தாபனம், பேசாலை)



இளவாலை பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் உடையார் வளவு, புன்னாலைக் கட்டுவன் தெற்கினை வதிவிடமாகவும் கொண்ட பத்மராணி தில்லைநாதன் நேற்று (07.09.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி நடராசா (மலேயன் ஓய்வூதியர்) நடராசா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும், சுப்பிரமணியம் தில்லைநாதனின் (முன்னாள் சிறிமுருக நகைமாடம், சுன்னாகம் உரிமையாளர்) மனைவியும், வைத்திய கலாநிதி மதுரா (ஆஸ்திரேலியா), சஞ்ஜிதா (நன்னடத்தை உத்தியோ கத்தர், நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக் களம்), துஷிதா (ஆசிரியர், வேலணை சரஸ்வதி வித்தியால யம்) ஆகியோரின் பாசமிகு தாயும், கலாநிதி கு.சுந்தரவடிவேல் (விரிவுரையாளர், ஆஸ்திரேலியா), திரு.க.சடகோபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாகாண திட்டமிடல் செயலகம், வ.மா) மற்றும் திரு. ஏ. பகிதரன் (ஆசிரியர், கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி) ஆகியோரின் மாமியும், அபிநயாவின் (ஆஸ் திரேலியா) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடையார் வளவு,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
சுப்பிரமணியம் தில்லைநாதன்
(கணவர்)
தொ.பே: 021 224 0943

# பரந்தன் பகுதியில் நேற்று விபத்து





பரந்தன்.செப். 8

வீதியால் சென்றுகொண்டிருந்த டிராக்டர் எதேச்சையாக ஒழுங்கைப் பக்கமாகத் திருப்ப முயன்ற போது பின்னால் வந்த ஹைஏஸ் வாகனம் அதனுடன் மோதியது. அதை அடுத்து ஹைஏஸ் வாகனம் பெரும் சேதங்களுடன் தடம்புரண்டது. பரந்தன் முதலாம் கட்டைப் பகுதியில் இந்த விபத்து நடந்துள்ளது.

பரந்தன் பகுதியிலிருந்து முல்லைத்தீவு வீதி நோக்கி சென்று கொண்டிருந்த டிராக்டரும் வேகமாக வந்த ஹைஏஸ் வாகன முமே மோதி விபத்துக்குள்ளாகின. ஹைஏஸ் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு தெய்வாதீன மாக உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (ஒ-14-421-6)

## கண்ணீர் அஞ்சலி



வர்த்தக சங்கத்தின் மூத்த உருப்பினரும் முன்னாள் செயலாளருமான திரு. வே. குருபரன் (உரிமையாளர், சூர்யா மருந்தகம்) அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி இரத்தினசிகாமணி வேலும்மயிலும்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகின்றோம் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அச்சுவேலி வர்த்தக சங்கம், அச்சுவேலி

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனராணி சண்முகதாஸ் (பவி அக்கா)

(இளைப்பாறிய உபதபால் அதிபர்-அத்தியடி)



இடைக்காட்டைச் சேர்ந்தவரும் அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனராணி சண்முகதாஸ் 04.09.2013 புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகரத்தினம் தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்ற சின்னையா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னையா சண்முகதாஸ் (Asst Superintendent SLPA) அவர்களின் அன்பு மனைவியும், ஆறுமுகம், வள்ளி நாயகி, சோமசுந்தரம், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம், குமாரசிங்கம், கந்தசாமி, செல்வராணி, சங்கரநாதன் ஆகியோரின் சகோதரியும், பிரியதர்சன் (R.T.O.M, Vavuniya PSM/Northern Province SriLanka Telecom Plc-Vavuniyua) அவர்களின் அன்புத் தாயாரும், நாகேந்திரன் (Library Assistant-university of Jaffna) அவர்களின் சிறிய தாயாரும், காலஞ்சென்ற அருளினியின் (ஆசிரியை) மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.09.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உப தபாலகம்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
T.P- 021 222 2987

(39498)(3.6.11)

தகவல்:
ச.பிரியதர்சன் (மகன்)

## மரண அறிவித்தல்



### ஆசீர்வாதம் சத்யபவான் (சத்தி)

(Managing Director Mc browns Associate (Pvt) ltd and CEO.BFC Marine Plaga owner சுச்சமோட்டை)

மானிப்பாய் வட.கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் சத்யபவான் கடந்த (06.09.2013) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் ஆசீர்வாதம்- முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுமைதாங்கியின் (குயினா- கனடா) அன்புக் கணவரும் ஜினிசினியின் அன்புத் தந்தையும் ஜெயந்தி, சுகந்தி (இங்கிலாந்து), ஜெயபவான் (கனடா), வசந்தி (பிரான்ஸ்), பிலோமினா (அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கானை பிரதேச செயலகம்), உதயபவான் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2013) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ACM சேச் வீதி,
மானிப்பாய் வடகிழக்கு, மானிப்பாய்.

(31603-23-14-16)

தகவல்:
பிலோமினா (தங்கை)
0776340543/ 0755046713



### திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம்

தெல்லிப்பழை மகாதனையைப் பிறப்பிடமாகவும் வித்தகபுரம் தெல்லிப்பழை மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது இராசமாளிகை பிரம்படி கொக்குவிலில் வசித்து வந்தவருமான திருமதி நாகேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (07.09.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி- மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் (ஓய்வுபெற்ற புகையிரத திணைக்கள ஊழியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு - செல்வம் தம்பதியரின் அன்பு மருமகளும் தங்கரத்தினத்தின் (கொழும்பு) அன்புச் சகோதரியும் ஜெயரஞ்சினி, தர்மபாலன் (ஆசிரியர், யா/மல்லாகம் மகா வித்தியாலயம்), ஜெயலலிதா (வவி- Nothern Central Hospital தாதியர்), சிவலிங்கம் (சிவம், யாழ்/ மகாஜனா கல்லூரி பழைய மாணவன்), ஜெயநந்தினி (நந்தா), ஜெயப்பிரியா (ஜெயா, கிளிநொச்சி வைத்திய சாலை மருந்தாளர்) ஆகியோரின் அன்புத் தாயும் தர்மபாலன், சிவகுமார், நளினி, கமலநாதன், குகராஜன் (கனியன்) ஆகியோரின் அன்பு மாமியும் கபில்ராஜ், பிரவின்ராஜ், ரகுகரன், சிவகீர்த்தனா, திலக்சன், கவின்சன், கஜப்பிரியன், தமிழ்வானன், சிறிதரன், நேருஜன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் முகுந்தன், சித்திரா, அரவிந்தன் ஆகியோரின் அன்புச் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இராசமாளிகை, பிரம்படியில் உள்ள அவரின் தற்போதைய இல்லத்தில் இன்று (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பி.ப. 2 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நளினி - மருமகள்
0778591597

(31620-23-14-16)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடக விழாவில் 'ஒரு பூனையின் விலை'

கலாசார மற்றும் கலை அலு வல்கள் அமைச்சும், இலங் கைப் கலைக் கழகமும், அரச நாடகக் குழுவும் இணைந்து நடத்தும் நாடக விழா கொழும்பு ஜோன் டி.சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த முதலாம் திகதி ஆரம்ப மாகியது. எதிர்வரும் 15 ஆம் திகதிவரை நடைபெறும் இந்த நாடகவிழா தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். இந்த நிகழ்வில் தமிழ், சிங்கள, ஆங் கில நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வருகின்றன. நாளை திங் கட்கிழமை இணுவில் இளம் தொண்டர் சபையின் அறநெறிப் பாடசாலை மாணவர்களி னால் 'ஒரு பூனையின் விலை' என்ற நாடகம் மேடை யேற்றப்படவுள்ளது.

## தலைமறைவாகிய வர்த்தகரின் பொருள்கள் ஏற்றிச்செல்லப்பட்டன

கடன் சுமையால் தலைமறை வான வர்த்தகரின் வர்த்தக நிலையத்தில் கைவிட்டுச் சென்ற பொருள்கள் அதனை வழாங் கிய வர்த்தக நிறுவனங்களால் ஏற்றிச் செல்லப்பட்டன.

சாவகச்சேரி பொதுச் சந்தை வளாகத்தில் உள்ள பல்பொருள் வாணிப நிலையத்திலேயே பொருள்கள் ஏற்றிச் செல்லப் பட்டன.

சந்தை வளாகத்தில் உள்ள இரு கடைகளை வாடகைக்குப் பெற்ற வர்த்தகர் யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகியவற்றில் உள்ள மொத்த விற்பனை நிலையங்களில் லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள் வனவு செய்து வணிக நிலையத்தில் வைத்து வியாபாரத்தை மேற்கொண்டார்.

வியாபாரத்தை விஸ்தரிக்க வங்கி மற்றும் தனியாரிடம் பெருமளவு பணத்தையும் பெற் றுள்ளார். வியாபாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியால் கடன் சுமை தாங்கமுடியாமல் தலைமறைவாகி னார்.

கடன் கொடுத்த மொத்த வியாபாரிகள் இரு வரும் சிட்டைகளுடன் வருகை தந்து பொது மக்கள் முன்னிலையில் தமது பொருள்களை எடுத்துச் சென்றனர். (வ-9)

## கண்ணீர் அஞ்சலி

எமது லயன்ஸ் கழக செயலாளர் வி.நிரஞ்சன்
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி கமலநாயகி விவேகானந்தா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன் னாரின் ஆத்மா சாந்திடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய். (31577) (4.8.3) லயன்ஸ் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி



சூர்யா மருந்தக உரிமையாளர் வே.குருபரன்
அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி இரத்தினசிகாமணி வேலும் மயிலும்**

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடை கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாமசிஸ்டும்- பணியாளர்களும், சூர்யா மருந்தகம்,
அச்சுவேலி - புத்தூர். (சி/11932) (4.8.3)

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

**திருமதி புவனராணி சண்முகதாஸ்**
(ஓய்வுபெற்ற உபஅஞ்சல் அதிபர், அத்தியடிஅஞ்சல் நிலையம் யாழ்.)



அன்பினாலும் பண்பினாலும் தன் உயர் குண செய்கைகளினாலும் கனிவான தன் பேச்சுக்களினாலும் அனைவரி னதும் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட எமது கோயில் முன்னாள் பொருளாளர் திருமதி புவனராணி சண்முகதாஸ் அவர் களின் மறைவை யிட்டு ஆழ்ந்த துயரில் மூழ்கியுள்ளோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அத்தியடிப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

நிர்வாக சபை
(சி/11922) (5.8.3) யாழ். அத்தியடிப் பிள்ளையார் கோயில்

## கைலாச வாகன வெள்ளோட்டம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கைலாசவாகன வெள் ளோட்ட விழா நாளை திங்கட்கிழமை பிற் பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

தனியார் ஒருவராலும் மற்றும் ஆலயத்தின் முயற்சியினாலும் நிர்மாணிக்கப்பட்ட இந்த கைலாச வாக னப் பணி கடந்த மூன்று வருடங்க ளாக இடம்பெற்று நிறைவடைந்துள்ளது. யாழ்ப்பாணம் புத்தூர் காளிகா சிற்பாலய முதல்வர் சிற்பகலா வித்தகர் எஸ்.பால சந்திரனினால் நிர் மாணிக்கப்பட்ட இந் தக் கைலாச வாகனம் அழகிய சிற்ப அமைப் புக்களைக் கொண்ட தாக காணப்படு கின் றது. துர்க்காதேவி தேவஸ்தான தலை வர் செஞ்சொற் செல்வா கலாநிதி ஆறு. திரு முருகன் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ் வில் ஆசி யுரையை ஆலய பிர தம குரு சிவஸ்ரீ வா. அகிலேஸ் வரக்குருக் களும் வாழ்த்துரையை வலி.வடக்கு தெல்லிப் பழை பிரதேச செயலர் கஸ்ரீமோகனும் வழங் கவுள்ளனர். (ந-86)

## மரண அறிவித்தல்கள்

**திருமதி சாந்தமலர் (பேபி) வேலாயுதம்**



மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தமலர் வேலாயுதம் (7.9.2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மு. வேலாயுதம் (இளைப்பாறிய தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீமயூரன், துஸ்யந்தி ஆகியோ ரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகர் நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜெயநாதன் மற்றும் இராசம்மா ஆகியோரின் பெறாமகளும் நவனகுமார், சிரேஷ்டகுமார், சந்திரமலர், புஸ்பமலர் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும் சரோஜனி, நிர்மலா, செல்வராஜா, சிவபாலன் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் தங்கம்மா, தேவராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (8.9.2013) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது சொந்த இடமான மட்டுவிலில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மட்டுவில் நெணியன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"மலரகம்"
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி பார்வதி செல்லப்பா**

மயிலங்காடு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் லண் டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி செல்லப்பா 31.08.2013 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நரைசிங்கம் செல்லப்பாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முக வேள், சந்திரநாதன் மற்றும் நவரத்தினம் (இலங்கை), தன பாலன் (லண்டன்), ஸ்ரீஸ்கந்தவேள் (சுவிஸ்), சுகிர்தறஞ் சன் (லண்டன்), சற்குணேஸ்வரி, நாகேஸ்வரி, ஞானேஸ் வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பூமணி (லண்டன்), இராசமலர், பூமலர் (லண்டன்), விஜயமலர் (சுவிஸ்), சாந்தமலர் (லண்டன்), காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் நாகராசா, சிவஞானசுந்தரம் (ஜேர்மனி) ஆகியோ ரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.09.2013) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

T.P-075 759 5431 (C/11927)(3.8.11)

தகவல்:
செ.நவரத்தினம்(மகன்).

## திருமதி இரத்தினசிகாமணி வேலும்மயிலும்



உரும்பிராய் வடக்கைப் பிறப் பிடமாகவும் புத்தூர் மேற்கு, நவற்கீரியை வசிப்பிடமாகவும் வத்தளையை தற்காலிக வசிப் பிடமாகவும் கொண்ட இரத்தின சிகாமணி வேலும்மயிலும் நேற்றுசனிக்கிழமை (07.09. 2013) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முரு கேசு வேலும்மயிலும் (இளைப் பாறிய கூட்டுறவு கணக்காய் வாளர்) அவர்களின் அன்பு மனைவியும் முகுந்தன் (ஆசி ரியர், மிருசுவில் றோ.த.க), சசிகலா (முன்னாள் ஆசிரியை தற்போது ஒஸ்ரியா), குருபரன் (உரிமையாளர், சூர்யா மருந் தகம் அச்சுவேலி- புத்தூர்), நளினிகலா (வத்தளை) ஆகி யோரின் அன்புத் தாயும் லலி தாமலர் (அதிபர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி), சந்திரகாந்தன் (ஒஸ்ரியா), மொறீன் சாந்தினி (தென்மூலை அச்சுவேலி), ரவீந்திரன் (K.Gபிளாஸ்ரிக் கொம்பனி வத்தளை) ஆகியோரின் அன்பு மாமியும் சோபி (ஒஸ்ரியா), சீமோன் (ஒஸ்ரியா), சலோமிசரணியா (வேம்படி மகளிர் கல்லூரி உயிரியல் மாணவி- 2013), தேனுகானன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி, வர்த்தக மாணவன்- 2015), சௌமியா, தர்மிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வத்தளை மஹிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு கெந்தளை தேக்கிற்ற மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (சி/1130-23-14-16)

முகுந்தன்- 0770330325
குருபரன்- 0777220812
நளினி- 0771968638

தகவல்:
வே.குருபரன் குடும்பத்தினர் (மகன்)
சூர்யா பார்மஸி, அச்சுவேலி
பஸ்நிலையம், கிளை புத்தூர்.

## மரண அறிவித்தல்

**மோசஸ் பெனடிக்ற் (ஆசீர்வாதம்)**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)



குளமங்கால் மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், பிரான்ஸினை வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் பெனடிக்ற் (ஆசீர்வாதம்) நேற்று 07.09.2013 அதிகாலை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோகு மோசஸ் அடைக்கலம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கஸ்பார் நீக்லஸ்-அன்னம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், பெனிக்னா றுக்மணி யின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான லூர்த்தம்மா, றீற்றா, பாக்கியம் மற்றும் பத்திநாதர், அருளானந்தம், மேரி மாக்கிரட், மதுரநாயகம் ஆகி யோரின் பாசமிகு சகோதரனும் றணசிங்கம், அமலதாஸ், றெஜினோல்ட், இராஜசிங்கம், ஜெயரட்ணம், ஏஞ்சலா பேபி, இந்திராணி, விக்ரர் ஜெயக்குமார், புளோறன்ஸ் றஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (09.09.2013) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் நடை பெற்று. பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ். மரியன்னை சேமக்காலைக்கு கொண்டு செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 182, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
T.P : 021 222 9366

தகவல்:
பெனிக்னா றுக்மணி (மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உள்ளக விவகாரங்களில் இந்தியா தலையிடும் என்பதை மறந்திடுங்கள்

## சுப்பிரமணிய சுவாமியின் புத்திமதி இது



கொழும்பு, செப். 8
இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில், விடயங்களில் இந்தியா இனி எப்போதும் தலையிடும் என்பதனை இங்கு வாழும் தமிழ் மக்கள் மறந்துவிட வேண்டும்.
இரண்டு நாடுகளுக்கும்நன்மை பயக்கும் இரு தரப்பு ஒப்பந் தங்கள் மற்றும் உடன்படிக்கைகளில் நட்பு ரீதியில் சார்க், மற்றும் ஐ.நா. நியமங்களின் பிரகாரமே கைச்சாத்திடப்படும்
இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியாவின் முன்னாள் மத்திய அமைச்சரும், பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான சுப்பிரமணிய சுவாமி.
கொழும்பில் அரச அனுசரணையுடன் நடைபெறும் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு அறுத்து உறுத்துக் கூறியுள்ளார்.
தமிழகத்தில் போட்டா போட்டிக்கு அரசியல் நடத்தும் உதிரிக் கட்சிகளின் நிலைப்பாடுகள், கூக்குரல்களை இங்குள்ளவர்கள் கருத்தில் கொள்ளக் கூடாது -
பிரதான அரசியல் நீரோட்டத்தில் உள்ள எம்மைப் போன்றவர்கள் அவர்களின் அலட்டல்கள் குறித்துக் கருத்தில் கொள்வதில்லை. நாங்கள் முதலில் இந்தியர்களாகவும் அதற்கு அடுத்தே தமிழர்களாகவும் கருதுகிறோம்; செயற்படுகிறோம் - என்றும் அவர் தமது நீண்ட உரையில் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"தமிழ்ச் சாதி" என்ற கோட்பாட்டுக்கும் தமிழீழத் தாயகம் என்ற எடுகோளுக்கும், இலங்கைத் தமிழர்கள் மத்தியில் இருந்த ஆதரவு இப்போது சரிந்து வருகிறது. தமிழகத்தில் உள்ள உதிரி அமைப்புகள் கூட அவற்றைப் புறம்தள்ளி வருகின்றன.
மொத்தத்தில் இந்தியாவின் தேசிய நலனுக்கும் பிராந்திய நலனுக்கும் இடையில் முரண் நிலை தோன்றினால், என்ன விலை கொடுத்தும் தேசிய நலன் நாடிய நிலையே மேலோங்கும்.
இதிய அரசமைப்புச் சட்டத்தின் 247, 256, 356 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மத்திய அரசில் நான் மூத்த அமைச்சர்களில் ஒருவனாக இருந்த வேளை, தமிழகத்தில் பதவியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக மாநில அரசை ஜனாதிபதி கலைப்பதற்கு தூண்டு கோலாக இருந்தேன்.
இந்தியாவின் எந்தப் பகுதியிலும் இப்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒளிவுமறைவான பிரசன்னம் தானும் இல்லை. எனினும் எதிர்காலத்தில் தேவைப்படும் பட்சத்தில், முன்னர் குறிப்பிட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மூன்று சரத்துக்களையும் பிரகடனப் படுத்துவோம். அதன் பொருட்டு எதிர்காலத்தில் ஒளிவுமறைவற்ற விழிப்பும் மற்றும் கண்காணிப்பும் கூரியதாகத் தேவை - என்றார். (அ)

## யானைகளால் இடர் படும் விவசாயிகள்

துணுக்காய் விவசாயிகளும் யானைகளால் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
கடந்த வாரம் ஐயன்கன்குளம் வயல் நிலப்பகுதியில் இரவு வேளையில் புகுந்த யானைகள் சிறுபோக அறுவடைக்குத் தயார்நிலையிருந்த நெற்பயிரை அழித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.
ஏற்கனவே இவ்வாறு இரு தடவைகள் யானைகள் நெற்பயிரை அழித்த சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த யானைகளின் தொல்லைகள் தொடர்பாக துணுக்காய்ப் பிரதேச செயலக கூட்டங்களில் மக்கள் தொடர்ச்சியாக குரல்கள் எழுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## சிறுவன் மருத்துவமனையில் அனுமதி

சாவகச்சேரி, செப்.8
ஆனையிறவு உமையாள் புரத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கிக் காயமடைந்த சிறுவன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளான்.
பருத்தித்துறையிலிருந்து கொழும்புக்குச் சென்ற பஸ்ஸில் ஏறிச்சென்ற வேளையில் விபத்து இடம்பெற்று காயமடைந்த சிறுவன் உறவினர்களால் அழைத்து வரப்பட்டு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
வரணி இயற்றாலையைச் சேர்ந்த தங்கராசா மாதுஷன் (வயது-15) என்னும் சிறுவனே இவ்விதம் அனுமதிக்கப் பட்டுள்ள வராவார். (க-9)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாருக்கு

இது குறித்து உதவித் தேர்தல் ஆணையாளரிடம் வினவப் பட்டது.
'நாளை திங்கள்கிழமையும், நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமையும் வடக்குமாகாண அரச திணைக்களங்களில் தபால் மூல வாக்களிப்பு இடம் பெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. சகலதிணைக் களங்களிலும் அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்கள் கடமையிலிருப்பர். இதனைவிடத் தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் கடமையாற்றுவர்" என்று தெரிவித்தார் ஆணையாளர்.
"வாக்களிப்பில் இரகசியம் பேணப்படும். எக்காரணம் கொண்டும் நீங்கள் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. எனவே அரச ஊழியர்கள் அச்சமின்றிச் சுதந்திரமாக நீங்கள் விரும்பியகட்சிக்கு வாக்களிக்க முடியும்' என்று அச்சுதன் மேலும் கூறினார். (கு-5)

### பிரபாகரனால்

மாட்டேன்" என்று கண்டியில் நடந்த தேர்தல் கூட்டம் ஒன்றில் கூறியுள்ளார் ஜனாதிபதி.
வடக்கு-கிழக்கை இணைந்த தன்னாட்சி அதிகாரம் கொண்ட அலகாக உருவாக்குவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
"நாட்டைப் பிரிப்பதற்கு ஒரு போதும் நான் அனுமதிக்க மாட்டேன். பிரபாகரனால் செய்ய முடியாமல் போனதை இப்போதுள்ள தமிழ்த் தலைவர்களால் செய்துவிட முடியாது" என்றார் ஜனாதிபதி. (கு-5)

### பிரசாரக்

வடமாகாண தேர்தல்பிரசாரப் பணிகள் தற்போது தீவிரமடைந்து வருகின்றன. இந்த நிலையில் ஆளுங்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகப் பிரசாரம் மேற்கொள்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வந்துள்ளார்.
நேற்றுச் சனிக்கிழமை பல்வேறு நிகழ்வுகளில் பஸில் ராஜபக்ஷவுடன் இணைந்து வட மாகாண ஆளுநர் ஜி. ஏ சந்திரசிறியும் கலந்துகொண்டார் அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட வேட் பாளர் அங்கஜனின் அலு வலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலும் அவர் பங்குபற்றினார்.
வேட்பாளர்கள் கலந்துகொள்ளும் நிகழ்வில் அரச அதிகாரிகள் பங்கெடுக்கக் கூடாது என்று தேர்தல்கள் ஆணையாளர் பலதடவைகள் அறிவுறுத்தல்கள் விடுத்த போதும் அதனையும் மீறி நியமன உத்தியோகத்தரான ஆளுநர் அவ்வாறான நிகழ்வில் பங்கெடுத்துள்ளார் என்று குற்றம் சாட்டப் பட்டுள்ளது.
இவ்வாறான தேர்தல் விதி முறை மீறல்களை கட்டுப்படுத்தி நீதியான தேர்தல் நடைபெறுவதற்குத்தேர்தல் திணைக் களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு-5)

## மழையால் நெல் அறுவடை பாதிப்பு

சிறுபோக நெல் அறுவடை இடம்பெறும் இந்த வேளையில் மழை பெய்யத் தொடங்கியிருப்பதன் காரணமாக விவசாயிகள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.
கடந்த காலபோக நெற் செய்கையின்போது ஏற்பட்ட பருவம் தப்பிய மழை வெள்ளம் காரணமாக பெரும் இழப்புகளை எதிர்கொண்ட விவசாயிகள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள நிலையில் தற்போது சிறுபோக அறுவடையின் போது மழை குறுக்கிட்டுள்ளதன் காரணமாக இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போது நெல்லைக் காயவைக்க முடியாததால் ஈரமான நெல்லை விற்பதில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் போதிய நெற்களஞ்சியங்கள் இல்லாமையும் விவசாயிகளுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் காரணியாக அமைந்துள்ளது. (க-18)



NALIN CITY SHOWROOM
சுன்னாகத்தில் மாபெரும் அதிரடி விலைக்கழிவுகளில்.
HP, DELL BRANDED DESKTOP கணனிகள்
HP, DELL மடிக்கணனிகள்
ASSEMBLED கணனிகள்
PRINTERS & SCANNERS
WOOFERS & SOUND SYSTEMS
HP ORIGINAL TONERS & CARTRIDGES
ALL KIND OF COMPUTERS, LAPTOPS, PRINTERS, UPS, MONITORS & COMPUTER ACCESSORIES REPAIR.
சகல விதமான கணனிகள், மடிக்கணனிகளிற்குமான உதிரிப்பாகங்களை எம்மிடம் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
116G K.K.S ROAD, CHUNNAKAM. T.P NO- 0212242222 0777140431


## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா சுப்பையா (சின்னையா)



ஸ்ரீ வாகீஸ்வர வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்மா சுப்பையா நேற்று (07.09.2013) சனிக்கிழமை காலமானார்.
அன்னார் சுப்பர் சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகளும் திருதிருமதி வெள்ளையர் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமானந்தம், தயானந்தன் மற்றும் நித்தியானந்தன், விவேகானந்தன், விமலாதேவி, வசந்தமாலா, வசந்தாதேவி, ஆகியோரின் தாயும் செல்வம், சரஸ்வதி, ஆனந்தராஜா, சாந்தி, சந்திரவதனி, ராஜி, காலஞ்சென்ற காசிநாதன் ஆகியோரின் மாமியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீவாகீஸ்வர வீதி,
கோண்டாவில். (சி/1130-23-14-16)
தகவல்: குடும்பத்தினர்.


### கடை வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் சிறிதர்தியேட்டருக்கு முன்னால் கடை வாடகைக்கு விடப்படும்..
தொடர்பு:-
0750478349, 021 2222157

### வீடு குத்தகைக்கு /விற்பனைக்கு

வண்ணார்பண்ணை வடமேற்கு, மானிப்பாய் வீதியில் (நாலுகால் மடம்) 2பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு குத்தகைக்கு (LEASING) அல்லது விற்பனைக்கு உண்டு.
(31618.16.14.17)
தொடர்பு:- 0112559093,0776533554

### ஆள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் food city ஒன்றுக்கு cash counter clerk தேவை.
தொடர்பு:- 077 3041447

### விநியோகஸ்தர் தேவை

யாழ். குடாநாட்டில் புத்தகங்களை விநியோகிக்கக் கூடியவர்கள் தேவை (இருபாலரும்) சுயவிவரத்துடன் நேரில் வரவும்.
[illegible] யாழ்.
071 8474325


## கண்ணீர் அஞ்சலி



கடந்த (05.09.2013) அன்று
சிவபதமடைந்த
சுப்பிரமணியம்சண்முகநாதன்
அவர்களின் பிரிவால் துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வது டன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயர் பகிர்வோர்
பூமணி சின்னம்மா குடும்பத்தினர்.
(PIRABAA PHARMACY)
(31025.17.16.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானம்ஸ், கலைமகள் அடுத்த சுற்றுக்கு தகுதி

யாழ்ப்பாணம், செப்.8

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இடம்பெற்ற ஆட்டங்களில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம், கலைமகள் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்றன.

வல்வை விளையாட்டுக் கழக அணிக்கும் ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் வல்வை விளையாடுக் கழக அணி துடுப்பெடுத்தாடியது. 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 50 ஓட்டகளைப் பெற்றுக் கொண்டது வல்வை அணி.

அதில் மணிமாறன் 15 ஓட்டங்களை அதிபட்சமாகப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பாக செந்தூரன் 2 பந்துப் பரிமாற்றங்கள், பந்துவீசி 12 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜொனி 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

51 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அதில் சஜந்தன் 21 ஓட்டங்களையும், ஜொனி 18 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் வல்வை விளையாட்டுக் கழக அணி சார்பாக அபி 2 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கை வீழ்த்தினார்.

கலைமகள் விளையாட்டுக் கழக அணிக்கும் லங்கஸ்ரார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழகம் 81 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கலைமகள் விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது.

அதில் றொசான் 33 ஓட்டங்களையும், அருண் 54 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் லங்கஸ்ரார் விளையாட்டுக் கழக அணி சார்பில் பிரியா 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 40 ஓட்டங்களைக் கொடுத்து இரு இலக்குகளைக் கைப்பற்றினார்.

131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய லங்கஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 8 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பந்துவீச்சில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி சார்பாக 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ரஜீவன் 2 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ற-23)

### ஆனைக்கோட்டை யூனியன் உதைபந்துத் தொடர்

## மாபெரும் இறுதியாட்டம் இன்று நீக்கிலஸ், பாடும்மீன் களத்தில்



யாழ்ப்பாணம், செப்.8

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சூசைப்பிள்ளை ராஜ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும், நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில், நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராக ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் வீரர் ரவியும், சிறப்பு விருந்தினராக ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி பங்குத் தந்தை சோதிநாதனும், கௌரவ விருந்தினராக யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் தர்மராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-23)

## போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம், செப். 8

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணி 9:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

+++++

யாழ்ப்பாணம், செப். 8

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் கடந்த வியாழக்கிழமை கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணிக்கும் விண்மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், செப். 8

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் நியூஸ்ரார் பிறிமியர் லீக் '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

காலை 8 மணி

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகம்.

காலை 11 மணி

சென்றலைட்ஸ் 'பி' அணி எதிர் கிறாஸ் கோப்பர்ஸ் விளையாட்டுக் கழகம்

பி.ப. 2 மணி

ஒல்கோல்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் விக்டோரிஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

++++

யாழ்ப்பாணம், செப். 8

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது (ற-23)


A/L நிறைப் பின்னர் HND கல்வியினை
அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்
edexcel Assured

அனைத்து மாணவர்களுக்கும் EDEXCEL - UK பதிவுகளுக்கான கட்டணம் ரூபா 40,000 இலவசம்
பாடநெறிகள் தொடர்பாகமேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
077 309 9 308
BTEC HND
ஒரே தடவையில் இரு தகைமைகளை பெற்றுக்கொள்வதோடு பட்டப்படிப்பின் இறுதி ஆண்டினை இலவசமாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு
edexcel HND
Equivalent to the 1st Two Years of a UK Degree
in Computing & Systems Development
- Software Development
- Computer Networking
02 தகைமைகள்
Your Career Pathway
HND 18 Months | Top-up Degree 1 Year | Masters 1 Year
நன்மைகள்
- பகுதி நேர அல்லது முழு நேரக்கல்வி
- மறைமுக செலவீனங்கள் இல்லை
- வேலைவாய்ப்புகளுக்கு பரந்த வாய்புக்கள்
- Diploma in English கற்கை நெறியை இலவசமாக கற்றுக்கொள்ளும் வாய்ப்பு
முழுமையான HND கல்வியை கற்பதற்கு
ESOFT Shaping Lives, Creating Futures.
METRO CAMPUS
Sri Lanka's Largest Higher Education Network
புதிய பிரிவுகள்
2013.09.14 காலை
2013.09.23 9 மணி
(அ/11936-23-14-16)
NO.137, K.K.S ROAD, JAFFNA | 021 222 4142
www.esoft.lk HOTLINE: 077 309 9 308

After A/Level
IT துறைக்கான உயர்கல்வி வெற்றிக்கான ஆரம்ப அடித்தளம்
Join IT & English (Dual Diploma)

DiTEC INTERNATIONAL Diploma in Information Technology
DiE Diploma in English
சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு IT டிப்ளோமா
சலுகைகள்
FREE Pendrive
கற்கைநெறியின் சிறப்பம்சங்கள்
- 10 பாட டிப்ளோமாக்கள் உள்ளடங்கியது
- பாடப்புத்தகங்கள் இலவசம்
- அனுபவமிக்க விரிவுரையாளர்கள்
- 2012 வருடம் 20,000 மாணவர்கள் பெற்றுக்கொண்ட தகைமை
- ESOFT இன் 10 பாட டிப்ளோமாக்கள் சான்றிதழுடன் Edexcel UK, BCS-UK போன்ற பிரித்தானிய சான்றிதழ்களையும் பெறமுடியும்.
புதிய பிரிவுகள்
2013.09.09
2013.09.11 காலை 9:00 மணி
3 சர்வதேச தரம்வாய்ந்த மேலும் டிப்ளோமாக்கள் முற்றிலும் இலவசம்
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142 | 077 309 9 308
KILINOCHCHI BRANCH 101, Kanagapuram Rd, Kili | 021 228 5444
NELLIADY BRANCH 151, Jaffna Rd, Nelliady | 021 222 4940
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS Sri Lanka's Largest IT Education Network
www.esoft.lk 50 நாடளாவிய கிளைகள் 2012ல் மட்டும் 20,000 மாணவர்கள்
(அ/11936-23-14-16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க பகிங்ரங்க ரென்னிஸ் இறுதியாட்டம்

# செரீனா - அசரன்கா பலப்பரீட்சை

அமெரிக்கப் பகிரங்க ரென்னிஸ் தொடரின் மகளிர் பிரிவு ஒற்றையர்ஆட்டத்தில்அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் மற்றும் பெலாரஸின் அசரன்கா ஆகியோர் மோதவுள்ளனர்.



### செரீனா

அரையிறுதிஆட்டத்தில்அமெரிக்க முன்னணி ரென்னிஸ் வீராங்கனையும் உலக தரவரிசையில் முதலிடத்தில் உள்ளவருமான செரீனா வில்லியம்ஸ், தரவரிசைப் பட்டியலில் 5ஆம் இடத்தில் உள்ள சீனாவின் லி நாவை எதிர்கொண்டார்.

மிகவும் எதிர்பாக்கப்பட்ட அந்த ஆட்டத்தில்முதற்செற்றைசெரீனா எளிதாக வெற்றிகொண்டார். அவர் 6:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் லி நாவை முதல் செற்றில் வீழ்த்தினார்.

இரண்டாவது செற்றில் சிறிது போராடிப் பார்த்தார் லி நா. ஆனால் அது செரீனாவிடம் பயனளிக்கவில்லை. இரண்டாவது செற்றையும் 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார் செரீனா வில்லியம்ஸ்.

### அசரன்கா

மற்றைய அரையிறுதி ஆட்டத்தில் தரவரிசைப் பட்டியலில் 2 ஆம் நிலையில் உள்ள பெலாரசின் அசரன்கா, இத்தாலியின் பிளவியா பெனிட்டாவை எதிர்கொண்டார்.

இரு செற்களையும் இலகுவாக தன்வசப்படுத்தினார் அசரன்கா. முதலாவது செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்ற அசரன்கா, இரண்டாவது செற்றையும் 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றார்.

### இறுதியாட்டம்

உலகின் முதல்தர வீராங்கனைகள் இருவர் மோதும் இறுதியாட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டு அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்திலும் இவர்கள் இருவருமே மோதியிருந்தனர். அதில் செரீனா வில்லியம்ஸ் கிண்ணம் வென்றிருந்தார். (ற)

# ஆட்டங்களை குறைப்பது கிரிக்கெட்டுக்கே பாதிப்பு

இரு நாடுகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டங்களைக் குறைப்பது கிரிக்கெட்டுக்கு நன்மையளிக்காது என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஹரிகேர்ஸ்ரன்.

இந்திய கிரிக்கெட் சபை மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடரையும், ஜனவரி மாதம் நியூஸிலாந்துடனான தொடரையும் ஏற்பாடு செய்திருப்பதை அடுத்து தென்னாபிரிக்காவுடன் நடைபெறவிருக்கும் தொடர் கேள்விக்குறியாகியுள்ளது. அந்தத் தொடர் முற்றிலும் கைவிடப்படா விட்டாலும், ஆட்டங்கள் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே ஹரிகேர்ஸ்ரன் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறும்போது,

"டெஸ்ட் தொடரில் நல்ல நிலையில் விளையாடிக் கொண்டிருக்கும் இரு நாடுகளுக்கு இடையிலான ஆட்டங்களைக் குறைப்பது நன்மை அளிக்காது. குறைந்தது மூன்று ஆட்டங்களாவது தொடரில் நடத்தப்பட வேண்டும். தென்னாப்பிரிக்காவுடனான ஆட்டம் ரசிகர்களின் ஆவலை நிறைவேற்றும். ஆட்டங்களைக் குறைத்து ஆட்டங்களின் மதிப்பைக் குறைப்பதால் அந்தத் தொடர் பயனில்லாது போய்விடும். இந்தியக் கிரிக்கெட் சபையின் நிலைப்பாடுகள் பற்றி எனக்குத் தெரியாது. நான் கிரிக்கெட்டை விரும்பும் ஒருவன் மட்டுமே" என்று தெரிவித்துள்ளார். (ற)



தென்னாபிரிக்க முன்னாள் கிரிக்கெட் வீரரான ஹரிகேர்ஸ்ரன் இந்திய அணியின் பயிற்சியாளராகப் பணியாற்றிய போது உலகத்தரத்தில் இந்தியா முதல்நிலை பெற்றது. 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தையும் கைப்பற்றியது. அதன்பின்னர், சிறிது காலம் அவர் தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராகவும் பணியாற்றினார். தற்போது டெல்லி டேர் டெவில்ஸ் அணியின் பயிற்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அந்த அணி ஹரிகேர்ஸ்ரன் வழிகாட்டுதலில் மீண்டுவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# கவுண்டி ஆட்டங்களில் சாவ்லா அசத்தல்




டெர்பிஷயர் அணிக்கு எதிரான கவுன்டி ஆட்டத்தில் இந்திய அணி வீரர் பியுஸ் சாவ்லா 10 இலக்கைக் கைப்பற்றிய போதும் சமர்செட் அணி தோல்வி அடைந்தது.

இங்கிலாந்தில் உள்ளூர் அணிகள் பங்கேற்கும் கவுன்டி சம்பியன்ஷிப் டிவிசன்-1 ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அண்மையில் நடந்த மிடில்சக்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் பியுஸ் சாவ்லா சதம் அடிக்க சமர்செட் அணி வெற்றி பெற்றது.

டான்டன் நகரில் கடந்தவாரம் இடம்பெற்ற ஆட்டத்தில் சமர்செட், டெர்பிஷயர் அணிகள் மோதின. முதல் இன்னிங்சில் சமர்செட் அணி 103 ஓட்டங்களையும், டெர்பிஷயர் 298 ஓட்டங்களையும் எடுத்தன. சுழலில் அசத்திய பியுஸ் சாவ்லா 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

இரண்டாவது இன்னிங்சில் சமர்செட் அணி 438 ஓட்டங்கள் எடுத்தது. 244 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக் கோடு டெர்பிஷயர் அணி இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித் தது.

சந்தர்போல் (74 ஓட்டங்கள்), ஸ்லாட்டர் (59 ஓட்டங்கள்) கைகொடுக்க, டெர்பிஷயர் அணி 8 இலக்குகளை இழந்து 244 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மீண்டும் துல்லியமாக பந்துவீசிய பியுஸ் சாவ்லா 5 இலக்குகளை வீழ்த்தினார்.

அபாரமாக பந்துவீசிய சாவ்லா, இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 10 இலக்குகளைக் கைப்பற்றிய போதும், சமர்செட் அணி தோல்வி அடைந்தது. கவுன்டி ஆட்டங்களில் சமர்சட் அணிக்காக மூன்று முதல் தர ஆட்டங்களில் விளையாடிய சாவ்லா, இதுவரை 13 இலக்குகளை வீழ்த்தியுள்ளார். (ற)

# ஓய்வு பெறமாட்டார் சச்சின்

## ரவி சாஸ்திரி கருத்து

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெற மாட்டார் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ரவி சாஸ்திரி.

உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான சச்சின் டெண்டுல்கர், தனது 200ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் பின்னர் ஓய்வை அறிவிப்பார் என்று அனைவராலும் எதிர்பார்க்கப்படுகிறது.



இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவி சாஸ்திர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் இதுகுறித்துக் கூறுகையில்,

"சச்சின் 2014 ஆம் ஆண்டு வரை டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடுவார் என்று நான் எதிர்பார்க்கின்றேன். அடுத்த ஆண்டு லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தின் பின்னரே அவர் ஓய்வைப் பற்றிச் சிந்திக்கக் கூடும். நான் நினைக்கின்றேன் சச்சின் ஓய்வு பெறுவதற்கான சிறப்பான தருணம் இதுவல்ல" என்று தெரிவித்துள்ளார்.

தனது ஓய்வு குறித்துக் கருத்துத் தெரிவித்த சச்சின் டெண்டுல்கரும், ஓய்வு குறித்த அவசரப்படவில்லை என்று கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஆசிய சவால் கிண்ண தொடரில் இலங்கை மகளிர் அணி வெற்றி

முதலாவது ஆசிய சவால் கிண்ண ஹொக்கி தொடரில் தாய்லாந்து அணிக்கெதிரான முதல் சுற்று ஆட்டத்தில் இலங்கை மகளிர் அணி வெற்றிபெற்றுள்ளது.

தாய்லாந்தின் பாங்ஹோக் நகரில் நடைபெறும் இந்த தொடரின் முதல் சுற்றில் இலங்கை அணி நேற்று தனது மூன்றாவது ஆட்டத்தில் பங்கேற்றியிருந்தது. அந்த ஆட்டத்தில் 3:2 என்ற கோல்கள் கணக்கில் இலங்கை அணி வெற்றியீட்டியது.

இதற்கு முன்னர் பாகிஸ்தான் மற்றும் மியன்மார் அணிகளுடன் இடம்பெற்ற ஆட்டங்களில் இலங்கை அணி தோல்வியடைந்திருந்தது.

அதேவேளை சிங்கப்பூர் மற்றும் கம்போடிய அணிகளுடன், இலங்கை அணி விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# மழையால் கைவிடப்பட்டது ஆட்டம்




இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டுள்ளது.

இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலிய அணிகள் 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கின்றன. தொடரின் முதலாவது ஆட்டம் நேற்று முன்தினம் லீட்ஸில் நடைபெறவிருந்தது. ஆனால் கடும் மழை காரணமாக ஓர் பந்து கூட வீசாத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது.

அதையடுத்து இரு அணிகளும் தற்போது 0:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் சமனிலையில் உள்ளன. இரண்டாவது ஆட்டம் மொான்செஸ்டர் நகரில் எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

முன்னதாக நடைபெற்ற இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணி இழந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# உப தலைவர் பதவியில் இருந்து மதிவாணன் விலகல்



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உப தலைவர் கே.மதிவாணன் அந்தப் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளதோடு, அதற்கான கடிதத்தையும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடம் கையளித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்துக் கருத்துத் தெரிவித்த மதிவாணன் "கோல்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிட வேண்டாம் என்று உயர் மட்டத்திலிருந்து விடுவிக்கப்பட்ட அழுத்தங்களே இந்த முடிவுக்கான காரணம். அண்மைக்காலமாக தமது சேவையை பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை கிரிகெட் நிறுவனம் கரிசனையுடன் செயற்படவில்லை" என்று தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை அடிமையாக வைப்பதே அரசின் நோக்கம்

## விக்கிரமபாகு குற்றச்சாட்டு

"இலங்கைத் தமிழர்கள் எப்போதும் கைக்கட்டி, வாய்ப்பொத்தியே வாழ வேண்டும். அவர்களுக்கான உரிமைகளையோ, சலுகைகளையோ ஒரு போதும் அரசு வழங்கவே மாட்டா. அவர்கள் அடிமையாக இருக்க வேண்டும். இதுவே அரசின் நோக்கம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அரசும் சில இனவாத அமைப்புகளும் விமர்சிப்பதன் மூலம் நிரூபணமாகிறது."

இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண நேற்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இந்த அரசு யுத்த காலத்தின்போது இந்தியா, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் போன்ற நாடுகளின் உதவியைப் பெற்று தமிழர்களைக் கொன்று குவித்ததோடு அங்குள்ள மத வழிப்பாட்டு ஸ்தலங்கள், தமிழர்களது பூர்வீக உடைமைகள் என்பவற்றையெல்லாம் அழித்தொழித்தது. தற்போது தமிழர் வாழுகின்ற பகுதிகளில் இராணுவத்தினரை குடியமர்த்தி அவர்களுக்கு மேலும் துன்பத்திற்கு மேல் துன்பத்தை இந்த அரசு கொடுத்துக் கொண்டுதான் உள்ளது. இது போன்ற கொடுஞ் செயல்களைத் தமிழர்கள் கண்டும் காணாதவாறு, இவற்றைப் பற்றி எதுவும் விமர்சிக்கக் கூடாது என்பதைத்தான் அரசும், இனவாத அமைப்புகளும் தமிழர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றன. தமிழர்கள் என்றும் கைக்கட்டி, வாய்பொத்தி இருக்க வேண்டும் என்பது தான் அரசின் நோக்கமாகும். இது முற்றிலும் இனவாத செயலாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை இவர்கள் எதிர்ப்பதன் பிரதான காரணமும் இதுதான்.

ஒரு காலத்தில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இனவாதத்தை முற்றிலும் எதிர்த்தார். ஆனால், இன்று அந்த பழைய வாசுவையும் காணமுடியாதுள்ளது. இது போன்ற துவேசங்கள் நாட்டிலிருந்து முற்றாக ஒழிக்கப்படும் வரை தமிழர்கள் நிம்மதியுடன் வாழவே மாட்டார்கள்" என்றார்.

**LAP TOP மலிவு விற்பனை**
DELL 18750/= மட்டுமே
*FREE-HEAD PHONE/4GB PEN*
ஒரு வருட உத்தரவாதம் (C/11789) (7.6.3)
ST.ANTONY'S
187, K.K.S. ROAD, JAFFNA TOWN
021 222 4865, 075 069 8608

**காணி விற்பனைக்கு**
7½ பரப்பு காணி பண்ணை வீதியில், தனியார் பேருந்து நிலையத்துக்கு முன்பாக விற்பனைக்கு உண்டு.
0775261407 annsale07@gmail.com

**அல்சேசன் நாய் விற்பனைக்குண்டு**
நல்ல தேக ஆரோக்கியமுள்ள அல்சேசன் ஆண் நாய் வயது-2 உள்ளது. விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 510 7173 (29613) (7.6.3)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு அல்லது நிறுவனங்களுக்கு வாடகைக்கு**
தொடர்பு: 077 077 6565, 077 746 6589 (39388) (7.6.3)

**A/L வரலாறு - 2015/2014**
மாவட்ட, தேசிய மட்டங்களில் உயர் பெறுபேறுகளைப் பெற்றிட வழி காட்டும் உங்கள் ஆசான்
M.பத்மன்
B.A(Hons) History M.A (History)
அளவான பாடக் குறிப்பு, சிறந்த விளக்கத்துடன் கற்பிக்கப்படுகின்றன.
* புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
* தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
* கற்பிக்கும் இடங்கள்
➢ D.M.I யாழ்ப்பாணம்
➢ புகழ் மானிப்பாய்
➢ உயர் கலைக் கல்லூரி குளப்பிட்டி
(39391) (7.6.3)

**விரைவான வேலை நிறைவான இலாபம்**
1 வருட உத்தரவாதம்
ஜூஸ் பக்கெட் மெசின்
1 மணித்தியாலத்தில் 2000 பக்கட்டுகளை தயாரிக்கலாம்

இலவச செயல்முறைகளுடன் கூடிய பயிற்சி வழங்கப்படும்
விற்பனைக்கு பின் சேவை உண்டு
இலவச விநியோகம்
ரூ.2 /= ரூ.5 /= ரூ.10 /= பக்கட்டுகளை தயாரிக்கலாம்
விலை ரூ.285,000 க்கு மேல்
Winstaar
தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18, Ground Floor, Lucky Plaza, St.Anthony's Mawatha, Kollupitya, Colombo - 03
max adz

**FRENCH LANGUAGE CENTRE**
FALC CENTRE FOR FRENCH
**FRENCH CLASSES**
France, Canada, Swiss, Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Certificates இனை பெறலாம்.
ஐரோப்பிய French (DELF) கடந்த Examஇல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி..
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007) இது வரைக்கும் 726 க்கும் மேற்பட்டோர் எம்மிடம் French கற்றுச் சென்றுள்ளனர்.
உடன் பதியுங்கள்....
No. 23, Palaly Road, ஆரியகுளம், Jaffna. | No. 181, Main Street, Nelliady, Jaffna. | 0779 789 456 | புதிய பிரிவுகள் விரைவில்...

**உங்கள் பாதணி நிலையங்களை இன்றே கணனிமயப்படுத்துங்கள்.**
எமது AOS கணனி மென்பொருளானது (software) உங்களது நிறுவனத்தின் விற்பனையை இலகுவாக்குவதுடன் உரிமையாளர் இல்லாத சமயத்திலும் சரியானமுறையில் கணக்கை கண்காணிக்கவும், அதுமட்டுமல்லாது ஒவ்வொருநாளும் உங்கள் காசேட்டையும் மாதமுடிவில் இலாபநட்டக் கணக்கு, ஐந்தொகை போன்றவற்றை செய்துகொள்ள உதவுகிறது.
September special offer 3000 X12 LKR
இன்றே உங்கள் நிறுவனத்தை இலாபகரமான அடுத்தகட்டத்தை நோக்கி நகர்த்திச்செல்ல எங்களை நாடுங்கள்.
கணனி அறிவு பற்றிய பயம் தேவையில்லை
AgoySoft இல 5, அம்மன் கோவில் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்
011 328 8569, 021 205 2393

**JOIN A COMPANY WITH STRONG FOUNDATIONS**
AgoySoft (Pvt) Ltd is founded in 2012, developing software, online concept and mobile applications for local and foreign clients.
The following vacancies are exists at our Jaffna branch located in Kokuvil.
- Expert PHP Programmers
- System Analysis & Design/Database Design
- Management Trainee
Also Intern developers are warmly welcome.
Please forward detailed curriculum vitae with a recently taken photograph, and names and contact numbers of two non related referees on or before 15th of September 2013 to careers@agoysoft.com
AgoySoft
AgoySoft (Pvt) Ltd, 05, Amman temple road, Kokuvil east, Jaffna.
011 328 8569 021 205 2393

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE - JAFFNA
PHYSICAL CHEMISTRY
ஆரம்பம்:- 08.09.2013 ஞாயிறு முதல்
BY அன்பு | சனி, ஞாயிறு 11.45 - 1.15
A/L DAY CLASS ஆரம்பம் 11.09.2013 Wed 10. 00am

**வீடு காணி விற்பனைக்கு**
அதிகார் செல்லமுத்து வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள "ராஜ் மகால்" எனும் பெயர் கொண்ட பழைய கல்வீடு அமைந்த 07 பரப்பு 33 குளி எனும் ஆதனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு: (31251)(6.3)
077 415 0799

**ஆங்கிலப் பரீட்சை IELTS தேவையில்லை பகுதிநேரமாக இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்**
ஐரோப்பிய நாடான சைப்பிரஸில் படிக்க, உழைக்க O/Lமட்டும் இருந்தால் 21 வயது ஏனையோருக்கு A/Lசித்தி முக்கியம்.
*(எல்லா நாள்களும் காலை 8.30 - மாலை 6.30 வரை)*
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.'
021 221 9016 - 021 568 9090 (31518-23-14-16)

**மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**
அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம்.
படமாளிகை (தியேட்டர்) கிளினர் - 04
வீட்டுப்பணிப் பெண் - 01 பாமசி பைக்கிங் வேலை - 02
Secretary Grad (நிறுவனம்) - 02
இரண்டே வாரத்தில் பயணம்
(35248) (16,16,14) தொடர்புகளுக்கு: LANKA VOICE, 075 065 0084

**Personal Class-கணினி** TP:0779672038
*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
*Ms office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான கற்கைநெறி.
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
ஆசிரியர்:KRC

**சவுதி ராஜ்ஜியத்தில் சிட்டி கிளினராக பணிபுரிய அரியதோர் சந்தர்ப்பம்**
சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து அனைத்தும் முற்றிலும் இலவசம். ஒரு மாதத்துக்குள் பயணம்
தொடர்பு
LANKA VOICE (32501-23-14-16) 0777929475

**Study in UK**
உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்
நடைமுறைகள் மாறினாலும் எவ்வித மாற்றமும் இன்றி London செல்லுங்கள்
GCE (O/L) தகமை போதுமானது
நீங்கள் ஏன் EXPONET ஐ தெரிவுசெய்ய வேண்டும்
October/ December திகதி அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன
COLLEGES
- Yearly Payment £3500
- IELTS overall: 4.5 or B1
UNIVERSITIES
- Yearly Payment £ 3950 - £ 6450
- IELTS overall band: Minimum 5.5
011 7 555511 /14/18
021 7538395 / 021 2227230
KARTHIGA KANAKARASA
THILLAINATHAN SUTHAKAN
EXPONET 379 - 1/2 Galle Road, Colombo 06. 197, Arasady Road, Jaffna.
E-mail: nimal@expogroup.lk Web: www.expogroup.lk

**வீடு விற்பனை**
இராஜ வீதி, ஆவரங்கால் மேற்கில் இரண்டு பரப்புக் காணியில் சகல வசதியும் கொண்ட புதிதாக அமைக்கப்பட்ட வீடுவளவு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு 0776231509 (31555-23-14-16)

**இணையத்தள வடிவமைப்பு கற்கைநெறி**
Professional Web Designing
Professional Web Development
php
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Call: 021 222 0261 | 077 9471 771
இல 214, யாழ்-மானிப்பாய் வீதி வைத்தீஸ்வரா கல்லூரி அருகில்
webster networks

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
**Diploma in English** 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 09.09.2013
Batch2 : 14.09.2013
Batch3 : 16.09.2013
Batch4 : 21.09.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம் 08.09.2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா.துரைத்தினம் (சுவிஸ்)

# ஐ.நா. முன் மீண்டும் உரிமைக் குரல்கள்

ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 24 ஆவது கூட்டத்தொடர் நாளை 9ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக இருக்கும் நிலையில் ஜெனிவாவின் ஐ.நா. முன்றலில் ஆரவாரம் ஆரம்பமாகிவிட்டது.

உலக நாடுகளின் தலைவர்கள், சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வதேச ஊடகங்கள் மனித உரிமைகள் சபையில் கூடும்வேளையில், ஜெனிவாவின் ஐ.நா. முன்றலில் கண்ணிவெடியின் பாதிப்பை உலகிற்கு எடுத்தியம்பும் மூன்றுகால் கதிரைக்கு அருகே உலக நாடுகளில் பாதிக்கப்பட்ட இனங்கள், விடுதலைக்காகப் போராடும் அமைப்புக்கள் எனப் பல்வேறு அமைப்புக்களும் ஜனநாயக போராட்டங்களையும் புகைப்பட கண்காட்சிகளையும் பட்டினிப் போராட்டங்களையும் நடத்துவது வழமையாகும்.

வழமையான இந்த ஜனநாயகப் போராட்டத்திற்கு புறம்பாக ஐ.நா. முன்றலில் கடந்த வியாழன் அதிகாலை துன்பகரமான சம்பவம் ஒன்றும் நிகழ்ந்திருக்கிறது.

அதிகாலை 1.10 மணியளவில் ஈழத் தமிழர் ஒருவர் தீக்குளித்து இறந்த செய்தி புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் சோக அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்த இடத்தில் கடந்த சில தினங்களாக அரபு தேசத்து இளைஞர்கள் தொடர் பட்டினிப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இரவு பகலாக ஜெனிவா முன்றலின் ஒரு பக்கத்தில் இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட அரபு தேச இளைஞர் தான் நேரில் கண்டவற்றை பின்வருமாறு விளக்கினார்.

*மாநிறமான இளைஞன் ஒருவன் இரவு பன்னிரெண்டு மணியிலிருந்து சுற்றிக் கொண்டிருந்தார். சரியாக அதிகாலை 1.10 மணியளவில் ஒரு பிளாஸ்ரிக் சிறிய கொள்கலனிலிருந்து அடர்த்தியான ஜெலி போன்ற திரவத்தை எடுத்து தன் மீது பூசிக் கொண்டு கண் இமைக்கும் நேரத்தில் கொளுத்திக் கொண்டான்!*

*கொழுந்துவிட்டு சுவாலையாக எரியும் போது எந்த சலனமும் இன்றி சில கோஷங்களை மட்டும் சொல்லிவிட்டு ஒரே இடத்தில் அப்படியே ஆடாமல் அசையாமல் நின்று எரிந்து முடிந்து கீழே விழுந்தான்.*

*ஐ.நாவை சுற்றி பாதுகாப்புப் பணியில் இருக்கும் கொமாண்டோக்கள் அவனை நெருங்கும்போது கீழே சாய்ந்து விட்டான். பின்னர் பொலிஸார் எங்களை விலக்கிவிட்டு அவன் தன்னுடன் கொண்டு வந்திருந்த பையையும், காகிதங்களையும் எடுத்துக் கொண்டு எரிந்த அந்த நபரை அம்புலன்ஸில் ஏற்றிச்சென்றுவிட்டார்கள்.*

*எரிந்த இந்த இளைஞனின் அருகே இராணுவத் தளபதி உடையில் இருக்கும் தமிழர் களின் தலைவர் ஒருவரின் படம் இருந்ததை மட்டுமே எங்களால் உறுதிப்படுத்த முடிந்தது*

**முள்ளிவாய்க்காலில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் போரை நிறுத்தி அங்கிருக்கும் மக்களை காப்பாற்றுமாறு கோரி முருகதாஸ் தீக்குளித்து உயிரை மாய்த்தார். இப்போது இரண்டாவது உயிரிழப்பும் ஐ.நா. முன்றலில் நிகழ்ந்திருக்கிறது,**

- என்று மயிர்க்கூச்செறியும் அந்த சம்ப வத்தை விளக்கினார்.

தீக்குளித்தவரின் அருகில் விடுதலைப் புலிகளின் தலைவரின் படம் ஒன்று இருந்ததை வைத்து ஜெனிவா பொலிஸார் அவர் ஈழத் தமிழராக இருக்கலாம் என நம்பினர். ஆனால், பொலிஸாருக்கு மற்றொரு குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் தீக்குளித்தவர் வைத்திருந்த கோவையில் திபெத்தில் தீக்குளித்து இறந்தவர்களின் படங்கள் செய்திகளும் இருந்ததால் அவர் திபெத்தியராக இருக்கலாம் என்றும் சந்தேகித்தனர்.

ஆனால், அவர் ஈழத் தமிழர்தான் என வெள்ளிக்கிழமை காலையில் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது.

சுவிட்சர்லாந்தின் வலைஸ் மாநில தலைநகரான சியோன் பகுதியில் வசித்து வந்த 34 வயதுடைய இரத்தினசிங்கம் செந்தில்குமரன் என அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இவர் புங்குடுதீவைச் சேர்ந்தவர் என்றும், மூன்று பிள்ளைகளின் தந்தை என்றும் சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தீக்குளித்த இவரை பொலிஸார் மீட்டு லவுசான் மாநிலத்திலுள்ள சூவ் போதனா வைத்தியசாலையில் தீவிரசிகிச்சை பிரிவில் சேர்த்த நிலையில் வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் உயிரிழந்தார்.

எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 24ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாக உள்ள நிலையில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் லண்டனில் கல்வி கற்றுக் கொண்டிருந்த முருகதாஸ் என்ற தமிழ் இளைஞர் ஐ.நா. முன்றலில் தீக்குளித்து இறந்தார்.

முள்ளிவாய்க்காலில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் போரை நிறுத்தி அங்கிருக்கும் மக்களை காப்பாற்றுமாறு கோரி முருகதாஸ் தீக்குளித்து உயிரை மாய்த்தார். இப்போது இரண்டாவது உயிரிழப்பும் ஐ.நா. முன்றலில் நிகழ்ந்திருக்கிறது.

இப்போது தீக்குளித்து உயிரிழந்தவர் என்ன கோரிக்கைகளை முன்வைத்தார் என்று தெரியாவிட்டாலும் இவ்வாறான சம்பவங்களை சுவிட்சர்லாந்து அரசோ அல்லது இங்குள்ள மனித உரிமைகள் அமைப்புக்களோ, ஊடகங்களோ ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே உணரமுடிகிறது.

தங்கள் இனத்தின் துன்பத்தை வெளிப்படுத்தவதற்காக அவர் தன்னைக் தானே மாய்த்துக் கொண்டிருக்கிறார் என ஒரு சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தாலும் இந்தச் சம்பவம் தங்களுடைய நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதிக்கும் செயல் என பொலிஸார் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை 'கொலைகார அமைப்பு' என நவநீதம்பிள்ளை தெரிவித்திருந்த கருத்து, புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடிய அமைப்பு என்றும் அதனை நவநீதம்பிள்ளை பயங்கரவாத அமைப்பு எனக் கூறி விட்டார் என ஒரு சாரார் கோபத்தை




ஈழத் தமிழர்கள் மத்தியில் தீக்குளிப்பு போராட்டம் என்பது இல்லாத ஒன்றாகும். தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியான அஹிம்சை போராட்டங்களை கடந்த 60 வருடகாலமாக நடத்தி வந்திருக்கிறார்கள். உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி உயிர்த் தியாகங்களைக் கூட செய்திருக்கிறார்கள்.



ஆனால், ஒருவர் கூட தீக்குளித்து இறந்ததில்லை. ஆனால், தமிழ்நாட்டில் தீக்குளிப்புக்கள் சாதாரணமானவை. திபெத்திலும் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருகிறது.

தமிழ் நாட்டிலும் திபெத்திலும் இடம் பெற்றுவரும் தீக்குளிப்பு மனோநிலை ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்து மேற்குலக நாடுகளில் வாழும் தமிழர்களிடம் பரவி வருகிறதோ என்ற அச்சம் இப்போது எழுந்திருக்கிறது. இது ஈழத் தமிழர்களின் போராட்ட வழிமுறையும் அல்ல.

யும் வெளிப்படுத்தி வந்தனர்.

இதன் விளைவாக நவநீதம்பிள்ளையின் கூற்றுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் அவர் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்றும் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகின்ற போதிலும், என்ன காரணத்திற்காக தீக்குளித்தார் என்பதை விசாரணை நடத்திவரும் பொலிஸார் வெளியிடவில்லை.

தீக்குளித்தவர் என்ன கோரிக்கையை முன்வைத்திருந்தார் என்பது பொலிஸார் அவரிடமிருந்து மீட்ட கோவையில் இருந்திருக்கலாம். ஆனால், பொலிஸார் அதனை வெளியிட மாட்டார்கள் என்றே கருதப்படுகிறது. அதனை வெளியிடுவது மேலும் இவ்வாறான சம்பவங்கள் நடக்க ஊக்கமளிப்பதாகப் போய்விடும் என பொலிஸார் நம்புவதால் தீக்குளிப்பின் பின்னணிகள் வெளிஉலகிற்கு தெரியாமலே போகலாம்.

ஈழத் தமிழர்கள் மத்தியில் தீக்குளிப்பு போராட்டம் என்பது இல்லாத ஒன்றாகும். தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியான அஹிம்சை போராட்டங்களை கடந்த 60 வருடகாலமாக நடத்தி வந்திருக்கிறார்கள். உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி உயிர்த் தியாகங்களைக்கூட செய்திருக்கிறார்கள்.

ஆனால், ஒருவர்கூட தீக்குளித்து இறந்ததில்லை. ஆனால், தமிழ்நாட்டில் தீக்குளிப்புக்கள் சாதாரணமானவை. திபெத்திலும் இவ்வாறான சம்பவங்கள் அதிகரித்து வருகிறது.

தமிழ் நாட்டிலும் திபெத்திலும் இடம் பெற்றுவரும் தீக்குளிப்பு மனோநிலை ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து மேற்குலக நாடுகளில் வாழும் தமிழர்களிடம் பரவி வருகிறதோ என்ற அச்சம் இப்போது எழுந்திருக்கிறது. இது ஈழத் தமிழர்களின் போராட்ட வழிமுறையும் அல்ல.

பொதுவாகவே வளர்ச்சியடைந்த மனித உரிமைகள் விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இதனை அவர்கள் விரும்பத்தகாத வெறுக்கத்தக்க செயலாகவே கருதுகிறார்கள். அதற்கு மேலாகத் தங்கள் நாட்டில் நடைபெறும் வன்முறைக் கலாசாரமாகவே இங்குள்ள ஊடகங்களும் பார்க்கின்றன. எனினும், புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் இது சோக உணர்வலைகளை ஏற்படுத்தியிருப்பதை மறுப்பதற்கில்லை.

நாளை மனித உரிமைகள் கூட்டத்தொடர் ஆரம்பமாக உள்ள நிலையில் ஐ.நா. முன்றலில் நீதிகோரி ஈழத் தமிழர்கள் உட்பட விடுதலைக்காக போராடும் இனங்களின் உரிமைக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு காரம்

# மழை விட்டாலும் தொடரும் தூவானம்....

சந்திரசேகர ஆஷாத்



ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை தனது ஏழு நாள்களுக்கான இலங்கை வருகையை நிறைவு செய்துவிட்டு ஜெனிவா திரும்பிவிட்டார். எனினும் அவர் இலங்கையில் தங்கியிருந்த போது மேற்கொண்ட சந்திப்புக்கள் பயணங்கள் என்பனவும் இறுதியில் அவர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது வெளியிட்ட கருத்துக்களும் பல முறைகளிலும் எழுப்பிய எதிரொலி இன்னும் தொடர்ந்து கொண்டேயுள்ளது.

குறிப்பாகப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு அதைப் பயன்படுத்தி நாட்டில் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் வகையில் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை தொடர்பாகவும் காணாமற் போனோர் சிறை செய்யப்பட்டோர் தொடர்பான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாமை தொடர்பாகவும் அவர் வெளியிட்ட கருத்துக்கள் இலங்கையில் பல அதிர்வுகளை உருவாக்கி விட்டன. அவை தொடர்பாக எதிர்ப்புக் குரல்கள் அரசதரப்பிலிருந்தும் இனவாத சக்திகளிடமிருந்தும் பலமாக எழ ஆரம்பித்துள்ளன. அவைகளில் சில அரசியல் நாகரிகங்களை உதறி எறிந்து விட்டு அசிங்கமான வடிவிலும் கூட வெளி வந்துள்ளன.

குறிப்பாக அமைச்சர் மேர்வின் சில்வா நவநீதம்பிள்ளை அவர்களைத் தான் திருமணம் செய்யத் தயார் எனத் தனது காடைத்தனப் பாணியில் கருத்து வெளியிட்டிருந்தார். இது தொடர்பாக திருமதி நவநீதம்பிள்ளையிடம் வெளிவிவகார அமைச்சு வருத்தம் தெரிவித்துள்ள போதும் இலங்கை மக்களின் கௌரவத்தையே இழிவுபடுத்திய மேர்வின் சில்வா மீது அரசு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேவேளை அமைச்சர் பாடலி சம்பிக்க ரணவக்க மனித உரிமைகள் ஆணையாளர் ஒரு பயங்கரவாதியின் மனைவி என வாந்தியெடுத்துள்ளார். உண்மையில் திருமதி நவநீதம்பிள்ளையின் கணவர் தென்னொபிரிக்க தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட ஒரு விடுதலை வீரர். தென்னாபிரிக்க மக்களின் ஒப்பற்ற தலைவர் நெல்சன் மண்டேலா தலைமையில் போராட்டங்களில் கலந்து கொண்டமைக்காக 1971 இல் கைது செய்யப்பட்டுசிறையில் அடைக்கப்பட்டவர். மசூதிகளையும். இந்துக் கோயில்களையும் இடிப்பவர்களை சட்டத்தின் பிடியில் கொண்டு வராது அவர்களை மதகுருமார்களாக மதிக்கும் ஒரு அராஜகத்தின் அமைச்சருக்கு ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் பயங்கரவாதியாகத் தெரிவதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

இவர்கள் திருமதி நவநீதம்பிள்ளையை அவமானப்படுத்தும் வகையில் சேற்றை அள்ளி வீசியதன் மூலம் தங்களின் அசிங்கமான வெறுக்கத்தக்க முகங்களை வெளியே காட்டியுள்ளனர். அமைச்சரவை கூட்டுப் பொறுப்புள்ளது என்ற வகையில் இலங்கை அமைச்சரவையின் தராதரமும் வெளிப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி விடுதலைப் புலிகளினதும் தமிழ் மக்களினதும் விடுதலை உணர்வை எப்படிப் பயங்கரவாதமாகச் சித்தரித்து கொச்சைப்படுத்தினார்கள் என்ற விடயத்தை தங்களையறியாமல் தாங்களாகவே அம்பலப்படுத்திவிட்டனர். உண்மையான பயங்கரவாதிகள் யார் என்பதை இதன் மூலம் உலகம் மிகவும் தெளிவாகவே புரிந்து கொள்ளும்.

வாயைத் திறந்தால் வழமையாகவே சேறும் சகதியும் கக்கும் இவர்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டாலும்கூட இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சரும் பேராசிரியருமான ஜி.எல்.பீரிஸ் இலங்கையின் உச்சகட்ட அதிகாரத்தைக் கொண்டவர்களில் ஒருவரான பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரின் குரல்களை எவருமே அலட்சியப்படுத்திவிட முடியாது. இவை உத்தியோகபூர்வமானவை எனக் கொள்ளப்பட வேண்டியளவுக்கு முக்கியமானவை.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஊடகவியலாளர்கள் மாநாட்டின் போது கருத்து வெளியிடுகையில் திருமதி நவநீதம்பிள்ளை அவர்கள் இலங்கை விவகாரங்களைக் காமாலைக் கண்கொண்டு பார்த்துள்ளார் எனவும் அவர் பொய்யான பொருத்தமற்ற ஒரு பக்கச்சார்பான முறையில் அபிப்பிராயங்களை முன்வைத்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு திருமதி நவநீதம்பிள்ளை மலரஞ்சலி செலுத்த முயன்றார் எனவும் அங்கு குமுறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரும் அவரின் குழுவினரும் நாட்டின் பல பாகங்களுக்கும் நேரடியாகவே சென்று பார்த்தனர். அவர்கள் பல தரப்பட்ட மக்களையும் சந்தித்து நேரடியாகவே உரையாற்றினார். மக்களும் பலவிதமான அச்சுறுத்தல்கள் மத்தியிலும் துணிவுடன் தமக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக அவரிடம் முறையிட்டனர். இதன் காரணமாக அவர் பல உண்மைகளை நேரடியாகவே கண்டுகொள்ள முடிந்தது. குறிப்பாக அவர் முள்ளிவாய்க்கால் சென்றிருந்தபோது மீள் குடியேற்றம், காணாமற்போனோர் பிரச்சினை மக்களின் இயல்பு வாழ்வு என்பன தொடர்பாக அரச தரப்பினர் வெளியிடும் போலியான தகவல்களின் உண்மை நிலை தொடர்பாக அவரால் பல விடயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

இது காலவரை இங்கு பயணம் செய்யும் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு ஒரு பொய்யான தோற்றப்பாடே காட்டப்பட்டது. அவர்கள் சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டுமே அழைத்துச செல்லப்பட்டனர். ஒரு குறிப்பிட்ட சிலரையே சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட நெடுஞ்சாலையும் அதன் அருகில் அமைக்கப்பட்ட கட்டடங்களும் மட்டும் காட்டப்பட்டு வடக்கு கிழக்கு துரித கதியில் அபிவிருத்தி செய்யப்படுவதாகக் காட்டப்பட்டது. அவர்கள்முன் புள்ளி விவரங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் சொல்லப்போனால் அரசின் ஒரு தலைப்பட்சமான முன்வைப்புகளை அவர்கள் உண்மையென நம்ப வேண்டிய நிலைமையே நிலவியது.

ஆனால் நவநீதம்பிள்ளை அந்த வேலிகளைத் தாண்டி உண்மைகளைத் தானாகவே நேரில் கண்டறிந்து கொண்டார். நிச்சயமாக இது அரசைப் பொறுத்த வரை சகிக்க முடியாத ஒரு கசப்பான நடவடிக்கைதான். தாங்கள் வழங்கும் பக்கச்சார்பான கருத்துகளில் மட்டும் தங்கியிராது நவநீதம்பிள்ளை பல தரப்பினரையும் சந்தித்து நிலைமைகளை அறிந்து கொண்டமை அமைச்சருக்குப் பக்கச்சார்பான நடவடிக்கையாகப்படுகிறது. உண்மைகளை ஆழ ஊடுருவிப் பார்ப்பதும்கூட அவருக்கும் காமாலைக் கண் பார்வையாகப்படுகிறது. இதுவரை பூசி மெழுகப்பட்ட அழுக்குகளும் புதைந்து மூடப்பட்ட உண்மைகளும் வெளியே வரும்போது அவை பொய்யானவை எனப் புலம்பித் துடிக்கிறார் அமைச்சர்.

மனித உரிமைகள் பேரவையினர் சர்வதேச அளவில் மனித உரிமைகள் தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பானவர்கள் என்ற வகையில் எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங்கு போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது வழமை. அவ்வகையிலான ஓர் அஞ்சலியை நவநீதம்பிள்ளை முள்ளிவாய்க்காலில் செலுத்த முயன்றபோது அரச தரப்பால் தடுக்கப்பட்டது. அவர் பிரபாகரனுக்கு அஞ்சலி செலுத்த முயன்றார் என்பது அமைச்ச ரின் குற்றச்சாட்டு.

போரில் இறந்தவர்கள் எதிரிகளாக இருந்தாலும் கூட மரியாதை செய்யப்படுவதும், அஞ்சலிக்கப்படுவதும் ஒரு சர்வதேச வழமை. அந்தப் பண்பைக் கூட குற்றமாகச் சித்தரித்து அனுமதிக்காத இலங்கை அரசினர் தமது அரசியல் அநாகரிகத்தை வெளிக்காட்டியுள்ளனர். போரில் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதையே அனுமதிக்காதவர்கள் எவ்வளவு தூரம் கொடூர வெறியுடன் கொலைகளை நடத்தியிருப்பர் என்பதே திருமதி நவநீதம்பிள்ளை நிச்சயமாகவே புரிந்து கொள்ள வேண்டியது.

அடுத்து கொழும்பில் இடம்பெற்ற சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் உரை நிகழ்த்திய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆற்றிய உரையை நாம் அலட்சியம் செய்துவிட முடியாது. விடுதலைப் புலிகளின் வலையமைப்பின் அழுத்தங்கள் காரணமாக இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் மேற்கொள்ளும் நடவடிக்கையின் முதற்கட்டமே நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை என அவர் அங்கு கருத்து வெளியிட்டுள்ளார். எல்லோரும் திருமதி நவநீதம்பிள்ளை இலங்கை வந்த பின்பு வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாக. மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக விமர்சனம் செய்தனர். பாதுகாப்புச் செயலரோ அவரின் வருகை பற்றியே வியாக்கியானம் செய்து சாதனை படைத்து விட்டார்.

பல நாடுகள் விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்துள்ளன. அப்படியான நிலையில் புலிகளின் வலையமைப்பு எப்படி அந்த நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க முடியும் என்பது அவருக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

தங்கள் போர்க் குற்றங்களையும் மனித உரிமை மீறல்களையும் மறைத்து உலகின் கவனத்தைத் திசை திருப்ப புலிப்பூச்சாண்டி காட்டுவது இலங்கை அரசியலில் ஒரு புதிய விஷயமல்ல.

அவர் மனித உரிமைகள் ஆணையாளரிடம் யாரும் காணாமற் போயிருந்தால் பட்டியலைத் தந்தால் தான் நடவடிக்கை எடுப்பார் எனச் சவால் விட்டுள்ளார். ஏனோ கொடுக்கப்பட்ட பட்டியல் தொடர்பாக ஏற்கனவே அவர் இங்கு எவரும் காணாமற்போகவில்லை எனத் தெரிவித்ததை அவரே மறந்து விட்டார்.

அதேவேளையில் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வர் திருமதி நவநீதம்பிள்ளை நடவடிக்கை தொடர்பாக ஐ.நா.சபையின் செயலாளரிடம் முறையிடப் போகிறாராம்.

இப்படி நவநீதம்பிள்ளை திரும்பிப் போய்விட்ட பின்பு அவர் வருகையின் எதிரொலிகள் மழை விட்ட பின்பும் அடிக்கும் தூவாணமாய் கேட்டுக்கொண்டேயிருக் கின்றன. அடுத்த ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் பெரும் இடி முழக்கத்துடன் இது மழையாகக் கொட்டும் என்பதை எதிர்பார்த்திருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றியை தோல்வியாக்கல்

ஓடுகாலி

கிரேக்கத்தின் குறுமன்னர்கள் தமக்கிடையே மோதிக்கொண்ட காலம். எதென்ஸ் படைகள் ஸ்பாட்டாவை முற்றுகையிட்டிருந்தன. ஸ்பாட்டாவை விடவும் எதென்ஸ் ஆளணியிலும், ஆயுத வளத்திலும், போர்த்திறத்திலும் உன்னதநிலையில் இருந்தது. எப்படியும் வெற்றி எதென்ஸின் பக்கமே என்பது ஸ்பாட்டாவுக்கு புரிந்திருந்தது. ஆயினும் அதனைத் தாமதப்படுத்தும் வழிகளை ஸ்பாட்டா வீரர்கள் செய்துகொண்டே இருந்தார்கள். எதென்ஸ் படைகள் முன்னேறும் வழியெங்கும் மரணக் குழிகள் தோண்டப்பட்டன. சாலைகள் பெரிய மரங்கள் போடப்பட்டு தடுக்கப்பட்டன. பாலங்கள் உடைக்கப்பட்டு போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. 30 நாளில் பிடித்துவிடலாம் என்றெண்ணிய ஸ்பாட்டாவை எதென்ஸால் 3 மாதங்கள் கடந்தும் பிடிக்க முடியவில்லை. ஆயினும் எதென்ஸ் வீரர்கள் வெற்றியை நெருங்கியிருந்தார்கள். இன்னும் சில நாள்களில் முழு ஸ்பாட்டாவையும் கைப்பற்றி விடுவார்கள். நினைத்தபடி வெற்றிக் கொடியை நாட்டியும் விட்டார்கள். ஆனால் எதென்ஸின் வெற்றியையே தோல்வியாக்கினார்கள், ஸ்பாட்டா வீரர்கள். எப்படி?

கடைசிக்கணத்தில் ஸ்பாட்டாவில் இருந்த எல்லாநீர் நிலைகளிலும் விசம் கலக்கப்பட்டது. இதனை பெரியபலகைகளில் அறிவித்தலாக நட்டார்கள். எல்லாச் செல்வங்களும் மூடைகளாகக் கட்டப்பட்டன. எஞ்சியவை எரியூட்டப்பட்டன. ஒரு மரம் கூட விடாமல் வெட்டிச்சாய்க்கபட்டன. பசுமையும், நிழலும் அற்ற பாலைப்பூமியாக்கப்பட்டது. குறுகலான பாதையூடாக ஸ்பாட்டா மக்கள் இரவோடிவராக வெளியேறியிருந்தனர். பக்கத்தே இருந்த காடுகள் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தன. நீண்டநாள் போரிட்ட களைப்போடு ஸ்பாட்டாவுக்குள் நுழைந்த எதென்ஸ் வீரர்களுக்கு குடிக்க நீரில்லை. ஒதுங்க நிழலில்லை. கொள்ளையிட பொருள்களில்லை. எங்கும் மணல். வெம்மை. தாகம்.

இந்தப்பாலையைக் கைப்பற்றவா இத்தனைநாள் போராட்டம்? என வாழ்க்கையே வெறுத்துப்போனது எதென்ஸ் வீரர்களுக்கு. விஷமேற்றப்பட்ட நீர்நிலைகளுக்கு முன்னால் தாகத்தோடு எத்தனை நாள்தான் தங்கமுடியும்? நிழலற்ற தேசத்தில் வெம்மை வாட்டி வதைத்தது.

சிலர் உயிர் போனாலும் பரவாயில்லை என்ற நினைப்போடு, விஷ நீரை அருந்தி தாகம் தீர்த்த பின் மாண்டு போயினர். விஷச்சுனைகள் பிணச்சுனைகளாயின. இறுதியில் பாலையில் நிலைகொள்ள முடியாத எதென்ஸ் படைகள் வந்தவழியே, வீரர்கள் பலரை இழந்துவிட்டு, சோர்ந்து போய் வெளியேறின. காட்டில் இருந்தபடியே மீண்டும் தம் தேசத்தைப் பழைய நிலைக்கு கொண்டு வந்த பின்னர் மீள வந்தனர் ஸ்பாட்டா மக்கள்.

ஸ்பாட்டா கையாண்ட இந்தத் தந்திரம் இன்றளவும் வெவ்வேறு மட்டங்களில் வெவ்வேறு வழிகளில் பிரயோகிக்கப்பட்டே வருகின்றது. தமக்கு கண் போனாலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப்பிழை ஏற்பட்டாலே போதும் என்ற நிலையும் இந்தத் தந்திரத்தின் வெளிப்பாடுதான். ஸ்பாட்டாக்காரர்கள் தம்முடைய நாட்டை பாதுகாக்க இந்த யுக்தியைக் கையாண்டார்கள். ஆனால் மற்றவர்களை வீழ்த்தத்தான் இந்தமுறையை இப்போது பயன்படுத்துகிறார்கள். வடக்கு மாகாணசபைத்தேர்தலிலும் இந்தக் குயுத்தியை பிரயோகிக்க நினைக்கிறது அதிகாரம்.

வடக்கு மாகாணத்தில் சர்வவல்லமை கொண்டவராகத் திகழும் ஆளுநர் தேர்தலின் பின்னர் டம்மி பீஸாக' மாறிவிடும் சூழலே இருக்கிறது. அதுவும் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பங்கு அறுதிப்பெரும் பான்மை பெற்றால் அவரின் எந்தப்பருப்பும் வடமாகாணத்தில் வேகாமலே போய்விடும். இந்த நிலையில்தான், தன்னால் எவ்வளவு முடியுமோ அந்தளவுக்கு வடக்கு மாகாணத்தில் இருக்கும் செழுமையை அழித்துவிட்டுப் போவதில் அவரும் அவரது பரிவாரங்களும் குறியாக இருக்கின்றன.

பருவம் தவறிப்பெய்த மழை போல, இந்த முறை வடக்கு மாகாணத்தின் சார்பில் நடத்தப்படும் இரண்டு நிகழ்வுகள் அவசர அவசரமாக தேர்தலுக்கு முன்னதாக நடத்தப்பட்டிருக்கின்றன. ஒன்று, வடமாகாண இலக்கியவிழா. மற்றையது வடமாகாண விவசாயக் கண்காட்சி.

போருக்குப் பின்னர் வடமாகாண இலக்கிய விழாவும் அதனோடு எழும் சர்ச்சைகளும் இரட்டைப்பிள்ளைகளாகி விட்டன. விருதுக்கான் கலைஞர் தெரிவில் குழப்பம், தங்குமிட வசதியின்மை, தமிழ்க்கலாசாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் நிகழ்வுகள், இப்படி நிறையச் சர்ச்சைகள் இலக்கிய விழாவில் எழாவிட்டால்தான் அது புதுமை.

சென்ற வருடம்கூட அமைச்சருக்கும் ஆளு நருக்கும் இடையேயான 'ஈகோ' போராட்டத்தால், நான்கு வர்ணங்களில் மூன்று அழைப்பிதழ்கள் அச்சிட வேண்டிய நிலை. மூன்று அழைப்பிதழுக்கும் தனித்தனியே பணம் விரயமானதுதான் மிச்சம். இந்த அழைப்பிதழ் இழுபறியிலும், 'ஈகோ' போரிலும் இலக்கிய விழா இழுபட்டு, சப்புப்பட்ட சுவிங்கம் போல திக்கொன்றாய், திசைக்கொன்றாய் நடந்து முடிந்திருந்தது. இதுபற்றி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரை கலாசார உத்தியோகத்தர்கள் முற்றுகையிட்டு, நாக்கைப் பிடுங்குவது போல நான்கு வார்த்தைகள் கேட்டது வேறுவிடயம்.

இப்படியெல்லாம் பெரும் இழுபாடுகளின் பின்னரே ஒப்பேறும் இலக்கிய விழா இந்த முறை மாத்திரம் மின்னாமல், முழங்காமல் நடந்திருக்கிறது. இந்த அமைதிக்குப் பின்னே நிறைய அவசரத்தனங்கள் மறைந்திருக்கின்றன. வடக்கில் என்ன நடந்தாலும் முதல் மரியாதையை வேண்டி நிற்கும் அதிகாரத்தார். தேர்தலின் பின்னர் நடக்கும் விழாக்களில் முன்னரைப் போல தலைப்பாகை கட்டிக் கொண்டு முன்னுக்கு நிற்க முடியாது. முதல்வருக்குத்தான் முதல் மரியாதை. அதனால் கடந்த வருடம் இழுபட்ட இலக்கிய விழாவை எப்படியாவது தேர்தலுக்கு முன்னர் வைத்தே ஆகவேண்டும் என்று உத்தரவு பறந்தது.

பதறியடித்துக் கொண்டு, காரியங்கள் நடந்தேறின. பதறிய காரியம் சிதறித்தானேயாக வேண்டும். முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியின் முகப்பில் அலங்கார வளைவிலேயே தமிழ் தூக்கிலிடப்பட்டது. இலக்கிய விழா என்ற சொல், 'இலங்கிய விழா' எனப்புதுச் சொல்லாகப் பிறப்பெடுத்தது.

வடமாகாண இலக்கிய விழாவில் சிங்களப் பாரம்பரிய நடனக்காரர்களும், கண்டிய நடன மேளக்காரர்களும் ஊர்வலமாகப் போயினர். எப்போது வடக்கின் பாரம்பரியக் கலைவடிவமாக கண்டிய நடனம் சேர்ந்து கொண்டது என்பதற்கு மண்டையை உடைத்தும் இன்னும் கிடைக்கவில்லை விடை. இப்படி நிறைய நொண்டித்தனங்களோடு நடைபெற்ற விழாவில்கூட நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அதிகாரத்தார் தன் கொடியைப் பறக்கவிடத் தவறவில்லை.

இலக்கிய விழா நடந்து கொண்டிருந்த காலத்திலேயே என்றுமில்லாத புதுமையாக வடக்கு மாகாண விவசாயக் கண்காட்சியும் வன்னியில் நடைபெற்றது. அங்கும் அதிகாரத்தார் தான் தலைப்பாகையோடு முன்வரிசை விருந்தினர். ஒரு மாகாண ரீதியான பிரமாண்டமான நிகழ்வுகள் ஒரே நேரத்தில் முன்னெப்போதும் நடந்ததில்லை. ஆனால் தேர்தல் பயமும் தலைப்பாகை ஆசையும் அப்படி நடத்தச் செய்துவிட்டன. மாகாண சபைக்கு சொந்தமான பணத்தில் தனக்குக் கிரீடம் சூட்டி அதிகாரத்தார் கடைசி முறையாக அழகுபார்த்தார்.

---------------

அதிகாரத்தாரின் பிரதான திட்டம் அதன் பின்னரே செயல்வடிவம் பெறத் தொடங்கியது. வழமையாகவே அரச ஊழியர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படுவதுண்டு. தத்தம் அலுவலங்கள் ஊடாக விண்ணப்பித்தால், பின்னர் பல நடவடிக்கைகளை அடுத்து அதே அலுவலகத்தின் ஊடாக அந்தக் கடன்கள் கிடைக்கும். இந்த முறை அந்தக் கடனையும் வைத்து அரசியல் செய்யப்பட்டது.

> “வடக்கில் என்ன நடந்தாலும் முதல் மரியாதையை வேண்டிநிற்கும் அதிகாரத்தார், தேர்தலின் பின்னர் நடக்கும் விழாக்களில் முன்னரைப் போல தலைப் பாகை கட்டிக் கொண்டு முன்னுக்கு நிற்க முடியாது. முதல்வருக்குத்தான் முதல் மரியாதை. அதனால் கடந்த வருடம் இழுபட்ட இலக்கிய விழாவை எப்படி யாவது தேர்தலுக்கு முன்னர் வைத்தே ஆகவேண்டும் என்று உத்தரவு பறந்தது.”

அதைவிட புதுப் புதுப் பெயர்களில் வடமாகணத்துக்குச் சொந்தமான மில்லியன் கணக்கிலான நிதி, கடன் என்ற பெயரில் தகுதியற்றவர்களுக்கு வாக்கை அள்ளும் தூண்டிலாக எறியப்பட்டது. இதில் கடன் பெற்றவர்கள் சிலர் குறித்த கடன்களுக்குவிண்ணப்பிக்கவேயில்லையாம். எப்படி எங்களுக்கு கடன் கிடைத்தது? என்று அதிசயப்பட்டார்கள். ஆற்றில போற தண்ணிதானே, அண்ணன் குடி, மச்சான் குடி என்ற கணக்கில் எந்தக் கணக்கு வழக்கும் இல்லாமலே கடன்மாரி எல்லோருக்கும் பொழிந்தது. ஆனாலும் இதில் நெல்லை விடவும் புல்லுக்கே அதிக நீர் பொசிந்திருந்தது. நீர் போல மாகாணத்தின் பணம் வீணாகிக் கொண்டிருப்பதை அதிகாரத்தார் ரசித்துக் கொண்டிருந்தார்.

இவையெல்லாம் சின்னச் சின்ன உதாரணங்கள். அதிகாரத்தாரின் பெயரைப் பொன்னெழுத்தில் பொறிக்கவும், மாகாண நிதியைக் கரைத்து முடிக்கவும் பல திரைமறைவு வேலைகள் தொடங்கியிருக்கின்றன. ஏனெனில் ஸ்பாட்டாக்களின் தந்திரமே இந்த செயல்களின் பின்னால் ஒளிந்துள்ளது.

எப்படியும் வடக்கு மாகாண சபையைக் கூட்டமைப்புத்தான் கைப்பற்றப்போகின்றது. அது அரசுக்கும் நன்கு தெரியும். எனவே ஸ்பாட்டாவில் நிகழ்ந்தது போன்று மாகாணத்துக்குள்ள நிதியை வற்றவைத்துவிட்டால், அதைக் கைப்பற்றப் போகும் கூட்டமைப்பால் எந்தவித அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள முடியாமல் போய்விடும். அதிகாரத்தார் இருக்கேக்க எவ்வளவு செய்தவர், இவங்கள் ஒரு குண்டூசி கூட தாறாங்கள் இல்லை என்று மக்கள் முணுமுணுக்கத் தொடங்க வேணும் என்றது அவர்களது எதிர்பார்ப்பு. அந்தச் சலசலப்பே கூட்டமைப்பின் ஆட்சி மீதான அவநம்பிக்கையைப் பொறியை உற்பத்தி செய்யுமளவுக்கு வீரியம் பெற்று விடுமாம். அதன் மூலம் வருங்காலத்தில் கூட்டமைப்பை வடக்கு மாகாண ஆட்சியைக் கைப்பற்ற முடியாதளவுக்கு செய்துவிடலாம் என்பதே அதிகாரத்தரப்பின் திட்டம். இதற்காக எங்கெங்கெல்லாம் மாகாண சபையில் நிதி இருக்கிறதோ அதையெல்லாம் தேடிப்பிடித்துக் கரைப்பதில் அதிகாரத்தார் அண்மைய நாள்களாக அக்கறை காட்டி வருகிறாராம்.

அத்தோடு இலக்கிய விழா போன்ற நிகழ்வுகளின் சாட்டோடு சிங்களப் பாரம்பரியங்களை உட்புகுத்திவிட்டால் அதனை நீட்சி பெறச்செய்து, ஒரு மரபாகவே அந்தக் கலைவடிவங்களையும் நமது பாரம்பரியத்துக்குள் குந்தவைத்து விடலாம் என்று எண்ணுகிறார்கள் போலும். இந்தத் திட்டத்துக்கு எங்களினத்தைச் சேர்ந்த ஜால்ராக்களின் தாளங்களும் சுருதி சேர்த்தே வருகின்றன.

ஆனால் ஸ்பாட்டாவின் தந்திரம் தர்மத்துக்குத்தான் துணை நிற் குமே தவிர அதர்மத்துக்குத் துணை போனதாகத் தெரியவில்லை. பார்ப்போம், இங்கு வெல்லப் போவது எதுவென்று?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

● இந்திரா

# சொல்ல போவதும் சொல்லாமல் விடப்போவதும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 24 ஆவது கூட்டத் தொடர் நாளை ஜெனிவாவில் ஆரம்பமாகிறது. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு நேரில் வருகை தந்து பாதிக்கப்பட்ட மக்களையும் பொது மக்கள் சார்பிலான பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசிச் சென்றிருக்கும் நிலையில் தனது இடைக்கால - குறுகிய - சாராம்ச - அறிக்கை ஒன்றை அவர் இலங்கையின் மனித உரிமைகள் விடயம் தொடர்பில் சமர்ப்பிப்பார்.

இதற்கிடையே இலங்கையில் மனித உரிமைகளின் மேம்பாடு தொடர்பிலான அறிக்கை ஒன்றை அரசும் அங்கு சமர்ப்பிக்கும். பூகோள காலக்கிரம மீளாய்வுக் கூட்டம் இது என்பதால் கடந்த ஓராண்டு காலத்தில் காணப்பட்ட முன்னேற்றங்கள் குறித்து அந்த அறிக்கையில் இலங்கை பட்டியலிடும்.

அவ்வாறு இலங்கை அரசு பட்டியலிடக் கூடியவைகளையும் பட்டியலிடாமல் விடக்கூடியவைகளையும் நாமும் சற்றே சிந்தித்துப் பார்க்கலாம்.

### பொதுநலவாய மாநாடு

முதலில் நிச்சயமாக நவம்பர் மாதத்தில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு கொழும்பில் நடைபெற உள்ளது என்பதையும் அதில் உலக நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்வார்கள் என்பதையும் கூறுவார்கள். இது மனித உரிமைகள் விடயத்தில் தமது நாடு காட்டிய முன்னேற்றத்திற்குக் கிடைத்த பரிசு என்று சொல்வார்கள்.

ஆனால், இலங்கையில் மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு மிக மோசமாக இருப்பதன் காரணத்தால் கனடா தலைவர் இந்த மாநாட்டுக்கு வரமாட்டார் என அறிவித்திருப்பதையோ, செல்வதா விடுவதா என்று முடிவெடுக்க முடியாத நிலையில் இந்தியா போன்ற நாடுகள் திணறுவதையோ சொல்லமாட்டார்கள்.

அதேபோன்று மனித உரிமைகளை மிக மோசமாக மீறிய குற்றச்சாட்டில் பொதுநலவாய நாடுகள் அமைப்பிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள நாடுகள் சில செய்ததைவிட மோசமான மீறல்களைத் தாம் செய்திருக் கிறோம் என்பதையும் சொல்ல மாட்டார்கள்.

மனித உரிமைக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான தனது இராணுவ அதிகாரிகள் சிலருக்கு அமெரிக்கா செல்வதற்கான நுழைவுச் சீட்டை வழங்க அந்த நாடு மறுத்து விட்டது என்பதையும் அவர்கள் தொட்டுக் கூடக் காட்டமாட்டார்கள்.

### நவியின் பயணம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் இலங்கைப் பயணம் குறித்துக் கட்டாயம் சொல்லப்படும். விரும்பிய பகுதிகளுக்கு எல்லாம் சென்று பார்வையிடுவதற்கான அனுமதி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்ததாக அரசு தெளிவாகச் சொல்லும். அவர் விரும்பியவர்களைச் சந்திப்பதற்கு அவருக்கு இடமளிக்கப் பட்டதாகவும் சொல்லும்.

> ஆணையாளரின் பயணத்தின் போது அவரைச் சந்திக்கக்கூடாது என்று படையினராலும் பொலிஸா ராலும் மக்கள் அச்சுறுத்தப்பட்டமை பற்றியோ, திருகோணமலையில் ஆணையாளரின் சந்திப்புக் குறித்து செய்தி சேகரித்துப் படமும் எடுத்த பத்திரிகையாளர் ஒருவர் மிரட்டப்பட்டு அவரது படங்கள் அழிக்கப்பட்டமை பற்றியோ ஒருபோதும் அந்த அறிக்கையில் அவர்கள் சொல்லமாட்டார்கள்.

ஆணையாளரின் பயணத்தின் போது அவரைச் சந்திக்கக்கூடாது என்று படையினராலும் பொலிஸாராலும் மக்கள் அச்சுறுத்தப்பட்டமை பற்றியோ, திருகோணமலையில் ஆணையாளரின் சந்திப்புக் குறித்து செய்தி சேகரித்துப் படமும் எடுத்த பத்திரிகையாளர் ஒருவர் மிரட்டப்பட்டு அவரது படங்கள் அழிக்கப்பட்டமை பற்றியோ ஒருபோதும் அந்த அறிக்கையில் அவர்கள் சொல்லமாட்டார்கள்.

நவநீதம் பிள்ளை நாட்டைவிட்டு வெளியேறியதும் தமது உயிருக்கு படையினரால் ஆபத்து ஏற்பட்டு விடக்கூடும் என்று மக்கள் அஞ்சி நடுங்கினார்கள் என்பதைச் சொல்ல மாட்டார்கள். ஆணையாளரின் வருகைக்காக மட்டுமே ஓமந்தையிலும் ஆணையிறவிலும் வாகனங்களின் பதிவுகள் நிறுத்தப்பட்டன என்பதையும் முள்ளிவாய்க்காலில் சிறு முகாம்களும் கவாலரண்களும் அகற்றப்பட்டன என்பதையும்கூட ஒருபோதும் சொல்லமாட்டார்கள்.

ஆணையாளர் இலங்கையில் இருந்தபோது ஊடகங்கள் வாயிலாக அமைச்சர்கள் சிலர் திட்டமிட்டு அவரை அவமதித்தமை பற்றியும் சொல்லமாட்டார்கள்.

### ஜனாதிபதிக் குழுக்கள்

வடக்கு - கிழக்கிலே காணாமல் போனோர் குறித்து விசாரிப்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழு பற்றியும் இலங்கை அரசின் அறிக்கையிலே பெரிதாகச் சொல்லப்படும்.

இப்படிப் பல ஆணைக்குழுக்களை அமைத்து அவற்றின் அறிக்கைகளைக் குப்பையிலே போட்டமை பற்றி அவர்கள் கூறமாட்டார்கள். ஒரே விடயத்தை விசாரிப்பதற்கு ஆணைக்குழுவுக்கு மேல் ஆணைக் குழுவை காலங் காலமாக நியமிப்பதே தமது வழக்கம் என்பதையும் சொல்ல மாட்டார்கள். இவை எல்லாம் வெறும் கண்துடைப்பு நாடகங்கள் என்பதை ஒருபோதும் சொல்லவே மாட்டார்கள். நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருகை தரும் வரையில் இந்த ஆணைக்குழுக்கள் நியமிக்கப் படாமல் இருந்தமைக்கான காரணம் என்ன என்பதை அவர்கள் கேட்டாலும் சொல்லமாட்டார்கள்.

### வடக்குத் தேர்தல்

இன்னும் முக்கியமாக ஒரு கையில் ஆயுதமும் மறுகையில் சர்வதேச மனிதாபிமானச் சட்டப் புத்தகமுமாக மனிதாபிமான மீட்புப் போரில் ஈடுபட்ட தமது படையினர் வடக்கைப் புலிகளிடம் இருந்து மீட்டெடுத்ததன் பின்னர் அங்கு ஜனநாயக ரீதியிலான தேர்தல் ஒன்றைத் தாம் நடத்துகின்றனர் என்பதை மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு தம்பட்டம் அடிக்கும்.

இருப்பினும் போர் முடிந்த கையோடு கிழக்கில் தேர்தல் நடத்தியது போன்று அல்லாமல் வடக்கில் நான்கு வருடங்களாகத் தேர்தலை நடத்தாமல் விட்டதற்கான உண்மைக் காரணத்தை அரசு ஒருபோதும் சொல்லாது. அத்தோடு இந்தத் தேர்தலில் தமது வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மட்டுமே வடக்கில் துப்பாக்கிகளைக் கொண்டு சுட்டு மோதிக் கொண்டார்கள் என்பதையும் புத்திசாலித்தனமாக ஐ.நா. அவையிடம் இருந்து மறைத்துவிடும்.

### நல்லிணக்கம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைத் தாம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருவதாகச் சொல்வதற்கு மறக்கமாட்டார்கள். ஆனால் அதனை நடைமுறைப் படுத்தி முடிப்பதற்கு இன்னும் கால அவகாசம் தமக்கு வழங்கப்பட வேண்டும் என்று கேட்பார்கள்.

ஏற்கனவே நடைமுறையில் இருப்பவற்றைத்தான் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாகத் தாங்கள் அறிக்கையிடுகின்றோம் என்பதை அவர்கள் சொல்லவே மாட்டார்கள். போர் முடிந்த பின்னர் நான்கு வருடங்களாக உண்மையான நல்லிணக்கத்துக்காக என்ன செய்தார்கள் என்பதையோ இருக்கும் கொஞ்ச நஞ்ச புரிந்துணர்வையும் சிதைக்கும் வகையில் இராணுவத்துக்காகக் காணிகள் பறித்ததையும் தமிழர் நிலங்களைப் பிடித்து புத்தருக்குக் கோயில்கள் அமைத்தமை பற்றியும் சொல்வேமாட்டார்கள். காணிப்பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கும்படி நல்லிணக்க ஆணைக்குழு செய்த பரிந்துரையின் கீழ் இராணுவத்துக்கு காணி சுவீகரித் தமை பற்றி அறவே கூறமாட்டார்கள்.

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய விசேட அதிரடிப்படையினர் 8 பேரைத் தாங்கள் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதைச் சொல்வார்கள். ஆனால், இந்தக் கொலைகளுக்கான முக்கிய சாட்சியான மாணவர்களில் ஒருவரின் தந்தையையும் குடும்பத்தையும் தமது படையினரே மிட்டி வெளிநாட்டுக்கு ஓடவைத்தார்கள் என்பதைச் சொல்லமாட்டார்கள்.

பிந்தெனுவெவ தடுப்பு முகாமில் இருந்தவர்கள் கொல்லப்பட்ட வழக்கிலும் குற்றச்சாட்டப்பட்டவர்களுக்கு மாவட்ட நீதிமன்றம் விதித்த தண்டனையை உயர் நீதிமன்றம் நீக்கி, அனைவரும் குற்றமற்றவர்கள் என விடுவித் தமைதான் கடந்த காலங்களிலும் நடந்த வரலாறு என்பதைச் சொல்ல வேமாட்டார்கள்.

ஆக மொத்தத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அரசு சொல்லப்போகிற விடயங்களைவிட சொல்லாமல்விடப்போகிற விடயங்கள் தான் அதிகமாக இருக்கப்போகின்றன. இவற்றை நவிப் பிள்ளை சபையின் கவனத்துக்குக் கொண்டு வருவார் என்று எதிர்பார்க்கலாம்.

---

● கோணேஸ்

# வடக்கு மக்களின் வாக்கு ஏ.கே. 47 ஐ விட 'பவர்'

இன்று நாம் எதிர்நோக்கியிருக்கும் வட மாகாணசபைத் தேர்தலானது அனைத்து வகைகளிலும் இலங்கை சுதந்திரத்தின் பின்னர் நடைபெற்ற முன்னைய தேர்தல்களோடு ஒப்பிடுகையில் வேறுபட்டதும், முக்கியமானதுமாகும். தமிழ் மக்கள் சரியான நிலைப்பாட்டை தீர்க்கமாகவும், தெளிவாகவும், தீர்மானிக்க வேண்டிய தேர்தலாகவும் இது இருக்கிறது.

தமிழ் மக்கள் சரியான தீர்மானத்தை ஏற்கனவே எடுத்துவிட்டார்கள் என்று கருதினாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகக் களமிறங்கியுள்ள - சரியாகச் சொல்வதானால் பேரினவாதத் தரப்பால் தமிழ் வாக்குகளை சிதைப்பதற்காக களமிறக்கப்பட்டுள்ளவர்கள் மட்டில், மக்கள் உரிய கவனத்தைச் செலுத்தவேண்டும்.

சிங்கள ஜனாதிபதியான ராஜபக்ஷ தரப்பும், இராணுவத்தரப்பும், தமிழ் மக்களை வகைதொகையின்றி கொன்றொழித்துள்ளன. சர்வதேச சட்டதிட்டங்களுக்கு மாறாக போரின்போது இரசாயன கொத்துக்குண்டுகளையும், ஆயுதங்களையும் பயன்படுத்தி தமிழ் இனத்தை அழித்துள்ளன. சர்வதேசத்தால் கண்டிக்கப்படுமளவிற்கு தமிழர்களுக்கெதிராக மனித உரிமை மீறல்களையும், போர்க்குற்றங்களையும் புரிந்துள்ளன.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் ஆண்களும், பெண்களுமாக பல ஆண்டுகளாக எவ்வித விசாரணைகளும் இன்றி அரசியல் கைதிகளாகச் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். 86 ஆயிரத்திற்கும் அதிகமான பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும், ஏனையோரும் அங்கவீனமாக்கப்பட்டுள்ளார்கள். குடும்பத் தலைமையை ஏற்றுள்ள விதவைகள் உட்படப் பல பெண்கள் பாலியல் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப் பட்டுள்ளார்கள்.

தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் - பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் படைத்தள விரிவாக்கத்துக்காகச் சுவீகரிக்கப்பட்டுள்ளன. சிங்களக் குடியேற்றங்களுக்காக [illegible] தமிழர் பிரதேசத்திலுள்ள விவசாயக் காணிகளில் அத்துமீறி குடியேறிய படையினர் உணவுப் பொருள் உற்பத்தியை மேற்கொண்டு நாளாந்தம் ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கின்றனர். தமிழ் விவசாயிகளின் உற்பத்திகளை சந்தைப்படுத்த முடியாதநிலைக்கு உள்ளாக்கி தமிழர்களின் வாழ்வாதாரத்தையும் சிதைத்துள்ளனர்.

வடபகுதி சிவில் நிர்வாகத்தில் படைத்துறை அத்துமீறித் தலையிட்டு தமிழ் மக்களின் அன்றாட செயற்பாடுகளிலும், இயல்பு வாழ்க்கை யிலும் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. தமிழர்களின் பேச்சுரிமை, ஊடகச் சுதந்திரம் அனைத்தும் படைத் தரப்பினரால் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

இந்தப் பகுதியில் உருவாகும் மற்றும் காலியாகும் வேலைவாய்ப்புகள் யாவும் அரசின் அடிவருடிகளுக்கே வழங்கப்படுவதால், தகுதியுள்ளவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

[illegible]ரின் குடும்பங்களுக்கு இழப்பீடுகளையும், வாழ்வாதார வசதிகளையும் வழங்குவதுடன் அவர்களை நினைவுகூர்ந்து வருடந்தோறும் வெற்றிவிழாக்களை நடத்தும் அரசு, தமிழர்கள் தமது இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதைக் குற்றமாகக் காண்கின்றது. அஞ்சலி நிகழ்வுகளை த் தடைசெய்கின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களின் அரசியல் சுதந்திர உரிமைகள் யாவும் மறுக்கப் பட்டு அரசியல்தீர்வும் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

தமிழின ஒழிப்பில் உன்னிப்பாகவும், துரிதமாகவும், செயற்படும் அரசிற்கும், அவர்களை சார்ந்தோருக்கும் நாம் வாக்களித்து அரசின் திட்டமிட்ட தமிழின அழிப்புக்கு தமிழராகிய நாம் அங்கீகாரம் அளிப்பதாக சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறப்போகிறோமா? அல்லது வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து எம் இருப்பை உறுதிப்படுத்துவதில் நாம் குறியாக இருக்கிறோம் என்ற உறுதிப்பாட்டை சர்வதேசத்திற்கு எடுத்துக்கூறப் போகிறோமா?

இதற்கான விடையாகத் தமிழர்கள் வழங்கும் வாக்குகள், அரச பகைள் வன்னியில் இறுதிப் போரில் பயன்படுத்திய ஏ.கே.-47 துப்பாக்கிகளைவிடச் சக்தி வாய்ந்தவை. தமிழினத்தைப் பாதுகாக்கவும் நீதியை நிலைநாட்டவும் இலங்கை நாட்டை ஜனநாயகப் பாதைக்குத் திருப்பவும் அந்தச் சக்தி மிக்க தோட்டாக்களான வாக்குகளைப் பயன்படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 08.09.2013 ஞாயிற்றுக்கிழமை

# சின்ராசு மாமாவும் அரசியல்வாதிதான்....

ஜெரா



சின்ராசு மாமா.. சின்னப் பிள்ளையள் மத்தியில் மிகுந்த பிரபலமான ஒருவர். அதாவது அந்தக் கிராமங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கு நிலாவைக் காட்டி, நட்சத்திரத்தைக் காட்டி, அப்புவைக் காட்டி, பூனையைக் காட்டி, பேக்காட்டிசோறு தீத்தும் பழக்கங்கள் எல்லாம் மலையேறிப் போய்விட்டது. இந்த காட்டிகள் மீதான குழந்தைகளின் கேள்விகள் தலைக்குமேல் போக, வேறு வழியின்றி சாப்பாடு தீத்தும் அம் மாக்கள் அதனைக் கைவிட வேண்டிய இக்கட்டான நிலைக்கு வந்தார்கள். அதற்கு பொறுத்தமான இன்னொரு காட்டியை அவர்கள் தேடிக் கொண்டிருக்கையில்தான் அது வரையில் சின்ராசு மாமா என குழந்தைகளால் அறியப்பட்ட ஒருவர் ஊர் அவையில் வில்லனானார். அதாவது அந்தக் கிராமக் கோயில் திரு விழாவில் நடத்தப்பட்ட இராவணேசன் கூத்தில் பத்துத் தலை யுடன் இராவணனாக மேடையில் தோன்றி.முன் வரிசையில் அமர்ந்திருந்த அத்தனைக் குழந்தைகளின் பீதியையும் கலக்கினார் சின்ராசு மாமா.

குழந்தைகள் மட்டுமல்லாது பெண்கள் கூட அவரின் நடிப்பால் அதிர்ந்து, உறைந்ததிலிருந்து மீண்டுவர நீண்டகாலம் எடுத்தது. சீதைக்கு அவர் படுத்தும் கொடுமைகளையும், அவர் போடும் அதிர் வாட்டத்தையும் சட்டிபானை கழுவு மிடத்திலும், பொதுக் கிணற்றடியில் உடுப்புத் தோய்க்கும் போதிலும் போக்கிக் கதைகளாக நீண்ட நாள்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

சின்ராசு மாமாவை நோக்கி விழுந்த இந்தப் பிரமாண்டமான விளம்பரம் அவரைப் பற்றி குழந்தைகள் மத்தியில்வேறொருவிம்பத்தை உருவாக்கி விட்டது. அவரின் பெயரைக் கேட்டாலே கதவு, யன்னல் எல்லாவற்றையும் பூட்டிக்கொண்டு குழந்தைகள் வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டார்கள். அந்தப் பெயருக்கு முன்னாள் குழந்தைகளின் பிடிவாதங்கள் தவிடு பொடியாகின. சோறு தீத்தும் அம் மாக்களுக்கு புதியதொரு காட்டி பிடிபட்டார்.

குழந்தைகளுக்கு அவர் காட்டிய முகத்தைத்தான் பெரும்பாலான வேளைகளில் ஊருக்குள்ளும் காட்டிக் கொண்டார். "என்ன ஒரு வில்லத் தனம்" என்று மற்றையவர்கள் முணுமுணுத்துக்கொள்ளும் அளவில் முடிவெடுப்பார். பொதுவிடயங்களில், நாலு பேருக்கு நன்மை பயக்கும் விடயங்களில் சின்ராசு மாமாவின் முடிவு தனிப்போக்கானதாக இருக்கும். அவருக்கோ, அவரின் குடும்பத்துக்கோ, இரண்டு பிள்ளையளுக்கோ, மனிசிக்கோ, 3 ஏக்கர் வயல் காணிக்கோ, 1 ஏக்கர் தோட்டக் காணிக்கோ, 1ஏக்கர் வீட்டுக் காணிக்கோ, கிடக்கிற மிச்ச சொச்ச சொத்துக்களுக்கோ நன்மைவராத விடத்து எந்தப் பொதுமுடிவுக்கும் இசைந்து போகாத ஒரு அற்ப மனிதனாக சின்ராசு மாமா அறியப் பட்டிருந்தார்.

ஆனால் அவரிட மிருந்த கொழுத்த பரம்பரைச் சொத்து ஊரையே கட்டிப்போட்டி ருந்தது. அதைக் கொண்டும், உடுத் தும் உடையின் நிறத்தைக் கொண் டும் ஊரின் அனைத்து பிதாமகன்களையும் உருக்கி வைத்திருந்தார் சின்ராசு.

விடுதலைப் புலிகள் யாரைத்தான் கோலோச்சியிருந்தாலும் அவர்களின் 'பவர்' சின்ராசு மாமா மாதிரியானவர்களிடம் எடுபடவில்லை. ஒரே ஒரு தடவை இவரின் டிராக்ரரை அவசர தேவைக்காக எடுத்துச் சென்ற போராளிகளுக்கு நீண்டகால தண்டனையை மனுசன் வாங்கிக் கொடுத்தவர். அந்தளவுக்கு பொறுப்பாளர்கள் மத்தியில் சின்ராசு மாமா செல்வாக்கோடு இருந்தார். இவருக்கென்று ஒரு ஆட்டுப் பட்டியும், கோழிப் பண்ணையும் இருந்ததால் அரசியல்துறைப் பொறுப்பாளர்களை மடக்கிப் பிடிப்பதில் மாமாவுக்கு சிரமமிருக்கவில்லை. இது போன்ற காரணங்களால் புலிகள் மத்தியில் சிறப்பு விருந்தி னராக சின்ராசு மாமா இருந்தார். ஊரையே கட்டுப்படுத்தும் வல்லமை [illegible] வைத்திருந்ததாலும் புலிகள் அவரை மீற விரும்பி யிருக்கவில்லை என ஊர் கிழடுகள் பேசிக் கொள்வதுண்டு.

> மீள்குடியேற்றம் நடந்த காலத்தோடு இருந்த எல்லா நிலத்தையும், சொத்தையும் மீண்டும் அரச பதிவுக்குள்ளாக்கினார் சின்ராசு மாமா. அப்போதுதான், தமிழர் அரசியல் வரலாற்றையே திசை திருப்பப் போகும் அந்தச் சம்பவம் நடந்தது. வட மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பு வெளியாகியது.

புலிகள் தொடுத்த பெரும் போர்களுக்கு மக்களின் ஆதரவு பக்கபலமாய் இருக்கும். இரத்தம் கொடுத்தல், உலருணவு தயாரித்து, சேகரித்து கொடுத்தல் போன்ற பணிகளை உள்ளூர் அமைப்புகள் மேற்கொள்வது வழமை. அப்படித்தான் ஒரு நாள் சண்டை தீவிரம் பெற்றிருக்கையில் பெண்கள் அமைப்பொன்று உலருணவு சேகரிப்புக்காக வீடுகளுக்குச் சென்றது. பீதி கலந்த மரியாதையுடன் மாமாவையும் அணுகியது.காரணத்தைக் கேட்டதும், ஏற்கனவே ஏதோ கொதிப்பிலிருந்த சின்ராசு கொட்டனை எடுத்துக் கொண்டு அந்தப் பெண்களைத் துரத்தினார். அவரின் துரத்தல் ஓட்டம் முழுவதும், தலைவரும், [illegible] வார்த்தைகளால் வாழ்த்தப்பட்டனர். அடிவாங்காத சந்தோசத்தில் உணவு சேகரிக்கும் பெண்கள் ஏனைய வீடுகளைத் துலாவினர்.

கணபதி, சின்ராசு மாமாவின் நெருங்கிய நண்பர். கணபதிக்கு 3 பிள்ளைகள். ஒரு நாள் தமிழீழத்தின் தலைசிறந்த பாடகர்களான சாந்தன், சுகுமார் ஆக்கள் பள்ளிக் கூடத்துக்கு வந்து, பாட்டுப்பாடி வைத்த பரப்புரையில் கணபதி பிள்ளையின் மூத்தமகன் வாகனமேறினான். அதற்கு மறுநாள் தலைவரின் படையணி என்று சொல்லிக் கொண்டவர்கள் வைத்த அதிதீவிர பரப்புரையில் இளைய மகளும் வாகனமேறினாள். ஏழ்மையின் உருவான கணபதி இந்தக் கவலைகளோடு சில காலம் அலைந்து திரிந்தார். அந்த அலைவுகளின் முடிவாக இரண்டு போராளிகளின் தந்தை என்ற மதிப்பு ஊர் மத்தியில் கிடைத்தது.

அந்த மதிப்பு மறுவேடம் எடுக்க நாள் எடுக்க வில்லை. முதல்நாள், கரிப்பட்ட முறிப்பில் மூத்த மகனும், மறுநாள்.மாங்குளத்தில் இளைய மகளுமாக வித்துடல்கள் வந்தன. தற்காலிக முகாம் ஒன்றில் இருந்த கணபதிப் பிள்ளையின் துயர செய்தி கேட்டு சின்ராசுமாமா தேடிவந்தார். கண்ணீரின் திருவுரு வாய் நின்ற கணபதியின் கையில் ஒரு ஆயிரத்தைக் கொடுத்துவிட்டு, சோத்துக்கு வழியில்லாம பிள்ளை களவளத்தா உப்பிடித்தான் அழ வேணும் என்று சொல்லிவிட்டு கத்தினார்.அது கணபதிக்கான கதையல்ல. அங்கு கூடியிருந்த அனைவருக்குமான கதையென்பதையும், அகவணக்கம் செலுத்த வந்திருந்த அப்பாவிப் போராளிகளுக்கான கதையென்பதையும் யாரும் தெரிந்துகொள்ளாமலில்லை.

ஒரு குட்டி பண்ணையாராக அவர் பல இடப்பெயர்வுகளையும் எதுவித சிரமங்களுமின்றிக் கடந்தார். இறுதி இடப்பெயர்வு அவரை நிலைகுலையச் செய்தது. விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தீவிரமடைந்த போது இவரின் நாட்டாமைத் தனங்கள் தவிடுபொடியாகியன. யாரென்றே தெரியாத ஆள்பிடிக் காரர் சின்ராசு மாமாவின் வீட்டை நோட்டமிட்டுக் கொண்டேயிருந்தனர். அவரின் மகனுக்கு போராட வயது காணாது. ஆனால் மகள் போராட வலுவுள்ள பிள்ளையாக இருந்தாள். மகளை பரணுக்கு மேல்ஏற்றி ஒழித்து வைத்துவிட்டுசின்ராசுமாமாவும், மனுசியும் கலந்தாலோசிப்பில் ஈடுபடுவது வழமை.

முதல் நாள் இப்படியொரு முடிவை எடுத் தனர். வீட்டுக்கு வந்துபோகும் யாரேனும் ஒரு தகுதிவாய்ந்த பொறுப்பாளருக்கு மகளைக் கட்டிக் கொடுப்பது. அந்த முடிவை புரண்டு புரண்டு படுத்த சின்ராசு மாமா விடிவதற்குள் மாற்றிக் கொண்டார். புலிகளும் அடிக்கடி இடப்பெயர்வுகளை சந்தித்ததால் அவர்களுக்கும் பாதுகாப்பான இடம் தேவைப்பட்டது. சின்ராசு மாமாவிடம் 3 ஏக்கர் பாதுகாப்பான காணியிருந்தது. கீழே என்ன இருந்தாலும் மேலிருந்து பார்த்தால் எதுவும் தெரியாது. அவ்வளவு சோலைக் காணியது. அதை அப்படியே புலிகளுக்கு கொடுத்துவிட்டு மகளுக்கான பாஸ் வாங்கலாம் என்ற முடிவுக்கு வந்த நேரத்தில், மனுசி, காலைத் தேத்தண்ணியை அவருக்கு கொடுத்தார். வீட்டையும்,காணியையும் வாங்கிக் கொண்டு குடும்பத்துக்கே பாஸ் கொடுத்து இராணுவக் கட்டுப்பாட்டுக்கு சென்று குடியேற அனுமதிக்கும் நடைமுறை யொன்றை புலிகள் நடைமுறைப் படுத்தியதால் சின்ராசு மாமாவின் எண்ணம் வந்தது. அது ஈசியாக நடந்தும் முடிந்தது. பாஸ் வாங்கி சில வாரங்களில் மூத்தமகள் கனடா சென்றிருந்தாள்.

சின்ராசு மாமாவின் குடும்பம் 3 உறுப்பினராகையில் இறுதிப் போர் கிளிநொச்சியைக் கடந்தது. சின்ராசு மாமா தன் குடும் பத்தோடு வட்டக்கச்சிப் பகுதியில் இராணுவத்திடம் சரணடைந்தார். அவரோடு இன்னும் சில குடும்பங்களும் இருந்தனர்.

இறுதிப் போர் வரலாற்று அத்தியாயத்தில் சின்ராசு மாமா செய்த மாபெரும் வரலாற்றுச் சாதனை அது. முதன் முதலாக இராணுவத்திடம் சரணடையலாம் என்ற சிந்திப்பை தொடக்கிவைத்தவர் அவர். அதன் பின் அவர் மறுபடியும் ராஜாவானார். சில காலம் முகாமில் இருந்தார். இராணுவம் விசாரித்த காலங்களில் தனக்கு தெரிந்ததெல்லாம் கொட்டித் தீர்த்து ஆமிப் பெடியங்களின் நண்பரானார். அந்த நட்பின் வழியில் முகாமிலிருந்து தனது குடும்பத்தை விடுவித்தும் கொண்ட காலத்தில் போர் முடிந்தது. அவரின் ஊர் சனங்கள் மந்தைகளாக முகாம்களுக்கு ஏற்றிவரப்படுகையில், அவர் எப்போதும்போன்ற வர்ண வாழ்க்கையை வாழ ஆரம்பித்தார். மகளனுப்பிய பணமும், உதவியும் கொண்டு மகனை ஆஸ்திரேலியா அனுப்பினார்.

மீள்குடியேற்றம் நடந்த காலத்தோடு இருந்த எல்லா நிலத்தையும், சொத்தையும் மீண்டும் அரச பதிவுக்குள்ளாக்கினார் சின்ராசு மாமா. அப்போதுதான், தமிழர் அரசியல் வரலாற்றையே திசை திருப்பப் போகும் அந்தச் சம்பவம் நடந்தது. வட மாகாண சபைத் தேர்தல் அறிவிப்பு வெளியாகியது. ஊருக்குள் வலுமிக்கவர்களின் பட்டியலில் சின்ராசு மாமாவும் இருந்ததாலும், சொற்ப முயற்சியினாலும் அவருக்கும் ஒரு சீற்கிடைத்தது. இன்றைய நிலையில் சின்ராசு மாமா சரியான பிசியான ஒருவர். ஒவ்வொரு கிராமத்துக்கும் போகிறார். வீடுகளைத் தரிசிக்கிறார். குழந்தைகளைத் தூக்குகின்றார். முத்தமிடுகின்றார். அவரின் சடுதியான இந்த மாற்றத்தால் குழந்தைகள் இராவணே சனை மறந்திருக்கின்றனர். அப்படித்தான் இன்றும்.மேடையில் பேசத் தொடங்கினார் சின்ராசு மாமா. நாம் கடந்த காலங்களில் செய்த தியாகங்களுக்கு சரியான பலனை அனுபவிக்கும் நேரம் வந்திருக்கின்றது. இந்த வாய்ப்பு எம்மால் உருவாக்கப்பட்டதல்ல. போரில் தியாகித்த ஒவ்வொருவரின் இழப்பிலும் உருவானது.இறுதிப் போரின் மொத்த அவலத்தையும் தாங்கியவன் என்ற வகையில் உங்கள் முன் நிற்கிறேன் என்று முடிக்க முன்னர் வயதான, வறுமையின் வடிவான ஒருவர் ஓடிப்போய் சின்ராசு மாமாவுக்கு மாலையணிவித்து, கும்பிட்டார். அந்த மூத்தவருக்குப் பெயர் கணபதி. சின்ராசு மாமா இப்ப 'அந்த பக்கத்தில' பெரிய்ய்ய ஆள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிரியா மீதான தாக்குதல்

## அமெரிக்க காங்கிரஸ் முடிவு நாளை தெரியவரும்

உலக நடப்புகள் ஒரு பார்வை

ரெங்கன்

எதிர்பார்க்கப்பட்டது போல் சிரியாமீது ராணுவ நடவடிக்கை எடுப்பதற்கான அனுமதியை அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா பெற்றுக் கொண்டு விட்டார் என்று செய்திகள் வந்துள்ளன. அவருக்கு அனுமதி வழங்கும் தீர்மானம் ஒன்றை செனட் சபையின் வெளியுறவுக் குழு தயாரித்துள்ளது. இந்தத் தீர்மானம் வரும் 9 ஆம் திகதி காங்கிரஸ் சபையில் நிறைவேற்றப்பட விருக்கிறது.

ஏற்கனவே ராணுவ நடவடிக்கைக்ககான ஆயத்தங்களை ஒபாமா அரசு எடுத்துள்ளது. அணு ஆயுதக் கப்பல் ஒன்று ஏற்கனவே மத்தியதரைக் கடலில் நிலைகொள்ள செய்யப்பட்டுள்ளது.

இரசாயன ஆயுதங்களைக் கொண்டு சிரிய ராணுவம் எதிர்த்தரப்பின் மீது தாக்குதல் நடத்தியுள்ளார்கள் என்பதே அமெரிக்காவின் இந்த செயற்பாட்டுக்கு காரணம். ரசாயன ஆயுதம் பாவிக்கப்பட்டமைக்கான ஆதாரம் கிடைப்பின் அதற்குப் பின்புலமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று பல மாதங்களுக்கு முன்னரே ஒபாமா அறிவித்திருந்தார்.

இரசாயன ஆயுத பாவனை குறித்த தகவல்கள் ஏற்கனவே கசிந்திருந்தாலும் அண்மையில் டமாஸ்கஸ் புறநகர்ப் பகுதியில் இரசாயன ஆயுதம் பாவிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது பற்றிய ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக அமெரிக்கா கூறுகின்றது. அந்த ஆதாரங்களை முன்வைத்தே அமெரிக்க காங்கிரஸ் சபையின் அங்கீகாரத்தைப் பெறவிருக்கிறார் ஒபாமா.

### ரஷ்யாவின் எதிர்ப்பு

ஆனால் அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தம்மிடம் சிரியா இரசாயன ஆயுதங்கள் பாவித்தமைக்கான ஆதாரம் இருப்பதாகக் கூறிக் கொண்டு அதன் மீது தாக்குதல் நடத்த எத்தனிப்பதை ரஷ்யாவும் சீனாவும் கடுமையாக எதிர்க்கின்றன. அது ஒருபுறமிருக்க அந்த ஆதாரங்களை முதலில் ஐ.நாவிடம் தாக்கல் செய்து பாதுகாப்புச் சபையின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று ரஷ்யா ஆணித்தரமான ஒரு வாதத்தை முன்வைத்துள்ளது.

இரசாயன ஆயுதம் பாவிக்கப்பட்டமை நிரூபிக்கப்பட்டால் தாக்குதல் நடத்தி தண்டனை வழங்கப்படும் என்ற தன் நிலைப்பாட்டை செயற்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கமாக இருப்பதாகத் தெரிகின்றது. ரஷ்யா கூறுவதைப் போல் அமெரிக்கா தன்னிடமுள்ள ஆதாரங்களைப் பாதுகாப்புச் சபையில் சமர்ப்பித்தாலும் கூட அவைகளை ரஷ்யாவும் சீனாவும் அவை போன்ற சிரியாவுக்கு ஆதரவான நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் என்று கூறமுடியாது. மேலும் அந்த ஆதாரங்கள் உறுதிப்படுத்தக்கூடியவையாக இருந்தாலும் அதற்கான தண்டனை ஒன்று சிரிய அரசின் மீது திணிக்கப்படுவதை அவை அனுமதிக்கமாட்டா. எனவே தண்டனை வழங்குவதற்கான தீர்மானம் ஒன்று பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்படுமானால் அதனை ரஷ்யாவும் சீனாவும் தமது இரத்து (வீட்டோ) அதிகாரங்களைக் கொண்டு நிராகரித்து விடும் சாத்தியம் உண்டு.

எனவே அமெரிக்கா தாம் ஏற்கனவே எடுத்திருந்த தீர்மானத்தின்படி இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டிருப்பதற்கான தன்னிடமுள்ள ஆதாரங்களை வைத்துக் கொண்டு சிரியா மீது கட்டுப்படுத்திய அளவில் தாக்குதல் ஒன்றை நடத்துமா என்பது மிக விரைவிலேயே வெளிப்படையாகி விடும் என்று கருதலாம்.

### 90 நாள் காலக்கெடு

ஒபாமாவின் பெரு முயற்சியின் ஒரு பங்காக அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி செனட் சபை வெளியுறவுக் குழு உறுப்பினர்கள் மத்தியில் நிகழ்த்திய உரையொன்றை அடுத்து காங்கிரஸ் சபையினர் சிரியா மீதான நடவடிக்கைக்கு அங்கீகாரம் வழங்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவிருக்கிறார்கள். சிரியா மீதான நடவடிக்கையானது 90 நாள்களுக்குள் முடிவடைய வேண்டும் என்று தீர்மானம் வரையறை செய்துள்ளது.

கடந்த மாதம் சிரியாவின் டமாஸ்கஸ் நகரின் புறநகர்ப்பகுதிகளில் இரசாயன ஆயுதங்களைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதன் பின்னரும் நாம் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டு அக்கறையின்றி இருக்கப் போகிறோமா என்ற வகையில் உறுப்பினர்களை உசுப்பேத்தும்படியான ஒரு உரை நிகழ்த்தினார் கெரி.

90 நாள்களுக்குள் தாக்குதல் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல போரினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் தரையில் அமெரிக்க படைகள் இறங்கி செயற்படலாகாது என்றும் தீர்மானத்தில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

செனட் சபையின் வெளிவிவகார குழுவின் கூட்டத்தில் ஜோன் கெரி உரை நிகழ்த்திய போது, சாய்மனைக் கதிரையில் அமர்ந்து கொண்டு எதிலும் பட்டுக் கொள்ளாமல் இருப்பதற்கான காலமல்ல இது. படுகொலைகளைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருப்பதற்கான காலமல்ல இது. அமைதியாக இருப்பதன் விளைவுகளை எமது நாடோ எமது மனசாட்சியோ பார்த்துக் கொண்டு இருக்க முடியாது என்றார்.

சிரியாவிலிருந்து இதுவரை 20 லட்சம் மக்கள் போரின் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியிருக்கிறார்கள் என்று ஐ.நா.அகதிகள் நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

செனட் குழுவில் பின்னர் பாதுகாப்புச் செயலாளர் சக்ஹேகலும், செயலர் கெரியின் கருத்தையே வழிமொழிந்தார். இரசாயன ஆயுத பாவனையானது சிவப்புக் கோடாக இருக்கும் (றெட்லைன்) என்று அதிபர் ஒபாமா நிர்ணயித்திருக்கும் நிலையில் அமெரிக்கா செயற்படாமல் இருக்குமானால் வெளிநாடுகளில் அதன் நம்பகத் தன்மையை குறைத்துக் கணிப்பதாக அமைந்துவிடும் என்றார் அவர்.

இரசாயன ஆயுதப் பாவனையானது ராணுவ நடவடிக்கைக்கான சிவப்புக் கோடாக கருதப்படும் என்று ஒபாமா முன்னரே அறிவித்திருந்தாலும் காங்கிரஸின் அங்கீகாரத்தையும் பெறுவதற்காக அதனை பிற்போட்டிருந்தார்.

### திருப்தியான ஆதாரத்தை முன் வையுங்கள்

இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்பட்டிருந்தால் அதற்கான திருப்தியளிக்கும் ஆதாரங்களை ஐ.நா.பாதுகாப்புச் சபையில் மேற்கு நாடுகள் முன் வைக்க வேண்டும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார். இந்தக் குற்றச் செயலுக்கு காரணமானவர்கள் யார் என்று நிரூபனமானால் ரஷ்யா தீர்மானத்துடன் செயற்படத் தவறாது என்றும் அவர் கூறினார்.

என்ன விதமான ஆயுதங்கள் பாவிக்கப்பட்டன என்பது தெளிவாக நிரூபிக்கப்படுமானால் ரஷ்யா தீர்மானகரமான விதத்திலும் பாரதூரமான முறையிலும் செயற்படத் தயங்காது என்று கூறினார் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் புட்டின். எஸ்-3 ரக தொலைதூர ஏவு கணை களுக்குரிய சில பகுதிகளை சிரியா வுக்கு ரஷ்யா முன்பு வழங்கி யிருந்தது என்பதை ஏற்றுக்கொண்ட அவர், இப்பொழுது அந்த விநியோகம் நிறுத்தப்பட்டு விட்டது என்றார்.

### 3 ஆம் உலகப்போர் வெடித்தாலும் சிரியா விட்டுக் கொடுக்காதாம்

சிரியா மீது ராணுவ நடவடிக்கையொன்றை அமெரிக்கா எடுத்தாலும் அதன் மூலம் மூன்றாம் உலக போர் ஒன்றே வெடித்தாலும் கூட சிரியா விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று சிரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கத் தாக்குதலை எதிர்கொள்வதற்குத் தனது நட்பு நாடுகளின் ஆதரவை இப்போது சிரியா திரட்டி வருகின்றது.

அமெரிக்கத் தாக்குதல் ஒன்று ஏற்படுமானால் அதனைச் சகல வழிகளிலும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அதற்கான ஆயத்தங்களைச் செய்து வருவதாகவும் சிரியாவின் பிரதி வெளிநாட்டமைச்சர் பைசல் முக்தாத் ஏ.எப்.பிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

### பிரான்ஸ் -பிரிட்டன் ஒபாமாவுக்கு ஆதரவு

சிரியாவின் இந்தக் குற்றச் செயல் தண்டிக்கப்படாமல் போகக்கூடாது என்று பிரான்சின் அதிபர் பிரான்கொயில் ஹொலான்டே கூறியிருக்கிறார்.

இதேசமயம் சிரியாவின் மீது நடத்தப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகளைத் தாங்கள் ஏற்றுக் கொள்வதாக அரபு நாடுகள் அறிவித்துள்ளன என்று அமெரிக்க வெளியுறவு செயலர் செனட் குழு உறுப்பினர்களிடம் கூறினார்.

இதேவேளை ரஷ்ய போர்க் கப்பலான நஸ்டொச்சிவி இப்போது மத்திய தரைக் கடற்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளது. நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புக் கப்பலான அட்மிரல் பண்டெலேயெவ் ஏற்கனவே அதன் பகுதிக்குச் சென்றடைந்துள்ளது. நாசகாரியான ஸ்மெட்லிவியும் இந்தக் கப்பலணியுடன் விரைவில் சேர்ந்து கொள்ள விருக்கிறது.

சிரியப் பிரச்சினை தொடர்பாக அவசர செயற்பாடு ஒன்றை மேற்கொள்ள வேண்டியயேற்படுமானால் அதனை மிக எளிதாக நிறைவேற்றப்படக்கூடிய நிலையில் ரஷ்ய போர்க் கப்பல்கள் இருப்பதாக மொஸ்கோவில் இருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித குலமும் தமிழ்த் தேசியமும்



## மதவாத தேசியம்

### பிரிவினைக்குப் பொறுப்பாளி யார்?

பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்னோடியான அரசியல் நிகழ்ச்சிகளை நாம் அலசிப் பார்ப்போமானால் பிரிவினை ஏற்பட்டதற்கான காரணங்களையும் அதற்குப் பொறுப்பானவர்களையும்நாம் அறிந்து கொள்ள முடியும். சுதந்திரப் போராட்டக் காலத்தில் மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி அளிக்கப்படும் என வாக்குறுதி அளித்தனர் காங்கிரஸ் தலைவர்கள். காங்கிரஸ் மாநாடுகளிலும் தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

ஆனால் நாடு சுதந்திரம் பெறக் கூடிய கால கட்டத்தில் மாநில சுயாட்சிக்கு எதிரான நிலையை எடுத்தார்கள். இந்தத் திடீர் மாற்றத்துக்குக் காரணம் என்ன?

1938 ஆம் ஆண்டு சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் திரிபுராவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தில் மாநில சுயாட்சிக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

1946 ஆம் ஆண்டில் இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்கு வந்த பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவினரிடம் காங்கிரஸின் கொள்கை மாநிலங்களுக்குப் பூரண சுயாட்சி வழங்குவது தான் என்று கூறப்பட்டது.

பிரிட்டிஷ் அமைச்சரவை தூதுக்குழு அளித்த திட்டப்படி உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் 22.01.1947 இல் பிரதமர் நேரு முன்மொழிந்த குறிக்கோள் தீர்மானத்தில் மாநிலங்களின் சுயாட்சி உரிமை வலியுறுத்தப்பட்டது.

பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவினர் வெளியிட்ட திட்டத்தில் பிரிவினைக்கு மாற்றாக "மத்தியில் கூட்டாட்சி மாநிலங்களில் சுயாட்சி" என்ற கோட்பாடு வலியுறுத்தப்பட்டது.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்த மௌலானா அபுல் கலாம் ஆசாத் காங்கிரஸ் சார்பில் பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவிடம் அளிப்பதற்காக ஒரு திட்டத்தைத் தயாரித்தார்.

"இந்தியாவின் அரசியல் அமைப்பானது கூட்டாட்சி அமைப்பாகத்தான் இருக்க முடியும். கூடிய வரை அதிக அளவு அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கி, மாகாண சுயாட்சியை உத்தரவாதப்படுத்தும் வகையில் இந்தியக் கூட்டாட்சி அமைக்கப்பட வேண்டும்" என்று கூறினார்.

'ஏப்ரல் 12 ஆம் திகதி நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுவினரும், காந்தியடிகளும் இந்தத் திட்டத்தை முழு மனதுடன் வரவேற்றனர்.

பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக் குழுவும் இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க ஒப்புக்கொண்டது.

முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னா அவர்களுக்கும் இத்திட்டம் ஓரளவு ஏற்புடையதாக இருந்தது. அதன் விளைவாக இடைக்கால அரசிலும், அரசியல் நிர்ணய சபையிலும் இணைந்து பணியாற்ற முஸ்லிம் லீக் முன் வந்தது. சுமுகமான சூழ்நிலை உருவாகி இந்தியா இனிப் பிரிக்கப்படாது என்ற நம்பிக்கை உருவாயிற்று.

இந்த நேரத்தில் காங்கிரஸ் தலைவர் பதவியில் மாற்றம் ஏற்பட்டது. ஆசாத்துக்குப் பதில் நேரு காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை ஏற்றார். செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் "பிரிட்டிஷ் அமைச்சரவைத் திட்டத்துக்குக் காங்கிரஸ் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. தனக்கு உகந்ததென்று தோன்றும் வகையில் அந்தத் திட்டத்தை மாற்றவோ திருத்தவோ காங்கிரசுக்கு சுதந்திரம் உண்டு என்று கூறினார்.

முஸ்லிம் லீக் தலைவர்கள் இது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மாநில சுயாட்சியைக் காங்கிரஸ் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு விட்டது என்று நம்பித்தான் பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை முஸ்லிம் லீக் கைவிட்டது. ஆனால் பிரிட்டிஷ் திட்டத்தைத் திருத்த காங்கிரஸ் முயற்சி எடுக்குமென நேரு அறிவித்த பின் ஜின்னா ஆத்திரமடைந்தது நியாயமே. எனவே. காங்கிரஸ் தலைவரின் அறிக்கையின் விளைவாக நிலைமை முழுவதையும் மறுபரிசீலனை செய்ய அவசியம் நேரிட்டிருப்பதாக ஜின்னா அறிவித்தார்.

ஒகஸ்ட் 7 ஆம் திகதியன்று காங்கிரஸ் செயற்குழு கூடித் தெளிவில்லாத தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி முஸ்லிம் லீக்கைத் திருப்திப்படுத்த முயன்றது. ஆனால் எத்தகைய பயனும் இல்லை.

பிரிட்டிஷ் திட்டம் வழங்கிய மாநில சுயாட்சிக் கொள்கைக்குக் காங்கிரஸ் நிச்சயமாகக் குழி தோண்டி விடுமென்று முஸ்லிம் லீக் உறுதியாக நம்பியது. உடனடியாக லீக்கின் செயற்குழுவை ஜின்னா கூட்டினார். பிரிட்டிஷ் திட்டத்தை ஏற்றுப் பாகிஸ்தானைக் கைவிடுவது என முன்பு செய்திருந்த முடிவை ரத்துச் செய்தும் பாகிஸ்தான் கோரிக்கையைத் திரும்பவும் வற்புறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேரு மற்றும் பட்டேல் ஆகியோரின் மன மாற்றத்துக்கு என்ன காரணம் என்பது பற்றி மௌலானா ஆசாத் பின்வருமாறு கூறியுள்ளார்.

இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி வழங்குவதை விடச் சிந்து, மேற்குப் பஞ்சாப், கிழக்கு வங்காளம் எல்லைப்புற மாகாணம், பலுசிஸ்தான் ஆகிய மாகாணங்களை இழந்து எஞ்சியுள்ள இந்தியாவில் வலிமையான மத்திய அரசு ஒன்றை அமைப்பதே நல்லது என்று வைசிராய் மௌண்ட்பேட்டன் கூறிய யோசனை நேருவையும் படேலையும் கவர்ந்தது.

மற்றும் இந்துப் பெரு முதலாளிகள் மாகாண சுயாட்சியை விரும்பவில்லை. பலமான மத்திய அரசும் ஒன்றுபட்ட இந்தியாவும் இருப்பது தான் தங்களின் சுரண்டலுக்கு நல்லதென அவர்கள் நினைத்தார்கள். எனவே அவர்களும் நேருவையும் படேலையும் நெருக்கினார்கள். இதன் விளைவாகத்தான் காங்கிரஸ் தலைமையில் மனமாற்றம் ஏற்பட்டது.

பாகிஸ்தான் கோரிக்கையை ஜின்னா கைவிட்ட பிறகும் காங்கிரஸ் தலைவர்கள் ஜின்னாவின் சட்டைப் பையில் பாகிஸ்தானை வலுவில் திணித்தார்கள் என ஆசாத் எழுதிய "இந்திய விடுதலை வெற்றி" எனும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

வலிமையான மத்திய அரசு அமைப்பது என்ற பெயரால் பார்ப்பன-பனியா மேலாதிக்கத்தை நிலை நாட்டும் நோக்கத்துடன் தான் தேசிய இனங்களின் தன்னாட்சியை நேரு, படேல் ஆகியோர் கைவிட்டுள்ளனர் என்பதைக் காங்கிரஸின் முக்கிய தலைவரான ஆசாத் அம்பலப்படுத்தியிருக்கிறார். தேசிய இனங்களுக்குக் காங்கிரஸ் செய்த துரோகம் தான் பாகிஸ்தான் பிரிவினைக்கு வழி வகுத்தது என்பது தான் வரலாற்றுப் பூர்வமான உண்மையாகும்.

பழநெடுமாறன் நீண்ட காலமாகத் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுப்பவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளர். விடுதலைப் புலிகள் இயக்கம் வன்னியில் போராட்டங்களை நடத்தியபோது தமிழகத்திலிருந்து வந்து தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்துச் சென்றவர். இன்று வரைக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழகத்தில் இருந்தபடி தளர்வற்று தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருபவர். தமிழ்த் தேசியத்தை மனித குல வரலாற்றுடன் தொடர்புபடுத்தி அவர் எழுதும் புதிய தொடர் இது. பல நூல்களை, ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பின்னர் அவர் இந்தத் தொடரை எழுதுகிறார். ''தமிழினம் ஒரு தொல்லினம் மட்டுமல்ல செழுமையான பண்பாட்டுப் பரப்பை உருவாக்கி அதன் மீது ஒரு சீரிய நாகரிகத்தையும் உருவாக்கி உலகனைத்தும் தனது இருப்பை நிலைநிறுத்தி இருக்கும் ஓர் இனம் என்பதால் தமிழ்த் தேசியத்தை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இன்று தேசிய இனங்களின் வாழ்வும் சுயநிர்ணய உரிமையும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றன. இந்த நிலையில்தமிழினத்தின்தொன்மை குறித்தும், அது தேசிய இனமாக இயங்கி வந்திருப்பது குறித்தும் இந்தத் தொடர் விளக்குகிறது.



வலிமையான மத்திய அரசு அமைப்பது என்ற பெயரால் பார்ப்பன- பனியா மேலாதிக்கத்தை நிலை நாட்டும் நோக்கத்துடன் தான் தேசிய இனங்களின் தன்னாட்சியை நேரு, படேல் ஆகியோர் கைவிட்டுள்ளனர் என்பதைக் காங்கிரஸின் முக்கிய தலைவரான ஆசாத் அம்பலப்படுத்தி யிருக்கிறார். தேசிய இனங்களுக்குக் காங்கிரஸ் செய்த துரோகம் தான் பாகிஸ்தான் பிரிவினைக்கு வழி வகுத்தது என்பது தான் வரலாற்றுப் பூர்வமான உண்மையாகும்.

## மதவெறியால் அழிந்த வங்கமும் பாஞ்சாலமும்

சுதந்திரப் போராட்டத்தில் எண்ணற்ற தியாகங் கள் புரிந்து முன்னணிப் பங்கு வகித்த பெருமை பஞ்சாப், வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு உண்டு. வங்காளத்தில் இராஜாராம் மோகன்ராய், சி.ஆர். தாஸ், விபின் சந்திரபால், சரத் சந்திர போஸ், சுபாஷ் சந்திரபோஸ், அபுல்கலாம் ஆசாத், பசூல் ஹக், சுராவர்த்தி போன்ற தலைவர்கள் அரசியல் துறையிலும், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், அரவிந்தர் போன்றவர்கள் ஆன்மிகத் துறையிலும் இரவீந்திரநாத் தாகூர், பக்கிம் சந்திரர் இலக்கியத் துறையிலும் விஞ்ஞானத் துறையில் ஜகதீச சந்திரபோஸ் ஆகியோரும் இந்தியாவுக்கு வழிகாட்டினார்கள். இந்தியாவின் மிகப் பெரும் மாநிலங்களில் ஒன்றாக வங்காளம் திகழ்ந்தது. மேற்கு வங்கம், வங்காளதேசம் ஆகியவற்றின் இன்றைய மக்கள் தொகை 17 கோடி, இன்றைய இந்தியாவின் பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தின் மக்கள் தொகை 16 கோடிதான்.

வங்கம் மதரீதியாகப் பிளவுபடாமல் இருந்திருக்குமானால் இந்திய அரசியலில் வங்காளிகளின் கை ஓங்கியிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் வங்காளிகள் மதத்தால் பிளவுபட்டுப் போனார்கள். இந்து, முஸ்லிம் மோதல்களின் விளைவாக ஒட்டுமொத்தமாக வங்க தேசிய இனத்தின் வலிமை குன்றியது.

ஒரே தேசிய இனத்தைச் சேர்ந்த வங்க மக்கள் மதத்தால் வேறுபட்டு இரு நாடுகளாகப் பிரிந்து போயினர். அதன் விளைவை இரு வங்கப் பகுதிகளும் இன்னமும் அனுபவிக்கின்றன. சகல துறைகளிலும் முன்னேற முடியாமல் இரு நாடுகளையும் சேர்ந்த வங்க மக்கள் தவிக்கின்றனர்.

பஞ்சாபின் நிலைமையும் இது போலானது. ஒன்றுபட்ட பஞ்சாப் மாநிலம் மேற்குப் பஞ்சாப், பஞ்சாப், அரியானா, இமாச்சலப் பிரதேசம் என 4 சிறிய மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்து, முஸ்லிம், சீக்கியர் என மதவழியாகப் பிளவுபட்ட பஞ்சாபிய இனம் தான் அடைந்திருக்கும் சரிவிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1945 ஆம் ஆண்டில் ஜெர்மனியைத் துண்டுகளாகக் கூறுபோட்டு வல்லரசுகள் பங்கிட்டுக் கொண்டன. சிறிய காலம் கழித்து அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவை தங்கள் வசம் இருந்த பகுதிகளை ஒன்றாக்கி மேற்கு ஜேர்மனி என்ற பெயரைச் சூட்டித் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டன. கிழக்கு ஜேர்மனி சோவியத் நாட்டின் கட்டுப்பாட்டில் இருந்தது. 50 ஆண்டுகளுக்குப் பிறகு இரண்டு ஜேர்மனிகளும் ஒன்றிணைக்கப்பட்டன. மீண்டும் ஜேர்மனி எழுந்து நிற்பதற்கு அரை நூற்றாண்டுக் காலம் ஆகியிருக்கிறது. மிகவும் முன்னேறிய நாடான ஜேர்மனி எழுந்து நிற்கவே அரை நூற்றாண்டு ஆகுமென்றால் மிகவும் பின்தங்கிய வங்கமும், பஞ்சாப்பும் மீண்டு ஒன்றுபடுவது எப்போது? வளமும் வலிமையும் பெறுவது எப்போது? மத ரீதியான தேசியப் பிற்போக்குத் தனமானதும் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையானதுமாகும் என்ற உண்மையை உணர்ந்தால் ஒழிய பஞ்சாபியருக்கும், வங்காளியருக்கும் விடிவு வரப்போவது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்சா.ஜோ

# தேர்தலின் நாயகர்கள் நினைப்பது என்ன?

## மக்களோடு மக்களாக ஓர் ஊடாட்டம்



வடமாகாண சபைத் தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. தேர்தல் பரப்புரைகள் அனல் பறக்க இடம்பெற்று வருகின்றன. தேர்தல் களத்தில் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் வாக்காளர்கள்தான் செப்ரெம்பர் 21 வரை நாயகர்கள். ஆட்சியை தெரிவு செய்யும் அதிகாரம் மக்கள் கைகளில்தானே உள்ளது.

உலகின் பார்வையைத் தன் பக்கம் ஈர்த்துள்ள வடமாகாண சபைத் தேர்தல் தமிழ் மக்கள் மத்தியிலும் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. எனினும் தேர்தல் குறித்து மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அறியப் புறப்பட்டோம்.

"தமிழ் மக்கள் தமக்கான தலைவரை தாமே தெரிவு செய்வதற்கான அரிய சந்தர்ப்பம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் முதன்மை வேட்பாளரை முதலமைச்சராக்கி அவர் மூலமாக இழக்கப்பட்ட எமது உரிமைகளை நாம் பெறவேண்டும். நாம் தமிழனாகப் பிறந்தோம். அவ்வாறே வாழ்வோம், சாவோம் என அரசுக்கு நிரூபிக்க வேண்டும்" என்கிறார் முல்லைத்தீவில் வசிக்கும் அரச உத்தியோகத்தர் ஒருவர்.

அரச பணியில் இருந்த போதிலும் பலர் தமிழ்த் தேசியம் என்ற உணர்வை இன்னும் நெஞ்சில் பூட்டி வைத்திருக்கிறார்கள் என்பதை உணர முடிந்தது. அவர்களது நெஞ்சக் கதவுகளை இராணுவ ஆளுநர்களால் ஒருபோதும் திறந்துவிட முடியாது என்பதும் புரிந்தது.

இருப்பினும் தேர்தல் தொடர் பான பூரணமான விளக்கத்தினை எந்தவொரு கட்சியும் மக்களுக்கு தெளிவுபடுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் உள் ளது. மக்களை அறியாமைக்குள் வைத்து வாக்களிக்கச் செய்து தேர்த லில் வெற்றி பெற கட்சிகள் முனைகின்றன என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

"களமிறங்கியுள்ள கட்சிகள் சமூக விஞ்ஞான ரீதியில் மக்களுக்கு தேர்தல் பற்றிய எவ்வகையான விளக்கத்தினையும் கொடுக்க வில்லை. தெளிவின்மைக்குள் வைத்தே வாக்கைப் பெற முயற்சிக்கின்றனர். வட மாகாண மக்கள் இறுகிய மனங் களோடும் போலியான சிரிப்போடும் வாழ்கின்றார்கள். இந்த நிலை மாறவேண்டும். தேர்தலின் பின் இன ஐக்கியம் காணப்படவேண்டும். ஆனால் நடைபெறும் தேர்தல் பரப்புரைகளைப் பார்க்கும்போது பிரி வினைகள் வலுக்கும் போன்றே தெரிகின்றது" என்கிறார் நீர்வேலியைச் சேர்ந்த க.சீலன்.

தமிழ் தேசிய கூட்டமைப்புத் தான் வெல்லும் என்ற கருத்தில் உள்ளவர்களே அநேகர். இவர்களில் பெரும்பாலானோர் வயதிலும் அனுபவத்திலும் உயர்வாகவே உள்ளனர். யாழ். நகர மத்தியில் கடை ஒன்றில் பணிபுரியும் ஒருவர் "கூட்டமைப்பினரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று. இதுவே எமக்குரிய உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி. நாட்டில் சம உரிமை நிலவினால் தான் மக்கள் நிம்மதியாக வாழமுடியும்" என்கிறார்.

"இழக்க வேண்டியதையெல்லாம் இழந்த பின் தேர்தல் நடந்தால் என்ன? நடக்காவிட்டால் என்ன? என்னைப் பொறுத்தளவில் வட மாகாண சபைத் தேர்தல் என்பது இனித் தேவை யில்லாத ஒன்று. இது இழந்த எந்தவொரு உரிமையையும் பெற் றுத் தரப்போவதில்லை". என்று கொந்தளிக்கிறார் தனியார் நிறுவனம் ஒன்றில் விற்பனைப் பிரதிநிதியாக பணியாற்றி வரும் இளைஞர் ஒருவர்.

இளைஞர்கள் மத்தியில் தேர்தல் தொடர்பான ஆர்வம் சற்றுக் குறைவாகவே காணப்படுகின்றது. "இத்தனை இழப்புக்களின் பின்னர் இனியொரு தேர்தலா எமக்குத் தீர்வினைப் பெற்றுத் தரப்போகின்றது?" என்பது அவர்களது கேள்வி.

இருப்பினும் இதுவரை காலமும் வடக்கில் இல்லாத மாகாண சபை முறைமையை வரவேற்கும் அவர்கள் வளமான எதிர்காலத்திற்காக காத்திருக்கிறார்கள்.

இன்றுவரை வடக்கில் மாகாண சபை முறைமை இல்லாத நிலைமை குறித்து தமது அதிருப்தியையும் வெளியிடுகின்றனர். யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய நிபுணர் எஸ். நிமலன். "நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நடைமுறையிலுள்ள மாகாண சபை முறைமை வட மாகாணத்திற்கு தற்போதுதான் நடை முறைக்கு வருகின்றது. இதுவரை காலமும் இங்கு இம்முறைமை இல் லாதது வரலாற்றுத் தவறு. தேர்த லின் பின்னர் பதவிக்கு வரும் வேட் பாளர்கள் மக்களுக்காக பணியாற் றினால் சிறந்ததொரு எதிர்காலம் வடமாகாண மக்களுக்கு உண்டு" என்றார் அவர்.

வடமாகாண சபைத் தேர்தலில் இளையோருக்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட்டது குறைவு என்ற கருத்தும் இளைஞர்கள் மனதில் வடுவாக பதிந்துள்ளது. இளையோரை களமிறக்கியிருந்தால் வடமாகாணத்துக்கு வளமான எதிர்காலம் அமைந்திருக்கும் என்று எண்ணுகின்றனர் பல்கலைக்கழக மாணவர்கள். "வட மாகாணத்திற்கு தற்போது தேவையானது மாற்றம். அதனை தேர்தல் மூலமாகவே உருவாக்க முடியும். வளமானதொரு எதிர்காலம் வட மாகாணத்துக்கு உண்டு. வேட்பாளர் பட்டியலில் இளையோருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டது குறைவு. இளைய சமுதாயத்தினர் அனுபவசாலிகளுடன் இணைந்து பணியாற்றும் போது அவர்களுக்கும் தலைமைத்துவம், அனுபவங்கள் கிடைக்கும். இதுவே அவர்களது எதிர்கால அரசியல் வாழ்க்கைக்கு பலமாக அமையும்" என்று கூறுகிறார் ஊடகத்துறை மாணவன் சி. கிருபாகரன்.

பெண்கள் இந்தத் தேர்தலில் கவனிக்கப்படவேயில்லை என்ற கொதிப்பு பெண்ணுரிமைவாதிகள் பலரிடம் இருக்கிறது. "வாக்களிக்கப் போகிறவர்கள் அரைவாசிக்கும் அதிகமானவர்கள் பெண்கள்தான் என்பதை இந்த ஆண்கள் மறந்துவிட்டார்கள். நாங்கள் நினைத்தால் இவர்களைத் தோற்கடிக்க முடியும்" என்று கோபத்தில் சீறினார் பெண்ணுரிமைவாதி ஒருவர்.

"எதுவும் வேண்டாம். நிம்மதியான வாழ்க்கை போதும்" எனக் கூறுபவர்களும் இல்லாமல் இல்லை. மக்கள் அரசியல் இலாபங்களை உரிமைகளைச் சாய்ந்து கொடுக்காமல் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்கின்றனர் அவர்கள்.

யாழ். நகர் மத்தியில் உள்ள கடை ஒன்றின் உரிமையாளர் கூறும்போது, "நிம்மதி யாக வாழ்வதற்கு நல்லாட்சி தேவை. பல வருட காலத்துக்குப் பின்னர் மாகாணசபைத் தேர்தல் நடைபெறு கின்றது. இந்த நிலையில் நாம் உரிமைகளை இழந்தது மட்டுமன்றி அவற்றினை மீளப் பெறக்கூடிய பல சந்தர்ப்பங்களையும் தவறவிட்டு விட்டோம். இந்தத் தேர்தல் எமக் கான இறுதிச் சந்தர்ப்பம். உரிமை களுக்காக ஒன்றிணைய வேண்டும்" என்கிறார்.

தமக்கான உரிமைகள், அங்கீகாரம் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான பலத்த எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் மக்களுக்குத் தேர்தல் என்ன கொடுக்கப் போகின்றது? நாம் தமிழர்கள், தமிழை விட்டுக் கொடுக்காமல் சரியான தீர்வினை எம்மால் பெற முடியும், எமது உரிமைகளை பெற்றுக் கொள்ள எமக்கான இறுதிச் சந்தர்ப்பமே வடமாகாணசபைத் தேர்தல் என்பதே வடமாகாண மக்களின் பெரும்பாலான கருத்தாக வெளிப்படுகின்றது.



# மாற்றம் காண்பது எப்போது

> எனக்கு முன்னால் இருந்த மூதாட்டி அந்தத் தாதிக்கு உறவாக அல்லது தெரிந்தவராக இல்லாத படியால் சுமார் ஒரு மணித்தியால நகர்வின் பின் வைத்தியர் ஒருவரைச் சந்தித்தார்.

வன்னிப் பெரு நிலப்பரப்பிலே வீரம் செறிந்த முல்லை மாநகரிலே பஞ்சமென்றறியாத முள்ளியவளையிலே அமைந்துள்ளது அந்த வைத்தியசாலை. பெயருக்கு ஏற்றாற் போல் மாமரங்களால் நிறைந்ததுதான் அந்த வைத்தியசாலை. அங்கு நோய்க்கு மருந்து வாங்க வருபவர்களை விட மன நிம்மதிக்கு இளைப்பாற வருபவர்கள் அதிகம். அந்த சோலையில் அமைதியும், குளிர்மையும் கலந்த ரம்மியமான சூழல் எப்போதும் இருக்கும். அந்தச் சூழலில் பிறக்கும் குழந்தைகளின் வாழ்க்கை சீராக அமையும் என்பது எமது ஐதீகம். சரியான இடத்தைத் தேர்வு செய்துதான் வைத்தியசாலை கட்டியிருக்கிறார்கள். கறுப்பு நிறக் கண்ணாடி பொருத்தப்பட்ட பிரமாண்டமான மாடிக் கட்டடம் கண்டவுடன் புல்லரிக்க வைக்கும். பாலூட்டும் தாயின் உருவச்சிலை நம்மை வரவேற்க உள்நுழைந்தோம்.

வெளி நோயாளர் பிரிவில் எமது பெயரைப் பதிவு செய்து சிட்டையைப் பெற்றுக் கொண்டு வரிசையில் போய் நின்றோம். எமக்கு முன்னும் பின்னுமாக வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள், நோயின் தாக்கம் கூடியவர்கள் என நின்றிருந்தனர். வைத்தியரை சந்திக்கச் செல்லும் அறை வாசலில் ஒரு தாதி நின்று நோயாளிகள் வைத்தியரைச் சந்திப்பதற்கான ஒழுங்குபடுத்தல்களைச் செய்து கொண்டிருப்பார்.

இடையிடையே அவர் தனக்குத் தெரிந்தவர்களையும், உறவினர்களையும் சிட்டை பெற்றவுடன் உட்செல்ல அனும திப்பார். எனக்கு முன்னால் இருந்த மூதாட்டி அந்தத் தாதிக்கு உறவாக அல்லது தெரிந்தவராக இல்லாத படியால் சுமார் ஒரு மணித்தியால நகர்வின் பின் வைத்தியர் ஒருவரைச் சந்தித்தார். அந்த மூதாட் டியைப் பரிசோதித்த வைத்தியர் இரண்டு குளிசைகளின் பெயரை எழுதிக் கொடுத்துவிட்டு "வவுனியா கொஸ்பிட்டலில் கொண்டு போய் காட்டுங்க" என்றார். அதற்கு அந்த வயோதிபப் பெண் என்ன கூறினார் தெரியுமா? "வர்ர எல்லாரையும், யாழ்ப்பாணமும், வவுனியாவும் போங்க எண்டு சொன்னா பிறகு எதுக்கு இங்க கொஸ்பிட்டல் கட்டி இவ்வளவு பேருக்குச் சம்பளமும் கொடுத்து வேலைக்கு வைச்சிருக்கீங்கள்" என்றார். சபாஷ் கிழவி! நீ கேட்டது தான் சரி. ஆனா கேட்ட இடம் தப்பு. என மனதிற்குள் நினைத்துக் கொண்டு அடுத்ததாக நான் சென்று வைத்தியரைச் சந்தித்து எனது நோயைச் சொன்னேன். அவரும் என்னைப் பரிசோதித்துவிட்டு ஒரு தனியார் மருந்த கத்தின் பெயரைச் சொல்லி அங்கு கொண்டு போய் காட்டும்படி கூறினார். ஆம்! என பக்குவமாய் தலையசைத்துவிட்டு வெளியில் வந்து பார்த்தேன். பாவம் வைத்தியர் இவ்வளவு பேருக்கும் ஒரு பதிலைத் திரும்பத் திரும்ப கூறவேண்டி இருக்கிறதே. பேசாம ஒரு போட்ட வாசலில போட்டுட்டு வைத்தியர் உள்ளுக்குள் இருந்தா பிரச்சினை சுலபமாயிடும் என்ற சிந்தனையுடன் வைத்தியசாலையை விட்டு வெளியேறினேன். மாலை ஆறு மணிக்கு வைத்தியர் கூறிய மருந்தகத்துக்குப் போய் பார்த்த எனக்கு ஐந்தும் கெட்டும், அறிவும் கெட்டது. வைத்தியசாலையில் நான் பார்த்த அந்த வைத்தியர் தான் இங்கும் இருந்தார்.

வைத்தியசாலையில் சகல வசதியுடனும் சகல பிரிவுகளும் உண்டு. இருப்பினும் இரத்தம், சிறுநீர் பரிசோதனைக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு தனியார் மருத்துவமனைகளை நாட வேண்டியிருந்தது. இதற்கெல்லாம் ஒரே வழி முல்லைத்தீவு மாவட்ட அரச வைத்தியசாலை என்ற பெயரை மாற்றி தனியார் வைத்தியசாலை என எழுதினால் நன்மைகள் அதிகம். ஒரு செலவில் அலைச்சல் இல்லாமல் மருந்தைப் பெற்றுக் கொள்ளலாம். இன்னுமொரு நன்மை யாதெனில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிறைய கட்டடங்களும் மூடப்பட்டுவிடும்.

மாற்றம் என்பது மனங்கள் மாறினால் மட்டுமே சாத்தியம்

இ. புவி
முள்ளியவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயம் 02 09 2013

கற்றது தமிழ் படத்துக்குப் பிறகு ராம் இயக்கியிருக்கும் படம் 'தங்க மீன்கள்'. ஆண்டுகள் பல ஆனாலும், தரமான திரைப்படத்தையே இயக்குவேன் என்ற ராமின் பிடிவாதத்துக்கும், சினிமா மீது உள்ள பார்வைக்காகவும் அவரை முதலில் பாராட்ட வேண்டும்.

மகளுக்கு பிடிக்கும் என்பதால், கட்டணம் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டாலும், பாத்திரங்களை செப்பனிடும் கடையில் வேலைப் பார்க்கும் ராம், தனது மகளின் தனியார் பாடசாலைக் கட்டணத்தை கட்ட முடியாமல் தவிக்கிறார். தனது தந்தையின் ஆதரவில் இருக்கும் ராம், அவரிடம் பணத்தை வாங்குவதை அவமானமாக எண்ணுகிறார். அதே சமயத்தில் தனது நண்பரிடம் கடன் கேட்டு அவமானப்படுகிறார்.

இதற்கிடையில் தனது அப்பாவுடன் ஏற்பட்ட பிரச்சினையில் தனது மனைவி, மகளை விட்டுவிட்டு தனியே கொச்சிக்கு செல்கிறார் ராம். அங்கேயே இரவு பகல் பாராது வேலை பார்க்கிறார். ஊருக்கு ராம் வர நினைக்கும் சந்தர்ப்பத்தில் அவருடைய மகள் அவரிடத்தில் 'வோட போன்' நாய்க் குட்டி வேண்டும் என்று கேட்கிறார். அதன் விலையை என்னவென்று அறியாமல், இரண்டாயிரம் ரூபாயை எடுத்துச்செல்லும் ராமிற்கு, அதன் விலை 25,000 ரூபாய் என்பது தெரிகிறது. அதே நேரத்தில் தனது அப்பா, 'வோட போன்' நாய்க் குட்டியை வாங்கி வர மாட்டார் என்று நினைத்து, குளத்தில் குதித்து இறந்து தங்க மீனாகி விடலாம் என்று அவருடைய மகள் முடிவு செய்கிறாள்.

அவள் தங்க மீனாக ஆனாளா அல்லது ராம் அவளை மீட்டு வந்தாரா என்பதுதான் படத்தின் முடிவு.

தனது முதல் படத்தைப்போலவே காட்சிகளுக்கும், கதாபாத்திரங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கும் இயக்குநர் ராம், அப்பா, மகளுக்கு இடையே உள்ள பாசப் போராட்டத்தை, வணிக ரீதியான படமாக அல்லாமல், யதார்த்தமான படமாக உருவாக்க முயற்சித்திருக்கிறார். அதில் வெற்றியும் கண்டுள்ளார். எனினும் இடையிடையே கதைக்காக சில சினிமாத்தனமான விஷயங்களை கையாண்டுள்ளதை ஏற்க முடியவில்லை.

இயக்குநர் ராம் அப்பாவாக, கதையின் நாயகனாக நடித்துள்ளார். இந்த கதாபாத்திரத்திற்கு ராமைத் தவிர வேறு யாரும் இவ்வளவு கச்சிதமாகப் பொருந்தியிருக்க மாட்டார்கள், என்று சொல்லும் அளவுக்கு கதாபாத்திரத்துடன் ஒன்றி நடித்துள்ளார். ஆசிரியர்களுடன் தனது மகளுக்காகப் பரிந்து பேசுவது, தனது மகள் விலை உயர்ந்த நாய்க்குட்டியை கேட்டாலும், தனது மகள் பக்கம் உள்ள நியாயத்தை எடுத்து சொல்வது என ஒவ்வொரு காட்சியிலும் ராம் நடிப்பில் பளிச்சிடுகிறார்.

கதாபாத்திரத்தில் மட்டும் அல்ல, நடிப்பிலும் ராமிற்கு இணையாகவே நடித்துள்ளார் ராமின் மகளாக வரும் யார்? எந்தவிஷயமாக இருந்தாலும், வெகுளியாக கேள்வி கேட்பது என்று சின்ன சின்ன முக வெளிப்பாடுகள் மூலம் பார்ப்போரைக் கவர்ந்திழுக்கிறார்.

ராமின் மனைவியாக நடித்திருக்கும் நடிகை, மகேந்திரன், பாலுமகேந்திரா படங்களில் வரும் நாயகியைப் போல இருக்கிறார்.

நடிப்பிலும் மிளிர்கிறார். நிறைய வாய்ப்புகள் தொடர்ந்து அவருக்கு கிடைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

ராமின் அப்பாவாக வரும் பூ ராமுக்கு, நல்லாசிரியர் விருது பெற்று ஓய்வு பெற்ற ஓர் ஆசிரியரின் பாத்திரம். கோபத்தில் பளார் பளார் என ராமின் கன்னத்தில் அறைந்துவிட்டு "சீ போடா" என்று சொல்லுமிடத்திலும்



தனது மகளிடம் இருக்கும் குறைகளை கூட நிறையாக எண்ணி, தனது மகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் ஒட்டு மொத்த அப்பாக்களுக்குமாக இந்த படத்தை படமாக்கியிருக்கிறார் ராம். தங்க மீன்கள் தமிழ் சினிமாக் கடலில் ஜொலிப்பது நிச்சயம்.




தொகுப்பு:
ஆதங்கன்



## திரை விமர்சனம்

சரி, தனது மகன் ரொம்ப நல்லவன், அவன் கொஞ்சம் கெட்டுப்போய் தான் வரட்டுமே என்று, தனது மகனின் நிலையை நினைத்து வருந்தும் இடத்திலும் சரி, ராமின் வேதனைகளை தன்னில் பிரதிபலித்திருக்கிறார் பூ ராம்.

பாடல்கள், பின்னணி இசை எல்லாமே ரசிக்க வைக்கின்றன என்றாலும் "ஆனந்த யாழை மீட்டுகிறாய்..." பாடல் எல்லாவற்றுக்கும் ஒரு படி மேல். படத்தின் அடுக்கடுக்காய் பல வசனங்கள் அழுத்தமாக வந்து போகின்றன.

தந்தைக்கும், மகளுக்கும் இடையே உள்ள பாசப்போராட்டத்தை ராம், மிக அழகாகக் காட்டியிருக்கிறார். என்றாலும் அதற்காக தனது அப்பாவிடம் பணம் வாங்குவதை அவமானமாக கருதும் அவர், நண்பரிடம் கடன் கேட்டு அவமானப்படுவது ஏனோ? அதே போல தனது மகள், தனது அப்பாவால், வாங்கிக்கொடுக்க முடியாத விலை உயர்ந்த பொருள்களை பள்ளியில் இருந்து திருடி விட்டேன் என்று கூறி, அழி இறப்பர், பென்சில் போன்ற சில சிறிய பொருள்களைக் காட்டுகிறார். இவற்றையெல்லாம் வாங்கிக்கொடுக்க முடியாத தந்தை தான், இந்த கதாபாத்திரம் என்று காட்டுவது சினிமாத்தனமாக உள்ளது. 25,000 ரூபாய் விலை உள்ள நாய் குட்டியை வாங்கிக்கொடுக்க போராடும் ஒரு தந்தை இந்த சிறிய பொருள்களை வாங்கிக் கொடுத்திருக்க மாட்டாரா என்ன?

ரசிகர்களின் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே, ராம் கையாண்டுள்ள சில விஷயங்கள் படத்துக்குப் பலவீனமாக அமைந்துள்ளன. மற்றபடி "நாய்க்குட்டியை டிவியில் பார்த்த எனது மகளுக்கு அதன் விலை 25,000 இருக்கும் என்பது தெரியாது. அப்படி தெரிந்திருந்தால் அதை என்னிடம் கேட்டிருக்க மாட்டாள்" என்று ராம் செல்லும் இடம் திரையரங்கமே அதிரும் கைதட்டல் ஓசையை எழுப்புகிறது.

தனது மகளிடம் இருக்கும் குறைகளை கூட நிறையாக எண்ணி, தனது மகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் ஒட்டு மொத்த அப்பாக்களுக்குமாக இந்த படத்தை படமாக்கியிருக்கிறார் ராம். தங்க மீன்கள் தமிழ் சினிமாக் கடலில் ஜொலிப்பது நிச்சயம்.

## ரஜினிக்கு முதலிடம்

இந்தியாவின் சிறந்த மனிதர் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார் தமிழ் சினிமாவின் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்.

என்.டி.டி.வி. என்ற தொலைக்காட்சி நிறுவனம் தன்னுடைய வெள்ளிவிழா நிறைவை முன்னிட்டு இந்தியாவில் வாழ்ந்து வரும் சிறந்த மனிதர்கள் யார் என்ற கருத்துக்கணிப்பை பொதுமக்களிடையே நடத்தி வருகின்றது.

இதில் இந்தியாவிலுள்ள மிகச் சிறந்த ஆளுமைகளாக 25 பேரின் பெயரை அந்த நிறுவனம் வெளியிட்டிருந்தது. அந்தப் பட்டியலில் சச்சின் டெண்டுல்கர், அப்துல் கலாம், ஏ.ஆர்.ரஹ் மான், மகேந்திரசிங் டோனி, கபில்தேவ், ரத்தன் டாடா, அமிதாப் பச்சன், ரஜினிகாந்த் ஆகிய பிரபலங்களின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன.

இந்தக் கருத்துக் கணிப்பில் இணையம் மூலமாகவோ தபால் மூலமாகவோ எஸ்.எம்.எஸ். மூலமாகவோ கலந்துகொள்ளும் பொதுமக்கள் தங்கள் அபிமானத்துக்குரிய பிரபலத்துக்கு வாக்களிப்பதன் மூலம் அவர்களை சிறந்த மனிதர்கள் பட்டியலில் முன்னேற்ற முடியும். இந்தக் கருத்துக் கணிப்பு ஆரம்பித்து முதல் மூன்று தினங்களும் ரஜினிகாந்த் ஐந்தாம் இடத்திலேயே இருந்தார். ஆனால் நான்காம் நாள் அதிக வாக்குகளைப் பெற்று தற்போது இந்தியாவில் உயிரோடுள்ள சிறந்த மனிதர்கள் என்ற பட்டியலில் முதலிடத்துக்கு ரஜினி முன்னேறி விட்டார். என்றாலும் இந்த முதலிடம் இன்னும் நிரந்தரமாகவில்லை.

கருத்துக்கணிப்பு இந்த மாதம் முழுவதும் நடைபெறவுள்ளதால் தர வரிசையில் ஏற்ற இறக்கங்களை ரஜினி சந்திக்க வேண்டியும் இருக்கலாம். இந்தத் தர வரிசையில் நான்காம் இடத்தில் ஏ.ஆர்.ரஹ்மானும் ஏழாம் இடத்தில் டோனியும் பத்தாம் இடத்தில் அமிதாப் [illegible] உள்ளனர். [illegible] தரவரிசையைத் தீர்மானிக்க இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் வசீகரிக்க

வலிமைமிக்க, நீடித்து, நிலைக்கக் கூடிய வசீகரிக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளும் வழிகள்

நிலாமகன்

### அரங்கத்துக்கு உள்ளே, அரங்கத்துக்கு வெளியே

நாடகம் தொடங்குவதற்கு முன்பு திரை விலகுகிறது. நடக்கப் போவதை கவனிக்கத் தயாராக இருப்போம். அத்துடன் மேடையில் தோன்றும் கதாபாத்திரங்களைப் பற்றிய நம் தீர்ப்பைக் கூறவும் தயாராக இருப்போம். ஆனால் நிஜ வாழ்க்கை இதை விட எளிதானது. அதில் திரை விலகுவது என்பது கிடையாது. அதற்குப் பதிலாக.நாம் மேடையில் இருக்கிறோமா அல்லது வெளியேறிவிட்டோமா என்பதை அறியாமலே நாம் நடித்துக் கொண்டு இருப்பதை உணர்வோம்.

மர்லின் மன்றோ பற்றிய சுவையான ஒரு கதை உண்டு. ஒரு நண்பருடன் மன்றோ கடைத்தெருவுக்குச் சென்றார். யாருமே அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை என்பதைக் கண்டு நண்பர் ஆச்சரியப்பட்டார். தான் அப்போது மேடையில் இல்லை என்று மன்றோ அவருக்குப் புரிய வைத்தார். அதை நிரூபிப்பதற்காகத் தன்னுடைய 'நடிகை தன்மையை' வெளிப்படுத்த ஆரம்பித்தார். சில நொடிகளில் அவரிடம் கையெழுத்து வாங்குவதற்கு மக்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு அவரை நெருங்கியது.

வேலைக்கு விண்ணப்பித்திருக்கிறீர்கள். நேர்காணல் இன்னும் தொடங்காததால் நீங்கள் மேடையில் இல்லை என்று நினைப்பீர்கள். ஆனால் நீங்கள் வாயிலில் நுழைவதற்கு முன்போ. அல்லது அழைப்பு மணியை அழுத்துவதற்கு முன்போ திரை விலகத் தொடங்குகிறது. வரவேற்பாளருடன் பேசும் போதோ. காத்திருக்கும் போதோ. கை குலுக்கும் போதோ. நேர் காணலுக்கு முன்னால் நீங்கள் அமர்ந்து படித்துக் கொண்டிருக்கும் போதோ திரை விலகிவிடுகிறது.

பிரிட்டனின் ரோயல் மெயில் நிறுவனத்தின் தலைவர் ஆலன் லெய்டான், ஒரு நிறுவனத்தில் தான் நடத்திய ஓர் ஆய்வைக் குறிப்பிடுகிறார். அந்த நிறுவனம் ஊழியர்களின் 50 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுடைய பத்தாண்டு கால முன்னேற்றத்தை ஆராய்ந்தார். கீழ்மட்ட வேலையிலிருந்து முன்னேறி. ஒப்பீட்டளவில் சிறிய வயதிலேயே அவர்கள் உயர் நிலையை அடைந்திருந்தார்கள்.

"அவர்களைத் தேர்ந்தெடுத்த உயர் அதிகாரியின் 'முதல் அபிப்பிராயம்' என்பதுதான் அவர்களிடையே காணப்பட்ட ஓரளவுக்குப் பொதுவான காரணி-அது உள்ளுணர்வு. அந்த முதல் அபிப்பிராயம் அல்லது எண்ணப் பதிவுதான் தேர்வுக்கான அடிப்படை விதியாக ஆயிற்று" என்று குறிப்பிட்டார்.

ஓர் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்களையும் சேர்த்து எல்லோரும் அவரவர் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றும். அப்போது உங்களை யாரும் கவனிக்கவில்லை. நீங்கள் மேடையில் இல்லை என்று எண்ணுவீர்கள். உண்மையில் மற்றவர்கள் உங்களையும் உங்கள் நடவடிக்கைகளையும் கவனித்துக் கொண்டிருப்பார்கள்.

நீங்கள் விரும்புகிறீர்களோ இல்லையோ. மேடையில்தான் நீங்கள் இருக்கிறீர்கள்.

அதனால் மற்ற மனிதர்களின் மீதான உங்கள் தாக்கத்தைப் பற்றி அறிந்து கொள்வது முக்கியமானதாகிறது. மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பது உங்கள் வாழ்க்கை. தனிப்பட்ட உறவுகளிடம் ஏற்படுத்தும் பாதிப்பு. வீட்டில். அலுவலகத்தில். அவ்வப்பகுதி பொதுக் குழுக் கூட்டம். பெற்றோர். ஆசிரியர் சந்திப்பு போன்ற எல்லாவற்றிலும் மிகப் பெரிய வேறுபாட்டை ஏற்படுத்தும்.

உங்களுடைய தாக்கம் என்பது உங்களுடைய சொந்தப் பணம் போன்றது. வசீகரம் செய்யும் கலையில் நீங்கள் அதிகம் தேர்ச்சி பெறவேண்டும். நீங்கள் ஏற்படுத்தும் தாக்கம். நீங்கள் எந்த அளவுக்கு இந்தக் கலையில் தேர்ச்சியடைந்து இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்துள்ளது.

மற்றவர்கள் மகிழ்ச்சியோடு நினைவில் கொள்வார்கள் என்பதற்காகப் பலரும் சாதகமான ஒரு முதல் அபிப்பிராயத்தை வெளிப்படுத்த விரும்புகிறார்கள். மேலும். அதிக அளவில் தன்னம்பிக்கையோடு எண்ணங்களை வெளிப்படுத்தி. மற்றவர்களின் மனத்தில் நல்ல விதமான அபிப்பிராயத்தை விட்டுச் செல்வதையே நம்மில் பலரும் விரும்புகிறோம். இது முழுவதுமாகச் சாத்தியமாகக் கூடியதே.

பாசாங்கு செய்துகொண்டு போலியாக இல்லாமல். சாமர்த்தியமாக மற்றவர்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல். இயல்பாகவே அத்தகைய சூழ்நிலைகளை எதிர்கொண்டு. அத்திறமையை எப்படி வளர்த்துக்கொள்வது என்பதை நீங்களே தேர்ந்தெடுக்கலாம். நாங்கள் நடத்தும் வகுப்புகளில் பலருக்குக் கற்பித்தும். பயிற்சி அளித்தும் இத்தகைய முடிவுகளைச் சாதித்துள்ளோம். அந்த வழிமுறைகளை இப்போது உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். எளிமையாகச் சொல்வதென்றால் உங்களுடைய சிறப்பான வசீகரிக்கும் ஆற்றலை நாம் இப்போது ஆராயத் தொடங்குகிறோம்.

மற்றவர்களுடைய கருத்தொற்றுமை. நம்பிக்கை. ஈடுபாடு. பாராட்டு ஆகியவற்றைப் பெற்று அவர்களிடம் வெற்றிபெறுதல் என்பதன் ரகசியம் தான் இந்த விளைவு. இந்த விளைவை வலிமையாக வெளிப்படுத்துபவர்கள் மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படும் போது இனிமையாகவும் மன அமைதியோடும் இருப்பார்கள். அடுத்தவர்கள் மீது பாதிப்பை ஏற்படுத்தும் திறமையும் அவர்களிடம் இருக்கும். அவர்கள் உடல்ரீதியாக. உணர்ச்சி பூர்வமாக. அறிவு சார்ந்த வகையில். ஆன்மிக ரீதியாகவும் இணைகிற காந்த சக்தியும். வசீகரமும் உடையவர்களாக இருப் பார்கள் என்று நாம் சொல்வோம்.

வசீகரிக்கும் அல்லது கவரும் ஆற்றலுக்கு அடிப்படையாக உள்ள காரணிகளைப் பற்றி இந்தக் கட்டுரை முழுவதும் உங்களுக்கு அறிமுகம் செயயப் போகிறேன். காலங்காலமாக மக்கள் தம்முடைய அரசியல் தலைவர்களையும். பெரிய நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்களையும். அவர்கள் உண்மை யில் இருப்பதைவிடப் பெரியவர் களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஒரு சுவாரசியமான நிகழ்ச்சி. மார்க்ஸ் ஆண்ட் ஸ்பென்ஸர் என்ற மிகப் பெரிய வணிக நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்துபவராக ஸ்டுவர்டு ரோஸ் அப்போதுதான் பிரபலமாக்கிக் கொண்டிருந்தார். அவருடைய நிறுவனத்தின் ஆண்டுக் குழு கூட்டத்தில். 'ஸ்ருவர்டு ரோஸ் போல ஏன் நீங்கள் கவர்ச்சிகரமாக இல்லை?" என்று ஒரு முதலீட்டாளர் அதிகம் கோபமாக சேர்மனான அவரைக் கேட்டார்.

தூய்மையான வசீகரத்தன்மை உடையவர்கள் அதனைப் பயன்படுத்தி மக்களை பிரமிக்கச் செய்து தங்கள் கருத்துக்களை ஏற்கச் செய்வது என்பது ஒன்று. தங்களிடம் உள்ள குறைவான கவர்ச்சி விளைவைப் பயன்படுத்தி முடிவுகளைப் பெறுவது என்பது மற்றொன்று. இவை இரண்டுக்கும் இடையே பெருமளவு வேற்றுமை உண்டு என்று சமீபத்திய ஆய்வுகள் கூறுகின்றன.




வசீகர விளைவு...

.......என்பது உணர்ச்சி பூர்வமாக, உடல் ரீதியாக எண்ணங்கள், மனப்பான்மை, நடவடிக்கை ஆகியவை இணைந்து அறிவு பூர்வமாகவும் மற்றவரை பாதிப்பது. தவிர மற்றவர்களிடம் வலிமையான நினைவில் நிற்கக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்த. உங்களுடைய எல்லாத் தன்மைகளையும் பயன்படுத்துகிற திறமை என்பதாகும்.

மேலும் வழக்கமான பாணியில் விளக்குவதானால், தூய்மையான வசீகரம் என்பது மக்களின் மீது செல்வாக்கு செலுத்தி அவர்களுடைய பேரன்பைத் தூண்டக் கூடிய வழக்கத்துக்கு மாறான திறமை என்பதாகக் கொள்ளலாம்.



உதயனின் 'சூரியகாந்தியில்' உங்களது படைப்புகளும் பிரசுரமாக வேண்டுமா? சிறுகதை, கவிதை, கட்டுரை , விமர்சனம், துணுக்குகள் என்பவற்றை உடனே எழுதி அனுப்புங்கள். தரமானவை பிரசுரமாகும்.

உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி;

சூரியகாந்தி -
உதயன் 361,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 08 09 2013 ஞாயிற்றுக்கிழமை

ரம்யன்

# அமைச்சரின் அற்ப ஆசையும் அதன் விளைவுகளும்

அசை போட ஒரு விடயம் 92

இந்த நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ சமய கலாசாரங்கள் எந்தவிதப் பாகுபாடுகளும் இன்றி தத்தமக்குரிய முறைகளில் வளர்ந்தும் வளர்க்கப்பட்டும் வந்த காலம் ஒன்று இருந்தது.

சமய கலாசாரங்கள் இன மற்றும் மொழி சார்ந்த கலாசாரங்களாகவும் முன்னெடுக்கப்பட்டன. இந்தக் கலாசாரங்கள் ஒன்றோடொன்று இணைந்தும் பிணைந்தும் சமுதாய இணக்கப்பாடாக வளர்வதற்கு அந்தக் காலத்தில் வசதிவாய்ப்பும் இருந்தது. சமூகத் தலைவர்கள் அந்த வகையிலேயே தம் முயற்சிகளையும் முன்னெடுத்தார்கள்.

ஆனால் சமய மற்றும் மொழி விடயங்களில் என்று அரசியல் தலை காட்டத் தொடங்கியதோ அன்றே சீர்குலைவுகளும் தலைதூக்க ஆரம்பித்து விட்டன. அதன் விளைவு களை இன்று நாடும் மக்களும் அனுபவிக்க நேர்ந்துள்ளது.

சிறுபான்மை மொழியினர் சிறுபான்மை சமயத்தவர் தீண்டப்படக்கூடாதவர்கள் போன்று பெரும்பான்மை மக்களில் ஒரு பகுதியிரால் கருதப்படுகிறார்கள். அந்த வகையில் வன் செயல்களும் இடம்பெறுகின்றன.

சமயப் பெரியார்களை தாங்கிவரும் சில அமைப்புக்கள் ஏனைய மதத்தவரை இழிவாகப் பார்ப்பதும் அவர்களின் சமய தலங்களை அடித்து நொருக்குவதும் பெருமைக்குரிய விடயங்களாகச் செய்கின்றன.

இவைகளை அதிகாரிகளும் அரசியலில் இருப்பவர்களும் உடனுக்குடன் தட்டிக் கேட்காமல் விடுவதும் நீதியின் பேரால் உறுதியான நடவடிக்கைகள் எடுக்காமல் விடுவதும் நிலைமைகள் மேலும் மோசமடைவதற்கு இடம் கொடுக்கின்றன. இவை இன்று சர்வதேசத்தின் கவனத்தில் சென்றடைந்துள்ளது மட்டுமல்ல நாட்டின் தலைவர்களை சந்தேகக் கண் கொண்டு வெளிநாடுகள் பார்க்கும ளவுக்குப் போயுள்ளது.

**அமைச்சர்களின் பொட்டுக்கேடு**

இந்த நிலைமையில் தான் அமைச்சர் மேர்வின் சில்வாவின் கோமாளித்தனமானதொரு கூற்று வெளிப்பட்டு இலங்கை அமைச்சர்களின் பொட்டுக்கேட்டை போட்டு உடைத்திருக் கிறது. இலங்கை அமைச்சரவையில் சிறந்த கல்விமான்கள், அனுபவசாலிகள், அரசியல்வாதிகள் எல்லாம் இருந்துள்ளார்கள். இப்பவும் கூட இருக்கிறார்கள். அவர்களோடுதான் மேர்வின் சில்வாவும் இருக்கிறார். இப்போது எழுந்துள்ள ஒருநிலைமையால் அவர்கள் எல்லோரும் அமைச்சர் மேர்வின் சில்வாவின் தரத்து இறங்கிவிட்டார்கள். அல்லது மேர்வின் சில்வா அவர்களின் தரத்துக்கு உயர்ந்து விட்டார் என்று கூற வேண்டும்.

வைக்கோர் போருக்குள் கொள்ளிக்கட்டையை சொருகினால் என்ன நடக்கும் . வைக்கற்போர் புகைந்து எரிந்துபோகும். வைக்கோர் ஈரமாக இருப்பின் கொள்ளிக்கட்டை தூர்ந்து போகும்.

எதுவானாலும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அம்மையார் இலங்கை வந்த பொழுது அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக இந்த அமைச்சர் பகிரங்கமாக கூறியிருந்ததும் , அது குறித்து அம்மையார் கோபமுற்றதும் நிகழ்ந்துள்ள சில சம்பவங்கள். சர்வதேசப் பிரமுகர் ஒருவரை இவ்வாறு மூன்றாம் நிலை கருத்தை வெளியிட்டு அவதூறுபடுத்தியமை நிச்சயம் இலங்கை அரசியலாளருக்கு உகந்த விடயமாகக் கருத முடியாது. நடந்துவிட்ட சம்பவத்தை ஒரு மாதிரியாக சமாளித்துவிடுவதற்கு மூத்த அமைச்சர் சிறிபால டி சில்வா முயன்று அம்மையாரிடம் வாங்கிக் கட்டிக் கொண்டமை பற்றி சண்டே ரைம்ஸ் எடுத்துக் கூறியிருந்தது.

"அம்மையார் அவர்களே, எங்கள் சக அமைச்சர் வெளியிட்டிருந்த கருத்தை பெரிதாக எடுத்துக் கொள்ளதீர்கள்" என்று அமைச்சர் டி.சில்வா கூறிய போது அந்த விடயத்தை வெறும் விகடத் துணுக்காக மாற்றிவிட அமைச்சர் விரும்பியிருக்கக் கூடும். ஆனால் அம்மையார் "நான் ஏன் பெரிதாக எடுக்க வேண்டும். நீங்கள் அல்லாவா பெரிதாக (பாரதூரமாக) எடுத்திருக்க வேண்டும்" என்று பதிலளித்திருக்கிறார்.

அவதூறான கருத்தொன்றை நாகரிகமற்ற முறையில் சர்வதேச பிரமுகர் ஒருவரை குறித்து தெரிவிக்கப்பட்டமையை அரச தரப்பில் எவருமே கண்டித்ததாகத் தெரியவில்லை. உண்மையில் அதுபற்றி அரசின் உயர்மட்டத்தில் நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருப்பின் பத்திரிகைகளில் அதுவெளிவந்திருக்கும்.

அவ்வாறு எதுவும் நடைபெறாத நிலையில் சர்வதேச மட்டத்தில் இலங்கை அமைச்சர்களின் தாரம் தம்யம் பற்றி பேசும்படியாகி விட்டமை கவலை தருவதாகும்.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் கோமாளித்தனமான சம்பவங்கள் முன்னரும் அரசுத் தலைவர்களால் கண்டு கொள்ளப்படாமல் போனதின் விளைவு இதுவாகும். அவர் என்ன செய்தாலும் கவனிக்கப்படுவதில்லை வென்று மூத்த அமைச்சர்கள் சிலர் குமைவதாக தெரிகிறது. இதன் எதிர்கால விளைவு எப்படியிருக்கப் போகிறது என்பதை அறிய அரசியல் வட்டாரங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.



## நாய்களுக்கு திருமணம்

நாய்கள் பொலிஸ் வர்ண ஆடைகளும் குளிர் கண்ணாடிகளுடன் அணிவிக்கப்பட்டு தலைத் தொப்பிகளும் அணிவிக்கப்பட்டிருந்தன. உண் மையில் பதிவுத் திருமணத்துக்கு போன்று நாய்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு பதியப்பட்டு மண முடித்துக் கொடுக்கப்பட்டன.

இலங்கை கலாசாரத்தை நையாண்டி செய்யும் விதத்தில் கண்டியில் இடம்பெற்றுள்ள ஒரு சம்பவம் கடந்தவாரம் பரபரப்பாக பல தரப்பினராலும் விவாதிக்கப்பட்டது. அதுதான் இருபது பொலிஸ் நாய்களுக்கு வைபவ ரீதியாக திருமணம் முடித்துவைக்கப்பட்டுள்ள சம்பவம். நாய் நன்றியுள்ள மிருகம் என்பது உண்மையாக இருக்கலாம். அதற்கென அவைகளுக்கு மனிதர்களைப்போல மேடைகள் அமைத்து திருமணம் செய்து வைப்பதென்பது இன்னுமொரு கோமாளித்தனமல்லவா.

நாடு எங்கே போய்கொண்டிருக்கிறது. என்பவற்றைக் காட்டுவதற்கு இவையெல்லாம் நல்ல சில சம்பவங்கள் எனலாம்.

இந்த நிகழ்வு பாரம்பரிய கண்டி கலாசாரத்துக்கு விரோதமனது என்று கலாசார அமைச்சர் கண்டித்திருக்கிறார். இது பற்றி விசாரணைகள் நடத்த் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண கடந்த வாரம் அங்கு சென்றிருந்தார். பொலிஸ் மோப்ப நாய்கள் பிரிவினரால் இந்த நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது. சுமார் 2000 பேருக்கு மேற்பட்டவர்கள் விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இது ஒரு சாதாரண நிகழ்வாக நடத்தப்பட்டிருக்கவில்லை. நாய்கள் திருமண மேடைக்கு அழைத்து வரப்பட்ட போது பொலிஸ் பான்ட்வாத்தியம் இசைக்கப்பட்டது. அழைப்பாளர்களாக கலந்து கொண்டவர்களில் பேராதனைப் பல்கலைக் கழக சிரேஷ்ட மிருகவியல் விரிவுரையாளர் அசோக்கா தங்கொல்லவும் காணப்பட்டார். நாய்கள் பொலிஸ் வர்ண ஆடைகளும் குளிர் கண்ணாடிகளுடன் அணிவிக்கப்பட்டு தலைத் தொப்பிகளும் அணிவிக்கப்பட்டிருந்தன. உண்மையில் பதிவுத் திருமணத்துக்கு போன்று நாய்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு பதியப்பட்டு மணமுடித்துக் கொடுக்கப்பட்டன. வைபவம் முடிவுற்றதன் பின்னர் நுவரேலியாவில் தேன்நிலவுக்கென அவை அவிழ்த்துவிடப்பட்டன. இது பாரம்பரிய கண்டிய திருமணங்களை அவதூறு செய்வதாக இருப்பதால் இது குறித்த விசாரணை நடத்தும்படி கலாசார அமைச்சர் ரி.வி.ஏக்கநாயக்க கேட்டுள்ளார். அதன் பிரகாரம் விசாரணையொன்றை நடத்த பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கூன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மத்திய மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் விசாரிக்கப்பட்டு வாக்குமூலங்கள் பதியப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நாய் திருமணம் தொடர்பாக பொலிஸ் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கண்டிப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் ஐந்து பொலிஸாருடன் வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது. சிலரது குடும்ப உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

## என்ன செய்யப்போகிறோம்

போராளிகளை
மறந்தோம்
தியாகங்களை
மறந்தோம்
துரோகத்தின்
தோட்டங்களுக்கே
நீர் பாய்ச்சினோம்
பொய்களின்

போர்வையால்
சூரியனை மூடினோம்
இரத்த வரலாறுகளை
எரித்தோம்
நீதியை புதைத்து
நியாயப்படுத்தினோம்
விளம்பரத்து[illegible]
விடுதலை [illegible]

வளங்களை கிளறி
வியாபாரம் செய்தோம்
குருதி குடித்தவனை
குடிசைக்கு அழைத்தோம்
எல்லாம் செய்து விட்டோம்
மானம் இழப்பதற்கு
[illegible]
செ[illegible]

நெடுந்தீவு க.யோகேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பயணம் என் நெடுநாள் கனவு

## மனம் திறக்கிறார் தென்னிந்திய இசைக் கலைஞர் சுதா ரகுநாதன்

நேர்கண்டவர்கள்:
ஔரீஷ், தட்சா ஜோ

'குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா' என்பது போன்ற கருத்தாழமிக்க பல பாடல்கள் மூலம் தன் கணீர் குரலால் தமிழ் இசை இரசிகர்களை கொள்ளை கொண்டவர் சுதா ரகுநாதன். இளவயதிலேயே இந்தியாவில் உயரிய விருதான பத்மஸ்ரீ விருதை பெற்றுக்கொண்ட இவர், கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தபோது உதயன் வாசர்களுக்காக அளித்த நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.



*கே: யாழ்ப்பாணத்துக்கான உங்களின் முதல் பயணம் இது. இந்த நிலையில் உங்களின் மனோ நிலை எப்படி இருக்கிறது?*

ப: யாழ்ப்பாணத்துக்கான முதல் பயணம் இதுதான். பசுமையாக யதார்த்தமாக உள்ளது யாழ்.மண். நான் விமான நிலையத்திலிருந்து வரும் வழியில் மக்கள் நல்லூர் திருவிழாவுக்கு சென்று கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சி எனக்கு நமது ஊரை நினைவுக்கு கொண்டு வந்தது. தமிழ் நாட்டில் ஆலய திருவிழாக்களுக்கு மக்கள் இப்படித்தான் கூட்டமாகச் செல்வார்கள்.

இதுவரை காலமும் யாழ்ப்பாணத்துக்கு பல கலைஞர்கள் வந்து சென்ற போதிலும் எனது வருகை பல்வேறு காரணிகளால் தள்ளிப்போய் விட்டது. சில வருடங்களுக்கு முன்னர் கூட நல்லூர் திருவிழாவுக்கு பாட வருமாறு அழைப்பு வந்தது. ஆனாலும் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் கைகூடவில்லை. இப்போது தான் அந்த ஆசை நிறைவேறியிருக்கிறது.

கே: யாழ்ப்பாணம் வரவேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இருந்ததா?

ப: கண்டிப்பாக அந்த ஆசை தமிழகத்தில் உள்ள எல்லா கலைஞர்கள் மத்தியிலும் இருக்கவே செய்கிறது. கலைஞர்களை கௌரவிப்பதிலும், கலையை ரசிப்பதிலும் யாழ்ப்பாணத்தவர் போல யாரும் இருக்க முடியாது என்பது தென்னிந்தியக் கலைஞர்களின் அனுபவம். எனவே எப்படியேனும் ஒருமுறையாவது யாழ்ப்பாணத்தில் கச்சேரி செய்துவிட வேண்டும் என்பது என்னுடைய நீண்டநாள் கனவு. என் குரு மூலமாக யாழ்.மண்ணைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டுள்ளேன். எனது குரு பல தடவைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறார்.

கே: பிரபலம் அடைவதற்காகவும் பணம் சம்பாதிப்பதற்காகவும் இசைக் கலைஞர்கள் அதிகளவான சினிமாப் பாடல்களை பாடுவதிலேயே குறியாக இருக்கிறார்கள் ஆயினும் உங்களைப் போன்ற சிலர் மட்டும் கர்நாடக சங்கீதத்தை விட்டு வெளியே வருவதில்லை. சினிமாவில் பாடினாலும் கர்நாடக சங்கீதம் என்னும் வட்டத்துக்குள்ளேயே இருக்கிறீர்களே அது ஏன்?

ப: நாம் எடுக்கும் ஒவ்வொரு விடயத்திலும் எம்மை அடையாளப்படுத்த வேண்டும். இதுவா? அதுவா? என்ற தளம்பல் இல்லாமல் ஒரு நிச்சயத்தன்மை இருக்க வேண்டும். கர்நாடக இசை புனிதமானது. ஸ்ருதிக்குண்டான விடயங்களை காத்திரம், கம்பீரத்துடன் ரசிகர்களுக்கு கொடுக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் கர்நாடக இசைப் பயணத்தில் நான் நிறையத் தூரம் பயணித்திருந்தாலும் சில நல்ல சினிமாப் பாடல் வாய்ப்புக்கள் கைவிட்டுப் போனது பற்றி ஆதங்கமும் உண்டு.

உதாரணமாக பார்த்திபன் கனவு படத்தில் இடம்பெற்ற 'ஆலங் குயில் கூவும் ரெயில்....' என்ற பாடலை நான் தான் பாடியிருக்க வேண்டும். முதற்கட்ட ஒலிப்பதிவின் போது அதைப் பாடி விட்டு நான் மும்பைக்கு கச்சேரிக்காக சென்றிருந்தேன். அப்போது இரண்டாம் கட்ட பதிவுக்காகவும் செம்மையாக்கலுக்காகவும் என்னை அழைத்தார்கள் ஆனால், மும்பையை விட்டு போக முடியாத சூழல். எனவே வேறொரு பாடகியை வைத்து அந்தப் பாடல் பணிகளை நிறைவு செய்து விட்டனர்.

*கே: உங்களுக்கு அல்லதுஉங்களது இசைக்கொள்கைக்கு பொருத்தம் இல்லை என்று கருதி ஏதாவது சந்தர்ப்பங்களை நிராகரித்துள்ளீர்களா?*

ப: நிராகரித்திருந்தேன் என்பதை விடவும் நழுவவிட்டேன் என்பது தான் உண்மை. சந்தர்ப்பம் வாய்க்காமை, பாடலுக்கேற்ற குரல் வளம் இன்மை, உள்ளூர்க் கச்சேரிகள் போன்றவற்றால் இப்படியான நல்ல பாடல்களை நழுவவிட்டதுண்டு.

எனினும் கர்நாடக சங்கீதம் என்றால் சுதா ரகுநாதன் என இசை சார்ந்தோர் மனதில் வைத்துள்ளனர். ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொருவர் முன்னணி யில் உள்ளனர். இன்றைய இசை உலகில் பலர் நல்ல குரல்வளம் உடையவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கான வாய்ப்புக்களும் அதிகம்.

கே: முன்னரெல்லாம் இசைக் கலைஞர் மிக நீண்ட காலத்துக்கு தனி இராஜங்கம் நடத்துவார்கள். ஆனால் இப்போது அப்படியல்லவே புதிது புதிதாக பாட வருகிறார்கள். சில காலம் பிரகாசித்து விட்டு மறைந்து விடுகிறார்கள். இந்த நிலை ஏன்?

ப: நிறையப் பேர் புதிதாகப் பாட வருகிறார்கள். இரசிகர்கள் ஒரே விதமான குரலை எத்தனை நாளைக்குத் தான் இரசிக்க முடியும். அவர்களுக்கு பாடல்களின் உணர்வுக்கு ஏற்ப புதிய குரல்கள் தேவைப்படுகின்றன. இதை ஒரு தேடல் என்றே குறிப்பிடலாம். இசை அமைப்பாளர்கள் தமக்கான குரல்களை தேடிக்கொண்டே இருப்பார்கள். இளமையான குரல்கள் கிடைத்தால் அதனைப் பயன்படுத்துவார்கள். குறிப்பாக ஏ.ஆர்.ரஹ்மான் பாகிஸ்தான்,ஹிந்திப் பாடகர்கள், வெளிநாட்டுப் பாடகர்கள் என பலருக்கு வாய்ப்பு வழங்குவார். இசையமைப்பாளர்கள் தன் மனதிலுள்ள படைப்பு எப்படி வெளிவர வேண்டும் என எண்ணுகிறார்களோ அதற்கேற்ப குரலைத் தேடுவார்கள். முன்னரெல்லாம் இளையராஜாவின் பாடல் என்றால் கட்டாயம் அதை ஜானகி அம்மாவும் எஸ்.பி. பாலசுப்பிரமணியமும் பாடி இருப்பார்கள். ஆனால் இப்போ பரவல் தன்மை கொண்ட புதுமையான இசை புதுப் புதுக் குரல்களை தேட வைக் கிறது.

கே: இப்போதைய நாகரிக உலகில் புதுமை மட்டுமே விரும்பப் படுகிறது. இதனால் பாரம்பரியங்களை தொலைத்துவிட்டு மேற்கத்தேய கலை வடிவங்களே உயர்ந்தவை என்று எண்ணி அவற்றைப் பின்பற்றும் இளைஞர்களே அதிகம். இந்தச் சூழலில் தொன்மையான கர்நாடக சங்கீதத்தின் நிலை எப்படி இருக்கிறது?

ப: பத்து, இருபது வருடங்களுக்கு முன் இருந்ததை விடவும் கர்நாடக சங்கீதத்துறை இப்போது பிரகாசமாகவே உள்ளது. பல இளைஞர்கள் இதனை ஒரு தொழிலாக நினைக்கின்றனர். அந்த அளவிற்கு அவரிற்கு தைரியம் வந்துள்ளது. அவர்களுக்கான வாய்ப்புக்களும் நிறையவே உண்டு. பணவருவாயும் சிறப்பாக உள்ளது. இளைஞர்களும் கர்நாடக சங்கீதத்தைப் புரிந்து கொண்டு தம்மை தக்கவைத்துள்ளனர்.

*கே: ஆனால் இரசிகர்கள் முன்னரைப் போல ஆர்வத்துடன் கர்நாடக சங்கீதத்தையும் இரசிக்கிறார்களா?*

ப: கலைஞர்களுக்குரிய தராதரங்களின் படிதான் அவர்களுக்கான ரசிகர்களும் அமைவார்கள். கர்நாடக இசைக் கலைஞர்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு கச்சேரிகளும் ஒரு பரீட்சை மாதிரி. அதில் சிறப்பான பெறுபேறு பெற்றால் ரசிகர் மனதில் இடம்பிடிக்க முடியும்.

*கே: கர்நாடக இசைக் கலைஞர்களை மக்களிடையே கொண்டு செல்வதில் சுப்புடு போன்ற இசை விமர் சர்கள் பெரும்பங்கு வகித்தார்கள். தற்போது அப்படியான விமர்சகர்கள் இருக்கிறார்களா?*

ப: இல்லை என்று தான் சொல்ல வேண்டும். புதிதாக கலைஞர்கள் உருவாவது போன்று விமர்சர்களும் புதிது புதிதாக வரவேண்டும். சுப்புடு போன்ற ஆரோக்கியமான இசைக் கரைத்துக் குடித்த விமர்சகர்கள் இசைத் துறையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்ற முடியும். தற்போது ஆனந்தவிகடன், குமுதம் போன்றவற்றில் விமர்சர்கள் உள்ளார்கள். ஆனால் அவர்கள் இன்னும் எழுத வேண்டும். கர்நாடக இசைக்கு ரசிகர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு எழுதத் தெரியவில்லை. இதற்கான நடை வரவேண்டும்.

*கே:பாமர மக்கள் கர்நாடக இசையை புரிந்து கொள்ளமுடிவதில்லை என்ற சர்ச்சை இருக்கிறதே?*

ப: பாமர மக்களால் கண்டிப்பாகப் புரிந்துகொள்ள முடியும். கர்நாடக சங்கீதத்தின் தரம் மருந்து போன்றது. எதுவுமே புரியாமல் கச்சேரியில் சிறிது நேரம் இருந்தால் கூட கச்சேரி முடியும் போது மனதில் ஓர் சாந்தம் கிடைக்கும். பாமர மக்களுக்கு இசை பற்றிய பின்னணி இல்லை. முறைப்படி பயின்றிருந்தால் அவர்களுக்கு தெரிந்திருக்கும். அதற்காகவே நாம் கூறுகிறோம், பாலூட்டி குழந்தைகளை வளர்ப்பதைப் போன்று பள்ளிப் பருவத்திலேயே இசையைப் புகட்ட வேண்டும். அப்போது இயல்பாகவே அவர்களுக்குள் இசை உணர்வு வளரும். கர்நாடக சங்கீதத்தில் மொழிப் பிரச் சினை உண்டுதான். பாடல்கள் தெலுங்கில், சமஸ்கிருதத்தில் உள்ளன. இசைக்கும் ஒரு அணுகுமுறை உண்டு. ரசிகர்களுக்கு ஏற்றாற்போல் எமது பாடல் தெரிவுகளும் அமையும்.

*கே: நீங்கள் படித்ததிலேயே பிடித்த பாடல் எது?*

ப: நான் பாடும் பாடல் எல்லாமே எனக்குப் பிடித்த பாடல்கள் தான். ஆயினும் "கண்டநாள் முதலாய் காதல் பெருகுதடி..." என்ற பாடல் எப்போதும் மனதுக்குள் ஒலித்த படியே இருக்கிறது.

*கே: உங்கள் குரு எம்.எல்.வியை விட பிடித்த இசைக் கலைஞர்கள் யார்?*

ப: குரு ஸ்தானத்தில் எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி அம்மாவை பார்க்கிறேன். நான் இசைத்துறைக்கு வரும்போதே அவர்கள் கச்சேரியில் பிரபலமானவர். அவர்களுக்கொரு தனி இடம் மனதில் உண்டு.

*கே: உங்கள் இசைப் பயணத்தில் மறக்க முடியாத சம்பவம்...?*

ப: நிறையச் சம்பவங்கள் உண்டு. லக்ஷம்பேர்க் என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தில் கச்சேரி பண்ணச் சென்றிருந்தேன். அந்த நிகழ்வில் சர்வதேச நாடுகளிலிருந்தும் கலைஞர்களை அழைத்து பாடவைப்பார்கள். கேட்போர் மாறமாட்டார்கள். கலைஞர்கள் மாறுவார்கள். அந்த தேவாலயத்தில் ஒலிவாங்கி தேவையில்லை. கட்டட அமைப்பு ஒலியை 10 மடங்காக கொடுக்கும்படி அமைக்கப் பட்டிருந்தது. நான் கூறினேன் "பக்கவாத்தியங்கள் மத்தியில் என் குரல் எடுபடாது. ஒலிவாங்கி வையுங்கள்" என்று. ஒலிவாங்கி வைக்கப்பட்ட பின்னர் கச்சேரி ஆரம்பமாகி பாடிக் கொண்டிருந்தேன். அப்போது திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டது. எனது குரல் ரசிகர்களுக்கு கேட்குமா என்ற பயத்தோடு கண்களை மூடியபடியே பாடி முடித்தேன். கண்ணைத் திறந்த பார்த்தேன். ஆச்சரியத்தில் மூழ்கிப்போனேன். இசையை ரசித்துக்கொண்டிருந்த எல்லோர் கைகளிலும் மெழுகுவர்த்தி ஒளிர்ந்துகொண்டிருந்தது. அந்தக் காட்சி தேவலோகம் சென்ற உணர்வை அது கொடுத்தது. சின்ன சிலுசலுக்கான சத்தம் கூட இல்லாமல் அமைதியாக இசையை இரசித்ததோடு மட்டுமல்லாமல் தமது கைகளில் மெழுகுதிரி ஏற்றி ஒளி கொடுத்து நின்ற அவர்களைப் பார்த்த போது பிரமிப்பாக இருந்தது. இது அவர்கள் இசைக்கு கொடுத்த மரியாதையாகவே நான் பார்க்கின்றேன்.

*கே: மிகக் குறைந்த வயதிலேயே இந்தியாவில் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது கிடைத்தது பற்றி...?*

ப: அதிஸ்டமாக இருக்கலாம். கைகூடி வந்தது. நான் எடுக்கும் முயற்சிதான். என்க்கான பாதையை தெரிவுசெய்து பயணிக்கின்றேன். கர்நாடக இசையில் என்னை அடையாளப்படுத்தியுள்ளேன். பத்மஸ்ரீ விருதுக்கு நாம் சமூகத்துக்கு என்ன செய்தோம் எனவும் பார்க்கிறார்கள். அப்படிப்பார்த்தால் நான் அறக்கட்டளை நிலையத்தினை நிறுவி வருகின்றேன். அதன்மூலமாக வறியோருக்கு மருத்துவ உதவி வழங்கி வருகின்றோம். கண்பார்வையற்றோர், இருதய நோயாளர்களுக்கு உதவிகளை வழங்குகின்றோம். சிறுவர் இல்லங்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

*கே: நீங்கள் இலங்கைக்கு செல்லக் கூடாது என்று தமிழகத்தில் யாரும் எதிர்ப்புத் தெரிவித்தார்களா?*

ப: நான் வந்ததன் நோக்கம் ஒரு நல்ல விடயத்துக்காகத்தான். அதனால் யாரும் எனக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அப்படி எதிர்த்திருந்தாலும் என்னால் பதிலளிக்க முடிந்திருக்கும். ஆர்வமும் அன்பும் உள்ள இடத்துக்கு வருவது சந்தோஷமான விடயம். தென்னிந்தியக் கலைஞர்கள் சிலருக்கு இலங்கை பற்றிய பயம் இன்னும் இருக்கத் தான் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

# பில்கேட்ஸ்

## உலகப் பணக்காரன் உருவான கதை



மைக்ரோசொஃப்டுக்குப் புதிய புதிய ஓடர்கள் குவிந்து கொண்டிருந்தன. அவற்றை எல்லாம் செய்து முடிப்பதற்கு இப்போது ஆள் பற்றாக் குறை. இன்னும் சொல்லப் போனால் மைக்ரோ சொஃப்டுக்கு அலுவலகமே பற்றாக்குறையாக இருந்தது. அலுவலக விரிவாக்கம் பற்றி பில்லும், ஆலனும் யோசித்தபோது, தொடர்ந்து ஆல்பகர்க் கீ நகரத்திலேயே இருக்க அவர்களுக்கு விருப்பமில்லை. எங்கோ ஒரு மூலையில் இருப்பதைக்காட்டிலும், தலைநகர் வொஷிங் டனுக்கு அருகிலுள்ள அவர்களின் சொந்த ஊரான சியாட்டல் நகருக்கே அலுவலகத்தை மாற்றிவிடத் திட்டமிட்டு, அதன்படி 1979 ஜனவரியில் மைக்ரோ சொஃப்ட் , சியாட்டல் நகரில் குடியேறியது.

சொந்த ஊருக்குத் திரும்பித் தமது பெற்றோரிடம் இணைந்து கொண்டதில் இருவருக்குமே சந்தோசம்! முன்பு "மென்பொருள் எழுதப் போகிறேன்" என்று கேட்ஸ் சொன்னபோது அதை ஏற்றுக் கொள்ள மறுத்த அவரது பெற்றோர்கள், கேட்ஸின் தற்போதைய வளர்ச்சி யைக் கண்டு அவரை மனமுவந்து பாராட்டினார்கள்.

சியாட்டல் நகரில் 50 பேர்களுடன் மைக்ரோ சொஃப்ட் தனது பணிகளைத் தொடங்கியது. வழக்கம் போல் மென்பொருள் பிரிவை ஆலன் கவனித்துக் கொள்வது, விற்பனைப் பிரிவை பில்கேட்ஸ் கவனித்துக் கொள்வ தென்றும் முடிவு செய்யப்பட்டது.

அப்படி என்றால் நிர்வாகத்தை யார் கவனிப்பது? அதற் கும் ஒரு சரியான ஆளைக் கண்டுபிடித்தார் கேட்ஸ். ஹார்வர்டில் தன்னுடன் படித்த ஸ்டீவ் பால்மர் என்ற நண்பரை கொண்டு வந்து நிர்வாகத்தை கவனித்துக் கொள்ளுமாறு பொறுப்பை ஒப்படைத்தார்.

இந்த ஸ்டீவ் பால்மருக்கு கணினி பற்றி 'அ'னா 'ஆ'வன்னா கூடத் தெரியாது. ஆனால், வர்த்தகம் என்று வந்து விட்டால், அதன் சந்து, பொந்து அனைத்தும் அத்துப்படி. தனது பிஸினஸ் வெற்றி பெறுவதற்காகக் கொஞ்சம் கீழே இறங்கி அடாவடியில் ஈடுபடவும் தயங்க மாட்டார் அவர்.

"பெரிய நிறுவனங்களைச் சமாளித்து மைக்ரோ சொஃப்டை வளர்ப்பதற்கு இப்படிப்பட்ட ஆள்தான் தேவை" என்று கேட்ஸ் தீர்மானித்து அவரைப் பதவியில் அமர்த் தினார். சும்மா சொல்லக்கூடாது, கேட்ஸின் எதிர்பார்ப்புக்கு ஈடுகொடுத்து, மைக்ரோசொஃப்டை உயரத்துக்குக் கொண்டு போனதில் பால்மருக்கும் பங்குண்டு!

1980 ஆம் ஆண்டு ஒருநாள் மைக்ரோசொஃப்ட் அலுவல கத்தில் அமர்ந்து கொண்டு பில் தனது வேலையைக் கவனித் துக்கொண்டு இருந்தபோது, அவரது அறைக்குள் நுழைந்த இருவர் "நாங்கள் ஐபிஎம் (IBM) நிறுவனத்திலிருந்து வருகிறோம்" என்றார்கள்.

விழுந்தடித்து எழுந்து நின்ற கேட்ஸ் அவர் களை மரியாதையுடன் வர வேற்று, தேநீர் கொடுத்து உபசரித்து விட்டு " என்ன விஷ யம்?" என்று விசாரிக்கத் தொடங்கினார்.

பில்கேட்ஸ் இவ்வளவு மரியாதை கொடுக் கிறார் என்றால் யார் அந்த ஐபிஎம் ? "International Business Mac hines" என்கிற நிறுவனமே சுருக்க மாக ஐபிஎம் என்று அழைக்கப்பட்டது. இந்த ஐபிஎம் தான் அமெரிக்கக் கணினி உலகில் மிகப் பெரும் ஜாம்பவான்!

அந்தக் காலகட்டத்தில் உலகளவில் கணினி களைத் தயாரித்து விற்பனை செய்ததில் 75 வீத ஐபிஎம் இன் பங்கு இருந்தது என்றால் அதன் பிரம்மாண்டத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

இது வரை பில்கேட்ஸ் வியாபாரத் தொடர்பு வைத்திருந்த நிறுவ னங்களை எல்லாம் ஐபிஎம் முடன் ஒப்பிட்டால் சுண் டைக்காய் நிறுவனங்களே. மற்றோர் உண் மையைச் சொல்ல வேண்டுமென்றால் ஐபிஎம் நிறுவனம் முன்பு மைக் ரோசொஃப்ட் நிறுவனமே ஒரு சுண்டைக்காய்தான். ஐபிஎம் 'நிறுவனத்திற்கு மட்டும் மென்பொருள் எழுதினால் போதும், ஒரே நாளில் குபேரனாகி விடலாம். ம்ம்... அவர்கள் எங்கே நம்மைத் திரும்பிப் பார்க்கப் போகிறார்கள்? என்று அன்றைய திகதி வரையில் பில்கேட்ஸ் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தார். இந்தச் சூழ்நிலையில் ஐபிஎம் ஆள்கள் பில்கேட்ஸ் முன்னே வந்து நின்றதால் அவர் ஆடிப் போக மாட்டாரா? அவர்களை ஓடோடி உபசரிக்க மாட்டாரா? இப்போது ஐபிஎம் நிறுவனத் துக்கு ஒரு சிறிய சறுக்கல். அதுவரையில் பெரிய பெரிய கணினிகளை மட்டுமே தயாரித்துக் கொண்டிருந்தது ஐபிஎம். ஒரு சிறிய இடைவெளியில், பிசி எனப்படும் (Personal com puter) தனிப்பாவனைக் கணினிகளைச் சின்னச்சின்ன நிறுவனங்களும் கூடத் தயாரித்துப் பெரிய அளவில் டொலர் களைச் சம்பாதித்தன. இப்படிப்பட்ட நிறுவனங்களுக்குத்தான் "மைக்ரோசாஃப்ட்" சார்ட்வேர் எழுதிக் கொண்டிருந்தது.

சுதாகரித்துக் கொண்ட ஐபிஎம் தானும் பிசி வகைக் கணினிகளைத் தயாரிக்க முனைந்த போதுதான், அதற்கு மென்பொருள் எழுதுவதற்காக மைக்ரோசொஃபட்டை அணுகியது. ஐபிஎம் காரனுக்கு ஏகப்பட்ட வாக்குறுதிகளை அள்ளிக் கொடுத்து அந்த வாய்ப்பை உறுதி செய்து கொண்டார் கேட்ஸ். அதிர்ஷ்டக் காற்று என்பார்களே... அது இப்போது பில் கேட்ஸை நோக்கி வீச ஆரம்பித்தது.



# அச்சம் ஒழிந்த நாட்டினிலே......

கொற்றவர்
கொள்கையினை
மாற்றான் மடிமீது
விற்றுவிட விரும்பாத
செந்தமிழ் வீர
செருக்கள மாந்தர்
கல்லறை மீது
கார்த்திகை தூவி
விண்ணறை ஓது
வேட்கையின் கீதம்
விடுதலையை தந்துவிட்ட
அச்சமற்ற நாட்டினிலே
அந்நியர் இருக்கார்
அதிகாரமிருக்கார் யாரும்
வஞ்சிக்க வரும்
வேண்டார்

நெஞ்சு நெகிழ்ந்திட
நிறை தமிழ் உலவி..
பிஞ்சு மழலைக்
காலத்துக்காய்
ஏங்கும் தாய்மையே
என்னுயிரும் பிறப்பின்
நானும் வீழ்ந்திருப்பேன்
இந்த நற் தமிழுக்காய்
அமைதியாய்
விழித்திருப்பேன்
ஆழமாய் விழி மூடி
ஆராரோ பாடி விடு
அழகான தமிழாலே...
வேறாரும் இல்லையினி...
தோளோடு அணைத்துக்கொள்
நான்-சாகா வரம் பெற...

த.பருத்திதாசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ்.அட்சயா,
எலிம் பாலர் பாடசாலை, மானிப்பாய்



கு.கரிகரன், தரம்-4
யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி



ச.கஸ்தூரி, தரம்-6பி
யா/ விக்ரோறியா கல்லூரி



வி.விசாலினி, தரம்-2பி
யா/ அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை



# மின்சார மீன்





நம்மது உடலில் மின் சக்தியை உற்பத்தி செய்யும் பல்வகை மீன்கள் உள்ளன. அவற்றின் விசேட தசைகளில் மின் சக்தி உருவாகிறது. ஒரு நரம்பு தூண்டி விடும் பொழுது பெரும்பாலான தசைகள் சுருங்கும். ஆனால் விசேஷமான மின் தசையினால் சுருங்க முடியாது. நரம்பு அதைத் தூண்டும் போது ஒரு மின் அதிர்ச்சி உண்டாகிறது. மின்சார மீன் எனப்படும் மீன் 500 வோல்ட் (V) மின்சாரத்தை பாய்ச்சுமாம். தன்னருகில் உள்ள ஓர் உயிரினத்தை ஸ்தம்பித்துப் போகச் செய்ய அது போதுமானது. அது தன் இரையை இவ்வாறுதான் கவர்ந்து கொள்ளுமாம்.

ர.பரிஷித்

## விடை தெரியுமா ? 227

உங்களுக்கும் பரிசுகள்

1. இலங்கையின் உயரமான மலை எது?
2. இலங்கையின் ரயர் ரியூப் தொழிற்சாலை எங்கே அமைந்துள்ளது?
3. இலங்கையின் தேசிய மிருகம் எது?
4. தோலினால் சுவாசிக்கும் உயிர் எது?
5. மனித உடலில் மிகக் கடினமான பகுதி எது?

### விடைகள் 225

1. லங்கா புவத்
2. ஒட்டகம்
3. நியூசிலாந்து
4. 1972 மே 22
5. வில்லியம் கொபல்லாவ

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் **"சிறுவர்கதிர்"**, உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 07.09.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 பெறுமதியான பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### வெற்றி பெற்றவர் விவரம் (224)

- ♥ சி.ஆர்த்தியான், தரம்-6 பி, யா/ ஹாட்லிக் கல்லூரி
- ♥ சி.தேனுஜன், தரம் -4, யா/ பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.
- ♥ யூ.யூடினி, தரம்-6, யா/ வேம்படி ம. உ. பா.
- ♥ சு.ஆர்த்திகா, தரம்-9டி, யா/ வேம்படி ம.உ. பா.
- ♥ சி.பிரதீபன், புலோலி

# கெட்டிக்காரச் சேவல்

ஒரு நாள் காலையில் ஒருமரத்தின் மீது ஒரு சேவல் இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்தபடியால் சேவல் உற்சாகமாய் கூவியது. இதைக் கேட்ட நரி அங்கே வந்தது.

நரிக்குச் சரியான பசி இருந்தது. அந்தச் சேவலைப் பிடித்து உண்ண ஆசைப்பட்டது. ஆனால் சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப்பிடிக்க முடியவில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது. உடனே சேவலைப் பார்த்து, "சகோதரனே!. வணக்கம். ஒரு நல்ல செய்தியை நீ கேள்விப் பட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக்கூடாது, ஒருவருக்கொருவர் அன்பாய் நடந்துக் கொள்ள வேண்டும், சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும். நீகொஞ்சம் கீழே வாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றி பேசுவோம்" என்றது.

நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கிப் பார்த்தது. இதைக் கண்டநரி, "என்ன சகோதரா!, மிகவும் அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே? அங்கே என்ன இருக்கிறது?" என்று கேட்டது. அதற்குச் சேவல், "அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரித் தெரிகிறது. வேட்டை நாய்கள் தானா? என்பதைக் கவனிக்கிறேன்' என்றது. அவ்வளவுதான், நரிக்கு உடல் நடுங்கி விட்டது, வேகவேகமாக "சரி! சரி! நான் பின்னர் வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று கூறிக் கிளம்பியது. சேவல், "அருமைச் சகோதரா! போகாதே, நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுது தானே நீ சொன்னாய், எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்று" அதற்கு நரி, "அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேகம் பேர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள், அந்த நாய்களுக்குத் தெரியாமல் இருந்தால், நான் என்ன கதி ஆவது? நான் போகிறேன்" என்றது. இதைச் சொல்லி விட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடி காட்டுக்குள் மறைந்தது. சேவல் "யாரை ஏமாற்றப் பார்க்கிறாய், உன்னுடைய கெட்டிக்காரப் பொய்கள் என்னிடம் பலிக்காது என்று" கூறி சிரித்தது. கெட்டிக்காரன் புளுகினாலும் அதுபுத்திச் சாலியிடம் எடுபடாது.



**நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கிப் பார்த்தது. இதைக் கண்ட நரி, "என்ன சகோதரா!, அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே? அங்கே என்ன இருக் கிறது?" என்று கேட்டது. அதற்குச் சேவல், "அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது"- என்றது.**

## புலி



1) புலி காட்டில் வசிக்கும்.
2) புலி மிருகங்களைப் பிடித்து உண்ணும்.
3) இதனால் புலி மாமிச உண்ணியாகும்.
4) புலி கூரிய பற்களையும் நகங்களையும் கொண்டது.
5) புலி உறுமும்.

த.அபிநயா, தரம்-2'சி'
யாம்.இந்து ஆரம்பப் பாடசாலை

## விசுவ கோபுரம்



380m உயரமான விசுவ கோபுரம் அமெரிக்கக் குடியரசின் முதலாவது ஞாபகார்த்த நினைவுச் சின்னமாகும். 50 மில்லியன் வருடங்களுக்கு முன்பு வெடித்த ஒரு எரிமலையில் இருந்து இது உருவாகியதாகக் கருதப்படுகின்றது. அறுகோண வடிவக் குறுக்கு வெட்டைக் கொண்ட பல தூண்கள் கெட்டியடைந்து ஒன்றுசேர்ந்து இந்தப் பெரிய கோபுரம் உருவாகியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

சி.கஜானி, தரம்-9 'டி'
கிளி/இந்துக் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

08.09.2013 முதல் 14.09.2013 வரை

தருபவர் - வித்தியா

**மேடம்**- பணிகளில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவதால் மட்டுமே நன்மைகளின் அளவு குறையாமல் கிடைக்கும். உங்களிடம் பொறாமை குணம் உள்ளவர் உதவுவது போல நடித்து இடையூறு உருவாக்குவர். கவனம் தேவை. இல்லறத்துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால் மட்டுமே குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் சராசரி நடைமுறை அமைந்து அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் புதிய நுணுக்கம் பின்பற்றி பணிச்சுமையை ஓரளவு குறைப்பர். மாணவர்கள் புதியவரை நண்பராக ஏற்பதில் நிதானத்தைக் கடைப்பிடியுங்கள்.

**இடபம்**- வாழ்வில் கூடுதல் வளம்பெற தேவையான பணிகளை மேற்கொள்வீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த பண உதவி, ஆலோசனை கிடைக்கும். இல்லறத்துணை கருத்து ஒற்றுமையுடன் நடந்து மகிழ்ச்சிகர வாழ்வை உருவாக்குவார். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து அதிக இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சிறப்பாகப் பணிபுரிந்து சலுகைப்பயன் பெறுவர். மாணவர்கள் படிப்பதில் உள்ள இடையூறைச் சரி செய்து அதிக புள்ளிகளைப் பெறுவர்.

**மிதுனம்**- மனம், செயலில் புதிய உற்சாகம் ஏற்படும். அயல் வீட்டாருடன் கருணை மனதுடன் பேசி நல் அன்பை வளர்ப்பீர்கள். இளைய சகோதரர்,வாழ்வில் முன்னேற தேவையான உதவியை மனமுவந்து வழங்குவீர்கள். இல்லறத்துணை உங்களின் நல்ல குணத்தை உறவினர்களிடம் சொல்லி பெருமைப்படுத்துவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும் ஆதாய பணவரவும் கிடைக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் இலக்கை நிறைவேற்றி நிர்வாகத்திடம் நன்மதிப்பு, கூடுதல் சலுகைப்பயன் கிடைக்கப்பெறுவர். மாணவர்களுக்கு படிப்புக்கான பணவசதி கிடைக்கும்.

**கடகம்**- உங்களை நன்மதிப்புடன் நடத்துகிறவர் கூட குறை சொல்கிற மாறுபட்ட சூழ்நிலை உருவாகலாம். கூடுதல் அளவில் நேர்மை, பொறுமை குணம் பின்பற்றுவது நற்பெயரைப் பாதுகாக்க உதவும். அக்கறையுடன் உடல் நலம் பேணுவதால் மட்டுமே அன்றாடப் பணிகளில் ஆர்வம் வளரும். இல்லறத்துணை ஆறுதல் மனப்பாங்குடன் உங்களுக்கான உதவியை வழங்குவார். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டங்களை கவனமுடன் பின்பற்றினால் நற்பெயரைப் பாதுகாக்க உதவும். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைப்பதால் கல்வியில் அக்கறை வளரும்.

**சிங்கம்**- மனதில் ஏறபடும் சோர்வால் செயல்கள் நிறைவேறுவதில் தாமதம் உருவாக்குவார். இருப்பினும் வாழ்வில் இலட்சியங்களை உணர்ந்து முக்கியமான பணிகளை மேற்கொள்வீர்கள். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர்கள் உங்கள் அருமை, பெருமை உணர்ந்து கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி நிறைவேறும். பணியாளர்கள் அதிக வேலைவாய்ப்பு, சம்பள உயர்வு கிடைக்கப்பெறுவர். மாணவர்கள் விளையாட்டுக்களில் சாகசங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி**-குடும்பத்தின் தேவைகளை, சிக்கன பணச்செலவில் நிறைவேற்றுவதால் மட்டுமே பணக்கடன் பெற வேண்டிய சூழ்நிலையைத் தவிர்க்கலாம். உங்கள் சொல்லுக்கு வரவேற்பு இருக்கிற இடங்களில் மட்டும் பேசுவது நல்லது. இல்லறத்துணை குடும்ப பாசத்துடன் நடந்து கொள்வார். தொழிலில் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்கிற நடைமுறை உரிய நன்மை பெற உதவும். பணியாளர்கள் கால அவகாசத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பதால் மட்டுமே சிறந்த தேர்ச்சியைப் பெறுவர்.

**துலாம்**- இனிய எண்ணங்கள் மனதில் உருவாகி செயல்களை நிறைவேற்ற புதிய உத்வேகம் தரும். எதிரியால் உருவாகும் தொந்தரவை சமயோசிதமாக சரி செய்வீர்கள். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து குடும்ப வாழ்வை பெருமைக்குரியதாக உருவாக்குவார். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற புதிய மாற்றங்களைப் பின்பற்றுவீர்கள். மாணவர்கள் ஒருமுகத்தன்மையுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**விருச்சிகம்** -சில விடயங்களில் இருந்த சந்தேகம் நிவர்த்தியாகும். ஆன்மிக நம்பிக்கை, மனதில் கொண்டு புதிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். செயல்கள் சிறப்பாக அமைந்து முழு அளவில் நற்பலன் பெற்றுத்தரும். எதிரி இடம் மாறிப்போகும் அனுகூல நிலை உண்டு. இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க தம்மாலானன பணிகளை மேற்கொள்வர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். அரசு தொடர்பான உதவி பெற அனுகூலம் உண்டு. பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பு, வருமான உயர்வு பெறுவர். மாணவர்கள் கல்வியில் சிறந்த தேர்ச்சி பெறுவர்.

**தனுசு** -ஒவ்வொரு செயலும் சிறப்பாக அமைந்து வாழ்வில் கூடுதல் வளம் பெறுவோம் என்ற நம்பிக்கையை உருவாக்கும். சமயோசிதமாகப் பேசி உறவினர், நண்பர்களிடம் நன்மதிப்புப் பெறுவீர்கள். எதிரியிடம் விலகுவதால் நேரமும் பணமும் மீதமாகும். இல்லறத் துணையின் மனக்குறையை இரக்க சிந்தனையுடன் சரி செய்வதால் குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். பணியாளர்களுக்கு சலுகைப்பயன் கிடைக்கும். மாணவர்கள் நன்றாகப் படித்து ஆசிரியர், பெற்றோரிடம் நன்மதிப்பு பெறுவர்.

**மகரம்** - திட்டமிட்ட பணி நிறைவேற கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். செயல்களில் ஒருமுகத்தன்மையுடன் ஈடுபடுவதால் பெறுகிற நன்மையின் அளவு அதிகரிக்கும். சாந்த குணம் கொண்ட உங்களை சிலர் பரிகாசமாகப் பேசுவர். அவர்களிடம் விலகுவது நல்லது. இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனம் நெகிழ வைக்கும். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். மாணவர்கள் கல்வியில் அதிக கவனம் தேவை.

**கும்பம்** - வாழ்வில் பலகாலம் திட்டமிட்ட செயல் ஒன்றை மன உறுதியுடன் ஆரம்பிப்பீர்கள். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். சாமர்த்தியமாகப் பணிபுரிந்து அதிக நன்மை பெறுவீர்கள். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வுமுறை இருக்கும். இல்லறத் துணை உங்களின் நல்ல குணத்தை மனதாரப் பாராட்டுவர். அரசியல்வாதிகளுக்கு கௌரவம் பெறுகிற வகையில் புதிய பதவி, பொறுப்பு வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் அதிக தேர்ச்சி பெறுவர்.

**மீனம்**- மனதில் திட சிந்தனையுடன் பணிகளை மேற்கொள்வது அவசியம். அடுத்தவர்பற்றி சிலர் கூறும் பொல்லாங்கு பேச்சுக்களைக் கேட்காமல் விலகுவது நல்லது. பணக்கடன் தருகிற நெருக்குதல் தன்மையைச் சமாளிக்க, குடும்ப உறுப்பினர்களின் உதவி கிடைக்கும். உங்களின் ஆலோசனை நல்வழி நடத்தும். இல்லறத் துணையின் நம்பிக்கைக்கு குறைவு வராத அளவில் நடப்பது ஒற்றுமையைப் பாதுகாக்கும். பணியாளர்கள் பணியிட சூழ்நிலை கவனத்தில் கொண்டு பணிபுரிவது நல்லது. மாணவர்கள் நண்பரின் செயல்குறையை விமர்சிக்க வேண்டாம்.



# மயக்கம் தெளிந்தெழு தோழா......

ஐம்பத்தியெட்டில்
அகதிகள் ஆக்கியாச்சு
எண்பத்து மூன்றில்
நெருப்பில் போட்டாச்சு
வெலிக்கடையில்
கண்களைத் தோண்டியாச்சு

குமுதினியில்
குரல்வளை அறுத்தாச்சு
நவாலியில்
நரமாமிசம் படைச்சாச்சு
முள்ளி வாய்க்காலில்
முதுகெலும்பையும் முறிச்சாச்சு
மயக்கம் தெளிந்திடு தோழா
வழியை விடு வாளை வீச

இனத்தை அழிச்சாச்சு
இதயத்தைப் பிளந்தாச்சு
நிலத்தைப் பிடுங்கியாச்சு
நிர்க்கதி யாக்கியாச்சு
கடலைக் கவர்ந்தாச்சு
கண்ணீரில் கவிழ்ந்தாச்சு
வீடுகளை அழிச்சாச்சு
விசரர்கள் ஆக்கியாச்சு
தடயங்கள் அழிச்சாச்சு
தார்றோட்டு போட்டாச்சு
சொந்தங்களை இழந்தாச்சு
சோகமே சொந்தமாச்சு
மயக்கம் தெளிந்திடு தோழா
வழிவிடு கடன் முடிக்க

உன் அப்பன் பாட்டன் காணி
உனக்கில்லை என்றாச்சு
உன் ஊர்காக்கும் உரிமை
உனக்கில்லை என்றாச்சு
பிள்ளையை இழந்த தாய்க்கு
றோட்டும் கட்டடமும்
தந்தாச்சு கணவனை இழந்த
பெண்களுக்கு இராணுவத்தை
காவலாக்கியாச்சு
கையில் கொடுத்த உறவுகளை
காணாமல் போக்கியாச்சு
காணாமல் போனோர்க்கு
மரணசாசனமும் தந்தாச்சு
இன்னுமென்ன பேச்சு தோழா?

-சாங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாமத்திய சடங்கு மீதான ஒரு விமர்சனம்



அர்த்தநாரி

> வேப்பிலை சுற்றுதல், பருவமடைந்த தினத்தி லிருந்து ஒரு மாதமோ அதற்கு கூடிய நாளோ வீட்டு மூலைக்குள் முடக்கி வைத்தல், இரும்புத் துண்டும் கையு மாய் திரிதல் போன்ற மூடப் பழக்கங்களை இல்லாமல் செய்து விட்டது மட்டுமன்றி, பருவமடைதல் கடவுள் செயல் என்ற நம்பிக் கையையும் போக் கடித்துவிட்டது.

பெண்ணிய சிந்தனைகள் முனைப்புப் பெற்ற ஒரு காலத்திலும் ஆண் பலம்மிக்கவன், தனித்தியங்குபவன், துணிவுள்ளவன், புதுப்புது முயற்சிகளில் ஈடுபடுபவன், பாலியல் சுதந்திரம் உள்ளவன், அதேசமயம் பெண்ணோ வீட்டில் இருப்பவள், வெட்கம் உள்ளவள், பலவீனம் நிறைந்தவள், உணர்ச்சிவசப்படுபவள், தங்கிவாழ்பவள் என்ற ஆணாதிக்க சமூக அமைப்பின் வழி புனையப்பட்ட ஆண் பெண் அடையா ளங்கள் தமது தனித்துவத்தை மெல்ல மெல்ல இழந்து பெண்ணின் பல்பரிமாண ஆற்றல்கள் பல திசைகளிலும் வேகமாக வெளித்தெரியும் ஒரு காலகட்டத்திலும் நாம் நிற்கின்றோம்.

உயிர்களின் உருவாக்கத்துக்கும் உறவுகளின் பிணைப்புக்கும் ஆதாரமாய் விளங்கும் பெண்கள் சமூகத்தின் இன்றைய பெரும் பிரயத்தனங்களில் ஒன்று, ஆணாதிக்க சமூக அமைப்பு தன் மீது வலிந்து பிணைத்திருக்கும் அனைத்து விலங்குகளிலிருந்தும் விடுவித்துக் கொள்ளப் போராடுதலாகும். மற்றையது அபிவிருத்தி நோக்கிய பாதையில் தனது பங்கைச் செலுத்துதலாகும்.

பெண் தனக்குத்தானே விரும்பி அணிபவை, பெண்ணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் அணிவித்து விடுபவை என ஆணாதிக்க சமூக அமைப்பால் பெண்ணைச் சுற்றியிருக்கும் விலங்குகள் அனைத்திலிருந்தும் விடுபட வேண்டிய அவசியம் பெண்ணுக்கு உண்டு. இந்த விலங்குகளில் பல அறிவின் துணைகொண்டு சுலபமாக அகற்றப்படக்கூடியவை, சில அதிகப் பிரயத்தனத்துடன் அகற்றப்பட வேண்டியவை. இன்னும் சில கூட்டு முயற்சிகளினூடாக மட்டுமே அகற்றப்படக் கூடியவை. வேறு சிலவோ அடித்து நொருக்கித்தான் அகற்றப்படக்கூடியவை.

இதில் பெண்ணின் ஆளுமையை மிக மோசமாகச் சிதைக்கக்கூடிய வல்லமையுள்ள அதேசமயம் அறிவின் துணைகொண்டு மிகச் சுலபமாக அகற்றக்கூடிய ஒரு விலங்கு தொடர்பான ஒரு பொதுப்பார்வையை தர்க்கரீதியாக ஆராயும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

### சாமத்தியச் சடங்கு

வளரிளம் பருவத்தில் இருக்கும் ஒரு சிறுமியின் ஆளுமையை மிக மோசமாகச் சிதறடிக்கும் ஆற்றல் மிக்க சடங்கு இது. பருவமடைதல், வயதுக்கு வருதல், பெரிசாதல், பக்குவப்படுதல், சாமத்தியப்படுதல் எனப் பேச்சுவழக்கிலும் பூப்புனித நீராட்டு விழா என எழுத்து வடிவிலும் அழைக்கப்படும் இச்சடங்கு, குழந்தைப் பருவத்திலிருந்து குமரிப் பருவத்திற்கு மாறும் ஓர் இடைக்கட்ட பெண் உடல் தொழிற்பாட்டைக் குறிக்கின்றது. குழந்தையின் உடற் தொழிற் பாட்டில் ஏற்படும் இயல்பான ஒரு மாற்றத்தை ஊரறியச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு சடங்காகும். இது 'பெண் கரு உற்பத்திக்கு தயாராகி விட்டாள்' என்பதை ஊரறிய தம்பட்டம் அடிப்பதே இச்சடங்கு கொண்டாடப்படுவதன் அடிப்படை நோக்கமாகும். குடும்பத்தின் பொருளா தார வசதிக்கேற்ப சடங்கின் பரிமாணமும் கூடிக்குறையும்.

### பழையன கழிதலும் புதியன புகுதலும்

துஷ்ட ஆவிகள் தீண்டாதிருக்கும் பொருட்டு குப்பை, விளக்குமாறு போன்றவற்றில் இருத்தி நீராட்டுதல், வேப்பிலை சுற்றுதல், கழிப்புக்கழித்தல் என்பனவும், இவள் என் மகனுக்குரியவள் என்ற உரிமையைத் தக்கவைக்கும் பொருட்டு தாய் மாமனுக்கு சடங்கில் முதல் முக்கியத்துவம் கொடுப்பதும், 'தீட்டு' சேலையை சலவைத் தொழிலாளி யிடம் ஒப்படைப்பதன் மூலம் பெண் பருவமடைந்த செய்தியை ஊருக்கு உறுதிப்படுத்துவதும் இதன் பங்குகள்.

பருவமடைந்த நாளிலிருந்து வீடு தவிர வேறு இடங்களுக்குப் போவதைத் தடுத்தல், பள்ளி வாழ்வைத் தடை செய்தல், கூடப்பிறந்த ஆண் சகோதரத்துடன்கூட நெருங்கி நின்று கதைப்பதைத் தடுத்தல் போன்ற இரு நூற்றாண்டுப் பழைமைகள் இன்றைய காலங்களில் அங்கொன்றும் இங்கொன்றும் என்று சுட்டிக்காட்டிப் பேசுமளவிற்கு அரிதான நிகழ்வுகளாகி விட்டன.

"அனைவருக்கும் கல்வி" என்ற சுலோகம் அயலவனின், வகுப்புத் தோழனின் தொழில் செய்யும் இடங்களில் உள்ள சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களை அறிந்து கொள்ள உதவியது போல், பண்பாட்டுப் படையெடுப்புகளும், பத்திரிகை போன்ற பொதுசனத் தொடர்புச் சாதனங்களும் உலக வாழ் நிலையை அறிந்துகொள்ளவும் அதைப் பின்பற்றவும் தூண்டிய மையானது வேப்பிலை சுற்றுதல், பருவமடைந்த தினத்திலிருந்து ஒரு மாதமோ அதற்கு கூடிய நாளோ வீட்டு மூலைக்குள் முடக்கி வைத்தல், இரும்புத்துண்டும் கையுமாய் திரிதல் போன்ற மூடப் பழக்கங்களை இல்லாமல் செய்து விட்டது. பருவமடைதல் கடவுள் செயல் என்ற நம்பிக்கையையும் போக்கடித்து விட்டது.

ஆனால், இன்று கண்முன்னே நடைபெறும் சில அலங்கோலங்களைப் பார்த்தால் மேற்கூறப்பட்ட மூடப் பழக்க வழக்கங்கள் பரவாயில்லையோ என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது. அதிலும் ஒன்றரைத் தசாப்தங்களுக்கு முன்பு தமிழ் மண்ணில் நுழைந்த வீடியோ தொழில்நுட்பம் ஈழத்து அறிவுசார் வளர்ச்சிகளை உலகெங்கும் பரப்ப முயன்றதை விடவும் காரணகாரியத் தொடர்பற்ற, மனம்போன போக்கின்படி செய்யப்படுகின்ற, மூடநம்பிக்கைகளை விடவும் மோசமான புதிய புதிய சடங்குகள் புதிது புதிதாக மனித மூளையில் உதிக்கக் காரணமாக மாறியிருக்கிறது. சமூக விழிப்புணர்வு, அறிவூட்டல், பண்பாட்டுக்கலப்பு எது வந்தும் கூட மாற்றமடையாது பேய் பூதங்களில் நம்பிக்கை வைத்து உணர்வு பூர்வமாக மேற்கொள்ளப்படும் எத்தனையோ சடங் குகளை, ஆட் டங்காண வைத்து வெறும் சம்பிரதாயங்களாக மாற்றிய வல்லமை இந்த வீடியோ தொழில் நுட்பத்திற்கு உண்டு. இதன் வருகையுடன் சடங்கு களில் பழையன கழிதலும் புதியன புகுதலும் பரவலாக இடம்பெறத் தொடங்கின. இந்தக் கண்மூடித் தனமான புதிய சடங்குகள் பெரும்பாலும் படித்த, நடுத்தர வர்க்க குடும்பங்களிலேயே அதாவது மூடப்பழக்கங்களின் மூலத்தை அறிவுத்தேடலின் விழி கண்ட றியும் வாய்ப்பு இருக்கும் குடும்பங்களிலேயே நிகழ்கிறது.

(தொடரும்.........)

# அவள் என் மனைவி



மு.து.வேணுஜா
உரும்பிராய்

விண்ணைத்
துழைத்து
வையகத்தில் வீழ்ந்த
வெண்மதி அவள்!
என் உடல
கட்டிலுள்ளே
நுழைந்த உயிர்
அவள்!

தாய்மையின் இலக்கணத்தை
என் இதய அறைகளில்
செதுக்கியவள் அவள்!
பெண் குலத்தின் வைரம் அவள்!
அவளின்றி என் உயிர்
ஒரு அணுவும் அசையாது!
காரணம்
அவள் என் மனைவி!



சுபானுஜன் சாரங்கி

# மிதவாதப் பெண்ணியம்

பெண்ணியம் என்றாலே ஆண்களை எதிர்ப்பது என்ற எண்ணக் கருவே சமூகத்தில் பரவலாக உள்ளது. பெண்ணியத்தின் நோக்கம் ஆணாதிக்கத்தால் உரிமையிழந்து அடிமைகளாக வாழும் பெண்ணினத்துக்கு விழிப்பூட்டி, ஆண்களுக்கு நிகரான உரிமைகளைப் பெற்றுத் தருதல் எனச் சொல்லலாம். 'பெண்ணியம் என்பது பெண்கள் சமூகத்திலும், அலுவல்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயல்படும் முயற்சியுமாகும் . வாழ்வின் எல்லாக் கட்டத்திலும் மகளிருக்கு உரிமைகளும் சந்தர்ப்பங்களும் சமமாகக் கிடைக்க வேண்டும். இன்று அமெரிக்காவில் மிதவாதப் பெண்ணியம் முதன்மைப் பெண்ணிய நீரோட்டம் என்று வழங்கப்படுகிறது. மிதவாதப் பெண்ணியம் தாராளவாதப் பெண்ணியம் எனவும் அழைக்கப்படுகிறது.

இதன் அடிப்படைக் கொள்கைகள்

1. பெண்களை வேறுபடுத்தி அடிமைப்படுத்துவதை ஒழித்தல்
2. ஆண், பெண் பால்பேதங்களை ஒழித்தல்
3. பெண்களின் பிரச்சினைகளை அறிந்து அதைத் தீர்த்தல்
4. ஆண்களால் உண்டாகும் வன்முறைகளை ஒழித்தல்
5. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை ஒழித்தல்

[illegible] இப்பெண்ணியம். தற்போதைய கலாசாரத்தில் காணப்படும் பாலியல் [illegible]. பண்டைக் காலத்திலேயே உண்டானது. பாலியல் பங்குநிலை என்பது மனிதரால் உருவாக்கப்பட்டது. எனவே அது மனிதராலேயே அழிக்கப்பட வேண்டும் என்பது மிதவாதப் பெண்ணிய வாதிகளின் கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி
உதயன் 08 09 2013

## தகவல் துளிகள்

சச்சின் டெண்டுல்கரின் 200 வது சாதனை டெஸ்ட் ஆட்டத்தை நடத்த மும்பை, மேற்கு வங்க கிரிக்கெட் சங்கங்கள் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

இந்த ஆட்டத்தைத் தங்கள் மைதானத்திலேயே நடத்த அனுமதிக்க வேண்டும் என்று இரு சங்கங்களும் இந்திய கிரிக்கெட் சபையிடம் வலியுறுத்தி உள்ளன.

+++++

இலங்கை அணி மீண்டும் பாகிஸ்தான் சென்று கிரிக்கெட் தொடரில் விளையாடத் தயாராக உள்ளது என்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு பாகிஸ்தானின் லாகூர் நகரில் இலங்கை அணி வீரர்கள் சென்ற பேருந்து மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து பாகிஸ்தானில் நடைபெறும் கிரிக்கெட் தொடர்களில் பங்குபற்ற சர்வதேச அணிகள் மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

+++++

புகையிலை உபயோகத்துக்கு எதிரான விளம்பரத் தூதராக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான ஒப்பந்தத்தை இந்திய மத்திய சுகாதாரத்துறை அவருடன் மேற்கொண்டுள்ளது. எதிர்காலத்தில் புகையிலைப் பழக்கத்துக்கு எதிரான விழிப்புணர்ப்புப் பணிகளிலும், நிகழ்ச்சிகளிலும் ராகுல் டிராவிட் கலந்து கொள்வார்.



## 'ஹம்மா... ஹம்மா...' அசத்துகிறார் ஹெயில்

மேற்கிந்தியத் தீவுகள் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல், ஏ.ஆர். ரகுமானின் ரீமிக்ஸ் பாடலைப் பாடி அசத்தியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல். இமாலய சிக்ஸர் அடிப்பதில் அவரை விஞ்சியவர்கள் யாருமில்லை.

2012ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த '20/20' உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் பிரபலமான கங்ணம் நடனத்தை மைதானத்தில் ஆடி அசத்தினார். அந்தத் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி சம்பியன் பட்டம் வென்ற பின் கெய்லுடன் இணைந்து ஒட்டுமொத்த மேற்கிந்திய தீவுகள் அணியும் கங்ணம் ஆடியதை யாராலும் மறக்க முடியாது.

இயற்கையாவே நடனமாடும் திறமை படைத்த கெய்ல், தற்போது ஒரு தனியார் மதுபான நிறுவனத்தின் விளம்பரத்திற்காக ரகுமானின் 'ஹம்மா... ஹம்மா' பாடலின் 'ரீமிக்சை' பாடி யுள்ளார்.

இதில் பிரபல பொலிவூட் நடிகர்களான புராப் கோஹ்லி, மெய் யாங் சாங் ஆகியோரும் நடித்துள்ளனர்.

இதுவரை இமாலய சிக்சர்களின் மூலம் ரசிகர்களின் மனதைத் தொடர்ந்து கொள்ளையடித்து வந்த கெய்ல், தற்போது விளம் பரங்கள் மூலமும் ரசிகர்கள் மத்தியில் கொடிகட்டி பறக்க தொடங்கியுள்ளார்.

# 2016 போல்ட் ஓய்வு

**போல்ட் வென்ற தங்கங்கள்:**

**ஒலிம்பிக்கில் போல்ட் இதுவரை 6 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார். 2008ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 100 மீ, 200 மீ, 4 X100 மீ தொடர் ஓட்டம் ஆகியவற்றிலும், 2012 லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 100மீ, 200 மீ, 4 X100 மீ தொடர் ஓட்டம் என்பவற்றிலும் தங்கம் வென்றுள்ளார்.**



பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் 2016 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளின் பின்னர் ஓய்வு பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளேன் என்று ஜமைக்கா வின் உசைன் போல்ட் அறிவித்துள்ளார்.

உலகின் அதிவேக மனிதர் என்றழைக்கப்படும் போல்ட், களத்தில் மின்னல் வேகத்தில் இலக்கைக் கடந்து பதக்கங்களை குவித்து வருபவர். அவர் களத்தில் இருக்கும் வரை மற்றவர்கள் பதக்கம் வெல்வது இயலாது என்ற நிலை தற்போது நிலவி வருகிறது.

இந்நிலையில், 2016ஆம் ஆண்டு ஒலிம்பிக்கின் பின்னர் பிறகு தனது ஓய்வு குறித்து பரிசீலிக்கப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

"ரியோ ஒலிம்பிக்கில் அதிக தங்கப் பதக்கங்களை வெல்ல வேண்டும். 200 மீற்றர் ஓட்டப் பந்தயப் போட்டியில் மீண்டும் ஒரு உலக சாதனை படைக்க வேண்டும். பொது நலவாயப் போட்டிகளிலும் தங்கம் வெல்ல வேண்டும். அதற்குப் பிறகு ஓய்வு பெறுவது குறித்து பரிசீலிப்பேன். விளையாட்டில் உச்சத்தில் இருக்கும்போதே ஓய்வு பெறுவது நன்றாக இருக்கும் என நினைக் கிறேன்" என்று தெரிவித்தார்.

## அசத்துவேன் முன்னேறுவேன்

### அனா இவானோவிச்

ரென்னிஸ் அரங்கில் 14 ஆவது இடத்தில் இருந்தாலும், மீண்டும் ஆட்டங்களில் அசத்தி முன்னேற்றம் அடையவே விரும்புகிறேன் என்று செர்பியாவின் ரென்னிஸ் வீராங்கனை இவானோவிச் தெரிவித்துள்ளார்.

25 வயதுடைய அனா இவானோவிச் இதுவரை ஒரு முறை மட்டும் கிராண்ட்ஸ்லாம் (பிரெஞ்ச் ஓபன், 2008) பட்டம் வென்றுள்ளார். சர்வதேச தரவரிசையில் 14ஆம் இடத்திலுள்ள அவர் தற்போது நடைபெற்று வரும் அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் சாதிப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வழங்கிய நேர்காணல்:

**அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரில் வெற்றிகர ஆரம்பம் குறித்து என்ன நினைக்கிறீர்கள்?**

முதல் ஆட்டம் என்பதால் சற்று நெருக்கடி இருந்தது. சரியான வியூகத்தைக் கண்டறிந்த பின், எளிதாக வெற்றி பெற்றேன்.

**ரென்னிஸ் உலகில் மீண்டும் முன்னணி இடத்துக்கு வரும் எண்ணம் உள்ளதா?**

அது தான் எனது ஒரே குறிக்கோள். இதற்கான தகுதிகள் எனக்குள்ளதாக நம்புகிறேன். ஒருமுறை முதலிடத்தில் இடத்தில் இருந்துவிட்டால், பின்னர் மற்ற இடங்களில் இருப்பது திருப்தி தராது. அதனால், முடிந்த வரை எனதுதிறமைகள் அனைத்தையும் பயன்படுத்தி முன்னேற்றம் அடையவே முயற்சித்து வருகிறேன்.

**உங்களது புதிய கூட்டணி எப்படி உள்ளது?**

விம்பிள்டன் தொடருக்குப் பின், உடற்தகுதி பயிற்சியாளர் உட்பட பலரும் புதியதாக வந்துள்ளனர். அதனால் உற்சாகத்துடன் செயற்பட்டு வருகிறேன். செர்பியாவைச் சேர்ந்தவர்களுடன் இணைவது இது தான் முதன் முறை. அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடருக்காக 10 நாள்கள் கடுமையான பயிற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

அண்மையில் 'டுவிட்டரில்' இணைந்த நீங்கள், ஜோகோவிச், நடாலிடம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டீர்களா?

ஜோகோவிச், நடால் இருவரும் 'டுவிட்டரில்' மிகவும் பிரபலம். இவர்களுடன் பேசும் வாய்ப்பு இதுவரை கிட்டவில்லை. விரைவில், இது நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

## நடனத்திலும் அசத்தும் ஹோக்லி

இந்திய கிரிக்கெட் வீரர் வீராட் ஹோக்லி, பொலிவூட் நடிகை அனுஷ்கா சர்மாவுடன் இணைந்து சல்சா நடனம் ஆடியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் இளம் வீரர் வீராட் கோஹ்லி. 24 வயதான இவர் தனது சிறப்பான ஆட்டத்தினால் துணை அணித்தலைவர் அந்தஸ்துக்கு உயர்ந்துள்ளார். சிம்பாப்வே தொடரில் அணித் தலைவராக அசத்திய ஹோக்லி ஒருநாள் தொடரை முழுமையாக வென்று இந்திய அணி கிண்ணம் கைப்பற்ற உதவினார்.

அடுத்தடுத்த வெற்றிகளால் இவரது விளம்பர வருமானம் கொடி கட்டிப் பறக்கிறது. கைத் தொலைபேசி, குளிர்பானம் உட்பட பல பொருள்களுக்கான விளம்பரங்களில் தோன்றுகின்றார்.

தற்போது ஆட்டங்கள் எதுவும் இல்லாத நிலையில் கிடைத்துள்ள ஓய்வில் பல விளம்பரங்களில் நடிக்கத் தொடங்கிவிட்டார். அண்மையில் 'ஷாம்பு' ஒன்றின் விளம்பரத்துக்காக பொலிவூட் நடிகை அனுஷ்கா சர்மாவுடன் இணைந்து சல்சா நடனம் ஆடினார்.

இதற்கு முன் இந்தியாவின் ஹர்பஜன் சிங், இலங்கையின் ஜெயசூர்யா உள்ளிட்ட பலர் பல்வேறு நடன நிகழ்ச்சிகளில் நடனம் ஆடியுள்ளனர்.

[illegible] கினால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.



படப்படிப்புக்கு முன்னர் ஓரிரு தடவைகள் தான் ஒத்திகை பார்த்துக் கொண்டார்களாம். படப்பிடிப்புத் தொடங்கியதும் ஹோக்லி ஒரே தடவையில் ஆடி படப்பிடிப்புக் குழுவினரையே அசத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி என்ன செய்வார் நவிப்பிள்ளை?

● அதிரன்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைக்கான பயணம் பெரும் சலசலப்போடு முடிவடைந்திருக்கிறது. அவரது பயண நேரத்தில் இலங்கையில் எழுந்த கருத்துக்கள், வியாக்கியானங்கள், விமர்சனங்கள் இங்கு என்ன நடைபெறுகிறது என்பதை தெளிவாக அவருக்கு உணர்த்தி இருக்கும் என்று நம்பலாம்.

இலங்கை அரசு விடுத்த அழைப்பை அடுத்து போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கான தனது பயணத்தை மேற்கொண்டார்.

தனது பயணத்தின்போது ஜனாதிபதி மஹிந்த, பாதுகாப்பு செயலர் கோத்தபாய, நீதியமைச்சர் ஹக்கீம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், சிவில் சமூக நிர்வாகத்தினர் ஆகியோரைச் சந்தித்து அவர் பேச்சு நடத்தியிருந்தார். இந்த பேச்சுக்களின் பயனாக தனது பயண முடிவில் தான் கண்டுகொண்டவற்றை கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்து வெளிப்படுத்தினார். இலங்கை தொடர்பில் அவர் வெளியிட்ட ஒரே ஒரு கருத்து இங்கு என்ன நடந்தேறுகிறது என்பதை சர்வதேசத்துக்கும் ஐ.நாவுக்கும் உணர்த்துவதாக அமைந்துவிட்டது. சற்றேனும் எதிர்பார்த்திராத நவநீதம்பிள்ளையின் இந்தத் தாக்குதலால் இப்போது நிலைகுலைந்து போயிருக்கிறது இலங்கை அரசு. " சர்வாதிகார ஆட்சியை நோக்கி பயணிக்கிறது இலங்கை" என்று தனது பயணத்தின் முழுவிவரத்தையும் ஒரே வசனத்தில் வெளியிட்டார் நவிப்பிள்ளை.

அவரது இலங்கைப் பயணத்தின் நோக்கம் இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்து அது தொடர்பான அறிக்கையொன்றை ஐ.நா.வுக்கு வழங்குவதுதான். இம்மாத இறுதியில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் தனது இலங்கைப் பயணம் தொடர்பாக வாய் மூலம் விவரிக்கவுள்ள அவர் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும் கூட்டத் தொடரில் விரிவான அறிக்கையொன்றையும் சமர்ப்பிப்பார்.

நவிப்பிள்ளை இலங்கைக்கு வர முதலே அவர் தொடர்பான விமர்சனங்களை தெற்கிலுள்ள இனவாதக் கட்சிகள் பல முன்வைக்கத் தொடங்கியிருந்தன. அவற்றுக்கு மத்தியிலும் அவரது பயணம் தொடர்ந்தது. அவர் இலங்கை வந்தடைந்த மறுநாள் அரசிலுள்ள அமைச்சர் ஒருவர் தெரிவித்த கருத்து சர்வதேசத்தையும் ஐ.நாவையும் பெரும் சீற்றத்துக்கு உள்ளாக்கியது. அமைச்சர் மேர்வின் சில்வாவே இந்தக் கருத்தை வெளியிட்டவர். நவிப்பிள்ளை தன்னை திருமணம் செய்ய விரும்பினால் அதற்கு தான் தயாராக உள்ளதாக அதிரடி கருத்து ஒன்றை வெளியிட்டு ஆரம்பத்திலேயே சர்ச்சையைக் கிளப்பிவிட்டார் மேர்வின் சில்வா.

இவற்றுக்கு மத்தியில் தனது வடக்குக் கிழக்கு பயணத்தை மேற்கொண்டார் நவிப்பிள்ளை. இறுதிப் போர் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான முள்ளிவாய்க்காலுக்கும் நேரில் சென்ற அவர் அங்குள்ள மக்களை சந்தித்து பிரச்சினைகளை நேரில் கேட்டறிந்தார். அவரது பயணத்தின் முக்கிய நோக்கத்தை நிறைவு செய்தது இந்த முள்ளிவாய்க்கால் சந்திப்பு.

அங்கு மக்கள் நவநீதம்பிள்ளையுடன் மனம் விட்டுப் பேசினார்கள். தமது அவலங்களை தாம் சந்திக்க நேர்ந்த துன்ப துயரங்களை எல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்னிலையில் கொட்டித்தீர்த்தனர். இறுதிப் போரில் சரணடைந்த - காணாமற் போன உறவுகளின் நிலை பற்றி அறிந்து சொல்லுமாறு அவரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டனர்.

அங்கு மக்களிடம் மனம் திறந்து பேசிய அவர் "உங்கள் பிரச்சினைகளுக்கு எனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தீர்வை எட்ட முயற்சிப்பேன்" என்று உறுதியளித்தார்.

போர் நடைபெற்ற நாடுகளில் இவையெல்லாம் நடப்பது வழமையாக இருந்தாலும் முள்ளிவாய்க்காலில் நவநீதம்பிள்ளை நடத்திய இந்தச் சந்திப்பு ஐ.நா. நிச்சயம் இதில் தலையிட வேண்டும் என்ற எண்ணப்பாட்டை அவரின் மனதில் கொண்டு வந்திருக்கும் என்பது நிச்சயம்.

சந்திப்புக்களை முடித்த பின்னர் அவர் அங்கிருந்து வெளியேறிய ஒரு சில நிமிடங்களிலேயே அவரிடம் முறை[illegible]யிட்ட மக்கள் புலனாய்வாளர்களால் மிரட்டப்பட்ட விடயமும் நவநீதம்பிள்ளையின் கவனத்துக்கு உடன் கொண்டு வரப்பட்டது. இதனால் அவர் மிக மனவேதனை அடைந்தார் என அவருடன் கூட இருந்த அதிகாரிகள் தெரிவித்தனர். தன்னிடம் முறை யிட்டதற்காகவே இப்போது உயிர் அச்சுறுத்தலை அந்த மக்கள் எதிர் கொள்கிறார்கள் என்று [illegible] வருந்திக் கொண்டாராம் ஆணையாளர். இந்த வருத்தத்துக்குரிய விடயம் அவருக்கு பல உண்மைகளை தெளிவுபடுத்தியிருக்கும். இந்த மக்களின் அவலத்துக்கும் துன்ப துயரத்துக்கும் காரணமானவர்கள் யார் என்பதை இந்த ஒரு சம்பவத்தை வைத்துக் கொண்டே அவரால் ஊகிக்க முடிந்திருக்கும்.



மக்கள் நவநீதம்பிள்ளையுடன் மனம் விட்டுப் பேசினார்கள். தமது அவலங்களை தாம் சந்திக்க நேர்ந்த துன்ப துயரங்களை எல்லாம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்னிலையில் கொட்டித்தீர்த்தனர். இறுதிப் போரில் சரணடைந்த - காணாமற் போன உறவுகளின் நிலை பற்றி அறிந்து சொல்லுமாறு அவரிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டனர்.

வடக்குப் பயணத்தின் பின்னர் கிழக்குக்கும் சென்றார் ஆணையாளர். அங்கும் நிலைமைகளை நேரில் பார்த்து மக்களுடன் பேசினார். இதன் பின்னர் கொழும்பு திரும்பிய அவர் வடக்கு - கிழக்கு நிலைமைகள் குறித்தும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினார். வழமை போன்றே தனது அரசின் சாகசங்களை எல்லாம் நவநீதம்பிள்ளையிடம் அவிழ்த்துவிட்டார் மஹிந்த. அரசு தமிழ் மக்களுக்கான அனைத்தையும் செய்கிறது என்ற தோரணையில் அவரின் பேச்சு அமைந்திருந்தது.

இந்தச் சந்திப்புக்கள் எல்லாம் முடிந்த பின்னர் கொழும்பில் நடத்திய ஊடக மாநாட்டில் இலங்கையின் இன்றைய நிலையை தெளிவாகப் புட்டுவைத்து விட்டு ஜெனீவாவுக்குப் பறந்தார் நவநீதம்பிள்ளை.

ஏழு நாள்களில் எட்டுத் தரப்பினரை சந்தித்த அவர் கூறிய கருத்துக்கள் மிக முக்கியமானவை. " இதற்கு முன்னர் இப்படி ஒரு விசும்பலையும் கண்ணீரையும் நான் காணவில்லை. அவர்களுக்கு ஆறுதல் சொல்லக் கூட என்னால் முடியவில்லை. பெரும்பாலான பெண்கள் வீட்டில் கணவரையோ பிள்ளையையோ இழந்திருக்கிறார்கள். என்னுடன் உரையாடிய பொதுமக்களையும் சில மனித உரிமை ஆர்வலர்களையும் அச்சுறுத்தியுள்ளனர் படையினர். இது இலங்கையில் நிலவும் எதேச்சதிகாரப் போக்கை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இந்தக் கண்காணிப்பையும் துன்புறுத்தலையும் பார்க்கும் போது இங்கு ஜனநாயகம் மிக மோசமான நிலையில் உள்ளது. ஐ.நாவும் ஐ.நா. அமைப்புக்களும் அமெரிக்காவும் ஏற்கனவே கூறியிருந்தபடி இறுதிப் போரில் மக்கள் கொல்லப்பட்டமை குறித்து இலங்கை நம்பகரமான விசாரணை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் சர்வதேச விசாரணையை மேற்கொள்ள வேண்டி ஏற்படும்" என்று இலங்கைப் பயணத்தின் முடிவில் தனது எச்சரிக்கையை வெளியிட்டு வெளியேறினார் அவர்.

நவநீதம்பிள்ளையின் இந்த எச்சரிக்கையை தனது வழமையான பாணியில் பொய்க் குற்றச்சாட்டு என்று கூறி நிராகரித்து உள்ளது இலங்கை அரசு. ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கூறிய குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் முழுக்க முழுக்கப் பொய் என்று இங்கிருந்து லண்டனுக்கு ஓடிப் போய் ஊடக மாநாடு வைத்து மறுத்தரைத்திருக்கிறார் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ். நவிப்பிள்ளையின் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். அதேபோன்றே அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவும் கூறுகிறார். இந்த நேரத்தில் அமைச்சர் டளஸ் அழப்பெரும தன் பங்குக்கு ஐ.நா. ஆணையாளரிடம் மன்னிப்புக் கோரியிருக்கிறார். தனது அன்னைக்குச் சமனான நவநீதம்பிள்ளைக்கு அமைச்சர் மேர்வின் சில்வா திருமண அழைப்பு விடுத்தமை மாதவறு என்று அவர் பகிரங்க மன்னிப்புக் கோரியிருக்கிறார்.

இவ்வாறு சலசலப்புக்கு மத்தியில் முடிந்த நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணத்தின் பெறுபேற்று அறிக்கை எப்போது வெளியிடப்படும் என்பதே இப்போதுள்ள எதிர்பார்ப்பு. இம்மாத இறுதியில் நடக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்திலும் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடக்கும் கூட்டத் தொடரிலும் இதன் பெறுபேறுகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் பின்னர் இலங்கை விடயத்தில் நவநீதம்பிள்ளை என்ன செய்யப் போகிறார் என்பதே கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுத்திறனாளியின்

ரன்யா வர்ணகுலசூரிய
தமிழில்: சந்திரசேகர்

# நாட்குறிப்புகள்



(பகுதி 2)

பின்வரும் கட்டுரைத் தொடரானது, மாற்றுத்திறன் படைத்த இளம் பெண் ஒருவர் தனது வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான தொழில் ஒன்றை தேடும் உண்மைச் சம்பவத்தை பிரதிபலிப்ப தாக அமைந்துள்ளது. அத்துடன், மாற்றுத் திறன் படைத்தவர்கள் எவ்வாறு தமது திறமைகளை தொழில் நிலைகளில் வெளிக் காட்டுவார்கள், அவர்களுக்கும் தொழில்புரிய ஒரு சந்தர்ப்பம் வழங்கப் பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து தொழில் வழங்குநர் ஒருவன் மனநிலையை இந்த ஆக்கம் வெளிக் காட்டுவதாக அமைந்துள்ளது. முதல் பகுதியில் அர்ச்சனா என்ப வர், தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக தனது ஆளுமை களை விருத்தி செய்து கொள்ளும் தீர்மானம் குறித்து பார்ப்போம்.

## எனக்கும் ஒரு வேலை கிடைக்காதா...?
## தொழில் தேடும் மாற்றுத்திறனாளி ஒருவரின் ஆதங்கம்

அன்பார்ந்த வாசகரே....

இன்று நான் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இறுதி பரீட்சைக்கு தோற்றியிருந்தேன். இதில் நான் சித்தியடைவேன் என எதிர்பார்ப்பதுடன், பிரார்த் தனையும் செய்கிறேன். கடந்த 6 மாத காலப்பகுதி யில் நான் மிகவும் கஷ்டப்பட்டு செயற்பாடுகளை முன்னெடுத்து, தொழில் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு அவசியமான ஆளுமைகளை பெற்றுக் கொள்ள முயற்சி செய்தேன். இந்த கால கட்டத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந் துள்ளது. நீங்கள் ஒரு கடையில் தொழில்புரிபவராக இருந்தாலும் கூட, பட்டியல் இயந்திரத்தை செயற் படுத்த, கடன் அட்டைகள் மூலமான கொடுக்கல் வாங்கல்களை பூர்த்தி செய்ய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மிகவும் இன்றியமையாத தாக காணப்படுகிறது. சில தொழிற்சாலைகளில் இயந்திரங்களை செயற்படுத்தவும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் உதவியாக அமைந் துள்ளது என நான் நம்புகிறேன்.

6 மாதங்களுக்கு முன்னர் நான் யாழ்ப்பாணம் வந்த போது, மிகவும் பயந்தேன். 10 வயது முதல் பார்வையை இழந்த நான், எப்போதும் என் குடும்ப அங்கத்தவர்கள் வழிகாட்டியாக என் அருகில் இருந்தார்கள். முதல் தடவையாக ஹொஸ்டல் ஒன்றில் நான் தனியாகத் தங்கினேன். எனது இயலாமை குறித்து மக்கள் சிந்திக்கமாட்டார்கள் என நான் அதிகம் பயந்தேன். எனது பெற்றோரும் நான் வீட்டிலிருந்து குறித்த அதிகளவான காலப் பகுதிக்கு வெளியே இருப்பது குறித்து அதிகளவு கரிசனை செலுத்தினார்கள். அவர்களும் என்னுடன் வர விரும்பிய போதும், பண்ணையை விட்டு அவர்களால் வர முடியவில்லை.

நான் இந்த கற்கை குறித்தும் கவலையடைந்தேன். ஏனெனில் நான் அதுவரை கணினி ஒன்றை தொட்டதுகூட இல்லை. தற்போது, நான் என் பார் வையில்லாமல் ஒரு கணனியை உபயோகிப்பது எப்படி என்பது குறித்துப் படிக்கப் போகிறேன். என்னால் முடியுமா? இந்த செயற்பாட்டை மேலும் கடினமாக்கும் வகையில், இந்த பயிற்சி நெறியை முன்னெடுத்தவர் சிங்கள மொழியை பேசுபராக இருந்தார். இதனால் கற்கையும் சிங்களத்தில் முன்னெடுக்கப்பட்டது. என்னால் எப்படி புரிந்து கொள்ள முடியும்? நான் இந்த கற்கையில் தேர்ச்சி யடையமாட்டேன் என்று தான் நினைத்தேன். ஏனெனில் எனக்கு எதுவும் புரியவில்லை.

ஆனாலும் ஏதோ ஒரு வேகம், என்னை முயற்சி செய்ய ஊக்குவித்தது. இந்த கற்கையை நான் ஆரம்பித்த போது, அனைவரும் எவ்வளவு அன்பாகவும், கருணையாகவும் நடந்து கொள்கின் றனர் என்பதை உணர்ந்தேன். தமிழ் மொழிபெயர்ப் பாளர் ஒருவரும் இந்த கற்கைநெறியில் ஈடு பட்டிருந்தார். இதனால் எமக்கு கற்கையை பயில முடிந்தது. எனது வகுப்பில் இருந்த அனைவருக்கும் எனக்குள்ளதை போல ஏதோ குறைகள் இருந்தன. நாம் அனைவரும் ஒரே படகில் பயணிக்கலானோம். நாம் ஒருவருக்கு உதவியாக இருந்ததுடன், எப்போதும் ஒரு அணியாகவே செயற்பட்டோம். எமது ஆசிரியரும் ஒரு மாற்றுத்திறனாளி. என்னைப்போல அவருக்கும் பார்வை குறை பாடு. நான் அவரை அதிகம் நேசித்தேன். பார்வை குறைபாடு உடைய ஒருவர் முன்னேற்றமடைவ தற்கு சிறந்த உதாரணமாக அவர் எனக்கு தெரிந்தார். அவர் எமக்கு தனது சொந்த அனுபவங்கள் குறித்து பகிர்ந்து கொண்டார். தனது பார்வையிழந் ததும், தனது கணவர் எவ்வாறு தன்னை விட்டு விலகிச் சென்றார், இருந்த போதிலும் தான் தனது எதிர்பார்ப்புகளிலிருந்து விடுபடவில்லை. பல தொழில் வாய்ப்புகளிலிருந்து விலக்கழிக்கப்பட்ட போதிலும், இறுதியாக ஒரு தொலைபேசி இயக்கு நராக பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிட்டியது. தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தவும், மாற்றவும் அவர் ஒரு விசேட மென்பொருளை பயன்படுத்திய போதிலும், அவரின் தொழில்சார் ஆளுமைகளும் தன்னம்பிக்கையும், தனது தொழிலை திறம்பட முன்னெடுக்க உதவியாக அமைந்திருந்தன. ஒரு தொலைபேசி இயக்குநராக இவர் தனது தொலைபேசி அழைப்பு ஆளுமை களை சிறப்பாக பயிற்சி செய்ததுடன், மென்பொருள் குறித்த இவரின் அறிவும் வளர்ச்சியடையத் தொடங்கியது. இவர் காலப்போக்கில் பயிற்றுவிப்பாள ராக பதவி உயர்வு பெற்றார்.

இதுவரையில் இவர் சுமார் 400 மாணவர்களை பயிற்றுவித்துள்ளார். இவரைப்போல என்றோ ஒரு நாள் நானும் எனது திறமைகளை விசேடமாக முன்னெடுப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

எனது ஆசிரியை தான் எனக்கு இந்த கற்கைநெறியை ஆர்வத்துடன் முன்னெடுத்துச் செல்ல அவசியமான ஊக்குவிப்புகளை வழங்கியிருந்தார். நாம் கணினி மென்பொருள்கள் குறித்து அறிந்து கொண் டோம். இணையத்தை எவ்வாறு பயன்படுத்துவது குறித்தும் நான் பயின்றேன்.

ஒரு அலுவலக தொழில் எனக்கு கிடைக்காவிட்டா லும் கூட, இந்த ஆளுமைகள் எனக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. எனது சுயவிபரக் கோவையை நானே தயாரித்து, நிறுவனங்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பும் ஆற்றலை இந்த கற்கை எனக்கு வழங்கியுள்ளது. இணையத்தில் வேலை வாய்ப்புகள் குறித்து அறிந்து கொள்ளவும் இந்த கற்கை எனக்கு உதவியுள்ளது. தற்கால செய்திகள், தற்போது நடைபெறும் நிகழ்வுகள் குறித்து அறிந்து கொள்ள உதவியாக இந்த கற்கைநெறி அமைந்துள்ளது. இந்த அனைத்து விடயங்களும் ஒரு தொழில் வழங்குநருக்கு என்னை பெறுமதி வாய்ந்த ஒரு எதிர்கால ஊழியராக காண்பிக்கும்.

இறுதி பரீட்சைகள் மிகவும் கடினமானதாக அமைந் திருந்தன. ஆனாலும் நான் முதலாவதாக எதிர்கொண்ட தகவல் தொழில்நுட்ப பரீட்சையை போல அவ்வளவு கடினமானதாக அமைந்திருக்க வில்லை. முதல் பரீட்சையில் மிகவும் குறைந்த புள்ளிகளைப் பெற்றபோது நான் எவ்வளவு மன உளைச்சலுக்கு ஆளானேன் என்பதை நான் நன்கு அறிவேன். ஆனாலும் எனது ஆசிரியருக்கும், சக மாணவர்களுக்கும், என்னால் சாதிக்க முடியும் என்பதை உறுதி செய்ய அதிகளவு ஆசை கொண்டேன். ஒவ்வொரு காலைப்பொழுதிலும், நாம் மீட்டல் செயற்பாடுகளை முன்னெடுத்தது டன், எமது ஆசிரியர், முன்னைய வகுப்பிலிருந்து நீங்கள் பயின்ற 5 முக்கியமான விடயங்களை குறிப்பிடும்படி கேட்டு வந்தார். எனவே ஒவ்வொரு நாளும், வகுப்பு முடிவடைந்ததும், நான் தங்கியி ருந்த இடத்துக்கு சென்று, அன்றைய தினம் பயின்ற முக்கியமான விடயங்களை மனனம் செய்து வந்தேன். அடுத்த நாள் வகுப்பில் ஏனையவர்களுக்கு முன் கேள்விகளுக்கு பதிலளிக்க ஆர்வமாக இருந்தேன்.

நான் சிரேஷ்ட மாணவர்களுடன் பரீட்சைகள் குறித்து கலந்துரையாடுவேன். அவர்களின் ஆலோ சனைகளும் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. எனக்கு தெரியாத விடயங்களை ஏனையவர்களிட மிருந்து தெரிந்து கொள்ள நான் அச்சப்படவில்லை. இவ்வாறுதான் நான் பயின்றேன். நான் தற்போது பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியேறு கிறேன். நான் என்னால் இயலுமானவரை பரீட்சையை நன்றாக எழுதியுள்ளேன் என்பதை அறிவேன். சித்தியடைகிறேனா இல்லையா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

அர்ச்சனா பரீட்சையில் சித்தியடைந்தாரா இல்லையா என்பதை அறிந்து கொள்ள அடுத்தவாரம் வெளியாகும் மூன்றாம் பகுதியை மறக்காமல் வாசியுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராரோ வருகிறார்; ஏதேதோ கேட்கிறார்
ஆதாயம் கோடியென அங்கலாய்ப்புக் காட்டுகிறார்
வீணான பேச்செல்லாம் விரும்பியே உரைக்கிறார்
வீரக் கதையெல்லாம் 'எமங்கே' சொல்கிறார்
எறிகணைக்கு வழிவிட்டு தோட்டாவிற்கு குந்தியெழுந்து
எத்தனையோ உயிர்களை கண்முன்னே பறிகொடுத்து
உயிர் சுமந்த பிணங்களாய் உலாவரும் எம்மை
ஆராரோ வருகிறார் ஏதேதோ கேட்கிறார்
ஆதாயம் கோடியென அங்கலாய்ப்புக் காட்டுகிறார்
ஓவென்று அழுதோம் ஓடியோடி அலுத்தோம்
முள்வேலிக்குள்ளே மிச்சமும் தொலைத்தோம்
கால் தேய நடந்தோம் கண் சோர சொரிந்தோம்
இருக்கிறாரா இல்லையா? உறவினரைத் தேடுகிறோம்
விடைதெரிந்த பெரியோர்
வேதனையைத் தோற்றியோர்
ஆதாயம் கோடியென அங்கலாய்ப்புக் காட்டுகிறார்
வீடொன்று வேண்டும் என் வேதனை தீர...
வாய் விட்டழுது ஆறுதல் கொள்ள
வீடொன்று வேண்டும்
அவலமாய் செத்த என் இனத்தவர் உருக்களை
ஆசையாய்ப் பார்க்க படங்களாய்த் துதிக்க
வீடொன்று வேண்டும் எனக்கு சிறு
வீடொன்று வேண்டும்
ஐயரைக் கூப்பிடனும் திதிகளும் கொடுக்கனும்
அயலவர் அறிந்தவருக்கு போசனமும் கொடுப்பதற்கு
வீடொன்று வேண்டும் எனக்கு சிறு
வீடொன்று வேண்டும்
எலிவளையானாலும் தனிவளை வேண்டும்
எம் இனத்தவர் சொன்னதில் உண்மை உண்டு
மயக்கங்கள் வேண்டாம்
வீண் கலக்கங்கள் வேண்டாம்
மனதினில் இனியும் தயக்கங்கள் வேண்டாம்
இழந்தவை பாடம் பட்டவை வேதம்
சொல்லுவோம் உண்மை வையகம் உணரவே
கண்ணீர் துடைப்பது எம் கை
கருணை காட்டுவது எம் தாய்
துணையாய் வருவது எம் துணை
அனைத்தையும் தருவது என் வீடு

உண்மையின் மைந்தன்

# தெரிவு





# முதல்ல இதச் செய்யுங்கப்பா!

தி.ராஜ்

“மக்களை ஜன நாயக வழிகளில், தேர்தல்களில் ஆர்வம் கொள்ள வைக்க வேண்டி யது அரசியல் கட்சிகளின் கடமை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறுவதற்கு இடமளிக்கப்படக்கூடாது.”

அ“அச்சம் என்பது மடமையடையா அஞ்சாமை திராவிடர் உடமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு தாயகம் காப்பது கடமையடா.....” என்கிற புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆரின் எழுச்சிப் பாடல்கள் குடா நாட்டில் இப்போது அடிக்கடி ஒலித்துக் கொண்டிருக்கின்றன. சுவர்களை வேட்பாளர்களின் சிரித்த முகங்களும், கூப்பிய கரங்களு நிரம்பிய வர்ணச் சுவெராட்டிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கு மேலதிகமாக புதிதாகப் போடப்பட்ட காப்பெற் வீதிகளை வேட்பாளர்களின் விருப்பு இலக்கங்களும் கட்சிச் சின்னங்களும் அலங்கோலப்படுத்தி அசிங்கப்படுத்தியுள்ளன.

### விதி மீறும் திருவிழா

தேர்தல் என்பது கட்சிபேதமின்றி விதிகளை மீறும் திருவிழா என்பதை இவை எல்லாம் நினைவூட்டிக் கொண்டிருக்கின்றன. தேர்தலுக்கு முன்னரே விதிகளைப் புறந்தள்ளி சட்டம் ஒழுங்கை மதியாதவர்களைத்தான் தம் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்தில் மக்கள் இருக்கிறார்கள் என்பதைப் பறைசாற்றித் திரிகின்றன.
எந்தத் தேர்தல் வந்தாலும் கட்சி பேதமின்றி இந்தச் சம்பவங்கள் மட்டும் உரிய வேளையில் அரங்கேறும். தோல்வி நிச்சயம் என்று தெரிந்தவர்களும் அரசியல் களத்துக்குள் புகுந்தற்கு அடையாளமாக இத்தகைய கைவண்ணங்களை அரங்கேற்றுவர். இதில் சிலர் சினிமாக் கதாநாயகர்களை மிஞ்சும் வண்ணம் சுவெராட்டிகளில் கம்பீர நடைநடக்கிறார்கள்.
வடக்கு மாகாண சபைக்கு முதன் முறையாக தேர்தல் நடக்கவிருக்கின்றது. தேர்தலுக்கு இன்னமும் 13 நாள்களே எஞ்சியிருக்கின்றன.

### குதிரைப் பந்தயம்

போட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிக் குதிரை என்பதை ஜனா திபதியே ஏற்றுக்கொண்டு விட்டார். இப்போது இரண்டாவது குதிரைக்கும் முதல் குதிரைக்கும் இடையிலான தூர மற்றும் நேர இடைவெளி எவ்வளவு என்பதுதான் போட்டி. எப்படியும் இரண்டாவது இடம் தனக்கு என்பதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நம்பிக்கையாக இருக்கிறது. ஆனால் தனது வேகத்தின் மூலமும் திறமை யின் மூலமும் இந்த இரண்டாவது குதிரை ஓட்டத்துக்கே தகுதியற்றது என்று நிரூப்பிப்பதற்குத்தான் முதல் குதிரை முயன்றுகொண்டிருக்கிறது.
இந்தப் போட்டியில், மக்கள் மத்தியில் இறங்கி அரசியல் செய்கிறார்களோ இல்லையோ அறிக்கைப் போர் மட்டும் உச்சத்தை அடைந்துள்ளது. வேட்பாளர்கள் பம் பர மாகச் சுழன்றுகொண்டிருக்கிறார் கள்.
கட்சியின் வெற்றிக்காக என்பதை விட தங்களின் வெற்றிக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வேட்பாளர்களது வேகத்துக்கு மக்களிடம் தேர்தல் ஆர்வத்தைக் காணோம்.

### ஆர்வம் இல்லை

பெரும்பாலும் கிராமப்புற மக்களுக்கு வடக்குமாகாண சபைத் தேர்தல் குறித்த அக்கறை இல்லை. இந்த நிலை வாக்களிப்பு வீதத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால் பாதிக்கப்படப்போவது தமிழ்த் தேசியக் கூட்டமைப் புத்தான். இருந்தாலும் இதனை நிவர்த்தி செய்ய கூட்டமைப்பு எடுத் திருக்கக் கூடிய நடவடிக்கைகள் பெரிதாக இல்லை. அதில் கூட்ட மைப்பு கூடுதலான கவனம் செலுத்த வேண்டும். மக்களிடம் தேர்தல் காய்ச்சல் பீடிக்காமல் போனமைக்கு அரசியல் கட்சிகளைத் தவிர வேறு யாரையும் குற்றஞ்சொல்ல முடியாது.

### மணிகட்டுவோர் யார்?

தேர்தல் திணைக்களத்தைப் பொறுத்த வரையில் தேர்தலை நடத்தி முடித்தால் சரி என்கின்ற நிலையிலேயே இருக்கின்றது. தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகள் எவை மீதும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த மீறல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் பொலிஸார் என்று பந்தை அவர்கள் மீது தூக்கி எறிந்துவிட்டுச் சும்மா இருக்கிறார்கள்.
பொலிஸார் ஆளுங் கட்சியிலே யாருடைய சொல்லைக் கேட்டு செயற்படுவது என்று தெரியாத நிலையில் உள்ளனர். அந்தளவுக்கு மூன்று பிரிவுகளாக ஒருவரை ஒருவர் வெட்டியும் குத்தியும் பலப்பரீட்சை நடத்துகின்றனர். ஆளும் கட்சியினர்.
இவ்வாறானெதொரு நிலையில் இவற்றுக்குப் பொலிஸார் தீர்வு தருவார்கள் என்று எதிர்பார்ப்பது எமது முட்டாள்தனம்.
தேர்தலில் போட்டியிடுகின்ற கட்சி கள் தேர்தல் விதிமுறை மீறல்களை தங்களுக்குச் சார்பான பரப்புரையாக முன்னெடுத்துச் செல்வதுடன் நின்று விடுகின்றனர். அதனையும் தாண்டிய நடவடிக்கைகளை அவர்களும் எதிர்பார்ப்பதில்லை. *(தாங்களும் அதே தவறுகளைச் செய்வதால் அல்லது செய்ய வேண்டி இருக்கும் என்பதால் அப்படி இருக் குமோ!)*
ஏற்கனவே ஜனநாயக வழிமுறைகள் சுத்துமாத்து என்று முடிந்த முடிவாய் இருக்கும் மக்களுக்கு இவையும்கூட மேலும் சலிப்பை ஊட்டுகின்றன. இதனால் சிங்கள மக்கள் தேர்தலின் போது தங்கள் தலைமையை தேர்வு செய்வதற்கு காட்டுகின்ற அக்கறையை தமிழ் மக்கள் காட்டத் தவறி விடுகின்றனர். ஆனால், இது தமிழர்களுக்கு மட் டும் உரித்தான பிரச்சினை அல்ல சிங்களவர்களும்கூட இப்போது இந்த ஏமாற்று அரசியல் தலைமை களைப் பார்த்து வெறுத்துப் போனார்கள் என்கிறார் தெற்கைச் சேர்ந்த பத்திரிகையாளரான சூள சென விரத்ன. கடந்த பல தேர்தல் களை எடுத்துப் பார்த்தீர்களானால் சிங்கள மக்களின் வாக்களிப்பு வீதமும் தொடர்ந்து வீழ்ச்சி கண்டே வந்திருக்கிறதுஎன்கிறார் அவர்.
தற்போதைக்கு பரப்புரைக் கூட்டங்களை ஆங்காங்கே கூட்டமைப்பு மட்டுமே நடத்தி வருகின்றது. அமைச்சர்கள் வந்தால்தான் அரச தரப்பின் கூட்டங்கள் களைகட்டும் போல் இருக்கின்றது. எனினும் கூட்டங்களுக்கு குறைவான மக் களே திரள்கின்றனர். தங்கள் வேலைகளைப் பார்பதற்கே நேரம் போதாமல் இருக்கின்ற இயந்திர வாழ்வில் சிக்கித் தவிக்கின்ற பெரும்பாலான மக்கள் தேர்தல் பரப்புரைகளை ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

### ஆள்கள் அற்ற கூட்டங்கள்

கூட்டங்களுக்கு வருபவர்கள் கூட வயதானவர்களாகவும் கட்சியைச் சேர்ந்தவர்களாகவும் மட்டுமே இருக்கிறார்கள். பெண்கள் கூட்டங்களை எட்டியும் பார்ப்பதில்லை. இளைஞர்கள் எட்ட நின்றே பார்த்து விட்டுப் போய்விடுகிறார்கள்.
அன்றைய காலத்தில் அமிர்தலிங்கம் போன்ற தலைவர்கள் பேசும் போது எழுகின்ற கைதட்டல்கள் விசில் சத்தங்கள் இன்றைய கூட்டங்களில் இல்லை. ஆனாலும் அரசியல்வாதிகள் சளைக்காமல் மணிக்கணக்கில் பேசுகிறார்கள். கூட்டமைப்புக்காரர்களாயின் "சர்வதேசம் பார்த்துக் கொண்டிருக்கிறது" என்று மிரட்டுகிறார்கள். அரச தரப்பினராயின் "அபிவிருத்தி" என்று பூச்சாண்டி காட்டுகின்றனர். இதைத் தவிர மேடைகளில் கேட்பதற்குப் புதிதாக எதுவும் இல்லை.
அரச கட்சியின் பரப்புரைக் கூட்டங் கள் சிலவற்றில் பெண் தலைகளை அதிகம் காணக்கிடைத்தது. விசாரித்தால், உதவிப் பொருள்கள் வழங்கப்படும் என்று ஏமாற்றியிருந்தார்கள். சில சமயங்களில் அமைச்சர் வருகிறார் என்று வேடிக்கை பார்க்கவும் பலர் செல்கிறார்கள்.
இவற்றைத் தாண்டி மக்களை ஜன நாயக வழிகளில், தேர்தல்களில் ஆர்வம் கொள்ள வைக்க வேண்டியது அரசியல் கட்சிகளின் கடமை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது.
மேடையில் வீர வசனங்கள் முழங்குவதோ, சலுகைகள் பேசுவதோ மக்கள் அவர்களது கடமையை நிறைவேற்றுவதற்கு உதவப் போவதில்லை. மக்களிடம் சென்று தேர்தல் தொடர்பான அறிவூட்ட லைச் செய்து அவர்களை வாக்களிக் கின்ற கடமையைச் செய்ய அரசியல் கட்சிகள் முனைப்புக் காட்ட வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடர்கள் தினம்



எச்சில் படுத்தியதைத் தந்து
எம் ரத்தம் வாங்குகிறீர்கள்
துன்பப் படுத்திவிட்டு
வியர்வை கேட்கிறீர்கள்

காயத்தைத் தந்து
கண்ணீர் கேட்கிறீர்கள்
கண்ணீர் துடைக்கிறோம்
என்று சொல்லி எம் இனம் அழிக்கிறீர்கள்

நகரை ஆழ்கிறோம் என்று
வன்முறை செய்கிறீர்கள்
தேர்தல் என்று சொல்லி
நாக்கை தொங்கவிட்டு நடிக்கிறீர்கள்

பேசத் தெரியாத கதிரைகளுக்கு
ஆசைப்பட்டு சூழ் உரைக்கிறீர்கள்
கதிரை கிடைத்ததும் நீங்களும்
பேசத் தெரியாத கதிரைகளாகிறீர்கள்

தேர்தல் சுவரொட்டிகளில்
கைகூப்பிக் கொண்டே
புன்னகைக்கிறீர்கள்
பதவி கிடைத்ததும்
புன்னகைக்கு எதற்காகப் போலிச்சாயம்
பூசுகிறீர்கள்

தேர்தல் காலங்களில்
மக்களே மக்களே என்கிறீர்கள்
தேர்தல் முடிந்ததும் மக்கள்
கோரிக்கையை புதைத்து விடுகிறீர்கள்

அற்பசொற்ப சலுகைகளுக்கு
ஆசைப்படும் ஜடங்கள் தான்
மக்கள் என்ற உங்கள் புரிதல்
இன்றோ நாளையோ கிழிக்கப்படும்

பட்டிமாடுகள் என்ற பார்வையில்
மக்களிடம் இருந்து வாக்குகளை
கறந்தபின் உங்கள் போக்குகள்
மாறிப் போவது புதிதல்ல

பதவிக் கிரீடங்களுக்கு
பொன் பொறுக்க வருபவர்களே
நகரத்து சுவர்களை
நரகமாக்குபவர்களே

அடுப்பெரியாமல் வயிறெரியும்
ஏழை வீடுகளுக்கு
ஒருவேளை உணவு கொடுங்கள்
அது தான் தேவை இப்போது!

எம்.நேதா
நெடுந்தீவு

## சொற்சிலம்பம் - போட்டி இல: 282



அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. இலங்கையின் புனித தலம்
6. மரம்
7. இரும்பில் பிடிப்பது
8. பிழை அல்ல
9. காரம் பெரிது
11. அபிப்பிராயம்
12. புதல்வன்
14. ஒரு காட்டு மிருகம்
15. இப்படி நட
17. சிவன்
18. இறக்க
19. வலிமை
20. வருமானம்
22. மணிக்கூடு
23. தலைமயிர்க் கொத்து

### மேலிருந்து கீழ்

1. ஒரு நடன வகை
2. களவெடு
3. செவி
4. மருமகன்
5. அருமையானது
8. ஒலி
10. முருகன்
13. வாயால் கவ்வு
14. அகப்பை வகை
15. விரலில் வருவது
16. கொண்டாட்ட நாள்
17. கூட
18. சேரும்
20. போக அல்ல
21. எல்லோருக்கும் இது வரும்

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.
★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 280 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1) சம்மதி (4) மதகு (6) தரிசனம் (8) பாகம் (10) கன (12) திண் (13) அலம்பல் (15) காமுகன் (17) கல (18) விட்டில் (19) சர்வ (20) மாசி (21) தவிர (23) பல்லாண்டு.

### மேலிருந்து கீழ்

(1) சம்பாதி (2) மதம் (3) திரி (4) மனனம் (5) தம் (7) சகலன் (9) கண்காட்சி (11) வல்லவன் (13) அகல்தல் (14) பகர் (16) முடி (18) விமானி (19) சரண் (22) விலா.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி**
**இல. 282**
நியூ உதயன் பப்ளிகேஷன்
[பிறைவேற்]லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (18.09.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.282இல்வெற்றி பெறுவோர்களது விபரம் 22.09.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 280 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
சு.பூர்வஜா,
மாதகல் கிழக்கு, மாதகல்.

**2 ஆம் பரிசு**
பொ.சிவசுப்பிரமணியம்,
கரணவாய், கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
ஜெ.ஜெயவர்மன்,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

**4 ஆம் பரிசு**
ர.அபிசாதன்,
தரம்- 8 D, இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
வி.அமுதா,
திருக்கேதீஸ்வரம், மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

மு.வித்தியாதரன்,
மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய்.

ஆ.கதிரா,
இல.99, அரசடி வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறை.

யோ.கீர்த்திகா,
'பிருந்தாலயா', நாவலடி, உடுப்பிட்டி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரப்கான்

# அடுத்த இலக்கு முஸ்லிம்கள்

இலங்கையில் வாழ் முஸ்லிம்கள் மீது மற்றொரு தாக்குதலுக்கான அத்திவாரமிடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. அண்மையில் கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய பாதுகாப்புச் செயலர் தெரிவித்திருந்த கருத்தினால் முஸ்லிம் சமூகமே ஆடிப்போயிருக்கிறது.

"இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதத்தை ஊக்குவிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகள் குறித்து அரசு அவதானத்துடன் இருக்கிறது. நாட்டில் சில குழுக்கள் இனவாதத்தை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. சர்வதேச தீவிரவாத சக்திகள் முஸ்லிம் தீவிரவாதத்தை இலங்கையில் பரப்புவதற்கு முயற்சிக்கின்றன. இந்த விடயம் குறித்து பாதுகாப்புத் தரப்பினருக்கு புலனாய்வுப் பிரிவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்" என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

சில முஸ்லிம் தீவிரவாத இயக் கங்கள் இலங்கையை மையமாகக் கொண்டு இயங்க முயற்சித்து வருகின்றன எனத் தகவல் கிடைத்துள்ளதாகவும் இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதம் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதாகவும் கோத்தபாய தெரிவித்திருந்த இந்த விடயங்கள் எதிர்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் மீது பாதுகாப்புப் படையினரினது பார்வையை உச்ச நிலைக்கு கொண்டுவரும் என்று நம்பலாம். இதனால் முஸ்லிம் சமூகம் அச்சம் கொண்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இது முஸ்லிம் சமூகத்திற்கான எச்சரிக்கை என்றும் பலர் சொல்கிறார்கள்.

தமிழர்கள் ஒடுக்கப்பட்டதற்குப் பின்னர் அரச இயந்திரம் முஸ்லிம்களை முழுமையாகக் குறிவைத்துள்ளது என்பதையே இது காட்டுகின்றது.

"தாக்குதலுக்கு அஞ்சி முஸ்லிம்கள் பேசாமடந்தையாக வாழ்கின்றார்கள். இரவில், பகலில், அதிகாலையில், வெள்ளிக்கிழமைகளில் எல்லாம் தம்மைப் படைத்த இறைவன் பக்கம் பாரத்தைச் சுமத்திவிட்டு தாமுண்டு தம்வேலையுண்டு என்கின்ற மனோ நிலையில் இருக்கின்றனர். எந்த இடத்தில் என்ன பாம்பு இருக்கின்றது என்பது தெரியாமல் தலைமேல் நெருப்புச்சட்டியைக் வைத்துக் கொண்டு திரியும் மனித ஜடங்களாக இந்நாட்டில் வாழ்கின்ற ஓர் ஏழ்மையானதும், ஒற்றுமைமிக்கதுமான அரசியல் முகவரியைத் தொலைத்த சமூகம் என்றால் அது இலங்கை முஸ்லிம்களாகத்தான் இருக்க வேண்டும்" எனத் தெரிவித்தார் மௌலவி ஒருவர். கோத்தபாயவின் கருத்தால் ஆடிப்போயிருக்கிறார் அவர்.

இந்த நாட்டில் பெரும்பான்மை அரசையும், அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளவர்களாக சிங்கள இனமக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு எவ்விதமான பிரச்சினைகளும் இல்லை.

அதேபோல் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் போராடிப் போராடி உரமேறியவர்களாகத் தமிழர்கள் இருக்கிறார்கள். தங்கள் பிரச்சினைகளை அவர்கள் உலகறியச் செய்திருக்கிறார்கள். அதனால்தான் இன்று நவநீதம்பிள்ளைகூட முள்ளிவாய்க்கால் பக்கம் போய் வந்தார். ஆனால் முஸ்லிம்கள் சொந்த அரசியல் தலைமைகளாலேயே கைவிடப்பட்டவர்களாகிப் போனார்கள்.

அண்மையில் கிராண்ட்பாஸில் அமைந்துள்ள பள்ளிவாசல் உடைக்கப்பட்ட இரவு சில இளைஞர்கள் அங்கு கூடியிருந்தவர்களிடம் பேசியதை ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காண்பித்தன. "இனிமேல் யாராவது எந்தப் பள்ளியையும் உடைப்பார்களாக இருந்தால் நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். நாம் ஜிஹாத் செய்வோம்" என்று அந்த இளைஞர்கள் கூறினார்கள் என்றன ஊடக அறிக்கைகள். இதை வைத்துத்தானா கோத்தபாய அந்தக் கருத்தைத் தெரிவித்தார் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் அதில் தெளிவில்லை. ஆனால் வெறும் கம்புகளையும், சிறிய தடிகளையும் கொண்டா அந்த இளைஞர்கள் ஜிஹாத் செய்யப் போகின்றார்கள்? அதனைக்கூடப் புரிந்துகொள்ள முடியாதவராக கோத்தபாய?



24 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் வணக்க இடங்கள், பல முஸ்லிம் வர்த்தக நிலையங்கள், ஹலால் ஹராமில் தொடங்கி பர்தா வரையிலும் தொடர்ந்த எவ்வளவோ பிரச்சினைகளின் பின்னர் உணர்ச்சிவசப்பட்ட யாரோ சில இளைஞர்களின் வீராவேசப் பேச்சு அது என்பது அனைவராலும் புரிந்துகொள்ளப்படக்கூடியது. அதனை தீவிரவாதம் பயங்கரவாதம் போன்ற பெரிய சொற்றொடர்களால் விழிப்பது முரண்பாடுகளை இன்னும் அதிகமாக்குமே தவிர குறைக்காது. இதனால்தான் பாதுகாப்புச் செயலரின் கருத்துக்களுக்குப் பின்னால் ஏதாவது திட்டங்கள் இருக்கும் என்று முஸ்லிம் சமூகம் சந்தேகப்படுகின்றது.

முஸ்லிம்களின் இருப்புக்கே கேள்விக்குறியாகியுள்ள நிலையில் பாதுகாப்புச் செயலாளரின் வார்த்தைகளை அவர்கள் புறந்தள்ளிவிட மாட்டார்கள்.



**"முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கு எதிராகச் செய்யும் குற்றங்களை அவர்கள் தூக்கிப் பிடிக்காத நிலையில் மஹியங் கனை பள்ளிவாசல் மூடப் பட்டுள்ளதை முஸ் லிம்கள் ஏன் தூக்கிப் பிடிக்கவேண்டும்."**

*- இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ*

இதற்கிடையே, மஹியங்கனை பள்ளிவாசல் உடைப்பு சம்பந்தமாக ஜனாதிபதியைச் சந்தித்த முஸ்லிம் அரசியல்வாதிகள் இருவரிடம் ஜனாதிபதி கூறிய விடயங்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்திப் பார்ப்பது அவசியம்.

"முஸ்லிம்கள் சிங்களவர்களுக்கு எதிராகச் செய்யும் குற்றங்களை அவர்கள் தூக்கிப்பிடிக்காத நிலையில் மஹியங்கனை பள்ளிவாசல் மூடப்பட்டுள்ளதை முஸ்லிம்கள் ஏன் தூக்கிப் பிடிக்கவேண்டும். பலாங்கொடையில் பௌத்த மதகுருவான சிறுவன் ஒருவனுக்கு முஸ்லிம் ஒருவர் செக்ஸ் சீடிகளை போட்டுக் காண்பித்திருந்தார். இது மாபெரும் குற்றம். ஆனால் இந்தக் குற்றநடவடிக்கையை நாங்கள் அம்பலப்படுத்தவில்லை. அவற்றை அமுக்கி வைத்திருக்கிறோம். அப்படியிருக்கும்போது, முஸ்லிம்களுக்கு எதிரான சிறுசிறு சம்பவங்களை முஸ்லிம்கள் ஏன் பெரிதுபடுத்த வேண்டும்" என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார். அப்படியானால் முஸ்லிம்களுக்கு எதிரான திட்டமிடலின் கீழ், சிங்களவர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் என்ன செய்கிறார்கள் என்று அரசு தகவல் திரட்டி வருவது நீண்டகாலமாக நடைபெற்று வருகின்றதா என்ற சந்தேகம் எழுவதும் தவிர்க்க முடியாததே.

உண்மையில் முஸ்லிம்களுக்கு தீவிரவாத சிந்தனை, பயங்கரவாத சிந்தனை இருக்கிறதா என்பதற்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட ஒலுவில் துறைமுக நிகழ்வு மிகச் சிறந்த உதாரணம்.

ஒலுவில் துறைமுகம் கடந்த முதலாம் திகதி ஜனாதிபதியினால் திறந்து வைக்கப்பட்டது. திறக்கப்படுவதற்கு முன்னர் முஸ்லிம் கட்சி ஒன்றின் தலைவரினது அணியினர் அதற்கான ஏற்பாடுகளைத் தடல்புடலாக மேற்கொண்டனர். அழைப்பிதழ்களை எல்லாம் அச்சடித்து அவர்களது ஆதரவாளர்களுக்கு விநியோகித்தார்கள்.

இதனை எதிர்பார்த்திராத இன்னொரு [illegible] கொழும்பில் துறைமுக அமைச்சரைச் சந்தித்து தென்கிழக்கின் காவலர்கள் நாங்களே! நாங்கள் இல்லாத திறப்பு விழாவும் ஒரு விழாவா? என்றனர். ஒலுவிலுக்குள் ஓடோடி வந்து பங்குக்கு அவர்களும் அழைப்பிதழ்கள் இரவோடு இரவாக அச்சடித்து தமது கட்சி ஆதரவாளர்களுக்கு விநியோகித்துக் கொண்டார்கள். பாவம் இந்தத் துறைமுகத்தை ஒலுவில் பிரதேசத்திற்கு கொண்டு வருவதற்கு கஷ்டத்தைச் சுமந்த முஸ்லிம் காங்கிரஸின் தந்தையென வர்ணிக்கப்படும் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் நினைவுகளோ, அவரது புகைப்படங்களோ எதுவுமே இல்லாத நிலையில் ஜனாதிபதியினால் துறைமுகம் திறக்கப்பட்டது.



**சில முஸ்லிம் தீவிரவாத இயக் கங்கள் இலங்கையை மையமாகக் கொண்டு இயங்க முயற்சித்து வருகின்றன எனத் தகவல் கிடைத்துள்ளதாகவும் இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதம் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதாகவும் கோத்தபாய தெரிவித்திருந்த இந்த விடயங்கள் எதிர்காலத்தில் முஸ்லிம் சமூகத்தின் மீது பாதுகாப்புப் படையினரினது பார்வை உச்ச நிலைக்கு கொண்டுவரும் என்று நம்பலாம்.**

திறப்புவிழாவின்போது ஜனாதிபதியின் இருமருங்கிலும் இரு முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் காத்துக் கிடந்த அந்த நிமிடங்கள், போட்டி போட்டுக் கொண்டு உரையாற்றியமை, தத்தமது மன உளச்சல்களை ஓரளவுக்கு தமது தலைவன் முன்னால் சரியாகவே பயன்படுத்திக் கொண்டமை என்று எல்லாவற்றையும் பார்க்கிறபோது இவர்களின் பின்னால் திரண்டிருக்கும் முஸ்லிம்கள் மத்தியில் பயங்கரவாதம் தோற்றம் பெற்றுள்ளது என்று கூறப்படுவதை யார் நம்புவார்கள் என்று கோத்தபாயவிடம் கேட்கத் தோன்றுகிறது.

இதேவேளை, முஸ்லிம் அரசியல்வாதிகளோ, முஸ்லிம் மதவாதிகளோ யாராவது முன்னின்று இலங்கை வாழ் முஸ்லிம்கள் மத்தியில் பயங்கரவாதம் தோற்றம் பெறவில்லை என்று கூறவோ, மறுப்புக் கருத்தையாவது தெரிவிக்கவோ இல்லை. இது கோத்தபாயவின் கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதாலா? இல்லையேல் எதற்கு வம்பு என்று நினைத்ததாலா?

இலங்கை வாழ் முஸ்லிம்கள் மீது இவ்வாறு அவதூறான பழிகள் கூறப்படுகின்றபோது என்ன செய்வது என்று தடுமாறும் முஸ்லிம் தலைமைத்துவங் கள் அடுத்தகட்ட நடவடிக்கையாக என்னதான் செய்யப் போகின்றார்கள்? இனி மேலாவது புத்திசுவாதீனமான முறையில் முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் கூஜாத் தூக்குபவர்களாக இருப்பார்களானால் அன்று தந்தை செல்வா தமிழர்களைப் பார்த்துக் கூறியது போல முஸ்லிம் சமூகத்தையும் இறைவன்தான் காப்பாற்ற வேண்டும். இறைவன்மீது அதீத பற்றுள்ள முஸ்லிம்கள் தங்களுடைய அனைத்து விடயங்களையும் இறைவன் பக்கமே திரும்புவது தான் மேலான செயலாகும்.

இலங்கையில் வாழும் ஓர் இனத்தின் மீது கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக பயங்கரவாதத்தைத் தோற்றுவித்து அதன்பெயரில் அந்த இனத்தையே சுக்குநூறாக்கிய கடந்த கால அரசியல்வாதிகளின் பிழையான நடத்தைகளுக்குள் மீண்டும் இன்னொரு இனம் பலியாகிப் போய்விடாமல் பார்த்துக் கொள்வது அரசியல் தலைமைகளின் கடமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலைந்த அமைச்சரும் அலட்சியப்படுத்திய அம்மணியும்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை இலங்கைக்கு வந்திருந்த சமயத்தில் அவரைச் சந்திப்பதற்கு வடக்கின் ஒரே அமைச்சர் என்று தன்னைத்தானே மார் தட்டிக்கொள்பவரும் பகீரதப் பிரயத்தனம் செய்தார். ஆனால் முடியாமல்போய்விட்டது. விடுதலைப் புலிகளையே கொலைகார அமைப்பு என்று சொல்லிவிட்ட அந்த அம்மணி. இவரை என்ன சொல்லி நிராகரித்தாரோ தெரியாது ஆனால் அமைச்சரால் சந்திக்க முடியாமல் போய்விட்டது.

அம்மணியின் பயண ஒழுங்குபடுத்தல்களுடன் தொடர்புபட்ட மற்றொரு அமைச்சரிடம் ஓடிச் சென்று தன்னுடனும் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்யும்படி கெஞ்சியிருக்கிறார் வடக்கு அமைச்சர். ஆனால் இவரைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்கும் அந்த அமைச்சரோ. அம்மணியின் பயணத்துக்கும் தனக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்று கைவிரித்துவிட்டார்.

## சூழலைக் காக்கும் அமைச்சர்

இளைஞர் விவகாரத் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும.

இவரிடமுள்ள நல்லதொரு பழக்கம். தான் இருக்கும் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்திருப்பது என்பது.

ஒரு காலத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் டலஸுக்கும் ஒத்துப் போகவில்லை.

சந்திரிக்கா- ஜனாதிபதியான போது அவர் கட்டளையிடும் முன்பே அரச வாசஸ்தலத்திலிருந்து வெளியேறிய டலஸ். தான் வசித்த அந்த வாசஸ்தலத்தை அழகுபடுத்திவிட்டுச் சென்றார்.

அப்படிப்பட்ட. சுத்தத்தை மட்டுமே விரும்பும் நபர் இவர்.

எங்கு சென்றாலும் சரி. அங்கு எதனை சாப்பிட்டாலும் சரி அந்த இடத்தில் கழிவுகளை இடும் பெட்டிகள் இல்லையென்றால் அதனை தனது காற்சட்டை அல்லது மேற்சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு பின்னர் கழிவுப் பெட்டிக்குள் போட்டு விடுவார்.

இதனை வெறும் பப்ளிசிட்டிக்காக ஒரு போதும் அவர் செய்வது கிடையாது.

இப்படிப்பட்ட சம்பவமொன்று கடந்த புதன்கிழமையும் இடம்பெற்றது.

ஐ.ம.சு.மு. கட்சிகளின் ஊடகவியலாளர் மாநாடொன்று நடைபெற்றது. இதன் போது அனைவருக்கும் தண்ணீர் போத்தல் வழங்கப்பட்டது. டலஸும் ஒரு போத்தலை எடுத்தார். போத்தலின் மூடி- சீல் செய்யப்பட்டிருந்தது. அதனை உடைத்தார் அமைச்சர் டலஸ். சீல் செய்யப்பட்டிருந்த 'கவர்' அவரது கைக்கு வந்தது. சுற்றும் முற்றும் பார்த்தார் கழிவுப் பெட்டி இல்லை. உடனே தனது ஷேட் பைக்குள் போட்டுக் கொண்டு ஊடகவியலாளர் மாநாட்டில் பங்குபற்றி உரையாற்றினார்.

## தஞ்சம் கேட்ட அமைச்சருக்கு தொலைபேசியில் மிரட்டல்

அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் அண்மையில் உலகின் வல்லரசு நாட்டின் இலங்கைத் தூதரகத்துக்குச் சென்றார்.

தூதரக அதிகாரிகளை சந்தித்து அழுது புலம்பினார். "தனக்கு உங்கள் நாட்டில் நிரந்தரமாக குடும்பத்தினருடன் வசிப்பதற்கான விஸா அனுமதியினை தருமாறு மன்றாடினார்.

தூதரக அதிகாரிகளுக்கு ஒரே அதிர்ச்சி. காரணத்தைக் கேட்டனர். 'எனக்கு இந்த நாட்டில் இருக்க முடியாது. உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளது. என்னையும் என் குடும்பத்தினரையும் எப்படியாவது காப்பாற்றுங்கள்'' என்று மீண்டும் மன்றாடினார் அந்த அமைச்சர்.

இந்தச் சந்திப்பை அடுத்து தூதரகத்திலிருந்து வெளியேறிய அமைச்சரின் கையடக்க தொலைபேசிக்கு ஓர் உயர்மட்டத் தவரிடமிருந்து வந்தது ஓர் அழைப்பு.

என்ன பிரச்சினை உங்களுக்கு? உங்களுக்கு இந்த நாட்டில் இருக்க அச்சுறுத்தலா? என்று கடும் தொனியில் மறுமுனையிலிருந்து அந்த உயர் மட்டத்தவர் கேள்வி எழுப்பினார். அமைச்சரோ திகைத்துப் போய் நின்றார். எதுவித பதிலுமளிக்காது மௌனமாகவே மறுமுனையிலிருந்து வந்த கடும் தொனியிலான குரலை கேட்டுக் கொண்டிருந்தார்.

## உலக மரம் நடுகை

இலங்கையில் இடம் பெறவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டு ஏற்பாட்டு பிரதான முக்கியஸ்தராக இருப்பவர் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசும் நடத்தும் பேச்சுக்களில் அரசு சார்பில் கலந்துகொள்ளும் ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரிய நபர் இவர்.

இவர் தற்போது மாநாட்டுக்கான ஏற்பாட்டுப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்.

மாநாட்டுக்கு வருகை தரும் உலக நாடுகளின் தலைவர்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பிலும் அதீத கவனம் செலுத்தி வருகின்றார். பெரும்பாலான அரச தலைவர்கள் மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்திலேயே தரையிறங்கவுள்ளனர். இங்கு தரையிறங்கும் அரச தலைவர்களுக்கு ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளார் வாஸ்.

அதாவது மரம் நடும் நிகழ்வு. விமான நிலைய கட்டடத்துக்கு வெளியிலுள்ள ஓர் இடம் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நடப்படும் மரம்- இலங்கைக்குச் சொந்தமானவையல்ல. மாறாக அந்தந்த நாட்டுத் தலைவர்கள் அவர்களது நாட்டு மரங்களையே இங்கு கொண்டு வந்து நடவுள்ளனர். இந்த முயற்சியை கேள்வியுற்ற ஜனாதிபதி. வாஸுக்கு வாழ்த்துக் கூறினாராம்.

இதேவேளை. அரச தலைவர்களுக்கு விருந்துபசாரம் வழங்கும் பொறுப்பு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கவனிக்கவென வாஸ் ஹோட்டலுக்குச் சென்றுள்ளார். தலைவர்கள் குடிப்பதற்கு ஏதாவது கொடுக்கிறீர்களா? என வாஸ் ஹோட்டல் அதிகாரிகளிடம் கேட்டார். "மென்பானம் வழங்குவோம்" என்றனர் ஹோட்டல் அதிகாரிகள்.

"ஐயோ! நான் அதைக் கேட்கவில்லை. *அந்தமாதிரி* பானம் கொடுக்க முடியாதா?" எனத் திருப்பிக் கேட்டார் வாஸ்.

உடன் 'பிளக்லேபிள்' மற்றும் 'ஸ்கொட்ச்', 'விஸ்கி' என்பவற்றை கொண்டுவந்தனர் ஹோட்டல் அதிகாரிகள். ஆனால், இவை வாஸுக்குப் பொருத்தமானவையாகத் தெரியவில்லை. இன்னும் கடினமான வேறு பானங்களை வழங்குவது குறித்து இப்போது யோசிக்கிறாராம்.

## முஸ்லிம் காங்கிரஸை வெளியேற்ற முயற்சி

"முஸ்லிம் காங்கிரஸை அரசிலிருந்து வெளியேற்ற சில அமைச்சர்கள் துடியாய் துடிக்கிறார்கள்'' என்பதுதான் மு.கா. தலைவரின் தேர்தல் பிரசார உரையாக இருக்கின்றது.

இதிலுள்ள உண்மைத் தன்மையை அறிய முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிரான சில முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கடந்த வாரம் தொடர்பு கொண்டு வினவினோம்.

"ஆம்..! உண்மைதான். அவ்வாறான ஒரு செயற்பாடு நடைபெறப் போகின்றது" என்றனர் அவர்கள்.

"அது தொடர்பில் ரவூப் ஹக்கீமுக்கு முன் கூட்டியே விளங்கிவிட்டது. அதுதான் இப்படிக் கூறுகின்றார்'' என்றார் ஒரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்.

முஸ்லிம் காங்கிரஸை அரசிலிருந்து துரத்தும் நடவடிக்கை இப்போது இடம்பெறாது. தேர்தலுக்குப் பின்புதான் இடம்பெறும் என்றார் மற்றுமொரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்.

இந்த விவகாரத்தை இப்போதே வெளிப்படுத்திவிடவேண்டாம். தேர்தலில் அந்தக் கட்சிக்கு அதிக செல்வாக்கு கிடைத்துவிடும் என்றார் மு.காவின் பரம எதிரியான இன்னுமொரு நாடாளுமன்ற உறுப்பினர்.

## அவர் வருவதானால்....

பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங்கை நேரடியாகச் சென்று சந்தித்து அழைப்பு விடுத்தார் அமைச்சர் பீரிஸ்.

ஆனால். அந்த அழைப்புக்கு அப்போது மன்மோகன் சிங் எதுவித பதிலையும் வழங்கவில்லை.

இவ்வாறான நிலையில் இந்திய உயர்மட்டக் குழுவொன்று மாநாட்டு ஏற்பாடுகளை கவனிக்கும் பொருட்டு கடந்த வாரம் இலங்கைக்கு வந்தது.

இவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸைச் சந்தித்து பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை வருவதென்றால் சில நிபந்தனைகளை ஏற்க வேண்டும் என்றனர். என்ன அந்த நிபந்தனைகள் என்று கேட்டார் வாஸ்.

முதல் நிபந்தனை. பிரதமர் மன்மோகன் மாநாட்டில் கலந்து கொண்டால். அவருக்குரிய சகல தேவைகளையும் இந்திய அரசே பார்த்துக் கொள்ளும் என்பதுதானாம்.

விசேட ஜெட் விமானம். ஹெலிக்கொப்டர். பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பவற்றை இந்தியாவே வழங்கும் என்றனராம் குழுவினர். இதனை எவ்வித மறுப்புமின்றி ஏற்றுக் கொண்டாராம் சஜின் வாஸ்.

## அப்பம் சுட்ட அமைச்சர்

கனடாவில் வாழும் இலங்கையர்களின் ஒன்றுகூடல் அண்மையில் கனடாவில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கனடாவின் குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த ஒன்று கூடலின் போது பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

[illegible] நிகழ்ச்சியும் [illegible] இதில் பங்குபற்றி தனது சமையல் ஆர்வத்தை வெளிப்படுத்த விரும்பினார் குடிவரவு அமைச்சர்.

இதற்கு இலங்கையர்கள் பெரு மகிழ்ச்சியுடன் ஆரவாரம் செய்தனர். தான் அணிந்திருந்த கறுப்பு நிற கோர்ட்டை கழற்றினார் அமைச்சர். மாவைக் குழைத்து அகப்பையால் மாவை சட்டிக்குள் இட்டு அப்பம் சுட்டார் குடிவரவு அமைச்சர். இவ்வாறு 3 அப்பங்களை சுட்டார் அமைச்சர். பின்னர். அதற்கு வேண்டிய சம்பலையும் தயாரித்தார். இதைப் பார்த்து அதிர்ந்த இலங்கையர்கள் பலத்த கரகோஷம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வயிற்றுக்குள் இருப்பதை தெளிவாகத் தெரிவிக்கும் சென்சார் மாத்திரை கண்டுபிடிப்பு




மனிதர்கள் தமது வயிற்றுக்குள் உள்ளெடுக்கும் பொருள்களை துல்லியமாகக் காட்டிக்கொடுப்பதற்கு இலத்திரனியல் மாத்திரை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. சாதாரண மாத்திரைகளைப் போன்று இதனையும் உள்ளெடுக்க வேண்டும். உள்ளே சென்று குடலின் அடிப் பகுதியில் இந்த மாத்திரை தங்கிக்கொள்ளும். அதன்பின்னர் ஒவ்வொரு தடவையும் வாய் மூலம் உள் ளெடுக்கப்படும் பொருள்களை அது துல்லியமாக அறிந்து உங்கள் ஸ்மார்ட் செல்பேசிகளுக்கு குறுஞ்செய்திகளை அனுப்பிக் கொண்டே இருக்கும். இதில் பொருத்தப்பட்டுள்ள விசேட சென்சார், ஈரலிப்பாகும் போது தகவல்களை கையில் பொருத் தப்பட்டிருக்கும் விசேட சாதனத்துக்கு தகவல்களை அனுப்புகின்றது. பின்னர் அங்கிருந்து ஸ்மார்ட் கைபேசிக்கு தகவலை அனுப்பி விடுகின்றது.

இதனால் இது வைத்தியர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது நோயாளிக்கு வழங்கப்பட்ட மாத்திரைகளை ஒழுங்காக உள்ளெடுக்கின்றாரா? என்பதனை பரிசோதிக்க முடிகின்றது. இதுதவிர குழந்தைகள் அநாவசியமான பொருள்களை விழுங்கிவிட்டால் அந்தப் பொருள் எதுவெனக் கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளிக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

# "அனைவருக்கும் குட்மார்னிங்"

## விண்வெளியில் இருந்து பேசிய முதல் ரோபோ



விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ள முதல் மனித உருவம் கொண்ட ரோபோ, தனது முதல் வார்த்தையை பதிவு செய்ததுள்ளது. ஜப்பானால் உருவாக்கப்பட்ட கிரோபோ என்ற ரோபோ, விண்வெளியில் இருந்தவாறே தனது முதல் வார்த்தையை விண்வெளியில் பதிவு செய்து புதிய வரலாற்றுச் சாதனை படைத்தது. அகன்ற கண்களுடன் பெரிய காதுகளையும் கொண்டிருக்கும் இந்த ரோபோ, விண்வெளியில் இருந்த படியே பூமியில் வாழும் மனிதர்களுக்குக் காலை வணக்கம் தெரிவித்தது.

இந்த ரோபோவின் பேச்சு காணொலி மூலம் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

முதலில் ஜப்பான் மொழியில் பேசத் தொடங்கிய போது, பூமியில் உள்ள அனைவருக்கும் "குட்மோர்னிங், நான் தான் கிரோபோ, நான் தான் உலகின் முதல் விண்வெளி ரோபோ வீரர்" என்று தெரிவித்தது.

இதற்கு முன்னதாக நிலவில் காலடி எடுத்து வைத்த முதல் மனிதரான நீல் ஆம்ஸ்ரோங்குக்கும் அஞ்சலி செலுத்தியது. கடந்த மாதம் 4 ஆம் திகதி பூமியிலிருந்து விண்வெளிக்குப் புறப்பட்ட இந்த ரோபோவின் உயரம் 34 சென்ரி மீற்றர் என்பது குறிப்பிடத்தக்கது.



# அதிவேக தரவுப்பரிமாற்ற இணைய இணைப்பை வழங்க தயாராகும் ஜப்பான்



உலகில் சிறந்த தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைக் கொண்ட நாடாக விளங்கும் ஜப்பான் விரைவில் 220 ஊிஹுஸ்ரீவி வேகத்தைக் கொண்ட தரவுப்பரிமாற்றத்துடன் கூடிய இணைய இணைப்பினை வழங்கவுள்ளது.

ஹும்ம்ஹுா எனும் நிறுவனத்தால் 2014 ஆம் ஆண்டின் கோடை காலப் பகுதியில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இச் சேவையானது தற்போது உள்ள வேகத்தை விடவும் 32 சதவீதம் அதிகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டின் புகழ்பெற்ற கிரிக்கற் வீரர் யார்?




## டயலொக் ஸ்ரீலங்கா கிரிக்கற் விருது 2013

உங்களுக்கு மிகவும் பிடித்த கிரிக்கற் வீரரை, இவ்வாண்டின் டயலொக் புகழ்பெற்ற கிரிக்கற் வீரராக்குவதற்கு இன்றே உங்கள் விருப்பு வாக்கை எந்தவொரு தொலைபேசி வலையமைப்பின் மூலமும் SMS செய்யுங்கள்.
DPP <இடைவெளி> வீரரின் பெயரை ரைப் செய்து 6797க்கு SMS செய்யுங்கள்.

இவ்வாக்களிப்பு செப்ரெம்பர் 9 ஆம் திகதி நள்ளிரவோடு முடிவடையும்.
SMS கட்டணம் ரூபா.2.50 + வரி




(C/1849)

*வீரரின் பெயர்

Mathews | Mahela | Sangakkara | Dilshan | Malinga | Kulasekara | Rangana

Prasanna | Suraj | Ajantha | Chandimal | Welagedara | Thissara | Suranga

Thirimanne | Shaminda | Dimuth | Jeewan | Kusal | Sachithra | Upul | NuwanP

டயலொக் ஸ்ரீலங்கா கிரிக்கற் விருது 2013 விழாவில் கலந்து கொள்வதற்கு விசேட அழைப்பிதழுடன் பரிசுகளையும் வெல்லுங்கள்.

http://www.dialog.lk/cricket-awards

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

இலங்கை கிரிக்கற் அணியின் பெருமைக்குரிய அனுசரணையாளர்

Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
08/09/2013

# முகப்பொலிவை உண்டாக்கும் கற்றாழை

பொதுவாக அனைவரும் இதனை அழகுக்காகவும் தோல் பராமரிப்புக்காகவும் ஆரோக்கிய உடல் நலத்துக்காகவும் பயன்படுத்துகின்றனர். கற்றாழை மூலிகையாகப் பயன்படுகிறது.

மருந்துகள் மற்றும் அழகு சாதனப் பொருள்களைத் தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருள் கற்றாழை.

கற்றாழையை தோல், உள்ளுறுப்புகள் மற்றும் பிற பகுதிகளில் ஏற்படும் கோளாறுகளை குணப்படுத்த பயன்படுத்தலாம். கற்றாழையில் பொலிசக்கரைட், லெக்டின், மேன்னஸ் போன்ற கலவைகள் அடங்கியுள்ளன.

கற்றாழையில் முக்கிய உறுப்பாக தண்ணீர் உள்ளது. இது தாதுக்கள், வைட்டமின்கள் மற்றும் பல செயல்பாட்டு பொருள்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

இதை அழகுக்கு பயன்படுத்தும் க்ரீமாகவும், முகம் கழுவும் போது உபயோகிக்கும் பேஸ் வோஸாகவும் பயன்படுத்தலாம்.

## கற்றாழையின் நன்மைகள்

இதை தோலுக்கு ஈரப்பதம் ஏற்படுத்தக்கூடிய சிறந்த மூலிகையாகப் பயன்படுத்துகின்றனர். கற்றாழை ஜெல்லில் ஹைட்ரேட்டுகள் கொண்டுள்ளதால் சருமத்தை இளமையாக்கி, உங்களின் சருமத்தை எந்த வேளையிலும் புதியதாக தோற்றமளிக்க வைக்கும் தன்மையை கொண்டுள்ளது.

கற்றாழை எதிர்ப்பு நுண்ணுயிர் பண்புகளை கொண்டுள்ளதால் முகத்தில் தோன்றும் ஆக்னே, பருக்கள் வராமல் தடுக்கும்.

இதில் இயற்கையாக நிகழ்வதற்கெதிராக எதிர்ப்பு ஒட்சியேற்றத்தை கொண்டுள்ளதால் வயது மூப்பிலிருந்து சருமத்தை தக்கவைத்துக் கொள்கிறது.

கற்றாழை உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் ஏற்படக்கூடிய வலிகளையும், வீக்கங்களையும் குறைப்பதற்கு பெரிதும் பயன்படுகிறது.

இது மருத்துவரீதியாக எரி காயங்கள், பூச்சிக் கடி, எக்ஸிமா, வெட்டுக்கள் மற்றும் காயங்களை குணப்படுத்த வல்லது.

வீட்டிலேயே கற்றாழையைப் பயன்படுத்தி ஜெல் தயாரித்து ஒரு காற்று புகாத டப்பாவில் அடைத்து வைத்து முகத்துக்கு அவ்வப்போது பயன்படுத்தலாம்.






(C/11853)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும், நன்றி நவிலலும்

மலர்வு
13-05-1966



உதிர்வு
08-08-2013

உடுப்பிட்டி - பொக்கனையைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வசித்து வந்தவருமான

## தங்கராஜா கஜேந்திரராஜா (கஜன்)

(உடுப்பிட்டி)

எங்கள் அன்புத் தெய்வம் ஆண்டவன் அடிசேர்ந்த சேதி கேட்டு,
ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், பூதவுடல் அஞ்சலிக்காக
வைக்கப்பட்ட வேளையின் போதும், நேரில் வந்து ஆறுதல் சொல்லியும்,
மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும்,
உள்நாட்டிலும், வெளிநாடுகளில் இருந்தும் தொலைபேசி,
மின் அஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
மற்றும் அனைத்து வழிகளிலும் உதவி செய்தும்
ஆறுதல் கூறிய அனைத்து அன்புள்ளங்களுக்கும்
அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன விருந்தும், இன்று ஞாயிற்றுக்கிழமை (08-09-2013) 10865 Bayview Ave., Richmond Hill, இல் அமைந்துள்ள றிச்மன்ட் ஹில் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் மு.ப 11:00 மணியளவில் நடைபெறவுள்ளதால், அனைவரையும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(39478)

சிங்காரவேலு சுந்தரம்பிள்ளை (மாமன்)
கம்பர்மலை உடுப்பிட்டி வடக்கு,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்
புனிதா கஜேந்திரராஜா (மனைவி)
உஷாந்தன் கஜேந்திரராஜா,
உஷந்த் கஜேந்திரராஜா
(பிள்ளைகள்)
தொடர்புகளுக்கு: 647-271-3320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
08/09/2013

# ஓவியப்போட்டியில் மனிதக் குரங்குகள்

ஒரு ஓவியப்போட்டியில் வித்தியாசமான போட்டி யாளர்கள். கடுமையான போட்டி. பெரும்பாலான போட்டியாளர்கள் தங்களது படைப்பை தாமே சுவைத்துப் பார்த்தனர். மனித குரங்குகள் தங்கள் திறமையை தூரிகை கொண்டு வெளிப்படுத்திய நிகழ்வில்தான் இந்த சுவாரசிய நிகழ்வுகள்.

அமெரிக்காவில் உயிரியல் பூங்காவிலுள்ள மனிதக் குரங்குகளுக்கான ஓவியப் போட்டியில் 36 வயதாகும் ப்ரெண்ட் (Brent) தனது நாக்கால் படங்களை வரைந்தது. சீட்டா (Cheetah) என்ற மற்றொரு மனிதக்குரங்கு தூரிகையும் இல்லாமல் தனது வாயினாலேயே ஓவியம் தீட்டியது. தன்னுடைய சொந்த கற்பனை படத்தை தீட்டியதற்காக சீட்டா (Cheetah)-வுக்குப் பட்டம் வழங்கப்பட்டது. இருப்பினும் ப்ரெண்ட் (Brent) இன் ஓவியமே பார்வையாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த ஓவியங்களை பாராட்டிய போட்டி நடுவர்கள், ஒவ் வொரு மனிதக் குரங்கும் தெளிவாகவும், அதிக ஈடு பாட்டுனும் வரைந்துள்ளதாக வர்ணித்தனர். ஓவியங்கள் விரைவில் ஏலம் விடப்படும் என்றும், அதனால் கிடைக்கும் தொகை வயது முதிர்ந்த மனிதக் குரங்குகளை பாதுகாக்கும் தி ஹுமேன் (The Humane) அமைப்புக்கு நிதி திரட்ட பயன்படுத்தப்படும் என்றும் இந்த போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித் தனர்.








Track your future success

Join us to meet 19 prestigious UK universities at St John's College Jaffna in September

- Aston University
- The university of Bath
- University of Bolton
- Buckingham University
- University of East Anglia
- The University of Edinburgh
- Keele University
- University of Kent
- University of Leeds
- University of Leicester
- Loughborough University
- The University of Manchester
- The University of Nottingham
- Queen Mary, University of London
- The University of Sheffield
- University of Southampton
- University of Surrey
- University of Warwick
- University of York

**Virtual Exhibition in Jaffna:**
**Date: Saturday 14 September 2013**
**Time: 9.00 a.m. to 11.00 a.m**
**Venue: St John's College, Main Street, Chundikuli, Jaffna**
**Admission: by prior appointments only**

A UK education offers unparalleled value to those wanting to build their careers or continue their personal development. It is an investment for life for students as well as those who seek to employ them.

There are lot of reasons why students consider UK as a study destination, some of those are:

- High academic standards maintained by the UK institutions
- International recognition of qualifications
- Overseas work opportunities after graduation
- Wide variety of courses and subject areas offered by UK institutions
- Better job opportunities for graduates with a UK qualification in their own countries
- UK's multicultural society makes you feel at home
- Research opportunities and scholarships offered by UK institutions

For more information and appointments, contact Education UK team on 4521521, 4521576 and 4521577

www.educationuk.org/srilanka

(C/11848)

# 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மண்டை ஓடு

பிரிட்டனில் சுமார் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மண்டை ஓடொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பிரிட்டனின் வோர் சர்ஷிர் ஆற்றங் கரையில் நபர் ஒருவர் தனது நாயுடன் நடைப்பயிற்சி மேற்கொண்டிருந்தார். அப் போது மண்ணுக்குள் புதைந்து பாதி வெளியே தெரிந்த நிலையில் ஏதோ ஒருபொருள் கிடந்துள்ளது. இதனைப் பார்த்த ஒரு விலங்கின் மண்டை ஓடு என நினைத்துள்ளார். பின்பு அருகே சென்று பார்த்தபோதுதான் அது மனித னின் மண்டை ஓடு என தெரியவந்துள்ளது. அதனை யடுத்து நிபுணர்கள் அதனைச் சோதனையிட்டதில், சுமார் 5 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் இது புதிய கற்காலத்தை சேர்ந்த ஒன்றாக இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.



+94 112 002 255
www.mihinlanka.com



பிரத்தியேகமான கட்டணத்தில் மிஹின் லங்காவுடன் கோவில்களின் நகரமான மதுரையை கண்டறியுங்கள்

ரூபா. 7,800 | ரூபா. 12,500

40 கி.கி + 7 கி.கி இலவச பயணப்பொதி (செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை). திங்கள் / புதன் / வெள்ளி / ஞாயிறு ஆகிய தினங்களில் செயற்படுகின்றது.

பிரபல கோவில்கள் பலவற்றுக்கு பெயர்பெற்றதுடன், மத யாத்திரைக்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்தியாவின் முக்கிய நகரங்களில் ஒன்று. மல்லிகைப்பூ நகரம் எனவும் பெயர்பெற்ற மதுரை, பயணிகளின் சொர்க்கமாகும்.

மிஹின் லங்கா

(C/11843)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலாங்கு மீன்களால் 600 வோல்ற் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமாம்

உருண்டு, நீண்ட உடலுடன் காணப்படும் விலாங்கு மீனை உங்களுக்குத் தெரிந் திருக்கும். பார்ப்பதற்கு பாம்பு போன்று இந்த மீன் இருக்கும். விலாங்கு மீன்களில் பல வகையான ரகங்கள் உள்ளன. அதில் எலக்ட்ரோபோரஸ் எலக்ட்ரிக்கஸ்' என்ற ஒருவகை விலாங்கு மீன் உள்ளது. இந்த விலாங்கு மீன் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திறன் படைத்தது. இதனது மேற்புறம் கரும் சாம்பல் நிறத்திலும், அடிவயிறு மஞ்சம் நிறத்திலும் இருக்கும்.

சேற்றுக்கு அடியில் வாழ விரும்பு கின்ற இந்த மீன், வெளிக்காற் றையும் சுவாசிக்கும். அதாவது, 10 நிமிடங்களுக்கு ஒருமுறை தண்ணீருக்கு மேல வந்து காற் றைச் சுவாசித்து விட்டு, மறுபடியும் சேற்றுக்கு அடியில் போய்விடும். 'ஜிம்னோடிடே' குடும்பத்தைச் சேர்ந்த இது, சுமார் 2.5 மீற்றர் நீளம் வரை வளரும். பொதுவாக ஒரு மீற்றர் நீளமுடைய மீன்கள் தான் அதிகமாக இருக்கும். சுமார் 20 கிலோ எடை வரைக் கும் இந்த மீன் வளரும். இந்த மீன், ஷொக் அடிக்கும் அளவுக்கு ஏறக்குறைய 600 வோல்ற் மின் சாரத்தை உற்பத்தி செய்யவல்லது. இதற்காகவே அதனது உடம்பில் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை மின் சாரத்தை உற்பத்தி செய்யும் எலக்ட் ரோபிளேட்டுகளும் இருக்கின்றன. இந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி தனக்கு தேவையான உணவாக சிறு மீன்களை முதலில் அதிர்ச்சி யடைய வைத்து செயலிழக்கச் செய்ததன் பின்னர் அவற்றைத் தனது உணவாகக் கொள்ளும். எதிரி மீன்களிடம் இருந்து தன்னைத் தற்காத் துக் கொள்ளவும் மின்சாரத்தை பயன்படுத்துகிறது.



# இனிமேல் நோயாளிகளே ஊசி போட்டுக் கொள்ளலாம்

இன்புளுவென்சா நோயிலிருந்து விடுபடும் பொருட்டு நோயாளிகள் தமக்குத் தாமாகவே பயன்படுத்தக்கூடிய வகையில் தடுப்பூசி ஒன்றை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

ஜோர்ஜியா பல்கலைக்கழகத்தை சேரந்ந்த ஆராய்ச்சி யாளர்களே சில ஆண்டுகள் கால முயற்சியின் பயனாக இந்தத் தடுப்பூசியை உருவாக்கியுள்ளனர்.

மிகவும் நுண்ணிய ஊசியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள குறித்த தடுப்பூசியானது 100 சதவீதம் பாதுகாப்பு உடையதாக காணப்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து SangdMoo Kang என்ற ஆராய்ச்சியாளர் கருத்து தெரிவிக்கையில், இந்த நோய்த்தடுப்பூசியானது வலியைத் தருவ தில்லை எனவும், இதனை இலகுவான முறையில் சுயமாகவே பயன்படுத்திக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**மிகவும் நுண்ணிய ஊசியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள குறித்த தடுப்பூசியானது 100 சதவீதம் பாதுகாப்பு உடையது**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டைச்சுற்றி மீன் தொட்டி மதில் கட்டிய பிரபல தொழிலதிபர்



துருக்கியைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் ஒருவர் தனது வீட்டுக்குரிய சுற்று மதிலை மிக நீண்ட மீன் தொட்டியைக் கொண்டு உருவாக்கியுள் ளார். சுமார் 50 மீற்றர் நீளமான இந்த மீன் தொட்டியை உருவாக்கு வதற்கு 21,000 அமெரிக்க டொலர்களை செலவு செய்துள்ளார். பணம் பத்தையும் செய்யும் என்பதற்கு இந்த மீன் தொட்டி மதிலும் ஒரு உதாரணம்.

## இது என்ன கோட்டையா?



இனிப்புப் பண்டங்களால் கோட்டை கட்டும் எண்ணம் சொக்லேட் பிரியர்களுக்கு இருக்கும். இதனை பிரிட்டனைச் சேர்ந்த இனிப்புப் பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்று நிஜமாக்கி மகிழ்ந்துள்ளது. கெட்பரி என்ற இனிப்புப் பண்ட உற்பத்தி நிறுவனமே பெரியளவிலான இந்தச் சொக்லேட் கோட்டையை பிரிட்டனின் ப்ரிங்டன் கடற்கரையில் உருவாக்கியுள்ளது.

இதற்காக இந்த நிறுவனம் தான் தயா ரிக்கும் சொக்லேட் வில்லைகளில் 90,000 இற்கு அதிகமானவற்றை பயன்படுத்தியுள் ளது. ஏதாவது விசேடமாக குடும்பம் மற்றும் நிறுவனத்தை மகிழ்ச் சிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த சொக்லேட் கோட்டை உருவாக் கப்பட்டதாக கேட்பரி நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித் துள்ளார். இக்கோட்டையைக் கட்டுவதற்கு 5 பேர் 400 மணித் தியாலங்களை மொத்த மாக செலவிட்டுள்ளனராம்.




## இணையத்தை கலக்கியடித்துக் கொண்டிருக்கும் பூனை

அடர்த்தியான முடியுடன் காணப்படும் பூனை ஒன்று இணையத்தை கலக்கிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த ஆனி மேரி(வயது 52), கனோல் மியாவ் என்ற பூனையை வளர்த்து வருகிறார். இந்த பூனையின் உடலில் மிக அடர்த்தியுடன் 22.87 செ.மீ. நீளமுள்ள முடி உள்ளது. இதனைப் பராமரிக்க 2 ஊழியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். வாரத்துக்கு மூன்று தினங்களுக்கு பூனைக்கு ஷம்பு குளியல், டிரையர், முடி பராமரிப்பு, பியூட்டிஷியன் மேற்பார்வை போன்ற கவனிப்புகளும் நடந்து வருகின்றன.

தற்போது இந்த பூனை தான் இணையத்தைக் கலக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கான பிரத்தியேக இணையத்தளங்களும் தொடங்கப்பட்டுள்ளன.

பேஸ்புக்கில் இதற்கு தினமும் 2 ஆயிரம் பேர் வரை விருப்பம் தெரிவித்து வருகின்றனர். உலகளவில் பூனையில் புகழ் பரவி உள்ளதால், கின்னஸ் சாதனைப் பதிவு செய்ய பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறாராம் ஆனி மேரி.

கறுப்பு - வெள்ளை நிறத்தில் ஆங்காங்கே பிரவுன் புள்ளிகளோடு உள்ள இந்த பூனையை வெளியில் அழைத்துச் சென்றால் நடிகர், நடிகைகளுக்கு கிட்டாத அளவுக்கு வரவேற்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org